40451

023.38 241937
N49.2

திருவாரூர்

34

40451

923:38. 21193.T
N41.2

109940

தருமபுர



வெளியீடு எண். 189.

உ

குருபாதம்

# திருவாரூர்

இந்நூல்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்

உ௬-வது மகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளவர்கள்

திருவுள்ளப்பாங்கின்படி

வெளியிடப்பெற்றது.

எழுதியவர்:

வித்துவான், ச. தண்டபாணி தேசிகர்.

விக்ருதி.

முதற்பதிப்பு 1949 பிரதிகள் 500
இரண்டாம்பதிப்பு 1950 ,,

109940
...RS, MADRAS...

Q23:38-2N93.T
A0451 N49—2

ஞானசம்பந்தம் பதிப்பகம்,
திருமபுரம்.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| தொடக்கவுரை | ... | க |
| பெருமை | ... | ௩ |
| தொன்மை | ... | ௫ |
| எல்லை | ... | ௭ |
| தல அமைப்பு | ... | ,, |
| தலக்கோயில்கள் | ... | ௮ |
| மறுபெயர்கள் | ... | க௩ |
| தீர்த்தங்கள் | ... | க௫ |
| கோயிலமைப்பு | .... | க௮ |
| மண்டபங்கள் | ... | உக |
| உட்கோயில்கள் | ... | உ௫ |
| மூர்த்திகள் | ... | உ௯ |
| கலை | ... | ௩௬ |
| சிற்பங்கள் | ... | ௩௮ |
| சித்திரம் | ... | ௪௰ |
| அன்பர்கள் | ... | ௪உ |
| புலவர்கள் | ... | ௫௰ |
| நூல்கள் | ... | ௫௬ |
| வரலாற்றுத் தொடர்புள்ள இடங்கள் | .... | ௫௮ |
| சுற்றியுள்ள சிவதலங்கள் | ... | ௫௯ |
| சில வரலாறுகள் | ... | ,, |
| பழமொழிகள் | ... | ௬உ |
| புராணவரலாறு | ... | ,, |

பூஜைகளும் விழாக்களும்
கட்டளைகள் ... எஉ
கல்வெட்டுக்கள் ... எஎ
சம்பந்தர் தேவாரம் ... அஎ
திருநாவுக்கரசர் தேவாரம் ... 1
சுந்தரர் தேவாரம் ... 43
திருவாசகம் .... 170
திருவிசைப்பா ... 239
திருப்பல்லாண்டு .... 241
திருமந்திரம் ... 242
திருவாரூர் மும்மணிக்கோவை ... 243
பெரியபுராணம் .... 245
அசபாநடனப் பதிகம் .... 252
திருவாரூர்ப் புராணம் ... 254
.... 260


## படஅட்டவணை.


ஸ்ரீ தியாகராஜா
ஸ்ரீ-ல-ஸ்ரீ குருஞானசம்பந்தர்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிகர் ... viii
தக்ஷிணாமூர்த்தி ... க
நீலோத்பலாம்பாள் ... உஅ
திருமால் .... ருஉ
நம்பியாரூரர் ... ச0
கல்தேர் ... சஉ
கன்றிழந்த பசு ... எக
கமலாம்பிகை ... ககட
ஆழித்தேர் ... 1
... 64




குருபாதம்

## இரண்டாம் பதிப்பின் முகவுரை.

தலங்களைப்பற்றிய உண்மை வரலாற்று நூல்கள் தமிழ் மக்களால் மிகவும் வரவேற்கப்படுகின்றன. இதன் முதற் பதிப்பு 16—4—49ல் வெளிவந்தது. வெளிவந்த ஒரு மாதத்திற்குள்ளாகவே இதன் பதிப்பு முழுவதும் கிடையா மற்போகவே இந்த இரண்டாம் பதிப்பு ஆதீனத்துக்குச் சொந்தமான திருவாரூர் ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானம் இராஜராங்கக்கட்டளையின் சார்பில் வெளியாகிறது.

புதிதாக இப்பதிப்பில் சில கட்டளைகளைப்பற்றிய வரலாறுகள் சேர்க்கப் பெற்றுள்ளன. சில பிழைகள் திருத்தப்பெற்றுள்ளன. கல்வெட்டுப் பகுதிகளில் சில விசேடக் குறிப்புக்கள் சேர்க்கப்பெற்றுள்ளன.

இப் பதிப்பையும் அறிவுடைப் பெருமக்கள் ஏற்று ஆக்கம் அளிப்பார்களாக.

தருமபுரம்,
25—6—50.

இங்ஙனம்,
ச. தண்டபாணி.

குருபாதம்

# முதற்பதிப்பின் முன்னுரை

உள்ளம் ஆர் உருகாதவர் ஊர்விடை
வள்ள லார்திரு வாரூர் மருங்கெலாம்
தெள்ளும் ஓசைத் திருப்பதி கங்கள்பைங்
கிள்ளை பாடுவ கேட்பன பூவைகள். —சேக்கிழார்.

தெய்வக்கவிஞர் தமது அறிவுக்கண்ணால் திருவாரூர்ப் புறநகரைத் தமிழ் மணக்குந் திருநகராகக் கண்டார். தேவாரத் திருப்பதிகங்களாகிய செந்தமிழ்ப் பாடல்களைக் கிளிகள் பாடுகின்றன. பாடுவார்க்கும், பேசுவார்க்கும் உள்ளக்கிளர்ச்சி உண்டாவது கேட்பவர்கள் இருந்தால்தானே. ஆதலால் நாகணவாய்ப்பறவைகள் (நாரத்தாங்குருவிகள்). இருந்து சுவைத்துக் கேட்கின்றன. தமிழ் மணக்கிறது என்றார் அடிகள். இத்தகைய செந்தமிழ்த் திருவாரூர், கேடும் ஆக்கமுங் கெட்ட உண்மைச் செல்வத்தோடு, ஓட்டையும் பொன்னையும் ஒப்பநோக்கும் மனத்துறவுகொண்ட பெருவீரர்களாகிய திருக்கூட்டத்து அடியார்கள் நிறைந்து விளங்கும் ஞானபூமி. அந்த அடியார்களுள் கமலை ஞானசம்பந்தரும் ஒருவர். அவராலேயே கமலையும் தருமையும் தொன்மையானதொடர்புடையவாயின

மதுரைச் சொக்கலிங்கப்பெருமான் ஆணையின் வண்ணம் தருமையாதீனத்து ஆதிகுருமூர்த்திகளாகிய ஸ்ரீ-ல-ஸ்ரீ குருஞானசம்பந்ததேசிக சுவாமிகள் கமலைஞானப்பிரகாச தேசிகரிடத்தில் அருள் உபதேசங்கொண்டு இத் தலத்திலேயே எழுந்தருளியிருந்தார்கள். பின் குரு ஆணைப்படி தருமைக்கு வந்து தருமையாதீனத்தை நிலைபெறுத்தினார்கள். இவற்றால் கமலையாகிய திருவாரூர்க்கும் தருமைக்கும் உள்ள தொடர்பும், மதுரைக்கும் முன்னிரண்டு நகரங்களுக்கும் உள்ள தொடர்பும் நன்கு விளங்கும். இதனாலேயே ஸ்ரீமத் குமரகுருபர சுவாமிகளும் 'கமலையும் தருமையும் விரிதமிழ்க் கூடலும்' என்று இயைபுபடுத்திச் சொல்லியருளினார்கள். இது இவ்வாறாக, சென்னைமாகாணத் தமிழ்வளர்ச்சிக் கழகமும் முதற்கண் விரிதமிழ்க்கூடலில் கூடிற்று. தமிழ் நூல்களில் ஊரும் பேரும் முதலியவற்றைத் தேர்ந்து விளக்கங்கண்டது. பின்னர்க் கமலையையடைந்து செந்தமிழ்க்காகத் திருவடிநோவத் தூது சென்ற தியாகேசர் திருமுன்பு அடைந்து விளக்கம் காண இருக்கின்றது. இந்நிலையில் தருமையாதீனத்திற்கும் தமிழ்வளர்ச்சிக் கழகத்திற்கும் உள்ள இயைபு திருவருள்வாய்ப்பாக எவ்வளவுபொருத்தமுடையது.

இதனைத் திருவுளங்கொண்ட ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள், தமிழ்நாட்டில் பல பக்கங்களிலிருந்தும் வருகின்ற தமிழ்ப் பேரறிஞர்களுக்கும், அன்பர்களுக்கும் தமிழ்வளர்ச்சிக் கழகத்தின்



ஸ்ரீ-ல-ஸ்ரீ திருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்

நினைவுமலர் ஒன்று செந்தமிழ்ச்சொக்கர் நிருமாலியமாக அளித்தருளவேண்டும் என்று எண்ணினார்கள். அதுவும் அன்பர்கள் கமலையை மறவாது மனங்கொள்ளச் செய்யவேண்டும் என்று எண்ணினார்கள். ஆதலால் திருவாரூர் என்னும் இந்த வரலாற்று ஆராய்ச்சி, தோத்திர உரைநூலை வெளியிட அடியேற்குக் கட்டளையிட்டார்கள்.

ஆதலால் புராணவரலாற்றுப்பகுதி, கல்வெட்டுப்பகுதி, தோத்திரப்பகுதி என்ற மூன்றுவகையாகப் பிரித்துப் பல ஆராய்ச்சிக்குறிப்புகளுடன் இதனை ஒருவாறு எழுதிமுடித்தேன்.

கல்வெட்டுப் பகுதியை ஆராய, வழக்கம்போல எமது அன்பர் தருமையாதீனப்புலவர் திரு. ஔவை சு. துரைசாமிப் பிள்ளை அவர்களும் திரு. T. V. சதாசிவபண்டாரத்தார் அவர்களும் சொல்லுதவி செய்தார்கள்.

இத்தொகுப்பில் காணப்பெறும் திருவாரூர், திருவாரூர்க் கோயில்கள், அவற்றின் அமைப்பு, மூர்த்தி, மூர்த்திகளைப்பற்றிய புராணவரலாறு, கல்வெட்டாராய்ச்சி, தமிழரசர் பணிகள் முதலிய பிரிவுகட்கு Chola (By K. A. Nilakanta Sastrigal), South Indian Shrines, Inscription of the Madras Presidency முதலான புத்தகங்களும், கல்வெட்டு வெளியீடுகளும், தலபுராணங்களும் பெரிதும் துணை செய்தன. திருவாரூரைப்பற்றிய திருமுறைகட்குப்

பொழிப்புரையும் நயப்பொருளும் எழுதிச் சேர்க்கப் பெற்றுள்ளன.

இவ்வரலாறு வெளிவர உடனிருந்து எழுதியும், ஒப்புநோக்கியும், இவ்வளவு விரைவில் அழகாக அச்சிட்டும் பணியாற்றியபலர்க்கும் என் மனமார்ந்த நன்றி உரியதாகுக.

இந்தப் பதிப்பிற்கு வேண்டிய தியாகராஜா, கமலாம்பிகை, சயன திருக்கோலம் இவற்றை மனம் உவந்து நல்கிய திருச்சி ஜில்லா பிக்ஷாண்டார் கோயில் பண்ணையார், திரு. G. இராஜகோபால் பிள்ளை அவர்கட்கும், ஏனைய தேர் முதலிய நான்கு படங்களை நல்கிய திருவாரூர் ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானத்தாருக்கும் என் நன்றி உரியதாகுக.

இங்ஙனம் அடியேனை இத்தகைய பெரும்பணியில் ஈடுபடுத்திய தமிழறியும் சொக்கேசப்பெருமான் திருவருளுக்கும், அந்தத் திருவருளை அனைவருக்கும் வழங்கிவரும் தருமையாதீன ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்களின் பெருங்கருணைத் திறத்திற்கும் அவர்கள் அடிமலரைப் போற்றுவதன்றி என்ன கைம்மாறு செய்யவல்லேன்.

இங்ஙனம்

தருமபுரம்,
15—4—49.

வித்துவான், ச. தண்டபாணிதேசிகர்,
ஆதீனப் பல்கலைக்கல்லூரிப் பேராசிரியர்.



திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்
25-வது மகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிகஞானசம்பந்தபரமாசாரியசுவாமிகள்

உ

குருபாதம்

# திருவாரூர்

## தொடக்கவுரை.

செந்தமிழ்நாடு தெய்வத்திருநாடாகத் திகழ்ந்து வருகின்றது. திருக்கோயில்கள் பல இந்நாட்டை அலங்கரிக்கின்றன. மக்களுடைய அன்றாட வாழ்வு தெய்வ வாழ்வாக - இன்பவாழ்வாக - அமைதி வாழ்வாக வாழச்செய்வன தென்னாட்டுக் கோயில்களே. இந்தக் கோயில்களே கலைக்களஞ்சியங்கள்; நமது பழைய வரலாற்று நுணுக்கங்கள் எழுதப்பெற்ற புரட்டாத ஏடுகள். இககோயில்களால் தமிழ்மன்னர்களுடைய ஆட்சித்திறம் அறியப்படுகின்றது; நம் மூதாதையர்களுடைய நாகரிகம் பார்க்கப்படுகிறது. சில பல இலக்கியங்களுங்கூட அழியாது காக்கப் படுகின்றன.

பலவேறு வகையாகச் சமூதாய வாழ்வில் பிரிந்துநிற்கின்ற மக்கட்கூட்டத்தை ஒன்றுபடுத்துவன கோயில்களே. கோயிலில் கொடியேறிவிட்டால் கட்சிச்சண்டையில்லை; சாதிச்சண்டையில்லை; பங்காளி வழக்குகள்கூட இல்லை. அதனால் கோயில்கள்

ஒற்றுமைக்கு வித்தாக விளங்குகின்றன என்பது தெரியவில்லையா?

கடவுள் திருமுன்னுள்ள மண்டபங்களே பஞ்சாயத்துச் சாலைகளாக - நீதிவழங்கும் நேர்மையிடங்களாக இருந்தன.

நாட்டுக்குப் பொதுப் பொருளாதாரம் மிகத் தேவை. அதனைக்கொண்டே சமயவளர்ச்சிக்கும் சாத்திர தோத்திர வளர்ச்சிக்கும் நல்லொழுக்க வளர்ச்சிக்குமான பல காரியங்கள் செய்யப்பட்டு வந்தன. தனி மனிதன் கையிலுள்ள பொருளாதாரமானது அவன் மனம்போன போக்கின்படி மாற்றிச் செலவழிக்கப்படுமே யல்லாமல் ஒரு நிலைக்கே உதவுவதில்லை. சேர சோழ பாண்டியர்களான நமது தமிழ்நாட்டு வேந்தர்களும், அவர்களுடைய அமைச்சர்களுங்கூட அரசாங்க நிலத்தை - செல்வத்தைக் கோயில்களுக்கு ஒதுக்கிவிட்டுத் தங்கள் மேற்பார்வை மட்டும் வைத்துக்கொண்டு தக்கவர்களைக்கொண்டு கண்காணித்து வந்தார்கள். அதனால் நாட்டுக்குரிய பொதுப் பொருளாதாரம் என்றைக்கும் கோயில்களைச்சார்ந்தே இருந்து வருகின்றது.

இன்றைக்கு ஓரளவு நிலமும் புலமும் நகையும் நட்டுமாக நாட்டுப் பொருளாதார மதிப்பு ஏறியிருக்கக் காரணம் திருக்கோயில்களே. தென்னாட்டுக்



கோயில்களில்லையானால் பொருளாதார நிலை மிகச் சீர்கேடு உற்றிருக்கும். இவ்வாறு ஊரில் ஒற்றுமையை - பொருளாதார ஏற்றத்தை - நிர்வாகத் திறமையை - கலையின் காப்பை - ஓவியத்தின் உயர்வை - சிற்பத்தின் சிறப்பைக் காத்துவருகிற தென்னாட்டுக் கோயில்களில் திருவாரூர் மிகச் சிறந்தது. ஐம்பெரும்பூதங்களில் மண் கடினமாய் எல்லாவற்றையும் தாங்கி நிற்பதுபோல, திருவாரூர் பிருதிவித் தலமாய் எல்லாவற்றையும் தாங்கி நிற்கிறது.

## பெருமை:

'நிறைசெல்வத் திருவாரூர்' 'தேராரும் திருவாரூர்', 'சிறைவண்டார் பொழில் சூழ் திருவாரூர்', 'செல்வமல்கிய தென் திருவாரூர்', 'தேசமல்கிய தென் திருவாரூர்' என்று நிறைமொழி மாந்தர் மறைவழிப் புகழைக் குறைவிலாதுற்ற பெருமை இத்தலத்திற்கேயுரியது.

இத்தலம் விராட்புருடனுக்கு மூலாதாரமாய் அமைந்தது. மூலாதாரத்திலிருந்துதான் எல்லா ஒலி உலகமும் தோன்றுவன. மூலாதாரத் தலமாகிய இதிலிருந்துதான் மந்திரப் பேரரசாகிய அஜபை தோன்றுகிறது. முத்திதரும் தலங்கள் மூன்று. அவை சிதம்பரம், காசி, ஆரூர் என்பன. அவற்றுள் காண முத்திதரும் தலம் சிதம்பரம். இறக்க முத்தி தருவது காசி. பிறக்க முத்தி

தருவது ஆரூர்: பிறந்து இருந்து கண்டு இறத்தல் முறையாதலின் பிறக்க முத்திதருந் தலம் முதலாவதாக எண்ணப்பெறுமல்லவா? பிறத்தற்கு முன் வினை வாய்ப்பு வேண்டப்படும் ஆதலால் பிறந்து இருவினைக் கீடாக வருந்துதலும், மீட்டுப் பிறத்தலும் இல்லை. இதனை மிகமிகச் சுருக்கமாக மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் 'உதித்தவர் உதித்திடா ஆரூர்' என்று அறிவிக்கிறார்கள்.

மேலும் அவர்கள் சோழநாடு சங்கப்பலகையை ஒக்கும்; சோழநாட்டிலுள்ள ஏனைய சிவதலங்கள் புலவர்களை ஒக்கும்; தமிழ்த்திருவாரூர் புலவர் தலைவராகிய திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளை ஒக்கும் என்கின்றார்கள். திருத்தருமபுரத்து ஆதி பரமாசாரிய சுவாமிகளும் 'தில்லைவனம் காசி திருவாரூர் மாயூரம்' என்று முத்திதருந் தலங்கள் பதினான்கனுள் இதனையும் ஒன்றாக அருளியிருக்கிறார்கள்.

இது சோழமன்னருடைய தலைநகரம் ஐந்தனுள் மிகத் தொன்மையானது. சப்தவிடங்கத் தலங்களுள் சிறந்தது. இத்தலத்தில் பிறந்தார்கள் அனைவரும் சிவகணநாதர்களாய்த் திகழ்வார்கள். 'திருக்கயிலை வீற்றிருந்த சிவபெருமான் திருக்கணத்தார், பெருகியசீர்த் திருவாரூர்ப் பிறந்தார்களாதலினால்' என்று பெரியபுராணம் பேசுகிறது. பிரமன் தன் படைப்புத்திறம் தோன்ற தான் படைத்த



எல்லாத் தலங்களையும் ஓர் தட்டிலும், இதனை ஓர் தட்டிலுமாகத் தூக்கினான். இத்தட்டுத் தாழ்ந்தது. இதனாலேயே க்ஷேத்திரவரபுரம் என்ற பெயரும் இதற்குண்டாயிற்று. இதனை விளக்கும் சிற்பச் சான்று ஒன்று பூங்கோயிலுள் சந்திரசேகரர் சந்நிதியில் உத்தரப்பத்தியில் இன்றும் உள்ளது.

தஞ்சை ஜில்லாவிலேயே மிகப்பெரிய கோயில்கள் இரண்டு. அவை தஞ்சை இராசராசேச்சரமும் திருவாரூர்ப் பூங்கோயிலும். இவ்வூர்த் தேரைப் போல மாதிரியாக ஒன்று செய்து சென்னைக் கண்காட்சிச் சாலையில் திராவிடச் சிற்பத்தின் எடுத்துக்காட்டாக வைத்திருப்பதை என்சைக்ளோபீடியா பிரிட்டானிகா கூறுகிறது.

## தொன்மை :

இத்தலம் எல்லாத்தலங்களிலும் மிகப்பழமையானது. இதனை அப்பரடிகள், சிவம், ஒன்றான நிலையிலிருந்து, சிருட்டியைத் திருவுளங்கொண்டு, சத்தியைத் தன்னின் வேறாகச் செய்து, இடப்பாகத்து ஏற்றுக்கொண்ட தொன்னாளிலேயே இறைவன் திருவாரூரைக் கோயிலாகக்கொண்டார் என்கின்றார். ஆகாயத்தலமாகிய சிதம்பரத்திலே பஞ்சகிருத்திய பரமானந்தத் தாண்டவத்தைத்

*Tanjore gazetteer P-71.

தொடங்குவதற்கு முன்னே பின்னே திருவாரூர்க் கோயிலாகக்கொண்டது என்றும் கூறுகின்றார். அன்றியும் இறைவன் அருவுருவத் திருமேனியும் உருவத் திருமேனிகளுங்கொண்டு எழுந்தருளிய முதல்தலம் இதுவே என்று திருமுறைகள் அறிவிக்கின்றன.

சரித்திரகாலத்தில் சிலப்பதிகாரத்து இத் தலம் நேரே குறிக்கப்படாவிட்டாலும் மநுச்சோழன் வரலாறு பேசப்படுகிறது. ஆதலால் சிலப்பதிகாரக் காலத்தே சிறந்திருந்தது இத்தலம் என்பது தெளிவு.

மக்கள் கல்லாலும் உலோகப்பொருள்களாலும் கடவுளுருவத்தை அமைத்து வழிபடுவதற்கு முன்பே மரத்தையும் புற்றுக்களையும் வழிபட்டிருந்தார்கள். ஆதலின் புற்றுவழிபாடு தொன்மையானது; சமய நாகரிகத்திற்குத் தலை அதுவே என்று ஆங்கில வரலாற்றாசிரியர் வெர்குசன் என்பார் கூறுகிறார். இதனாலும் இதன் தொன்மை நன்கு விளங்கும்.

கோயில் பணிவகையிலும் பல்லவர்காலத்திய பண்பாட்டினை அறிவிக்கும் பகுதிகள் பல. அநேக மண்டபங்கள் சிறந்த வேலைப்பாடின்றி அமைந் திருப்பதும், யாளித்தூண்கள் அமைந்திருப்பதும் இதற்குச் சான்றுகளாகும். ஆயிரக்கால் மண்டபமாகிய தேவாசிரயம் என்பது மிகப்பழமையானது.



அதிக உயரமில்லாமல் வேலைப்பாடு இல்லாமல் தூண்களின் மூலைகள் நன்றாகச் செதுக்கிக் கருக்கு வேலைகள் செய்யப்படாமல் இருப்பதே இதற்குச் சான்றுகளென்று கெஸட்டியர் கூறுகின்றது.

## எல்லை :

இத்தலத்தினெல்லையை அறிவிக்கின்ற பழம் பாடலொன்று திருவாரூர்மாலையில் உள்ளது. அப் பாடல் செப்பமானதாக இல்லை. அது வருமாறு:—

ஆரூரின் மேலெல்லை அம்மைவன மாம்வடக்குத்
தேரூரும் வண்டலையாந் தென்பாலே—சீரூர்
மழவிடையார் தென்புலிசேர் வலமாகும் கீழ்பால்
பழவனமாம் ஊரெனவே பார்.

இத்தலத்திற்கு மேலெல்லை அம்மையப்பன் வரையிலும், கீழெல்லை பழையவலம் என்று இப்போது வழங்கும் பழவனம் வரையிலும், தென்னெல்லை புலிவலம் வரையிலும், வடவெல்லை வண்டாம்பாலை வரையிலும் இருந்ததென இதனால் அறியலாம்.

## தல அமைப்பு :

சோழ நாட்டிலே, தஞ்சாவூர் ஜில்லாவிலே நாகப்பட்டினம் தாலூகாவிலே அமைந்துள்ளது

இத்தலம். இது ஒரு புகைவண்டி கூட்டு நிலையம் (ஜங்ஷன்). இத்தலத்தில் வடபால் சுக்கானாறும், தென்பால் ஓடம்போக்கி யாறும் ஓடுகின்றன. இதனைச் சமயக்கண்கொண்டு நோக்கிய பிள்ளையவர்கள், ஒருமனிதன் உயிர்வளத்திற்கு இடைபிங்கலையாகிய நாடிகள் இன்றியமையாதன; அது போலத் திருவாரூராகிய புருஷனுடைய பெருவளத்திற்கு இந்த இரண்டு ஆறுகளும் இன்றியமையாதனவாகும் என்று சொல்கிறார்கள். நகர் தெற்கு வடக்கில் அமைந்தது. திருவாரூர் வட்டம், விஜயபுரம் வட்டம், பவித்திரமாணிக்கம் வட்டம், விளமர் வட்டம் முதலிய பல கிராமங்கள் ஒன்று சேர்ந்து இன்றைக்கு ஒரு நகராக விளங்கி வருகின்றது. நகராண்மைக்கழகப் பாதுகாப்புடையது.

## தலக்கோயில்கள்:

**ஐந்நூற்றுப்பிள்ளையார் கோயில்:** விஜயபுரம் புகைவண்டி நிலையத்திற்குத் தெற்கே ஒருபர்லாங் தொலைவிலுள்ளது. இத்தலத்து ஐந்நூறு விநாயகர் கோயில்களிருப்பதால் இது ஐந்நூறுவதாதலின் இப்பெயர் பெற்றது. இதன் பெயராலேயே ஐந்நூற்றுப் பிள்ளையார்கோயில் தெரு என்ற பெயர் தெருவிற்கு வழங்கிவருகிறது.

**பிரமன் கோயில் :** இது உயர்தரக்கலாசாலையின் பின்புறம் சூரியதீர்த்தக்கரையிலிருக்கின்றது.



நான்கு முகங்களோடு கையில் எழுத்தாணியும் கமண்டலமும் ஏந்திப் பிரமன் காட்சிவழங்குகிறார். இவருக்கு எதிரில் சூரியன் திருவுருவம் ஒன்றுண்டு.

**துர்வாச ஆச்ரமம் :** கமலாலயம் தென்கரையில் உயர்நிலைப்பள்ளிக்கு எதிரில் இவ்வாலயம் இருக்கிறது. துர்வாசர் ஆன்மார்த்தமாக இலிங்கம் தாபித்து வழிபட்ட இடம்.

**பரவையுண் மண்டளி:** இது கீழவீதியில் தேர் நிலைக்கு எதிரில் உள்ளது. பெருக்கெடுத்து வந்த வருணனை அடக்கியாண்ட பெருமான் கருணை பாலிக்குமிடம். கடலுள் மண்கோயிலாக இருந்தமையின் இப்பெயர் வழங்கப்படுகிறது. (பரவை - கடல். தளி-கோயில்) துர்வாசர் வழிபட்ட தலம் இதுவாகும். இறைவன் தூவாயர். இறைவி பஞ்சின் மெல்லடியாள். ஆதலால் இறைவன் மண்டலேசன் என்று வழங்கப்படுகிறார். துர்வாசர் வழிபட்டதால் துர்வாசநயினார் என்றும் பெயர் உண்டு. இதன் எதிரிலுள்ள கிழக்குமேற்குத் தெரு தூவாநயினார் சந்நிதி என வழங்கப்பெறுகிறது. இவர்கள் திருநாமத்தைச் சுந்தரர் 'தூவாயா தொண்டு செய்வார் படுதுக்கங்கள் காவாயா' என்றும் 'பஞ்சேரு மெல்லடியாளை ஓர் பாகமாய்' என்றும் குறிப்பர்.

**திருநீலகண்டர் கோயில்:** கீழைச்சந்நிதியில் பரவையுண்மண்டளிக்குப் பின்புறம் இருக்கிறது.

இது கொசவன் கோயில் என்று வழங்குகிறது. இங்குள்ள இறைவன் திருநீலகண்டர்.

தண்டபாணி கோயில்: தேரடியில் ஒருகட்டு மலையின்மீது இருக்கிறது. பழநிமலைத் தோற்றம் போல இங்கும் மேற்குப்பார்த்த சந்நிதியாகவே உள்ளது.

பரவையார்கோயில்: இது தெற்குச் சந்நிதியில் இருக்கின்றது. சுந்தரர்பெருமானோடு பரவையார் இதில் காட்சி வழங்குகிறார். சேரமான் பெருமானும் வீற்றிருக்கிறார்.

ராஜதுர்க்கை கோயில்: அதனை அடுத்து வடபாலுள்ளது இக்கோயில். துர்க்கை சிங்கவாகனத்தின்மீது வீரமாதாவாக விளங்குகிறார். வெள்ளிக்கிழமைகள்தோறும் பல அன்பர்கள் வழிபட்டுப் பயன்பெறுகிறார்கள்.

நடுவணநாதர்கோயில்: கமலாலயத்தின் நடுவில் உள்ளது. சிறியகோயில், சிறிய கோபுரம். அழகிய திருப்பணி, நடுவணநாதர் சிவலிங்கத்திருமேனியுடையவர். ஓடத்திலேறிச் சென்று வழி படுவது வழக்கம். பிரதோஷவழிபாடு மிகச் சிறந்தது. இப்பெருமான் நாகேசர் எனவும் வழங்கப்பெறுவர்.

மாற்றுரைத்தவிநாயகர் கோயில்: கமலாலயம் கீழ்கரை வடகோடியிலுள்ளது. சுந்தரர் விருத்தாசலத்தில் இறைவன்கொடுத்த பொன்னை மணிமுத்தாநதியிலிட்டுக் கமலாலயத்தில் எடுத்தபோது தான்வைத்திருந்த மச்சப் பொன்னோடு இதனையும் உரைத்து ஒப்புநோக்கினர். மாற்றுக்குறையவே விநாயகப்பெருமான் உதவியால் மாற்றுப் பெற்றார். இக்குறிப்பை ஏழாந்திருமுறையிலுள்ள, 'மாற்று எனக்கு வைத்தானை' என்றபகுதி அறிவிக்கும்.



சோமநாதர் கோயில்: ஓடம்போக்கி யாற்றின் கரையில் தலத்தின் மேல்பால் உள்ளது. அழகான திருப்பணி. இறைவன் சோமநாதீசர். இந்திரனுக்குள்ள கயரோகத்தைத் தீர்த்த தலம்.

குளுந்தாளம்மன் கோயில்: குளுந்தாள்குளத்தின் கீழ்கரையிலிருக்கிறது. கிராமதேவதை. ஏழு திருவுருவங்கள் இதில் இருக்கின்றன. பூங்கோயில் பெருவிழாவுக்கு முன்பு பத்துநாள் விழா கொண்டாடப்பெறும்.

ஐயனார்கோயில்: நகரின் வட எல்லையில் உள்ளது. இதுவும் கிராம தேவதை.

உருத்திரகோடீசுரர் கோயில்: ஓடம்போக்கியாற்றின் கரையில் ஞானப்பிரகாசக் குட்டைக்குப் பக்கத்தில் உள்ளது. இறைவன் திருவுருவம் அழகான சிவலிங்கத்திருமேனி. அம்மையும் பரிவார தேவதைகளும் விளங்குகின்றார்கள். முன்காலத்தில்

இடுகாடு இதன் பக்கங்களில் இருந்தமையால் இப்பெயர் வழங்கியது போலும்.

**குமரகோயில்:** தெற்குச்சந்நிதியில் திருமஞ்சன வீதியில் இருக்கின்றது. கிழக்குப்பார்த்த சந்நிதி. முருகன், வள்ளி தேவசேனாபதியாய்க் காட்சியளிக்கிறார்.

**எல்லையம்மன்கோயில்:** விஜயபுரம் கடைத்தெருவின் நடுவில் அமைந்திருக்கிறது. மூலஸ்தானம் தலைமட்டும் அமைந்தது. மகன் பரசுராமனால் வெட்டப்பட்ட, ஜமதக்னி முனிவரின் மனைவியாகிய ரேணுகாதேவியின் முகம். இது ரேணுகா தேவியம்மன்கோவில் எனவும் வழங்கும். இதனைக் குலதெய்வமாகக் கொண்டவர்கள் பட்டுக்கோட்டை அரந்தாங்கித் தாலுக்காவிலுள்ள வியாபாரிச் செட்டிமார்கள்.

**மாணிக்க நாச்சியார் கோயில்:** மாணிக்க நாச்சியார் பதியிலார் (பரத்தையர்) குலத்துப் பிறந்தும் "என் கொங்கை நின்னன்பர் அல்லார் தோள் சேரற்க" என்ற உறுதிப்பாடு கொண்டவர். பணம் பெற்று மனம் ஒத்த பிறகு, அன்று பணம் கொடுத்தவரையே பதியாகக் கொள்ளும் பிறழா ஒழுக்கம் உடையவர். இறைவன் இவருடைய நெறித்தொண்டை உலகினர்க்குக் காட்டக் கிழ வேதிய உருவங்கொண்டு, உருத்திராக்கத்தைக் கையுறையாகக் கொடுத்துக் கலந்திருந்து, சிறிது



நேரஞ் சென்றபின் மூப்பாற் காலன் வாய்ப் பட்டவர்போலானார். நாச்சியார் தன் அன்றைய நாதனை இழந்த துன்பத்தால் வருந்தி உடன்கட்டை ஏறத் துணிந்து ஆயத்தமானார். ஒழுக்கத்தின் சிறப்பை உலகிற்குக் காட்டினார். இறைவன் இடபாரூடராகக் காட்சி வழங்கிப்பேரின்பமடைவித்தனர். இப்பொழுதும் தியாகப்பெருமான் திருத்தேர் புறப்படுங்காலை மாணிக்கநாச்சியார் அர்ச்சனையொன்று அவர்கள் மரபினர்களால் நடைபெறும் என்றும், பின்னரேதான் வடம் பிடிக்கப்படும் என்றும் சொல்லப்பெறுகின்றது. இது ஓர் சிறந்த திருக்கோயில்.

இவைகளேயன்றி விஜயபுரம் மாரியம்மன் கோயில், பெருமாள்கோயில், சிவன்கோயில், மடப்புறம் பெருமாள்கோயில், பிடாரிகோயில் முதலிய பலகோயில்கள் இத்தலத்தில் விளங்குகின்றன.

## மறு பெயர்கள்:

இத்தலத்திற்குப் பல வேறு காரணங்களால் பலபெயர்கள் திருமுறைகளிலும், பிற இலக்கியங்களிலும் வழங்கி வருகின்றன.

**கமலாலயபுரம்:** திருமகள் வழிபட்டு மாங்கல்யம் வளர்ந்த தலம்.

**க்ஷேத்ரவரபுரம்:** பிரமன் தான்படைத்ததாகிய எல்லாத் தலங்களையும் ஓர்தட்டிலும் இதனை ஓர்

தட்டிலும் இட்டுத்தூக்கி இதன் உயர்வினைப் புலப்படுத்தமையின் வந்தபெயர்.

ஆடகேசுரபுரம்: பராசக்தியோடு சிவபெருமான் பொன்மயமான இலிங்கமாகப் புற்றிடமாகத் தோன்றிய திருக்கோயிலையுடைய நகரம்.

தேவயாகபுரம்: தேவர்கள் அனைவரும் அளவற்றகாலம் சிவபெருமான் அருளால் யாகஞ்செய்து சுவர்க்கப்பேற்றினை நெடிது அடைந்தனர் ஆதலின் இப்பெயர் பெற்றது.

கந்தபுரம்: தமது தந்தையினது ஏவல்வழியே கலியுகவரதராகிய கந்தப்பெருமான் காவல் புரிந்து வருதலின் வந்த பெயர்.

முசுகுந்தபுரம்: முசுகுந்தச்சோழன் தியாகராஜரையும் எழுந்தருளுவித்து, விழா பலவும் நடத்தித் தலைநகராகக்கொண்டு சோழநாட்டை ஆண்ட தலம்.

கலிசெலா நகரம்: சனகாதியர் வன்மீகரைப் பூசித்துக் கலித்துன்பத்தினின்றும் நீங்கிய தலம்.

அந்தரமகேசபுரம்: சிவபெருமான் பன்னெடுங்காலமாகப் பூமியின்கீழ் எழுந்தருளியிருந்த இடம். இதனை அப்பர்சுவாமிகள் 'பாதாளக்கரு' என்று குறிப்பிடுகிறார்கள்.



வன்மீகபுரம்: விஷ்ணுவின் செருக்கடக்க, இந்திரன் உண்டாக்கிய புற்றினிடமாகப் பெருமான் எழுந்தருளியதலம்.

தேவாசிரயபுரம்: தேவர்கள் எந்நாளும் வந்து வழிபடுந்தலம்.

சமற்காரபுரம்: சமற்காரன் என்னும் மன்னன் காடுதிருத்தி நாடாக்கிப் பலமுனிவர்களைக் குடியேற்றிக் காணப்பெற்றதலம்.

மூலாதாரபுரம்: விராட் புருஷனுக்கு மூலாதாரமாக விளங்குந்தலம்.

சத்திபுரம்: கமலைப்பராசக்தி தவக்கோலத்துடன் வழிபட்டு இடப்பாகம் பெற்றதலம்.

தீர்த்தங்கள்:

தேவதீர்த்தம்: இது கமலாலயம் என்று இப்போது வழங்குகிறது. ஐந்துவேலிப் பரப்புள்ளது. கோயிலுக்கு மேல்பால் உள்ளது. வன்மீகநாதர் வெளிப்பட்ட காலத்து அவருடனே வெளிப்பட்ட பாதாளக்கங்கைபாய்வது. தேவர்கள்பலரும்நீராடியதால் இப்பெயர்பெற்றது. கமலாலயமகாத்மியத்தில் ஐம்பது தண்டம் நீளமும் அகலமும் உள்ளதாக அறிவிக்கப்பெறுகிறது. ஆகவே அக்காலத்துச் சதுரமாக இருந்திருக்க வேண்டும். பின்னர் சமண

ஆதிக்ககாலத்தில் பள்ளிகளும், சிராவக இல்லங்களும் ஏற்பட்டுத்தூர்ந்தன. தண்டியடிகள் வெட்டித் திருத்தினர் என்று பெரியபுராணம் கூறுகிறது. கங்கைநதியைப்போல அறுபத்து நான்கு கட்டங்களையுடையது. பதினாறுகோடிகளையுடையது. இதில் பங்குனி உத்திரத்தில தீர்த்தவிழா நடைபெறும். ஏனைய விழா, மார்கழித் திருவாதிரை அருத்தோதயம், மகோதயம் முதலான புண்யகாலங்களிலும் தீர்த்தவிழா நடைபெறுவதுண்டு.

சங்கதீர்த்தம் : இது பூங்கோயில் முன்பு ஆயிரக்கால் மண்டபத்திற்குப் பக்கத்தில் உள்ளது. இதில் நீராடுவது மிகச்சிறப்பானது என்றுபுராணம் கூறுகிறது. சங்கமுனிவர் மூழ்கி, திருட்டுக்குற்றம் நீங்கித் திருகரம் பெற்றார். சமற்காரமன்னன் மூழ்கி வெண்குட்டம் நீங்கினன் என்று புராணங் கூறுகிறது.

சரசுவதி தீர்த்தம் : இது சபாபதி மண்டபத்தின் முன் உள்ளது. இதில் அன்பர்கள் பலர் நவராத்திரி விழாக்களில் முறையாக நீராடுவர். தக்ஷன் என்ற அரசன் ஒருவன் நீராடி ஊமை நீங்கினன் என்கின்றது புராணம்.

செங்கழுநீரோடை: இது சந்நிதிக்குக்கிழக்கே அரைகல் தொலைவிலிருக்கின்றது. 'ஓடை ஐவேலி' என்றபழமொழி வழங்கப்படுவதால் இது ஐந்து வேலிப்பரப்புடையது. இதில் வளரும் செங்கழுநீர்ப்



பூக்களைக் கொண்டு இறைவனுக்குச் செண்டும் மாலையும் கட்டுவது வழக்கம். ஆனால் இது இன்று நன்னிலையிலில்லை. இவ்வோடை 'ஆம்பலம்பொய்கை' எனத் தேவாரத்துச் சிறப்பிக்கப்படுகிறது.

ஞானப்பிரகாசக் குளம்: இது ஓடம்போக்கியாற்றின் கரையில் ஞானப்பிரகாசர் பூஜை மண்டபத்திற்கெதிரில் விளங்குகிறது. இப்போது ஞானப்பிரகாசகுட்டை என வழங்கப்படுகிறது.

ஓடம்போக்கியாறு: இது நகரத்தின் தெற்கு எல்லையாக ஓடுவது. மணக்கண் என்ற ஊருக்குப் பக்கத்தில் வெட்டாற்றிலிருந்து பிரிந்து நாகப்பட்டினத்துக்கருகில் கடலொடு கலக்கிறது. புராண காலத்தில் கபிலதீர்த்தம் எனப் பெயர்பெற்றது. கபிலமுனிவர் இதில் மூழ்கி எல்லாச்சித்திகளையும் பெற்றார். கல்வெட்டுக்களில் கடுவாயாறு என்று இது குறிக்கப்படுகின்றது. தமிழரசராட்சிக் காலத்தில் கடுவாயாறாக இருந்த இது, பின் உள்நாடுகளுக்கு நாகைத் துறைமுகத்திலிருந்து சரக்குகளை ஓடங்களில் கொண்டுபோக உபயோகப்படுத்தப்பட்டதால் ஓடம்போகி அல்லது ஓடம்போக்கி என்று வழங்கப்பட்டது போலும்.

இன்னும் கயாதீர்த்தம், முத்தி தீர்த்தம், சூரிய குண்டம், சோம குண்டம், அக்கினி குண்டம், விசுவாமித்ர தீர்த்தம், உருத்திர தீர்த்தம், மார்க்

கண்ட தீர்த்தம், பரசுராம தீர்த்தம், சப்தமாதர் தீர்த்தம், கௌமாரி தீர்த்தம் முதலிய தீர்த்தங்களும் உள்ளன. இத்தலத்து இருபத்தொரு தீர்த்தங்கள் இருப்பனவாகப் புராணம் கூறுகிறது.

## கோயிலமைப்பு:

திருக்கோயிலுக்குப் பூங்கோயில் என்றுபெயர். 'பூங்கோயிலுட்புகுந்து போகாதிருந்தாரே' என்பது அப்பர் தேவாரத்திற்கண்டது. இது ஐந்துவேலிப் பரப்புடையது. அகலம் தெற்குவடக்கில் அறுநூற்றறுபத்தாறு அடிகளும், நீளம் கிழக்குமேற்கில் எண்ணூற்று நாற்பத்தாறு அடிகளும் உள்ளன. நாற்புறமும் சுமார் முப்பதடி உயரமுள்ள கருங்கல் மதில் கோயிலை அரண்செய்கிறது.

கீழைக்கோபுரம் மிகப்பெரியது. 118 அடி உயரமுள்ளது. இதன் வாயில் மேல்தளம்வரை கருங்கற் பணி. சிற்பங்கள் பார்ப்பவர்களின் சிந்தை கவரத் தக்க நிலையில் செறிந்திருக்கின்றன. கோபுரத்தின் வெளிப்புறத்து இடப்பக்கம் விநாயகர் கோயிலும் வலப்பக்கம் முருகன் கோயிலும் விளங்குகின்றன. கோபுரத்தையடுத்து உட்புறமாகத் தேவாசிரய மண்டபமாகிய ஆயிரக்கால் மண்டபம் திகழ்கிறது.

தெற்குக்கோபுரம் மிகச் சிறியது. இதனை நாற்றிருபது ஆண்டுகட்கு முன்பு சிதம்பரநாதமுனிவர்



என்ற தருமையாதீனத்து இராஜாங்கக் கட்டளைத் தம்பிரான் சுவாமிகள் திருப்பணி செய்வித்ததாக ஆதீன வரலாறு கூறுகிறது.

மேலைக் கோபுரம் 101 அடி உயரமுள்ளது. மிகப்பழமையானது. இதிலுள்ள சுதைசிற்பங்கள் பல புராணவரலாறுகளை விளக்கி நிற்கின்றன. சோழர்காலத்துத் திருப்பணி. பழமையாயிருந்தும் புதுமைக்காட்சி வழங்கி நிற்பது சிவம்பெருக்கும் சோழரது செம்மனத்தின் சீர்மையை விளக்கி நிற்பதாம்.

வடக்குக் கோபுரம் கருணாகரத்தொண்டைமான், அகோரதேசிகன் இவர்களுடைய கருங்கற் சிற்பங்களை யுடையதாக 101 அடி உயரத்தோடு விளங்குகிறது. இக்கோபுரம் கருணாகரத்தொண்டைமானால் திருப்பணி செய்விக்கப்பட்டது என்று வரலாறு கூறும்.

மூன்றாம் பிராகாரத்தின் அகலம் சுமார் 300 அடிகள் இருக்கலாம். இதன் கீழ்ப்பக்கத்துப் பக்த காட்சி மண்டபமும், ஊஞ்சல் மண்டபமும் இருக்கின்றன.

இப்பிராகாரத்தில் மூக்குத்திக் கிணறென்னும் முத்திதீர்த்தமும், வாணிதீர்த்தமும், விட்டவாசல் கிணறுமாகிய மூன்று கிணறுகள் இருக்கின்றன.

இவையே இந்நகர் முழுமைக்கும் குடிதண்ணீராகப் பயன்படுகின்றன.

இரண்டாம் பிராகாரத்திற்குச் செல்லும் கோபுரம் ஆரியன் கோபுரம் எனப்பெயர்பெறும். அரியயன் கோபுரம் என்பது ஆரியன்கோபுரமென வழங்கப்பெறுகிறது போலும். இதில் விறன்மிண்டர் என்ற சிவனடியார் மெய்காப்பாளராக எழுந்தருளியிருக்கின்றார். இப்பிராகாரத்தில் நூற்றுக்கு மேற்பட்ட சிறு கோயில்கள் விளங்குகின்றன. இச்சிறு கோயில்களை அலங்கரிப்பன கௌதமர், காசிபர், அகஸ்தியர், புலஸ்தியர், முசுகுந்தன், சிபி முதலியோர்கள் வழிபட்ட சிவலிங்கங்கள்.

இதைப்பற்றி கௌட்டியார், 108 இலிங்கங்கள் உள்ளன என்றும், காசியிலிருந்து வரவழைக்கப் பெற்று, பலவேறு காலங்களில் பிரதிட்டிக்கப் பட்டன என்றும் கூறுகிறது. இதனைப் பிள்ளையவர்கள் 'குவிதருகரம் விரித்தல்செலாக் கோயில்களும் பல உளவால்' என்று அணிபெறக் கூறுவர்.

திருவாரூர் அரநெறி, அசலேசம், ஆனந்தேசம், விசுவகர்மேசம், சித்தீசம் ஆகிய ஆலயங்கள் இப்பிராகாரத்தில் விளங்குகின்றன.

வன்மீகநாதருடைய சந்நிதியை யடைவிக்கும் கோபுரவாயில் அழகியான் கோபுரம் எனவழங்கும். வன்மீகநாதர், தியாகேசர் பரிவாரங்களோடு எழுந்தருளியிருக்கின்ற இடம் இதுவே.



## மண்டபங்கள்:

தேவாசிரயமண்டபம்: இது ஆயிரங்கால்களையுடையது. எப்பொழுதும் தேவர்கள் வந்து அடுத்திருப்பதால் தேவாசிரயம் எனப்பெயர் பெற்றது. இதனைச் சேக்கிழார்பெருமான் 'தேவாசிரயனுங்காவணம்' என்றும், 'திருவார் பெருமை திகழ்கின்ற தேவாசிரயம்' என்றும் குறிப்பிடுவர். இங்குதான்,

"பெருமையால் தம்மை ஒப்பார்
பேணலால் எம்மைப் பெற்றார்
ஒருமையால் உலகை வெல்வார்
ஊனமேல் ஒன்று மில்லார்
அருமையாம் நிலையில் நின்றார்
அன்பினால் இன்பம் ஆர்வார்
இருமையுங் கடந்து நின்றார்"

என்று பழம்பெருமை படைத்தவர்களான அடியார் பெருமக்கள் கூடியிருந்து சித்தம்தெளியப் பத்திமலர் தூவி முத்தியை நாடி நிற்பர். பெரிய புராணம், 'விண்ணவர் ஒழிய மண்மேல் மிக்க சீர் அடியார் கூடி எண்ணிலார் இருந்தனர்' என்று பேசும். நிறைசெல்வத் தியாகப்பெருமான் ஆழித்தேர். விழாமுடித்து இதில் எழுந்தருளி மகாபிஷேகங்கொண்டருளுவர். இதற்கு ராஜதானி மண்டபம் என்ற மற்றொருபெயரும் உண்டு. தியாகராசப்பெருமான் அருட்செங்கோல் கொண்டு

ஆன்மாக்களுடைய இருமைத்துன்பமும் போக்கி, ஒருமை முத்தியை அளித்துப் பாதுகாக்கும் அரசியலைச் செலுத்துமிடம் இதுவாதலின் இப்பெயர் பெற்றதுபோலும்.

இம்மண்டபத்தில் நடுமண்டபம் நீங்க ஆறிடங்களில் விமானமும் மேற்கட்டியும் கட்டக்கூடிய இட அமைப்பு இருக்கின்றது: ஒரு காலத்து ஏனைய விடங்கத் தலங்களிலுள்ள சுவாமிகள் இங்கு விழா முடிந்ததும் எழுந்தருள்வது வழக்கம் என்றும், (பெருநீராட்டு) மகாபிஷேகம் முடித்துத் தீர்த்த விழா முடிந்ததும் எல்லாச் சுவாமிகளும் தத்தம் இருப்பிடத்தை யடைவதுண்டென்றும் செவிவழிச் செய்தியுள்ளன.

பக்தகாட்சிமண்டபம்: தெற்குக் கோபுரத்திற்கும் தேவாசிரய மண்டபத்திற்கும் இடையில் இருக்கின்றது. தியாகேசப் பெருமான் பங்குனி உத்தரத்திருவிழா முடிந்து அருள் நடனம் செய்த வண்ணமாக அன்பர்கட்குக் காட்சி யளிக்கும் மண்டபம் இதுவே. இது பந்தக்காட்சி மண்டபம் என இப்பொழுது பெயர் வழங்கிவருகிறது.

ஊஞ்சல் மண்டபம்: இது திருவாதிரைத் திருநாளில் சந்திரசேகரர் எழுந்தருளி ஊஞ்சல் உற்சவம் கொண்டருளுமிடமாகும். இது பக்த காட்சி மண்டபத்துக்கு எதிரில் இருக்கிறது.



துலாபாரமண்டபம்: மூன்றும் பிராகாரத்துத் தென்மேற்குக் கோடியிலிருக்கிறது. தமிழரசர்கள் தங்கள் பிறந்தநாளில் தராசில் ஏறியிருந்து, தங்கள் நிறையுள்ள பொன்னைத் திருக்கோயிற் பணிக்காகத் தானஞ் செய்து வந்தனர். அதற்காகக் கட்டப்பெற்ற மண்டபம் இது.

சபாபதி மண்டபம்: மேலக்கோபுர வாசலை யடுத்துள்ள பெரியமண்டபம். சித்திரசபாமண்டபம் எனவும் வழங்கும். பங்குனியுத்தர விழாவில் திருத்தேர் உத்தரபாதத்திற்குள் நிலைக்கு வந்துவிட்டால் தியாகராஜப்பெருமான் இம்மண்டபத்திற்கு எழுந்தருளி உத்தரதீர்த்தம் வழங்குவர். உத்தர மகா அபிஷேகமும், பாததரிசனமும் இங்கேயே நடைபெறும். இதில் தேவஸ்தானக் காரியாலயமும் புத்தகசாலையும் இன்று இருக்கின்றன.

புராணமண்டபம்: சபாபதி மண்டபத்திற்குப் பக்கத்தில் கோயிலையடுத்து இருக்கிறது. இது ஒரு சிறியமண்டபம். கமலாலய மகாத்மியம் நடோறும் இங்கிருந்து வாசிக்கப்பெறும். புராணபடனத்திற்கு என்றே திருக்கூட்டத்தடியார் ஒருவர்க்கு மானியம் (இறையிலி நிலம்) வழங்கப்பெற்றிருந்ததாகவும், அவர்கட்குக் கோயிலில் மரியாதைகள் நிகழ்ந்ததாகவும், அவர் இதிலிருந்து புராணஞ் சொல்ல வேண்டும் என்றும் கல்வெட்டொன்று கூறுகிறது.

**ராஜநாராயண மண்டபம்:** இது ஆரியன் கோபுரத்தைத் தாண்டியுட்புகுந்ததும் காணப் பெறும் பெரியமண்டபம். எண்ணெய்க்காப்பு மண்டபம் எனவும் வழங்கப்பெறும். தியாகராஜப் பெருமான் பங்குனியுத்தரம் முடிந்ததும் இங்கு எழுந்தருளி எண்ணெய்க்காப்பு ஏற்றருளுவர். அதனால் மண்டபம் இப்பெயர் பெறுவதாயிற்று. திருவாதிரைத் திருநாளுக்கு இதில் எழுந்தருளி மகாபிஷேகம் கொண்டருளுவர். பாததரிசனம் இங்குநடைபெறும். இது ராஜநாராயண சோழனால் கட்டப்பெற்றதென்பர்.

**தட்டஞ்சுற்றி மண்டபம்:** இது பூங்கோயிற் பக்கம் ராஜநாராயண மண்டபத்திற்குப் பின்புறம் இருக்கின்றது. இதில் விஷு புண்யகாலங்களில் தீராட்டுவிழா நடைபெறும். உற்சவகாலங்களில் சுவாமி திருவீதியுலாப்போய் வந்தபிறகு தட்டுச் சுற்றுதல் என்ற சடங்கு நடைபெறும். தட்டுச் சுற்றுதலாவது இசைப்பணியாளர் அனைவரும் பெருமானை மூன்றுமுறை வலம்வந்து மரியாதை பெற்றுச் செல்லும் ஒருவகைத்தொண்டாகும்.

**வசந்தமண்டபம்:** சித்திச்சரம்தக்ஷிணாமூர்த்தி சந்நிதிக்குப் பக்கத்தில் இருக்கிறது. பங்குனியுத்தர விழாவில் வசந்தன் என்ற திருவிழா இங்குதான் நடைபெறும். மண்டபம் புதிய ஆடைகளாலும், பலவகையான காய்கறிகளாலும், பழங்களாலும் அலங்கரிக்கப் பெற்றிருக்கும். உள் மண்டபம் பூக் களாலும், விலாமிச்சவேராலும், வெட்டிவேராலும் அலங்கரிக்கப் பெற்றிருக்கும். தியாகப்பெருமானை இங்கு எழுந்தருளுவித்து, பாவாடைபோட்டு மகா நைவேத்யம் செய்வித்து, அன்றிரவே இருப்பிடம் சேர்ப்பிப்பர்.



**மகா மண்டபம்:** வன்மீகநாதர் திருமுன்பும், தியாகேசப்பெருமான் திருமுன்பும் இரண்டு மகா மண்டபங்கள் உள்ளன. இவற்றில் நந்தி பலிபீடம் முதலியன அமைந்துள்ளன.

**திருப்பள்ளித்தாமமண்டபம்:** இது திருவாரூர் அரநெறியை யொட்டி அமைந்துள்ளது. இது ஒரு சரித்திரத்தொடர்புடைய இடம். கழற்சிங்க நாயனாருடைய மனவுறுதியும் செருத்துணை நாயனாருடைய சிவத் தொண்டும் விளங்கியது இந்தமண்டபத் திலேயே.

இவைகளேயன்றி எல்லாத் திருக்கோயில்களுக் கும் அமையவேண்டிய அர்த்த மண்டபம், மகா மண்டபம், அந்தராள மண்டபம், திருக்காற்று மண்டபம் முதலியனவும் மிகச்சீரிய முறையில் தொன்மைக்கு இலக்கியமாக விளங்குகின்றன.

## உட்கோயில்கள்:

திருவாரூர்ப் பூங்கோயில் பலகோயில்களை உள் ளடக்கி விளங்குவது. ஆரியன் கோபுரம் தாண்டி

விட்டால் எங்கும் கோயிலாகவே காணப்பெறும். முசுகுந்தன், தேவேந்திரன், தக்ஷன் முதலிய தேவர்கள் தாம்தாம் ஆன்மார்த்தமாக வைத்து வழிபட்ட சிவலிங்கங்கள், சற்றேறக்குறைய 108 உள்ளன. இவைகளுட் சிறந்தன அசலேசம், ஆனந்தேசம், விசுவகன்மேசம், ஆடகேசம், சித்தீசம் என்பன. இவையன்றி, பிருதிவி முதலிய ஏனைய நான்கு பூதலிங்கங்களும் இருக்கின்றன.

அசலேசம்: இது திருவாரூர் அரநெறியென்னும் தனித்தலம். திருநாவுக்கரசரால் பாடப்பெற்றது. இறைவனது திருநாமம் அசலேசர். இறைவி வண்டார்குழலி. இத்தலத்தில்தான் நடராஜப் பெருமான் திருவுருவம் எழுந்தருளியுள்ளது. இந் நடராஜப் பெருமானே திருவிழாக்காலத்தில் திருவீதிகளெழுந்தருளிக் காட்சிதந்தருளுவர். நமிநந்தி அடிகள் திருவிளக்கிட்டதலமும் இதுவே. இதனை அப்பர் சுவாமிகள் மிகச்சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளார்கள். கழற்சிங்கர் என்னும் பல்லவ அரசருடையமனைவியார் திருப்பள்ளித்தாமமண்டபத்தில் சிந்திக்கிடந்த மலரை எடுத்து மோந்ததற்காகச் செருத்துணையார் மூக்கரிந்த தலமும் இதுவே. சமற்கார மன்னருடைய வேண்டுகோட்படி இறைவர் சலியாது எழுந்தருளியிருப்பதால் அசலேசர் எனப் பெயர்பெற்றார். இது மேற்குப் பார்த்த சந்நிதி. அசலேசர் நிழல் கிழக்குத்திசையிலன்றி மற்றைய திசைகளில் விழாது. ஆறுமாதத்திற்குள்



இறப்பவர்கள் நோக்கினால் அந்நிழலும்தெரியாது. இவ்வுண்மைகளை "அந்தலிங்க நன்னிழல் குண திசையிலன்றி வந்திடாதொரு திசையினும், இம் மொழி வாய்மை" எனவும், "ஆறு திங்களிலிறப்பவர் நோக்கினால் அந்த வீறிலாநிழல் காணுறாது" எனவும் வரும் திருவாரூர்ப் புராணப்பகுதிகளே இதற்கு எடுத்துக்காட்டாகும்.

ஆடகேசம்: இது அப்புஸ்தலம். இங்கு ஒரு நாகபிலம் உண்டு. சிவலிங்கப்பெருமானும் அம்மையாரும் பரிவாரங்களுடன் எழுந்தருளியிருக்கின்றார்கள். பெருமானுக்குப் 'பொற்படிகமுடைய நாயனார்' என்று கல்வெட்டுக்கள் பெயர் குறிப்பிடுகின்றன. இந்திர பதவியளிப்பது இத்தலமாதலின் பொறாமைகொண்ட இந்திரன் நாகபிலத்தை மலைப் பாறையால் அடைக்க, முருகன் நான்கு சத்திகளை கிறுவி வேலையும் ஊன்றிப்பாதுகாத்தனர் என்பது வரலாறு.

ஆனந்தேசர்: பூங்கோயிலின் வாயுமூலையில் உள்ளது. இதில் விநாயகர், மூத்தாள், முனிவர், கோணப்பிள்ளையார், ஜியேஷ்டாலிங்கம் இவர்களின் திருவுருவங்கள் அமைந்துள்ளன. இறைவன் ஆனந்தேசர். இறைவி ஆனந்தநாயகி. மங்கணமுனிவர் தாபித்து வழிபட்டுச் சித்திபெற்று ஆனந்தத்தால் கூத்தாடினார். அதனால் ஆனந்தலிங்கமாயிற்று. பட்டினசாமியென்னும் வணிகன் வைகாசி விசாகத்தால் அருச்சித்தான். அதனால் அவன் மறுமையில்

காஞ்சி அரசனனென். இச்செய்தியைத் 'தென்னரூர் ஆனந்தற்கு எம்மையணிந்துய்த்தார் உண்டென்று தேனந்தக்கஞ்சம் தெளிப்பது' என்று திருவாரூர் உலாகூறுகின்றது.*

அருணைசலேசம்: தென்பிராகாரத்திலுள்ளது. தேயுலிங்கம். பெயருக்கேற்பச் சிறு கட்டுமலையாக அமைந்ததலம். இறைவன் திருநாமம் அருணைசலேசர். இறைவி திருநாமம் உண்ணாமுலையம்மை.

விசுவகன்மேசம்: இது அழகியகற்பணி. சிற்பிகள் கைத்திறமெல்லாங்காட்ட அமைக்கப்பெற்றதொரு மாதிரிக்கோயில். பெயருக்கேற்ப அழகிய கொடுங்கைகள், வரிகள், திருவுருவங்கள் பல அழகாக அமைந்துள்ளன. இறைவன் விசுவகன்மேசர்.

சித்தீச்சரம்: வடக்குப் பிராகாரத்திலுள்ளது. மேற்குப்பார்த்த சந்நிதி. அம்ஸனென்னும் அரசன் பஞ்சாக்ஷரஜெபஞ்செய்து, சித்தீசன் என்னும் பெயர்தாங்கி, சுக்கிராசாரியுபதேசிப்படி இம்மூர்த்தியைத் தாபித்து வழிபட்டான். ஓர் அந்தணச் சிறுவன் ஷடாக்ஷரத்தை ஓதி முனிவர்சாபம் நீர்ந்தான். இங்கு ஒரு தக்ஷிணாமூர்த்தி உண்டு. தருமபுர ஆதீனத்து ஆதிபரமாசாரிய சுவாமிகள், கமலை

---

* உலா, கண்ணி 140.



...சித்தீச்சரம் தக்ஷிணாமூர்த்தி

ஞானப்பிரகாச தேசிகரை அணுகி உபதேசம் பெற்று, சொக்கலிங்கபூசை எழுந்தருளுவித்துக் கொண்ட இடமும் இதுவே.

## மூர்த்திகள்:

**ஐங்கலக்காசுவிநாயகர்:** இவர் பெருவிழாவில் உற்சவம் கொண்டருளுகின்றவர். இவர் யதாஸ்தானம் தியாகர் வன்மீகநாதர் சந்நிதிகளினிடையிலிருக்கிறது. அழகியசோழ விநாயகர் என்றமற்றொரு பெயரும் இவருக்குண்டு. அழகியான் கோபுரமும் இவர் பெயரும் ஒத்திருப்பதால் இப்பணியிரண்டும் அழகியசோழனதாக இருக்கவேண்டும். அதற்கேற்ப சோழனொருவன் ஐங்கலப்பொற்காசு கொண்டு இவ்விநாயகரை ஆக்கினான் என்ற செவிவழிச்செய்தியும் உண்டு.

**வன்மீகநாதர்:** இவர் எழுந்தருளியுள்ள இடம் திருமூலட்டானமென வழங்கும். கோயில் என்பது சிதம்பரத்தை யுணர்த்துமாறு போலத் திருமூலட்டானம் என்பதும் இவ்விடத்திற்கேயுரிய சிறப்புப் பெயர். பெருமான் திருநாமம் புற்றிடங்கொண்டார். வடமொழியில் வன்மீகநாதர் எனவழங்கும். அர்த்த மண்டபத்தில் பிரியாவிடையம்மை எழுந்தருளியிருக்கின்றார். சோமகுலாம்பிகை என்ற பெயரும் உண்டு.

தியாகேசர்: இத்தலத்திற்கு மிகச் சிறந்த சந்நிதி இதுவே. இவர் திருமுன்பு எதிர்மண்டபத்து, புவியரசரும் கவியரசருமாகிய சேரமான் பெருமாளும் சுந்தரரும் எழுந்தருளியிருக்கின்றார்கள். இவர்களுடைய திருமுகக்குறிப்பு தியாகவள்ளலையே காட்டுவதாகும்.

தியாகர்திருமுன் நந்திபெருமான் எழுந்தருளியிருக்கின்றார். இது தலத்தின் தனிச்சிறப்பு. 'அடியார்கள் குறைதீர்க்க நள்ளிரவில் தூது சென்றது போல இனியும் திருவடி நோவச்செல்ல விட்டுவிடக் கூடாது; அத்தொண்டிற்கு நானும் துணைசெய்வேன்' என்று நந்தி எழுந்து நிற்கின்றார் என்று தியாகராஜலீலை பேசுகிறது.

தியாகப்பெருமான் இரத்ன சிம்மாசனத்தில், முன்னே இரண்டு வாட்படையும் நடுவில் பூச்செண்டும் பொருந்த எழுந்தருளிக்காட்சிவழங்குவர். பெருமான் பக்கத்து அம்மை எழுந்தருளி இருக்கின்றார். அம்மையின் திருநாமம் கொண்டி என அழைக்கப்படுகின்றது. அப்பர்சுவாமிகள் 'தண்டவாளியை' என்ற திருப்பாடலில், 'கொண்டியாயின வாறென்றன் கோதையே' என்று குறிப்பிடுகின்றார். பிள்ளையவர்களும்,

'பாடல் மலியத்தளியில் பருமணிச் சிங்காதனத்தில்
கூடுற இடப்பாகம் எழிற்கொண்டியொடும்'



என்று கூறுகிறார்கள். இவ்விருவரிடையே ஆனந்த வடிவினனாக முருகக்கடவுள் எழுந்தருளியிருக்கின்றார். இந்நிலையை,

'வெள்ளிலைவேல் நம்பியொடும்,
ஆடரவக் கிண்கிணிக்கால் ஐயனிருந் தரசுசெய்யும்'

என்று தியாகராசலீலை கூறுகிறது. இப்பெருமானுடைய ஒவ்வொருபொருளுக்கும் தனிப்பெயருண்டு. தியாகரணியும் பரிவட்டம் (ஆடை) தியாகவிநோதன் என்றும், தியாகப்பரிவட்டம் என்றும் அழைக்கப் பெறும். இப்பரிவட்டத்தின் ஓரங்களில் தியாக விநோதன் என்று பெயர் எழுதப்பெற்று வந்தது. இதனை, 'தம்பேர் தொடுத்த கரைத்தூசும்' என்று தியாகராசர்கழிநெடில் அழகாகக் கூறுகின்றது. அணியும் கிண்கிணி ஆடரவக்கிண்கிணி. வாள் - வீரகண்டயம். தேர் - ஆழித்தேர். மாலை - பணி. மத்தளம் - சுத்தமத்தளம். நாதசுரம் - பாரி, வாத்யம் - பஞ்சமுகவாத்யம். பிள்ளைத்தண்டு - மாணிக்கத்தண்டு. நடனம் - அசபை. கொடி - தியாகக் கொடி. காலம் - திருவந்திக்காப்பு. சிம்மாசனம் - இரத்தின சிம்மாசனம். சாளரம் - தென்னந் திருவாசல். சபை - தேவசபை. விழா - மார்கழித் திருவாதிரையும் பங்குனி உத்திரமும். இவைகளைப் பற்றியவிரிவான குறிப்புக்களை, உலாவும் கழிநெடிலடியும் தெரிவிக்கின்றன.

இப்பெருமானுக்குச் சாத்தப்படும் கச்சு இரகசியம் எனவழங்கப்படும். ரகசியம்என்றும் ரகசியமே.

தியாகேசருக்கு வீதிவிடங்கர், தியாக விநோதர், தேவரகண்டப்பெருமாள், செவ்வந்தித் தோடழகர், செங்கழுநீர்த்தாமர், கம்பீக்காதழகர், ஆடரவகிண்கிணிக்காலர், இருந்தாடும்பெருமான், அஜபாநடேசர் முதலாக 108 திருநாமங்கள் இருக்கின்றதாக இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. கருணாகரத் தொண்டைமான் என்ற விருதுப் பெயரும் உண்டென்று சோழமண்டலசதகம் கூறுகின்றது. தியாகப்பெருமானை விடுபூக்கள் தூவி வழிபடுவதே முறை. முகுந்த நாமார்ச்சனை முசுகுந்தார்ச்சனை என்ற இருமுறைகளாலும் வழிபடுவது வழக்கம். இவையிரண்டும் அவர்கள் ஏத்திய ஆயிரம் திருநாமங்கள்.

வாதாபிவிநாயகர்: இவர் தலவிநாயகர். ஒரு காலத்துக் கலகக்காரர்கள் சிலர் இவரைக் கலிங்க தேசம்வரை கவர்ந்து சென்றதாகவும், அதனால் அவர்களுக்குத் துன்பம் விளைய அங்கேயேவிட்டுச் சென்றதாகவும், பின் விநாயகர் மீண்டாரென்றும் செவிவழிச்செய்தி உண்டு.*

நீலோத்பலாம்பிகை: பூங்கோயிலுக்கு வெளிப்புறமுள்ள தனிக்க அம்மன் ஆலயம். அம்மையின் பக்கத்தில் தோழி, தோள்மீது முருகனைச் சுமந்து நிற்கின்றார். அம்மை இடதுகரத்தல் முருகனது

* தியாகராசலீலை, கடவுள் வாழ்த்து பா. 29.



நீலோத்பலாம்பாள்

சுட்டுவிரலைப்பற்றி நிற்கின்றார். இது தலத்தின் தனிச்சிறப்பு.

விடங்கர்: தியாகர் சந்நிதியில் பெட்டகக் கோயிலில் வீற்றிருக்கும் ஸ்படிகத் திருமேனியின் திருநாமம் இது. பூஜாகாலங்களில் இவருக்கு அபிஷேகம் நடக்கும். இத்தலத்தின் அதிகார உடையவர் இவரே.

சந்திரசேகரர்: இத்தலத்துத் திருவுலாக் காட்சி கொண்டருளுகின்ற சந்திரசேகரமூர்த்தி இவரே. பெருவிழாவில் தியாகேசர் திருமுன்பு பட்டங்கட்டப்பெறும். பட்டம் சந்திரசேகரபட்டம் எனவழங்கும். அதுமுதல் விழாமுடியும்வரை தியாகேசர்க்குள்ள எல்லாமரியாதைகளும் இம்மூர்த்திக்குண்டு:

கமலாம்பிகை: தனிக்கோயிலில் எழுந்தருளியிருக்கின்றார். தவத்திருக்கோலம். பராசக்தி பீடங்களுள் இதுவும் ஒன்று. அம்மையின் கோயில் ஈசான்ய பார்வையிலிருக்கிறது. அம்மை, உண்மையறிவானந்த வெள்ளத்தை அள்ளி வீசிக்கொண்டு அமைத்த திருக்கரமும், தாமரை தாங்கிய திருக்கரமும், அக்ஷமாலை பாசம் ஏந்திய திருக்கரங்களுமாக நான்கு திருக்கரங்களோடு திருவடி ஒன்றன் மேலொன்றாகப் போட்டு மடக்கித் தொங்கவிட்டுக் கொண்டு யோகாசனத்தில் எழுந்தருளியிருக்கின்றார்.

இரணவிமோசநேசர்: சண்டேசர் ஆலயத்தின் பக்கத்தில் எழுந்தருளி யிருக்கின்றார். இவரை வணங்கின் ஆறாத புண்கள் ஆறும்; தீராத கடன்கள் தீரும் என்ற உறுதி மக்களிடையே நிலவிவருகிறது. காணிக்கையாக உப்புவாங்கிப் போடப்படுகிறது.

சண்டேசர்: இத்தலத்தில் இரு சண்டேசர் சந்நிதி உண்டு. ஒருவர் மூலவர். அவர் சடை தாடி முதலியவற்றுடன் ஒரு காலை யூன்றி ஒரு முழங்காலில் முகத்தை வைத்துக்கொண்டு கவலைக் குறிப்போடு காணக்கிடப்பர். அவர் இயமசண்டர். ஆரூர்ப் பிறந்தார்களனைவரும் சிவகணநாதர்களாக இருந்ததலின் இயமன் தனக்குத் தண்டவேலையின்றிப் போதலை அறிந்து வருந்த, இறைவன் 'நம்மை வணங்கும் பயனை வழங்கும் சண்டேச பதவி தந்தோம்' என்றருளினார். ஆதலால் இயமனே சண்டேசராக இருக்கின்றார்.

இவர்க்கு வலப்பக்கத்தறையில், நின்ற திருக்கோலத்தோடு உற்சவ சண்டேசர் இருக்கிறார். இவர் திருமுன்புதான் பங்குனி உத்தரத்திருநாள் வந்தமையை அனைவர்க்கும் ஓலையெழுதி அறிவிப்பது வழக்கம். இவர் தேவகன்மியாயிருந்து திருமுகம் எழுதுகிறார் என்பதனை,

'கருமுகில்சேரும் பங்குனித் திருநாள் காணுமலம்பின் என்று இனிய
திருமுக மலர்ந்து திருமுகமெழுதும் சேந்தனூர்ப்பிள்ளை'



என்ற பகுதி விளக்குகிறது. இப்போதும், திருமுகம் எழுதும் முறையும், திருமுக வாசகத்தை விண்ணப்பிக்கும் முறையும் சண்டேசர் திருமுன்பே நடைபெறுகின்றன.

நவக்கிரகங்கள்: இத்தலம் கோளிலித்தலங்களுள் ஒன்று. ஒன்பது கோள்களும் கோணமாக இன்றி, ஒரே நேராக அமைந்திருக்கின்றன. இது ஒரு தனிச்சிறப்பு.

துர்க்கை: காடுகிழாளாகிய கொற்றவை எட்டுக் கைகளோடு, காலினடியில் மகிடாசுரனின் தலையை மிதித்துக்கொண்டு, கைகளிற் சூலம் கபாலம் முதலிய ஆயுதங்களை யேந்தி நிற்கின்றாள். இது பிரார்த்தனை மூர்த்தங்களில் ஒன்று.

சுந்தரமூர்த்தி-சேரமான்: இத் தலத்திற்குப் பலவகையாலும் வரலாற்றுத் தொடர்புடைய மூர்த்திகள் இவ்விருவரும். தியாகவழிபாடு செய்தவர்கள் இவ்விருவேந்தரையும் வழிபட்டுச் செல்லுதலே வாய்ப்பான முறையாம்.

மந்திர பீடம்: இது வன்மீகர் பின்புறம் திருமாளிகைப் பத்தியில் அமைந்துள்ள ஒருபீடம். இது ஏழுள்ள மேருசிகரங்களில் ஒன்று எனப் புராணம் கூறும். உருவவழிபாடு செய்து வலம்வரும் அடியார்கள் தாம் மனத்தமைத்த திருவுருவத்தை இப்பீடத்தில் அமர்த்தித் தியானிக்கும் இடம். இன்றும்

வழிபடுவார் இப்பீடத்தின் முன்வந்து சிறிதுநேரம் கண்மூடித் தியானித்தே செல்வர்.

அக்ஷர பீடம்: இது கமலாம்பிகை ஆலயத்தின் பின்பக்கம் அமைந்தது. இதில் வடமொழி ஐம்பத்தோரக்ஷரங்களும் எழுதப்பெற்றுள்ளன. இங்கும் மேற்கூறியவாறு இருந்து தியானித்துச் செல்வது வழக்கம்.

கலை:

எல்லாக்கோயில்களுமே கலைச்சிறப்பிற்காகவே எழுந்தனவாயினும் இக்கோயில் அன்றும் இன்றும் அரசாங்கக் கவனிப்பிலேயே இருப்பதால் கலையும், நுண்கலையும், மெய்க்கலையும் மிகச்சீரிய முறையில் காப்பாற்றப்பெற்றன என்பது தெளிவு. நுண்கலை என்பது ஓவியன் கருத்திலிருந்து கைவழியாகப் பிரதிபலிப்பது. கலையென்பது கருத்திலிருந்து சொல்லின்வழியாகத் தொலைவில்லாது மிளிர்வது. மெய்க்கலையென்பது அனுபவிக்க அனுபவிக்கப் பேரின்பம் விளைப்பது. இம்மூன்றிற்கும் கோயில்களே குடியிருக்கும் இடங்கள்.

சித்திரம், சிற்பம், சங்கீதம், அபிநயம், நாடகம் முதலியன நுண்கலைகள்.

இத்தலத்து இக்காலத்தவர்களால் சிறிதும் வாசிக்கமுடியாத நிலையிலுள்ள மிகப்பெரிய நாதசுரம் ஒன்றுண்டு. அதற்குப் பாரிநாயனம் என்று பெயர். அதன் சீவுவாளிஒன்றே மூன்றங்குலத்திற்கு மேலானதாக இருக்கும். இதில் இன்னின்ன விதிகளில் இன்னின்ன ராகந்தான் வாசிக்கலாம் என்ற நியதியுண்டு. பெரும்பாலும் தேவாரப்பண்களும், தீக்ஷிதர் கிருதிகளுமே வாசிக்கப்பெறும்.

பஞ்சமுகவாத்யம்: சிறப்புடைய இதன் சுற்றளவு நான்கு அடி எட்டு அங்குலமாகும். இதற்கு ஐந்து முகங்கள் உள்ளன. ஒன்று பாம்பு சுற்றினாற்போல் அமைந்துள்ளது. ஒன்று ஸ்வஸ்திகா அடையாளமுடையது. ஒன்று தாமரைப்பூவின் அடையாளமுள்ளது. ஒன்று ஒரு அடையாளமுமில்லாது சுத்தமாகவுள்ளது. நடுவிலுள்ளது பெரியதாகவிருக்கும். அது மேலே மான்தோலால் கட்டப்பெறும். இதனை அடிப்பவர்கள் பாரசைவர்கள். இவ்வாத்தியம் ஒவ்வொரு முகத்திலும் தனித்தனியாக அடிக்கப்படும்போது ஏழுமுறையும், ஐந்திலும் சேர்த்தடிக்கும்போது முகத்திற்கு ஒன்றாக ஐந்துமுறையும் அடிக்கப்பெறும். இவ்வாத்தியம் சதாசிவமூர்த்தியின் ஐந்து திருமுகங்களிலிருந்து வந்ததாகவும், நடனகாலத்தில் திருநந்திதேவர் வாசிப்பாரென்றும், பிறகு அவர் ஸ்தானத்தில் பாரசைவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் பஞ்சமுக வாத்திய லக்ஷணம் என்னும் வடமொழி நூல் கூறுகின்றது. பாரசைவர்களின் உற்பத்தியும், அவர்களுக்குச் செய்யவேண்டிய தீக்ஷை முறைகளும், பஞ்சமுக வாத்தியம் அடிக்கப்படுவதால் ஆகும் பயனும் அதில் நன்கு அறிவிக்கப் பெற்றுள்ளன.

**சுத்தமத்தளம் :** இது ஏனைய மத்தளங்களைக் காட்டிலும் மிக நீண்டதாக - பருத்ததாக இருக்கும். திருவந்திக்காப்பு நேரத்தில் - ஏனைய தீபாராதனை காலங்களில் தியாகேசன் திருமுன்பு அடிக்கப் பெறும். இதனை அடிப்பவரும் மேற்கூறிய பாரசைவரே.

கூத்து : தொன்றுதொட்டு வசந்தமண்டபத்திலும் தேவாசிரிய மண்டபத்திலும் தியாகப் பள்ளேசல் நாடகமும், தியாகக் குறவஞ்சிக்கூத்தும் நடிக்கப்பெற்றுவந்தன. பீமானுக்கவிஜயம் என்ற நாடகம் ஒன்றும் நடிக்கப்பட்டதாகக் கல்வெட்டுக் காட்டுகிறது.

## சிற்பங்கள் :

இத்திருக்கோயிலில்பார்ப்பதற்கு அருமையான கருங்கல் வேலைப்பாடுகள் விளங்குகின்றன. பல அரசர்காலத்துச்செய்யப்பெற்ற சிற்பத்திறங்களைக் காணலாம். இரண்டாம் பிராகாரம் வடக்குப் பக்கத்தில் விஸ்வகர்மேசம் என்ற ஒரு கோயில் உண்டு. அது (விஸ்வகர்மாவின்) சிற்பியின் சிற்பத்திறத்திற்கென்றே இயற்றப் பெற்றிருக்கவேண்டும். கொடுங்கைகளும் சிறுதூண்களும் சேர்த்தியான வேலைப்பாடுள்ளவை.

கீழைக்கோபுரத்திலுள்ள துவாரபாலகர் திருவுருவம் மிக நயப்பாடு அமைந்த இழைப்புவேலையியற்றப் பெற்றது.



கமலாம்பாளின் கோயிலிலுள்ள ஆறுமுகக் கடவுள் திருவுருவமும், வடக்குக் கோபுரத்துள்ள கருணாகரத் தொண்டைமான் அகோரபண்டாரம் இவர்கள் திருஉருவங்களும் மிக அழகானவை.

திருக்கோயிலுள் சந்திரசேகரர் சந்நிதியில், இத்தலத்தின் க்ஷேத்திரவரபுரம் என்ற பெயர்க் காரணத்தை விளக்குகிற சிற்பமும், விஷ்ணு இந்திரன் இருவரும் தியாகரைப் பூசித்த உருவம் அமைந்த சிற்பமும் மேல் உத்தரப்பத்தியில் அமைந்துள்ளன.

வன்மீகநாதரது சந்நிதியிலுள்ள நந்தியெம்பெருமானின் மேற்பரப்பிலுள்ள பாவு கல்லில் இருபத்தேழு நக்ஷத்திரங்களும், இராசிச்சக்கரமும் அமைந்துள்ளன.

உள்வடக்குப் பிராகாரத்தில்யாளிவாயிலிருந்து தொங்கும் கற்சங்கிலி நல்ல வேலைப்பாடுள்ளது.

விட்டவாயிலுக்கு அருகில்விளங்கும் கற்றேரும் கன்றும், பசுவும், காட்சிக்குரியன; சரித்திரத் தொடர்பு உடையன. கற்றேர்ச்சக்கரங்கள் ஒட்டுக் கல் வேலையாயினும், ஆரக்கால் முதலியனவும் அமையத் தோண்டியிருப்பது ஒரு தனியழகாகும். கன்றையிழந்த பசுவின் கீழ்நோக்கிய பார்வை கவலைக்குரியின் எண்ணத்தை யார்க்கும் உண்டாக்கும். ஆயிரக்கால் மண்டபத்துள்ள உள்தூண்கள், ஐந்து இடங்களில் மேற் பரப்புக்கல் கொடுங்கை

முதலிய பூவேலைப்பாடும், வரிவேலைகளும், செதுக்கு வேலைகளும் செறிந்தன.

**சித்திரம் :**

தலைசிறந்ததான சித்திரம் - கன்மனத்தையுங் கரைக்கும் சித்திரம்- உயிர் ஓவியம் போன்றது தியாகராஜப் பெருமானுடைய தென்னந் திருவாசலுக்குப் பக்கத்திலுள்ள மஹாவிஷ்ணுவினுடைய சயனத்திருக்கோலமும், அவருடைய திருமார்பில் தியாகராஜப் பெருமானும் விளங்குவது.

வன்மீகநாதர் கர்ப்பக் கிருகத்தைச் சுற்றிலும் தியாகேசப் பெருமானுடைய கர்ப்பக் கிருகத்தைச் சுற்றிலும், அணியொட்டி மண்டபங்களின் மேற்பாவு கல்லிலும் இறைவனுடைய பல சமயங்களில் சேர்ந்த அருட்கோலங்கள் விளங்குகின்றன. அவற்றுள் ஊர்த்துவதாண்டவமூர்த்தியும், காளியின் வீர நடனமும் மிக்க அழகுடையன. இவைகள் யாவும் தென்னாட்டுக்கலைத்திறத்திணுக்கு எடுத்துக்காட்டாக எழுதப்பெற்றன.

அவ்வாறே சபாபதிமண்டபம் மேற்பரப்பில் (முகப்பில்) ஸ்ரீ தியாகராஜப்பெருமான் மகா விஷ்ணு மார்பில் விளங்குவதும், திருவெண்காடு பழனி சிதம்பரம் முதலிய திருத்தலங்களின் தோற்றமும், முருகன் கணபதி முதலியோர் திருவுருவங்களும் எழுதப்பெற்றுள்ளன. அவற்றோடு தோத்திரப்பாக்களும்தோன்றுகின்றன. மண்டபத்



திற்குள் மண்டபமேற்பரப்பில் மெய்கண்டார்,
அருணந்திசிவாச்சாரியசுவாமிகள், உமாபதிசிவாச்
சாரிய சுவாமிகள் திருவுருவங்களும், நால்வர் திரு
வுருவங்களும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் வரலாறு
முழுமையும் அறியத்தக்க பல திருவுருவங்களும்
எழுதப்பெற்றுள்ளன. உத்தரவரியில் சிவஞான
போதச் சூத்திரங்களும், உய்யவந்ததேவநாயனார்
அருளிய திருவுந்தியார் பாடல்களும் விளங்கு
கின்றன.

மேலைத்திருக்கோபுரத்தை யடுத்து வெளிப்
புறத்து ஒருபக்கம், தொண்டின் உயர்வை
எடுத்துக் கூறிக்கொண்டு சைவ வீரராகிய அப்பர்
பெருமான் நிலைபெறும் வழியை உணர்த்தி நிற்ப
தும், ஒரு பக்கம் தியாகவள்ளலின் சிறப்பைத்
தெளிவாக எடுத்துக் காட்டிச் சுந்தரர் பெருமான்
நிற்பதும், பலரையும், ஆண்டவன் திருவடிப்
படுத்தும் அழகிய சித்திரங்களாம்.

மெய்க்கலை: திருக்கோயில்கள் அனைத்துமே
தத்துவ சாத்திரமாகிய இலக்கணங்களுக்கு ஏற்ற
இலக்கியங்கள். அவற்றின்வழிபாட்டு முறை, விழா
முறை யனைத்துமே படைத்தலாதி ஐந்தொழில்
நிகழ்ச்சிகள். நாம் கொடுக்கும் நைவேத்தியமே
ஆன்ம நிவேதனங்கள். தீபாராதனையே ஒளிக்
காட்சி. பெருமான் திருமுன்பு கண்களில்நீரொழுகத்
தொண்டைவிம்ம மெய்மறந்து நிற்கின்றநிலையே
அநுபூதிநிலை. இத்தகைய மெய்க்கலையின் மெய்த்

தோற்றங்களே திருக்கோயில்களில் திகழ்கின்றன. ஒன்றற்கொன்று அடங்கி அடங்கித்தோன்றுகின்ற வாயில்களினுள்ளே காற்றோட்டமில்லாத இடத்தில் பெருமான் எழுந்தருளியிருப்பது, உலகியலிலிருந்து ஆன்மாக்கள் உள்ளத்தை ஒடுக்கி ஒடுக்கிச் சென்று தனிப்பொருளிடத்தில் சேர்ப்பிக்கும் உபாய நிலைகளாம்.

கோயிலின்முன்னுள்ள பலிபீடம் பசு போதக் கவளத்தைப் பகிர்ந்தளிக்கும் பதும பீடிகைகள். அடுத்திருக்கும் கொடிமரம் இடைபிங்கலை வழியாக அசைந்தாடும் காற்றைச் சுழுமுனைவழியாக உயரத் தூக்கி அலையாது இறுக உடுத்த யோகநெறி.

அடுத்துவிளங்கும்நந்தியெம்பெருமான், ஞானம் கைவரப்பெற்ற அநுபவ ஆன்மா.

இந்தமெய்க்கலையின் தத்துவங்களையே நமது கோயில்கள் - சிறப்பாகத் திருவாரூர்க் கோயில் அறிவிக்கின்றது.

## அன்பர்கள் :

தெய்வவிளக்கம் அன்பர்களாலேயே வெளிப்படுகின்றன. கருணைத்திறத்தைக் கண்டுகாட்டியவர்கள் அவர்களே. கன்றுக்குப் பால்சுரக்கும் பசுக்கள் போல இறைவனும் அவர்கட்கே வெளிப்பட்டுக் கருணாமுதத்தை வழங்குகின்றான். அன்பர்களில்



பாடல் தொண்டு செய்தவர்கள் பலர். சிலர் உள்ளத் தொண்டும், உழைப்புத் தொண்டும் ஆகிய இவற்றாலேயே இறைவனைப் போற்றினர். அவர்களுடைய உறுதியே உலகிற்கு இறைவனைக்காட்டியது.

திருஞானசம்பந்தர்: இவர் சீகாழியில் அவதரித்த சிவவேதியர். இளமையிலே சிவஞானப் பாலுண்டு செந்தமிழ்ப்பாமாலைபொழிந்ததிருவாயர். அப்பர் சுவாமிகளால் ஆரூரின் பெருமை தெரிந்து ஆரூரை அடைந்தார். இவர் வருகையை அறிந்து அடியார்கள் எதிர்கொள்ள "அந்தமாயுலகாதியும்" என்றபதிகத்தை எடுத்து அதில் "எந்தைதானெனை என்றுகொளுங்கொலோ" என்று சொல்லி, நகர்க்குள் நுழைகின்றவர் "சித்தம் தெளிவீர்காள்" என்ற பதிகத்தைப்பாடி நகரை வணங்கிக்கொண்டு உள்ளே புகுந்தார். பின்னர், வலிவலம் முதலாகிய பலதலங்களை வணங்கிக்கொண்டு மீட்டும் ஆரூரில் எழுந்தருளியிருக்கும் நாளில் திருப்புகலூரையடையத் திருவுளங்கொண்டு "பவனமாய்ச்சோடையாய்" என்ற பதிகம்பாடிப் புறப்பட்டார். இவரால் பாடப்பட்ட திருவாரூர்ப் பதிகங்கள் ஐந்தாகும்.

திருநாவுக்கரசர்: இவர் திருவாமூரில் குறுக்கையர் குடியில் அவதரித்தவர். புறச்சமயம் புக்குச் சூலைநோயுற்று - இறைவனால் தடுத்தாட்கொள்ளப்பட்டவர். திருவிளமரை வழிபட்டுத் திருவாரூரை வந்தடைந்தார். அடியார்கள் தம்மை எதிர்கொண்ட

காலத்துத் "தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியமே" என்ற இறுதியமையத் திருப்பதிகமருளி நகருக்குள் எழுந்தருளினார். போற்றித் திருத்தாண்டகத்தையும், "காண்டலே கருத்தாய்" என்னும் பதிகத்தையும் அருளிச்செய்து வணங்கித் தேவாசிரய மண்டபத்தை அடைந்தபோது, "கொய்யுலா மலர்ச்சோலை" என்ற கையறவுத் திருப்பதிகத்தை அருளிச்செய்து, சிலநாள் எழுந்தருளியிருந்தார். ஒருநாள் "பாடிளம் பூதத்தினானும்" என்பது முதலாகிய பல பதிகங்களைப்பாடி, மீட்டுஞ் சிலகாலம் எருந்தருளியிருந்து, கீழ்வேளூர் முதலிய தலங்களை வணங்கிக்கொண்டு, மறுமுறையும் ஆரூரை அடைந்தார். திருவாதிரைத் திருவிழாவிற் கலந்து மகிழ்ந்தார். பின்னர்ப் புகலூரை அடைந்தபோது ஆங்கு சம்பந்த சுவாமிகள் வினவ, திருவாதிரை மகிமையைத் தெரிவித்தார். ஆங்கு எழுந்தருளியிருக்கும் நாளில் அரம்பையர்கள் வந்து அல்லல் கொடுக்க "பொய்ம்மாய" என்னும் திருத்தாண்டகம் பாடி அருளினார். இவ்வாறு அப்பர்சுவாமிகள் திருவாரூர் விஷயமாகப் பாடிய பதிகங்கள் இருபத்தொன்று.

மணிவாசகர்: குருந்த மரத்தடியில் ஆட்கொண்ட குருநாதன் ஆணைப்படி தில்லைக்கு எழுந்தருளுகின்றவர்கள், வழியிலே திருவாரூரை வழிபட்டு 'பூங்கமலத்தயனொடுமால்' என்பது முதலாகிய மூன்றுபாடல்களை அருளினார்கள். திருவாசகத்தைத் தொடங்குங்காலையிலே திருவாரூர் ஞாபகம் இவரை விட்டதில்லை. போற்றித் திருவகவலில் 'ஆரூர் அமர்ந்த அரசே போற்றி' என்று அருளிச்செய்துள்ளார்கள்.

ஏயர்கோன்கலிக்காமர்: பெருமங்கலத்திலே பிறந்தவர். அறுபத்துமூன்றடியார்களில் ஒருவர். வேளாளர். சேனாதிபதியாக இருந்தவர். ஏயர்குடியிற் பிறந்தமையால் ஏயர்கோன் என்று பாராட்டப் பெற்றவர். இயற்பெயர் கலிக்காமர் என்பது. இறைவனிடம் இணையில்லா அன்புகொண்டவர். அதனால், பரமனைப் பரவையாரிடம் தூதனுப்பியதற்காகச் சுந்தரரிடம் தீராச் செற்றங்கொண்டிருந்தார். சிவபெருமான் இருவரையும் இணைப்பிப்பதற்காக இவர்வயிற்றிற் சூலைநோய்கொடுத்துச் சுந்தரரைக் கொண்டு தீர்த்துக்கொள்ளும்படி உத்தரவளித்தார். சுந்தரரைப் பார்க்க மனமின்றி உடைவாளால் வயிற்றைக் கிழித்துக்கொண்டு இறந்தார். சுந்தரர் இதுகண்டு தாமும் இறக்கத் துணிந்தார், அப்போது தியாகேசர் திருவருளால் கலிக்காமர் உயிர்பெற்றெழுந்து தடுத்தார். இருவரும் நண்பராயினர். அதன்பின் பலநாள் திருவாரூரில் தங்கியிருந்தனர்.

கழற்சிங்கர்: இவர் காடவகுலவேந்தர். மனைவியோடு பல தலங்களையும் வணங்கிக்கொண்டு திருவாரூரையடைந்தார். அப்போது அரசமாதேவியார் தனியே கோயிலழகைக் கண்டு வருகிறவர் அரநெறியில் திருப்பள்ளித்தாம மண்டபத்தில் சிந்திக்கிடந்த புதுமலரை எடுத்து மோந்தார். பூத்தொண்டராகிய செருத்துணை நாயனார் சினந்து, முகர்ந்த மூக்கை

யரிந்தார். அரசர்பெருமான் வந்து இதனைக்கண்டு மூகர்ந்த மூக்கைமட்டும் அரியலாமா? எடுத்த கையையுமன்றோ அரியவேண்டும் எனத் தன் உடைவாளையுருவித் துணித்தார். இறைவன் அருள்பெற்றார். இங்ஙனம் தன்னுடைமையிற் சிறந்த மனையாள் காதன்மையைக் காட்டிலும் கடவுளன்பே சிறந்தது என்று காட்டியவர் இவர். காட்டிய இடமும் இத்தலமே.

**விறன்மிண்டர்:** இவர் மலைநாட்டுச் செங்குன்றூரைச் சேர்ந்தவர். அடியார்களை அரனெனவே தொழும் இயல்பினர். திருவாரூரில் வசித்துவருகிற நாளில் ஒருநாள் சுந்தரர்பெருமான் தேவாசிரய மண்டபத்துள் கூடியுள்ள அடியார்களை வணங்காது உட்புகுவதையறிந்த இவர், 'இவனும்புறகு; இவனை யாட்கொண்ட பரமசிவனும் புறகு' என்று சினந்தார். இதனையறிந்த சுந்தரர் தியாகப்பெருமான் கொடுத்த முதலைவைத்துக்கொண்டு 'திருத்தொண்டத்தொகைபாடி,' அடியார்களைவணங்க,மகிழ்ந்தார். இவர் அடியார்பத்தியிற் சிறந்து விளங்கியது இத்தலமே.

**செருத்துணையார்:** மருகநாட்டுத் தஞ்சாவூர்க் கூற்றத்திலே வேளாளகுலத்திற் பிறந்தவர். இறைவற்குப் பூத்தொண்டு செய்துவந்தவர். கழற்சிங்கர் மனைவியார் பூமண்டபத்திலிருந்த பூவை எடுத்து மோந்தமைக்காக அஞ்சாது மூக்கையரிந்த சைவவீரர். அரசன் கேட்கவும் அஞ்சாது எதிர்நின்று



உண்மை யுணர்த்திய மெய்யடியார். இவருடைய அஞ்சாமையும், நேர்மையுமாகிய சைவப் பண்பாடுகளை விளங்கச் செய்தது இத்தலமே.

**நமிநந்தியடிகள்:** ஏமப்பேறூரில் அவதரித்த அந்தணர். திருவாரூர் அரநெறிநாதர்க்குவிளக்கிடும் பணியிலீடுபட்டவர். ஒருநாள், விளக்கெரிக்க நெய் இல்லையாகப் பக்கத்திருந்த ஒருவீட்டிற் சென்று கேட்டார். அந்தவீட்டுச் சமணர் 'ஒளிக்கடவுளுக்கு விளக்கு ஏன்? வேண்டுமாயின் நீரைமுகந்து ஊற்றி எரிப்பதுதானே' என்று ஏளனஞ் செய்தார்கள். மனம்வருந்திய நமிநந்தியார், அசரீரியாக இறைவன் ஆணையைப்பெற்று நீரால் விளக்கெரித்தார். சோழ அரசன் இவரை அத்யக்ஷகராகவைத்துக் திருக்கோயிலுக்கு நிபந்தங்கள் பலவிட்டான். ஒருநாள் பங்குனி உத்தரம் முடிந்து மணலிக்குச் சுவாமி எழுந்தருளியபோது, எல்லாச் சாதியாரும் வந்து வணங்க, அதனால் தீட்டுப்பட்டதாகநினைத்து வருந்தினார். இறைவன் கனவிற்றோன்றி "திருவாரூர்ப் பிறந்தார்களனைவருமே சிவகணநாதர்கள்" எனச் சொல்லி மறைந்தார். அதுமுதல் உண்மையுணர்ந்து ஒழுகிச் சிவபதம் அடைந்தார்.

**தண்டியடிகள்:** இவர் பிறவிக் குருடர். ஐந்தெழுத்தை இடைவிடாது ஜெபிப்பவர். கமலாலயத்தைச், சமணர்கள் பாழிகளும் வீடுகளும் கட்டிக் குறைத்தமையால், குளத்துக்கும் கரைக்குமாகக் கயிறுகட்டிக்கொண்டு அதனைப் பிடித்துச்சென்று

குளம்வெட்டியவர். அன்புமீதூர்தலால் இறைவனால் கண் அருளப்பெற்றவர். இறைவன் ஆணைப்படி சோழமன்னனும் இவர்பணிக்குத் துணையாயினான். சமணர்கள் குருடர்களாயினர். அரசன் கமலாலயத் திருப்பணி செய்தான். குருடாயிருந்தும் குறிக்கோள் தவறாமையால் வெற்றிகண்டவர் இவர்.

சோமாசிமாறர்: அம்பர் மாகாளத்தில் அவதரித்த அந்தணர். தாம்செய்த சோமயாகத்திற்குச் சுந்தரர் துணைகொண்டு தியாகேசப் பெருமானை நேரில் வந்து அவிர்ப்பாகம் வாங்குமாறு செய்தவர். பறைக்கோலத்தில் பரமன் எழுந்தருளியும் கோலம் கண்டுமயங்காது சீலம் உணர்ந்து, யாகசாலைக்குள்ளேயே அழைத்து அவிர்ப்பாகம் அளித்தவர்.

சேரமான் பெருமாள்: கொடுங்கோளூரிலே சேரர்குடியிற் பிறந்தவர். ஆனந்தக்கூத்தரால் சுந்தரர்பெருமானின் தோழமை கிடைக்கப்பெற்றவர். சுந்தரரைப் பார்ப்பதற்காகத் திருவாரூருக்கு வந்து சிலநாள் தங்கியிருந்தார். திருவாரூர் மும்மணிக் கோவை பாடியவர் இவரே.

சுந்தரர்: பலதலைமுறையாகத் திருவாரூரில் தொடர்புடையவர் இவர். திருநாவலூரில் ஆதிசைவ மரபில் அவதரித்தவர்கள். தியாகேசப் பெருமானால் தம்பிரான்தோழர் என்னும் திருநாமஞ்சூட்டி ஆட்கொள்ளப்பெற்றவர். வேறு எங்கு சென்று



நம்பி ஆரூரர்

நங்கை சங்கிலியார்

நங்கை பரவையார்

வழிபட்டாலும் தியாகேசனை மறவாதசிந்தையாளர். தம் வாழ்நாளிற் பெரும்பகுதியைத் திருவாரூரிலே கழித்தவர். திருவாரூரை நெற்காடாக்கியவர். பொற் காடாக்கியவர். புண்ணியக்காடாக்கியவர். இவரால் பாடப்பெற்ற ஆரூர்ப்பதிகங்கள் எட்டு.

**பரவைநாச்சியார்:** திருக்கயிலாயத்து அம்மையின் தோழியாயிருந்த இவர் இறைவன் ஆணைப்படி திருவாரூரிலேயே பதியிலார்குலத்து அவதரித்தார். முன்னைய பெயர் கமலினி. இப்போதைய பெயர் பரவையார். சிவனருள் கூட்டச் சுந்தரரை மணந்தார். இவருடைய இல்லம் ஆலயமாகத் தெற்குச் சந்நிதியிலிருக்கிறது.

**செட்டித்தெரு ஞானப்பிரகாசர்:** சைவாசாரிய பரம்பரையினர். இவர்கள் சிவபுரம் தத்துவப் பிரகாச தேசிகரிடம் அருள்பெற்றவர்கள். யாக்கையின் நிலையாமையையும் இழிவையும் உலகவர்க்கு எடுத்துக்காட்ட, நமது வல்துகாலில் வைக்கோற் பழுதை யொன்றைக் கட்டிக்கொண்டிருந்தமையின் இவர்கள் பழுதை கட்டிஞானப்பிரகாசர் எனவும் அழைக்கப்பெறுவர். இவர்கள் சிவாநுபூதிச் செல்வர்களாகவிளங்கியவர்கள். செட்டித்தெரு என்பது குமரகோயில்தெரு என இக்காலத்து வழங்குகிறது.

**கமலைஞானப்பிரகாசர்:** இவர்களும் சைவாசாரிய பரம்பரையில் அவதரித்தவர்களே. செட்டித் தெரு ஞானப்ரகாசரிடம் சிவஞானப் பேறுபெற்ற

வர்கள். இவர்கட்குச் சிதம்பரநாத மாசிலாமணி ஞானப்பிரகாச பண்டாரம் எனவும் பெயர்வழங்கும். இவர்கள் குருபதேசம் பெற்றதோடு ஆரூர் சித்தீச்சரத்தில் எழுந்தருளியிருக்கும் தட்சிணாமூர்த்தி சந்நிதானத்தில் அசரீரிவாக்கினால் ஞானப்பிரகாசர் என்னும் திருநாமம் அநுக்கிரகிக்கப்பெற்றவர். இவர்களுடைய மாணாக்கர்களிற் சிறந்தவர்கள் தருமபுர ஆதீனத்து ஆதி குருமூர்த்திகளாகிய ஸ்ரீ-ல-ஸ்ரீ குருஞானசம்பந்ததேசிக பரமாசாரிய சுவாமிகள். இவர்கள் மாளிகை குமரகோயில் பின் தெருவில் இருக்கின்றது. தியாகப்பள்ளு, தியாகக் குறவஞ்சி என்பன இவர் செய்த இத்தல சம்பந்தமான நூல்கள்.

**குருஞானசம்பந்தர்:** இவர்கள் கமலைஞானப் பிரகாசரிடம், மதுரைச் சொக்கநாதப் பெருமான் ஆணையின் வண்ணம் சொக்கலிங்க பூசையை எழுந்தருளுவித்துக்கொண்டவர்கள். தமது ஞானாசாரியருடைய பரிபூரணதசை வரையிலும் ஆரூரிலும் தருமையிலுமாக வசித்தவர்கள். ஞானப்பிரகாச மாலை, சொக்கநாதவெண்பா, சிவபோகசாரம், திரிபதார்த்தரூபாதி தசகாரிய அகவல், முத்திநிச்சயம் முதலியன இவர் செய்த அருணூல்களாகும். இவர்களே தருமை ஆதீன ஸ்தாபகராவார்கள்.

## புலவர்கள் :

**சேக்கிழார்:** தொண்டைநாட்டிலே புலியூர்க் கோட்டத்தில் உள்ள குன்றத்தூரில் அவதரித்த



வர்கள். சைவவேளாளகுலத்தவர். அநபாயனுடைய நல்லமைச்சராக இருந்தவர்கள். இவர்கள் பாடிய பெரியபுராணத்தில் மலைச்சிறப்பிற்குக் கைலையும், நாட்டுச் சிறப்பிற்குச் சோழநாடும், நகரச்சிறப்பிற்குத் திருவாரூரும் போற்றப்பெற்றுள்ளன. சிதம்பரத்திலிருந்து புராணம் இயற்றிய இவர்கள் இந்த மூன்றையும் சேர்த்துக் காட்டியதிலிருந்து திருவாரூர் கயிலையோடு ஒருங்கு வைத்தெண்ணத் தகும் இயல்பினது என்பது தெளிவு. இவர்கள் இத்தலத்தைப்பற்றிப் பாடியபகுதி திருவாரூர்ச் சிறப்பு என்பதாகும். இன்னும் தடுத்தாட்கொண்ட புராணத்திலும், தண்டியடிகள் நமிநந்தியடிகள் சேரமான் பெருமாள் ஆதியோர் புராணங்களிலும் இத்தலத்தைச் சிறப்பித்துள்ளார்கள்.

**கச்சியப்ப சிவாசாரியார்:** இவர்கள் காஞ்சிபுரம் குமரகோட்டத் தர்ச்சகராய், முருகனருள் பெற்றுக் கந்த புராணத்தைப் பன்னீராயிரம் பாடல்களால் பாடிய அருட்கவிஞர். இவர்கள் இத்தலத்தை, கந்த விரதப் படலத்து 120ம் பாடலாற் சிறப்பித்திருக்கிறார்கள்.

**சம்பந்த முனிவர்.** தென்பாண்டி நாட்டிலே அளகாபுரியில் சைவவைசியர் குலத்தில் அவதரித்தவர். கிரம்ப அழகியதேசிகரிடத்தில் கல்விகற்றவர். ஞானதீட்சை பெற்றவர். திருவாரூரில் எழுந்தருளி இருந்தகாலத்துத் திருவாரூர்ப்புராணம் பாடினார். இவர் காலம் கி. பி. 1591

**சிதம்பரம் மறைஞானசம்பந்தர்:** இவர் திருக்களாஞ்சேரி சந்தானாசாரியராகிய மறைஞான சம்பந்தரின் வேறாவர். கண்கட்டி மறைஞானரென அழைக்கப்பெறுவர். காளத்தி மறைஞானர்பால் சிவ தீட்சைபெற்றவர். சிதம்பரத்தில் குகைமடம் என்ற ஒன்றைத் தாபித்து அஞ்ஞானமயமான உலகத்தைப் பார்க்கக் கூடாதெனக் கண்ணைக் கட்டிக்கொண்டு அதில் வாழ்ந்துவந்தார். குருவழி அனுபவம் கைகூடப்பெறாமையினால் ஆன்மானந்த வாதத்தை மேற்கொண்டார். இவர் திருவாரூர் விஷயமாகச்செய்தது கமலாலயச்சிறப்பு என்னும் நூலாகும்.

**குமாரகுருபரர்:** தருமையாதீனத்து நான்காவது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணிதேசிகரிடம் ஞானோபதேசம்பெற, மதுரையிலிருந்து எழுந்தருளிவருகின்ற காலத்துத் திருவாரூருக்கு வந்தார். தியாகேசப் பெருமானை வணங்கினார். அப்போது இவர்கள்பாடியது திருவாரூர் நான்மணிமாலை என்னும் நூலாகும்.

**அந்தகக்கவி வீரராகவமுதலியார்:** செங்கற்பட்டுஜில்லா பொன்விளைந்த களத்தூரில் சைவ வேளாளர் குலத்திற் பிறந்தவர். முத்தமிழ்க்கவி, தமிழ்விரகன் என்றெல்லாம் பாராட்டப்பெற்றவர். இவரால்பாடப்பெற்றநூல்கள்ஏழுக்குமேலுள்ளன. திருவாரூருலாவும் அவைகளுள் ஒன்று. இதன் சிறப்பைப் பாராட்டிப் பரராசசேகரன் என்னும்



அரசனும், கயத்தாற்று அரசனும் பாடல்கள் செய்திருக்கிறார்கள். அவை தமிழ்நாவலர்சரிதையில் இடம்பெற்றுள்ளன.

**வைத்தியநாத நாவலர்:** 17-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சைவ ஆசாரிய பரம்பரையில் தோன்றியவர். இவர் மயிலைத்திருவேங்கடநாதர், படிக்காசுத்தம்பிரான், ஒப்பிலாமணிதேசிகர் ஆகியோர்களுக்கு ஆசிரியர். இலக்கணவிளக்கம் செய்தவர் இவரே. இவர்பாடியநூல் திருவாரூர்ப்பன்மணிமாலை என்பதாம். இவர் அந்தகக்கவிவீரராகவ முதலியாராலும் பாராட்டப்பெற்று விளங்கியவர்.

**எல்லப்பநாவலர்:** காவிரிப்பூம்பட்டினத்துக் கருகிலுள்ள ராதாநல்லூரில் கார்காத்த வேளாளர் குலத்தில் தோன்றியவர். சைவ எல்லப்பநாவலர் என்றும் அழைக்கப்பெறுவர். திருவாரூர்க் கோவை செய்தவர் இவராவர்.

**சிவஞானதேசிகர்:** தருமையாதீனத்துப் பத்தாவது குருமூர்த்தியாக விளங்கியவர்கள். நிறைசெல்வத்தியாகேசர் தெரிசனத்திற்கு எழுந்தருளிய காலத்து அசபா நடனபதிகம் என்றதொருநூலை ஆக்கியருளினார்.

**தியாகராஜச்செட்டியார்:** இவர் மகாவித்வான் மீனாட்சுந்தரம்பிள்ளையின் முதல் மாணாக்கராவர். குடந்தை அரசாங்கக்கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக இருந்தவர்கள். திருவாரூர்பாதி திருவொற்றி

யூர் பாதி வெண்பா அந்தாதி, தியாகர் மருந்து வெண்பாமாலை ஆகிய இரண்டும் இவர் பாடியவை.

கீழ்வேளூர் குருசாமிதேசிகர்: திருவாரூர் ஒருதுறைக்கோவை இயற்றியவர். இவரைப் பற்றிய வரலாறு ஒன்றும் அறியப்படவில்லை.

சிதம்பரமுனிவர்: தருமையாதீனத்து அடியார் கூட்டங்களில் ஒருவர். ஆரூர் ராஜாங்கக்கட்டளை கட்டளைவிசாரணை பார்த்தவர்கள். இவர்கள் இயற்றியது 'கமலாம்பிகைப்பிள்ளைத்தமிழ்' என்பது.

சதாசிவநாவலர்: இலக்கணவிளக்கம் வைத்தியநாததேசிகரின் மகனார். அவர் மாணாக்கரும் ஆவர். இவர் பாடியநூல் 'திருவாரூர் இரட்டை மணிமாலை' என்பது.

அருணாசலக்கவிராயர்: இவர் அவதாரஸ்தலம் தில்லையாடி. மரபு கார்காத்தவேளாளர். இராம நாடகம் பாடியவர். தியாகேசர்வண்ணம் இவரால் இயற்றப்பட்டது.* இவர் இலிங்கமகிபாலன் மகன் தேப்பெருமாள் மகிபனுக்கெழுதிய சீட்டுக்கவியில், 'அலைகொண்ட தியாகேசர்வண்ணம் உரை செய்ததும்' எனவரும் பகுதியால் இதனை அறியலாம்.

அருணகிரிநாதர்: திருவண்ணாமலையில் முருகன் அருள்பெற்ற முதல்பக்தர். திருப்புகழ் பாடியவர்.

*பெருந்தொகை பா 1763.



திருவாரூர்க் குமரகோயிலுக்குத் திருப்புகழ் பல இயற்றி இருக்கிறார்.

தத்துவப்பிரகாசர்: திருவாரூர்ச் சைவாசாரிய மரபினர். சிவஞானம் கைவரப்பெற்றவர். ஒரு காலத்தில் திருவாரூரில் கொடியிறங்காமல் ஒரு வெண்பாப்பாடி அரசர் கிருஷ்ணதேவராயருக்கு அனுப்பினர். அவ்வரசர் மந்திரிசாளுவநாயக்கரால் பெரிதும் பாராட்டப்பெற்றவர். இவர் வரலாறு தமிழ்நாவலர் சரிதையினும், பெருந்தொகையினும் இடம்பெற்றுள்ளது.

நிர்மலமணிதேசிகர்: அகோர சிவாசாரியார் பத்ததிக்கு வியாக்கியானம்செய்தவர். சைவாசாரிய மரபினர். இவர் புகழாபரணர் திருவீதி யென்னும் காரைக்காட்டுத்தெருவில் இருந்தார் என்று செவி வழிச்செய்தி உண்டு.

சாமிநாததேசிகர்: வலங்கிமான் சாமிநாத தேசிகரென்று அழைக்கப்பெறுவர். 70 ஆண்டுகட்குமுன் இருந்தவர். சந்தானாசாரியர் புராணம் இவர்பாடியது.

சிதம்பரதேசிகர்: வடுகநாததேசிகரின் மகனார் இவர். குடவாயிற்புராணமும், கமலைப் பராசத்தி மாலையும் இவர் பாடியவை.

அகோரதேசிகர்: அபிஷேக அன்னதானக் கட்டளைகளின் ஸ்தாபகர். இலக்கண இலக்கியம்

களில் மிகப் புலமையுற்றவர். இலக்கண விளக்கம் வைத்தியநாதநாவலரின் வித்யாகுரு. இவர் திரு உருவமும் கருணாகரத் தொண்டைமானின் திரு உருவமும் வடக்குக் கோபுரத்தில் அமைந்துள்ளன. வேளாகுறிச்சி ஆதீனத்தின் ஸ்தாபகரும் இவரே.

மீனாட்சிசுந்தரம்பிள்ளை: திருவாவடுதுறை மகா வித்துவானாக இருந்தவர்கள். பிற்காலக்கம்பர் என்று பேசப்பெற்றவர்கள். இவர்கள் பாடியது தியாகராஜலீலை.

ஒப்பிலாமணிதேசிகர்: இவர் திருமஞ்சன வீதியில் வசித்தவர். சைவாசாரியர் பரம்பரையில் தோன்றியவர். சிவரகசியம் இவர் பாடியதே.

## நூல்கள் :

திருவாரூர்ப் புராணம், கமலாலயச் சிறப்பு, தியாகராஜலீலை, தேவாசிரய மான்மியம், திருவாரூர் மும்மணிக்கோவை, திருவாரூர் நான்மணிமாலை, திருவாரூர்ப் பன்மணிமாலை, திருவாரூர்க் குறவஞ்சி, திருவாரூருலா, சித்தீச்சரம் தட்சிணாமூர்த்திப் பதிகம், சித்தீச்சரம தட்சிணாமூர்த்தி மாலை, தியாகப்பள்ளு, திருவாரூர்க்கோவை, ஆரூர்த்தல மாலை, அஜபாநடேசர் பதிகம், திருவாரூர்பாதி திருவொற்றியூர் பாதி வெண்பா அந்தாதி, திருமூலர் திருமந்திரத்தில் அசபை, திருவாரூர் மருந்து வெண்பாமாலை, கமலைப்பராசத்திமாலை, தேரூர்ந்த சோழபுராணம், திருவாரூர் ஒருதுறைக்கோவை, கமலாம்பிகைப் பிள்ளைத்தமிழ், தியாகராஜர் கழி நெடில், தியாகராஜர் கழி நெடில் கலிப்பா, பெரிய புராணத்துத் திருவாரூர்சசிறப்பு, கந்தபுராணத்துக் கந்தவிரதப் படலம் 120-ம் பாடல், திருவாரூர் இரட்டைமணி மாலை, திருவாரூர் விநாயகர் இரட்டை மணிமாலை, திருவாரூர்ப்பதம், தியாகேசர்வண்ணம், கமலாலய அம்மன் பிள்ளைத்தமிழ், சுந்தரர்வேடுபறி, தேரூர்ந்தசோழன்கதை முதலிய முப்பத்திரண்டு நூல்கள் தமிழில் உள்ளன.

வடமொழி நூல்களாக; அஜபா ரகசியம், ஆடகேஸ்வர மகாத்மியம், கமலாலய மகாத்மியம், நாகரகாண்டம், தியாகராஜலீலை, சமற்காரபுரமான்மியம், தியாகராஜபுர மான்மியம், தேவயாகபுரமான்மியம், தேவாசிரய மகாத்மியம், முசுகுந்தபுரமான்மியம், ராமகயா மான்மியம், ஸ்ரீபுர மான்மியம், ஸ்கந்தபுர மான்மியம், க்ஷேத்திரவர மான்மியம், முத்துராமதீக்ஷிதர் கீர்த்தனம், தியாகராஜாஷ்டகம், கமலாம்பிகாஷ்டகம், கமலாம்பிகா சூர்ணிகை முதலிய பதினெட்டு நூல்கள் இருக்கின்றன.

இவைகளன்றி, தஞ்சாவூர் சரஸ்வதிமாலின் கையெழுத்துப் புத்தகசாலைப் பட்டியலில் ஒரு பாட்டும் காணப்படுகிறது. அதுவருமாறு:—

“ஆரூரன் சன்னதிபோல் ஆரூ ராலயம்போல்
ஆரூரன் பாதத் தழகுபோல்—ஆரூர்
மருவெடுத்த கஞ்சமலர் வாவிபோல் நெஞ்சே!
ஒருவிடத்தி லுண்டோ வுரை”

## வரலாற்றுத் தொடர்புள்ள இடங்கள்:

**வண்டாம்பாலை:** ஏயர்கோன் கலிக்காமர் சுந்தருடைய தோழமையின் உயர்வையுணராது, விலகி வந்த காலத்து வந்தோமிப்பாலை என்றார். அது வண்டாம்பாலை என மருவிற்று.

**திருநெய்ப்பேறு:** ஏமப்பேறூர் என்ற நமிநந்தி அவதாரஸ்தலம். திருநெய்ப்பேர் எனவழங்குகிறது. இது ஆரூர்க்குத் தெற்கே திருக்காறாயில் போகும் வழியில் நான்குகல் தொலைவிலுள்ளது. விளக்கெரிக்க நெய்பெற்ற நமிநந்தி அடிகள் ஊராதலின் இப்பெயர்பெற்றது எனல் பொருந்தும்.

**திருமுப்பத்து:** நெய்ப்பேற்றுக்கு அரைக்கல் தெற்கே உள்ளது. திரும்புபற்று என்பது திருமுப்பத்து என ஆயிற்று. இறைவன் மணவாளத் திருக்கோலத்தை கோகர்ணத்தின் வழியாக நோக்கிய அகத்தியர் திரும்பிப்பார்த்த இடம் என வரலாறு கூறும்.

இவையன்றிப் புலிவலம், அம்மையப்பன், பழவனகுடி, ஏழுவேலி, மருதன்பட்டினம், அலிவலம், தண்டலை, தேவரகண்டநல்லூர், தியாகபுரம் முதலிய பல இடங்களும் தலத்தோடு தொடர்புடையனவாகும்.



## சுற்றியுள்ள தலங்கள்:

**திருப்பள்ளியின் முக்கூடல்:** இது மூர்க்கரிஷி பூசித்ததலம். இறைவன் முக்கோணேசுவரர். இறைவி மைமேவுகண்ணி. தீர்த்தம் முக்கூடல் தீர்த்தம். இத்தலம் வடகிழக்குமூலையில் மூன்றுகல் தொலைவிலுள்ளது.

**பரவையுண் மண்டளி:** கீழவீதியில் உள்ள தலம்.*

**திருவிளமர்:** இது தென்மேற்கே இரண்டுகல் தொலைவிலுள்ளது. பதஞ்சலி வியாக்கிரபாதர் பூசித்ததலம். இறைவன் பதஞ்சலிமனோகரர். இறைவி யாழினுமென்மொழியாள்.

இவையன்றிக் காட்டூர், மணக்கால், ஐயம்பேட்டை, இராப்பட்டீச்சரம் முதலான வைப்புத் தலங்களும் இருக்கின்றன. திருக்கண்ணமங்கை என்னும மங்களாசாசனம்பெற்ற வைணவ திவ்ய தேசமும் உண்டு. அது வருணனுக்குப் பிரத்தியக்ஷமான இடம். இங்கு அபிஷேகவல்லித்தாயாரோடு பக்தவத்சலப்பெருமாள் எழுந்தருளியிருக்கிறார்.

## சில வரலாறுகள்:

தேவஸ்தானக்குருக்களுள் ஒருவரான நரகராச நம்பி என்பவர் அறுபத்துமூவர் விக்கிரங்களுள்

* இதன் விபரம் இந்நூல் 9-ம் பக்கம் தரப்பட்டுள்ளது.

ஒன்றை அபகரித்து விற்றுவிட்டார். இச்செய்தியைத் தலத்தார்கள், அரசராகிய கிருஷ்ணதேவராயருக்கு அறிவிக்க எண்ணியும், நாகராசநம்பிக்குப் பயந்து, சிலநாள் வாளா இருந்தனர். விக்கிரகம் கன்னன் உலைக்களத்தை அடைந்துவிட்டது. இதனை அறிந்த புலவரொருவர் இனியும் சும்மாயிருத்தல் கூடாதென்று தன் வீட்டிலிருந்த பஞ்சவர்ணக்கிளி ஒன்றுக்குப் பின்வரும்பாட்டைப் பழக்கிவைத்து இருந்தார். அந்தக்கிளியைக் திருக்கோயிலுக்குக் கொண்டுவந்து கட்டிவிட்டார். மாதவழிபாட்டுக்கும் கண்காணிப்புக்குமாகவந்த அரசர், கிளி அழகில் ஈடுபட்டுக் கூட்டினருகே சென்றார். கிளி,

"முன்னூ றறுபத்து மூவரிருந் தாரவரில்
இன்னு ளிரண்டுபே ரேகினார்—கன்னன்
உருக்குகின்றான் விற்றுவிட்ட நாகராச நம்பி
இருக்கின்றான் கிருட்டினரா யா"

என்றபாட்டைக் கூறிற்று. அரசர் செய்தியறிந்து விசாரித்து விக்ரகத்தைத் திரும்பப்பெற்றார். இவ்வரலாறு தமிழ்நாவலர் சரிதையினும், பெருந்தொகையினும் பேசப்பெற்றுள்ளது.

ஒருகாலத்து ஆரூர்க்கோயிலில் பூசைமுட்டுப் பாடுற, திருவீழிமிழலைக் குருக்களிற் சிலரைக் கொண்டுவந்து கிருஷ்ணதேவராயர் பூசைசெய்வித்தார்: அவர்களும் சிலநாட்களில் பூசையைச் செய்யாதுவிட்டனர். ஆனால் உற்சவத்தைமட்டும்



விமரிசையாகச்செய்தனர். கொடியிறக்கவேண்டிய நாளில் தத்துவப்பிரகாசரென்பார்,

"மருவுபுகழ் க்ருஷ்ண மகாராச ராணை
அரிய வடமலையா ராணை—திருவாரூர்ப்
பாகர் கொடியறுப்பார் பாதத் திருவாணை
தியாகக் கொடியிறக்கா தே"

என்ற வெண்பாவைக் கூறினர். அதனால், கொடி இறங்கவில்லை. அரசர் அவரை வினவினார்; அதற்கு அவர்,

"ஊழித் தலுக்கல்ல வொட்டியான் றானுமல்ல
வீழித் தலுக்குவந்து மேவிட்டே—ஆழி
சிறந்ததே யாரூர்த் தியாகருடைப் பூசை
இறந்ததே கிருட்டினரா யா"

என்ற பாட்டைச் சொன்னார். அரசர் கோபித்து உடனே பட்டரை மாற்றிவிட்டார். அதைக்கண்ட தத்துவப்பிரகாசர் பட்டரைப்பார்த்து,

"உண்ட வயிற்றி லுமிக்காந்த விட்டதே
தொண்டரே வீழித் தலுக்கரே—பண்டெலாம்
அப்பம் அவல்எள் அதிரசமும் தோசைகளும்
கப்பவதே போச்சே கவிழ்ந்து"

என்ற பாடலைக்கூறிப் புத்திபுகட்டினர்.

## பழமொழிகள் :

அசைந்தாடி அசலமும் ஆட்டுந்தியாகர், ஆடாதும் ஆடிப் பாகற்காய் பறிக்குந் தியாகர் முதலிய பழமொழிகள் தியாகப்பெருமானைப் பற்றியனவாம்.

## புராணவரலாறு :

வன்மீகநாதர்: திருமால், இந்திரன் முதலிய தேவர்கள் ஒருங்கு கூடி ஒரு யாகம் செய்வதற்கு எண்ணினர். குருக்ஷேத்திரமே தக்க இடம் என்று துணிந்தனர் இந்த யாகத்தைத் தொடக்கமுதல் இறுதி வரையில் இளைக்காமல் இயற்றுபவரே எல்லாரினும் உயர்ந்தவரென்று சபதம் செய்தனர். அவ்யாகத்தில் இந்திரன முதலியோர் தோற்றனர். விஷ்ணு வென்றார்; செருக்குற்றார். அதை அடக்க, முன்னவன் அருளால் ஓமகுண்டத்தில் ஒரு வில் உண்டாயிற்று. அதனை எடுத்து வளைத்துக்கொண்டு தேவர்கள் எல்லோரையுமே அடக்கியாள எண்ணி அவர்களைத் துரத்திச் சென்றனர். பராசக்திபுரம் என்னும் இத்தலத்தை யடைந்தார். இறைவி திருவருளால் அவர் வலியெலாம் ஒடுங்கியது. வில்லைத் தரையிலூன்றி அதன்மேல் தன்தலையைச்சாய்த்து அயர்ந்து அறிவு சோர்ந்தார்; சமயம் நோக்கிய தேவர்கள் தமது குருவாகிய வியாழனை ஆலோசனை கேட்டனர். அவரது உத்தரவுப்படி தேவர்கள் யாவரும் வில்லின் கீழ்ச் செல்லுருவமாகிப் புற்றில் அமர்ந்து நாணை அரித்து, அறுத்தனர். அப்போது



வில் நிமிர, விஷ்ணு தலைதெரித்தது. தேவர்கள் அஞ்சினர். ஆடகேசத் திருநாமத்தோடு பாதாளத் தெழுந்தருளிய பரமன் புற்றிடங்கொண்டு சிவலிங்கமாகக் காட்சி தந்தார். இந்திரனும் பிரமனும் வணங்கித் தோத்திரித்தனர். இறைவன் சிவலிங்கத் திருமேனியிலிருந்து வெளிப்பட தேவர்கள் வழிபட்டனர். அபயம் கூறினர். இறைவன், செருக்குக் கொண்ட திருமால் தலையை உடலோடு பொருத்துங்கள் என்ன, அவ்வாறே செய்து அத்திருமாலையும் பெற்றனர். பின்னர்த் திருமால் முதலிய தேவர்கள் ஆகம முறைப்படி வழிபாடு செய்து எல்லா இன்பங்களையும் எய்தினர். இதுவே புற்றிடங்கொண்ட பெருமானது தோற்ற வரலாறு என்று கூறப்படுகின்றது.

மற்றும் திருமகள் கடலரசனாகிய வருணனிடம் வளர்ந்து வந்தாள். திருமால் மதுகைடபர் என்ற அசுரர்களை வென்ற வரலாற்றைக் கேட்டு, அவரையே மணந்து கொள்ளவேண்டும் என்று இத்தலம் அடைந்து, திருமூலட்டானேசுவரரை வழிபட்டுத் தவம்செய்து வந்தனள். இறைவன் காட்சி தந்து அவ்வாறே வரமீந்தனர். திருமகள் தன் பெயரால் இந்நகரம் வழங்கவேண்டும் என்ற வரமும் கேட்டனள். அது முதல் இத்தலம் கமலாலயம் என்று அழைக்கப்பெறுகின்றது. ஒருகாலத்தில் கோடி முனிவர்கள் வந்து தரிசித்தபொழுது வன்மீகநாதர் கோடியளவான திருவுருவங்களைக் கொண்டு காட்சி

யளித்தனர். முனிவர்கள் ஒவ்வொருவரும் தனித் தனி வழிபாடாற்றினர். சிவப்பேறெய்தினர்.

திலீபன்மகனாகிற அசன் என்னும் அரசன் நால்வகைச் சேனையுமின்றி அரசாளும் முறை என்ன என்று தன் குலகுருவாகிய வசிட்டரை வினவினான். அதற்கு அவர் 'திருவாரூர் சென்று வன்மீகநாதரை வழிபட்டு அவரருளால் துர்க்கையை நிலைபெறுவித்து வழிபாடுசெய்யின் முடியும்' என்று கூறினர். அரசன் அவ்வாறே செய்தான்.

அசன் மகனாகிய தசரதன், ஆட்சிக் காலத்தில் உரோகிணி நட்சத்திரத்தை ஊடறுத்துச் சனி செல்வத்தைச்சோதிடர்மூலமாக அறிந்து, சனியைத் தடுக்கலான மண்டலத்தை அடைந்தான். சனியைக் கண்டு 'தேவரீர் உரோகிணியை ஊடறுத்தால் உலகம் பஞ்சம் எய்தும்; ஆதலால் நூற்று நான்கு யுகம்வரையும் உரோகிணியை ஊடறுத்தலாகாது; என் வார்த்தையை மீறின் என் வாளுக்கு இரையாகுவீர்' என்றான். சனி கருணைகூர்ந்து அரசன் துணிவைக்கண்டுமெச்சி அவன் வேண்டியவரத்தையும் மற்றும் பலவரங்களையும் கொடுத்தான்.

இதனையறிந்த இந்திரன், தசரதன் நட்பைப் பெறவேண்டித் தன் உலகிற்கு அழைத்து விருந்து இயற்றி 'உனக்கேதாவது குறையுளதோ' என்றான். 'என்னரசாட்சி இனிமையாய்ச் செல்லுகின்றது; ஆனால் பிள்ளை இல்லாக்குறைபெரிதாயிருக்கின்றது' என்றான். அப்படியாயின் 'கமலாலயம் சென்று வன்மீகநாதரை வழிபட்டால் நீ எண்ணியது எய்துவாய்' என்ன, தசரதன் அவ்வாறேவந்து வழிபட்டு இறைவன் அருள் பெற்றுச்சென்று யாகஞ் செய்து, இராமன் முதலிய நால்வரையும் பெற்று இன்பம் எய்தினான்.



அவ்வாறே சித்திசன் என்னும் அரசனும் புத்திரப்பேறு எய்தினான். குலிசேசன் என்னும் அரசன் பாரணைப் புண்ணிய காலத்துத் துருவாச முனிவருக்கு ஊன் கலந்த சோற்றையிட்டான். துருவாசர் சபித்தார். அச்சாபத்தை இத்தலத்து வன்மீகநாதரை வழிபட்டுப் போக்கியுய்ந்தான். அவ்வாறே மன்மதன் மேனகை முதலியவர்களும் வழிபட்டுச் சாபம் நீங்கினர். பசுவைத் தேடிக்கொண்டு வணிகன் ஒருவன் வன்மீகரை வலம்வர அதனால் மறுமையில் மன்னனாயினான். இராமன், குசன், லவன், சமற்காரன் என்னும் அரசன், கோகருணர் என்னும் முனிவரொருவர், கேமசர்மன் முதலியோர்களும் வழிபட்டுப் பேறுபெற்றனர்.

தியாகேசப்பெருமான்: திருமால் தனக்கு ஒரு அழகிய மகன் வேண்டுமென்று விரும்பினார். குறையெல்லாம் நிறைவிக்கும் பெருமானிடம் வேண்டிக் கடுந்தவம் மேற்கொண்டார். வெயிலிலும், மழையிலும் பெரிய நீலமலைபோல அசையாது நின்று கடுந்தவஞ் செய்தார். அதன் பயனாக இறைவன் திருவருட்சத்தியோடு வெளிப்பட்டனர். கண்ட

திருமால் துண்ணெனத் திடுக்கிட்டு, 'இறைவ! வேண்டுவார்க்கு வேண்டுவதேயீயும் விண்ணவர் தலைவ! அடியேனும் தேவரீர் திருவருளால் உலகப் பாதுகாப்பு முதலிய எல்லா நன்மைகளையும் எய்தினேன்; ஆயினும் பிள்ளையில்லாக்குறை பெரிதாயிற்று. அதனைத்தீர்க்க அழகிய புத்திரபாக்கியத்தை அருளுதல் வேண்டும்' என்றனர். பெருமானும் பேரருள் கூர்ந்தார். ஆனால் திருமால் இடப்பக்கத்திருக்கின்ற உமாதேவியை வணங்கவில்லை. அதனால் உமாதேவியார் சிறிது சினங்கொண்டு "இறைவன் திருவருளால் நீ புத்திரனை யெய்தினும் அவன் விதிவலியால் வலிய அழிக" என்று சாபங் கொடுத்துப் 'பின்பு பெருமானையும் அழைத்துக் கொண்டு விரைந்து மறைந்தருளினார். திருமால் கவன்று, செய்வது இன்னதென்று அறியாது நிற்கையில் திருவருள் உண்ணின்று உணர்த்த ஒரு எண்ணம் உண்டாயிற்று. அவ்வெண்ணப்படியே சிவபெருமானையும் உமாதேவியாரையும் குமாரக் கடவுளையும் ஒரே ஆசனத்தில் எழுந்தருளுவித்து ஆகமவிதிப்படி அரிய பூசனை செய்து வந்தனர். பூசைக்கு உகந்த பெருங்கூத்தர் விடையின்மேல் அருள் உருக்கொண்டு வெளிப்பட்டுக் காட்சியளித்தனர். திருமால் கந்தனையும், அம்மையையும், அப்பனையும் முறையே வணங்கினர். கண்டு மகிழ்ந்த மஹேஸ்வரி "என் சாபம் தடைப்படாது; ஆனால் நின் மகன் இறைவன் நெருப்புக்கண்ணால் வெந்து பின் பிழைப்பான்" என்று சாப விடை தந்தனள். மகிழ்ந்த திருமால் "இதே சோமாஸ்கந்தத் திருக்



கோலத்தோடு தேவரீர் எப்பொழுதும் எழுந்தருளி இன்னருள் புரிதல் வேண்டும். இந்த உலகம் முழுதும் உய்தல்வேண்டும்" என்று வேண்டினர். அவ்வாறே இறைவன் அருள்பாலித்தனர். பின்பு திருமால் தன் நெஞ்சக்கோயிலில் அம்மூர்த்தியை நிறுவி வழிபாடாற்றி வந்தனர். திருமாலின் நெஞ்சகத்து எழுந்தருளி உச்சுவாச நிச்சுவாசத்தால் (மூச்சுக்காற்றை உள்ளிழுத்தலும் வெளிவிடுதலும்) ஆகிய அசைவால் பெருமானும் அசைந்தாடி ஆனந்தங்கொண்டுதிருமாலுக்குத் திருவருள்சுரந்து விளங்கினார்.

அப்போது தேவலோகத்தைப் பல அசுரர்கள் சூழ்ந்து வருத்தத் தொடங்கினர்; கொள்ளையடித்தனர்; கொடுமை புரிந்தனர். இந்திரன் திருமாலைக் காணப் பாற்கடலை அடைந்து அவரிடம் நிகழ்ந்த யாவையுங் கூறினான். இந்தப் பெரிய துன்பம் எப்போதொழியுமோ? என் செய்வேன்! என ஏங்கினான். இரங்கிய திருமால் "என் உயிருக்குயிராக இருக்கின்ற ஒரு பரம்பொருளைத் தருகின்றேன்; அதனை நீயும் வைத்து அன்பு குறையாது பூசனை செய்து வந்தால் அப்பெருமானருளால் வெற்றி கிடைக்கும்" என்றருளிச்செய்து இறைவனையும் ஈந்தனர். பெற்றுக்கொண்ட இந்திரன் வழிபாடு செய்து அவுணர் வாதை அகலப் பெற்றான். அளப்பிலா மகிழ்ச்சியால் ஆண்டவனையும் வழிபட்டு வந்தனன்.

அப்போது திருவாரூர் செய்த பெருந்தவத்தால் மீட்டும் வலன் என்னும் அசுரன் வானுலகில் படையெடுத்து வந்து இந்திரனோடு போர்செய்து தோற்றோடச் செய்தனன்.

இது இங்ஙனமிருக்க, பூமியில் நீர்வளம்செறிந்த சோழநாட்டின் தலைநகரமாகிய திருவாரூரில் முசுகுந்தன் என்னும் அரசன் ஆண்டுவந்தான். அவன் முற்பிறவியில் ஒரு குரங்காகத் திருக்கயிலாயத்திலுள்ள பூஞ்சோலையில் சுற்றித் திரிந்தவன். இறைவனும், இறைவியுமாக எழுந்தருளியுள்ள போது அவர்கள்மேல் வீழும்வண்ணம் வில்வத்தளிரைச் சிந்திவந்தான். பேரருட் கடலாகிய இறைவன் அறியாதுசெய்த நற்செயலுக்கும் மகிழ்ந்து மறுபிறப்பில் அரசனாக உலகாளச்செய்தனர். அவனே சோழ அரசனாகிய முசுகுந்தனாக அவதரித்தவன். இம் முசுகுந்தன் இந்திரனுக்கு நட்பினன். திருவருள் கூடுதலால் இந்திரன் "நம் துணைவனாகிய முசுகுந்தனை அழைத்துவரின் நமது பகை நீங்கும்; வெற்றி கிட்டும்" என்று எண்ணினன். தூதனையனுப்பி அழைத்துவரச் செய்து துணைவலியாலும், பெருமான் திருவருள் வலியாலும் வெற்றிபெற்றனன். மகிழ்ந்த இந்திரன் முசுகுந்தனைப் பூலோகத்துக்கு அனுப்பும்போது வேண்டிய வரிசைகள் வழங்கி 'மண்ணுலக மன்ன! இவ்வுலக வாழ்வு எனக்கு உன்னால் நிலைத்தது; உனக்கு யான் செய்யக்கூடிய கைம்மாறு ஒன்றும் தோன்ற



வில்லையே' என்று உபசார மொழிகள் உரைத்தனன்.

விடைபெற்றுச் சென்று நீராடி பூசனை முற்றினான். புகழ்மாலைகளால் போற்றி நின்றனன். அப்போது முசுகுந்தனும் தனது கடன்களை முடித்துக்கொண்டு சென்று தியாக விநோதரை—அரவக் கிண்கிணிக்காலரசரைக் கண்டு ஆனந்த பரவசனாய்த் தன்னை மறந்து சிவமேயாய்த் திளைத்து நின்றனன். அன்புவலைப்பட்ட தியாகப்பெருமான் இந்திரன் அறியாதபடியும் இவன் மட்டும் காணும் வண்ணமும் காட்சியளித்தனர். முசுகுந்தனுக்கு முற்பிறவியினுடைய எண்ணங்களும், செயல்களும் முறையே நினைவிற்கு வந்தன. இன்ப வெள்ளத்து மூழ்கினான். இறைவன் இவன் காதிற்குமட்டும் கேட்க "என்னைத் திருவாரூர்க்குக் கொண்டுசெல்: பூசனைசெய்" என்று ஆணை தந்தனர். அரசன் வழிபாடுமுற்றி இந்திரனோடு அமுதருந்திய பின் விடைபெற விரும்பினன். இந்திரன் 'என்னிடம் வேண்டியது யாது? அதைக்கேள்; தருகிறேன்' என்றனன். அப்படியாயின் "நீ வழிபடும் தியாகப் பெருமானை அளித்திடுக" என்று அரசன் வேண்டினன். இந்திரன் இம்மூர்த்தி என்னுடையதல்ல; திருமால் வழிபட்டது; அவரது அனுமதி பெற்றுத் தரல்வேண்டும்' என்றனன். அப்போது முசுகுந்தன் கேட்டாயினும் கொடுக்கவேண்டுகிறேன்; பெற்றன்றிப் போகமாட்டேன்' னென வற்புறுத்திக்கூறினன். இந்திரன் அவ்வாறே பாற்கடல்சென்று திருமால்

அனுமதியினைப் பெற்றுவந்தவனாய், ஆன்மார்த்த மூர்த்தியை அகல மனமில்லாதவனாய், அதுபோன்று ஆறு திருஉருவங்களைச் செய்வித்து அரசனுக்குக் காட்டினன். திருவருள் துணைசெய்ய முசுகுந்தன் உண்மை உருவைக்காட்டித் தருக எனக் கேட்டனன். இந்திரன் இனிச் செய்வதொன்றறியாது திகைத்துச் சிவபெருமூர்த்தியை அளித்தனன். முசுகுந்தன் திருவாரூருக்கு எழுந்தருளுவித்தனன். வன்மீகர் திருக்கோயிலுக்குத் தென்பால் திருக்கோயிலமைத்து அதில் எழுந்தருளுவித்தனன். அங்ஙனம் அவன் எழுந்தருள்வித்தநாள் அஸ்த நக்ஷத்திரம். ஆதலால் அன்று கொடியேற்றுவித்து விழாக்கொண்டாடினன். பங்குனிஉத்தரத் திருநாளில் தேர்விழா நிகழ்த்துவித்தான். முதலில் திருமால் மார்பில் அசைந்தாடிய பெருமானாக இருந்ததை 'பையஞ்சுடர்விடு நாகப் பள்ளிகொள்வான் உள்ளத்தானும்' என்ற பகுதியால் அப்பரடிகள் அறிவிக்கின்றார்கள். அது மட்டுமா? "தேங்காவிநாறும் திருவாரூர்த் தொன்னகரில் பூங்கோயிலுள் மகிழ்ந்து போகா திருந்தாரே', என்ற தேவாரப்பகுதி, இன்றும் கண்கண்ட தெய்வமாகத் தியாகர்காட்சி விளங்குவதை அறிவிப்பதாகும்.

இன்னும் தியாகர் செல்வத்தியாகரான சிறப்பு அடிக்காயிரம்பொன் கொடுத்தார் என்னும் வரலாற்றினும் பெறப்படும். பொன் பரப்பிய திருவீதியென ஒருவீதிக்குப்பெயர் வழங்கியதே இதற்கு ஒரு தக்க சான்று. இந்நிகழ்ச்சி உற்சவத்தில் தியாகப் பெரு



[illegible]

மான் தேருக்கு எழுந்தருளுகிறபோது பொன்பூ, வெள்ளிப்பூ இறைப்பதாக நிகழ்ந்து வருகின்றது. ‘அடிக்கோராயிரம் பொன், சின்னங்கள் கூற அளிப்பார்’ எனத் திருவாரூர்க் கோவையினும், அடி ஒன்றுக்கு ‘உய்யும்படி பசும்பொன்னோராயிர முகந்து பெய்யுந் தியாகப்பெருமானே’ எனத் திருவாரூர் உலாவிலும் சிறப்பிக்கப் பெறுதல் காண்க.

சோமாசிமாறநாயனார் செய்த யாகத்துக்கு இறைவனே நேரில் வந்து அவிர்ப்பாகம் ஏற்றருளும்படி சுந்தரரைக்கொண்டு வேண்டிக்கொண்டார் என்றும், அவ்வாறே இறைவன் உமையோடு பறையர் திருக்கோலமாக எழுந்தருளி ஏற்றுக் கொண்டார் என்றும் வரலாறு ஒன்று காணப்பெறுகின்றது. ஆனால் இவ்வரலாறு பெரிய புராணத்துக் கூறப்படவில்லை. திருக்கடவூர்த் தலபுராணத்தில் கூறப்பெற்றுள்ளது. திருமாகாளத் தலபுராணம் துணை நிற்கின்றது. தியாகப்பெருமான் அவ்வாறு எழுந்தருளிச் சென்றதற்கு அடையாளமாக ஐயடிமங்கலம், அடியக்கமங்கலம், சகடமங்கலம், பொங்கு சாராய நல்லூர் என்ற ஊர்ப்பெயர்கள் சான்று பகருகின்றன.

மனுச்சோழன் நீதிகாக்க - பசுத்துயரம் தான் அடைய, தேர்க்காலில் மகன் வீதிவிடங்கனைக் கிடத்திதேருருட்டியபோது தியாகேசர் விடைமீது தோன்றிக் காட்சி வழங்கி உயிர்ப்பித்தார் என்ற வரலாறு பெரியபுராணத்துக் காணப்பெறுகிறது.

நமிநந்தியடிகள் கனவில் தியாகப்பெருமான் எழுந்தருளி, திருவாரூர்ப்பிறந்தார்கள் எல்லாரும் சிவகண மாதலைத் தெரிவித்தனர் என்பதும் பெரிய புராணத்துப் பேசப்பெறுவது. அவ்வாறே விறன் மிண்டர், கழற்சிங்கர் வரலாறுகளும் தியாகப் பெருமானுடைய திருவருள் தொடர்புடையன.

மற்றும், பச்சைக்கர்ப்பூரம் அணிதலும் செவ்வந்தித்தோடணிதலும், செங்கழுநீர் மாலையணிதலும், இறைவனுக்குச் சாத்தப்பெறும் ஆடையில் தியாகர் என்ற பெயர் வரைதலும், பாகற்காய் பறித்தலும், தென்னை திருவாசல் வழியாகப் பாடுவார் பாடல் கேட்டலும் தியாகர்க்குரிய வழக்கங்களாம்.

## பூஜைகளும் விழாக்களும் :

நாடோறும் தியாகராஜசுவாமிக்கும், வன்மீகநாதருக்கும் ஆறுகால பூஜைகள் நடக்கின்றன.

திருவனந்தல்: காலை !-மணிக்கு நடைபெறும், ஸ்ரீ நீலோற்பலாம்பாள் சந்நிதியிலிருந்து ஸ்ரீ சொக்கப்பெருமானை ஸ்ரீ தியாகராஜசுவாமியின் சந்நிதிக்கு எழுந்தருளச்செய்து பால் நைவேத்யம் நடைபெறும்; நிவேதித்த பால் அன்பர்களுக்கு விநியோகம் செய்யப்பெறும். அப்போது வன்மீகநாதர் சந்நிதியில் தீபாராதனை நடக்கும்.



காலசந்தி: காலை 10 மணிக்கு நடைபெறும். சுற்றுக்கோயில், பஞ்சலிங்கம் முதலிய சுவாமிகளுக்கு அபிஷேகம் நடக்கும். வன்மீகநாதருக்கு அபிஷேகம் நடைபெறும். ஸ்ரீ தியாகராஜருக்கு நைவேத்யம் செய்து தீபாராதனை நடைபெறும்.

உச்சிக்காலம்: பகல் 12 மணிக்கு நடக்கும். ஸ்ரீ தியாகராஜர் சந்நிதியில் உள்ள மரகதவிடங்கருக்குத் தியாகராஜர் முன் மண்டபத்திலேயே அபிஷேகம் நடக்கும். பின்னர் வன்மீகநாதருக்கு அபிஷேகமாகும். நைவேத்யம் தீபாராதனை நடைபெறும். பின்னர்த் தியாகராஜருக்கு நைவேத்யம் தீபாராதனை நடைபெறும்.

சாயரக்ஷை: இது மாலை 6 மணிக்கு நடக்கும். இது திருவந்திக்காப்பு என்று இங்கு வழங்கப் பெறும். இது இத்தலத்தில் விசேஷம் வாய்ந்தது. எல்லாச் சிவதலங்களிலுமுள்ள சிவகலைகளும் திருவந்திக்காப்பு நேரத்தில் இத்தலத்து ஒருமிக்கக் கூடியிருப்பதாக ஐதிகம். சாயரக்ஷையில் தியாகராஜாவுக்குத் திருப்பணி சாத்தித் திருச்சாந்து இட்டு, சுத்த மத்தள வாத்தியங்களுடனும், பாரிகாதசுரத்துடனும் மிக விமரிசையாக நடைபெறும்.

இரண்டாம் காலம்: வன்மீகநாதருக்கு அபிஷேகம் உண்டு. சுற்றுக்கோயில்களுக்கும் அபிஷேகம் நைவேத்யம் நடைபெறும். நீலோத்பலாம்பாளுக்கு அபிஷேகம் நடைபெறும்.

தியாகராஜருக்கு முன் மரகதவிடங்கருக்கு அபிஷேகம் நடைபெறும். பிறகுதான் தியாகராஜருக்கு அலங்கார தீபாராதனைகள் நடைபெறும். பின்னர் ஸ்ரீபலிநாயகரை எழுந்தருளச்செய்து தேவாசிரயம் நடுப்பத்தியில் கொண்டுவந்து பலிபோடப்பெறும்.

**அர்த்தயாமம்:** வன்மீகநாதருக்கு நைவேதனமாகும். ஆராதனைகள் செய்து தியாகராஜசுவாமி சந்நிதியிலுள்ள ஸ்ரீ சொக்கப்பெருமானைப் பல்லக்கில் எழுந்தருளச்செய்து, தீவர்த்தி சாமரம் முதலிய உபசாரங்களுடன் பிரதக்ஷிணமாகவந்து நீலோத்பலாம்பாள் சந்நிதியில் உள்ள பள்ளியறையில் வைத்து, ஊஞ்சலாட்டு நடத்துவது வழக்கம். பிறகு பைரவருக்கு அபிஷேகம் நிவேதனம் நடைபெறும்.

கமலாம்பாள் சந்நிதியில் திருவனந்தல் தவிர மற்ற ஐந்து காலங்களும் நடைபெறும்.

**மாதவிழா:** ஒவ்வொரு மாத பௌர்ணிமையிலும் கமலாம்பாள், நீலோத்பலாம்பாள், வன்மீகநாதர், பஞ்சலிங்கங்கள் ஆகிய மூர்த்திகளுக்கு அபிஷேகமும் விசேஷ நைவேத்யங்களும் நடைபெறும்.

**வருஷ ஏறுபடிகள்:** தியாகப் பெருமானுக்கு ஆடி, ஐப்பசி, விஷு புண்ணிய காலங்களிலும், மார்கழித் திருவாதிரையிலும், பங்குனி உத்திரத்திலும், தைச் சங்கராந்தியிலும், தேருக்கு எழுந்தருளி மீண்டு வந்ததும் (பிராயச்சித்தாபிஷேகம்)



சித்திரை விஷுவிலும் கிரகணபுண்ணிய காலங்களிலும் மஹாபிஷேகங்கள் நடைபெறும்.

சித்திரையில் வசந்தோற்சவம் (கோடைக்கால உற்சவம்) பத்துநாட்களும், வைகாசியில் விசாகத் திருநாளில் பால் மாங்காய் ஏறுபடியும், சீராளன் கறி ஏறுபடியும், நடைபெறும். இன்னும் ஆவணி மாத சூரிய பூஜை, ஆவணிமூலம், கேதாரி பூஜை, புரட்டாசி பௌர்ணிமியில் நிறைபணி, நவராத்திரி, அஷ்டதுர்க்கா உற்சவம், கந்தசஷ்டி, ஐப்பசிப் பரணி, ஐப்பசிப்பூரம், கார்த்திகைச் சோமவாரங்கள், திருக்கார்த்திகை, மார்கழித் திருப்பள்ளி எழுச்சி, மாணிக்கவாசகர் திருவெம்பாவை உற்சவம், ஊஞ்சல் உற்சவம், ஆருத்திரா தரிசனம், கனுமண்டப உற்சவம், தைப்பூசம், மகாசிவராத்திரி முதலிய உற்சவங்கள் மிக விரிவான முறையில் நடைபெற்று வருகின்றன. அவற்றுள் நிறைபணி உற்சவம் மிக விசேடமானது. இந்திரன் இங்கு வந்து தியாகப்பெருமானைப் பூசிப்பதாக ஐதீகம்.

**பெருவிழா:** பங்குனி உற்சவம்; இதுவே பிரமோற்சவம். மாசிமாத அஸ்த நக்ஷத்திரத்தில் கொடியேறிப் பங்குனியில் உத்தர நக்ஷத்திரத்தில் தீர்த்தம் நடைபெறும். சந்திரசேகரபட்டம் என்ற விழாமுதல் தீர்த்தம்வரை உற்சவம் சிறப்பாக இருக்கும். வசந்தன், திருத்தேர், பக்த காட்சி மூன்று காலங்களிலும் தியாகராஜா அசைந்தாடி வருவர்.

**மார்கழித் திருவாதிரை விழா:** அப்பரடிகளுடையவாக்கால் பதிகம்பெற்றது. திருஞானசம்பந்தப்பெருமான் திருப்புகலூரில் எழுந்தருளியிருந்தபோது திருவாரூர்த் திருவாதிரைத் திருநாளைத் தரிசித்துவந்த அப்பரடிகளை எங்கிருந்து வருகின்றீர்கள் என வினவ அப்பரடிகள் 'முத்துவிதானம்' என்ற பதிகத்தால் திருவாதிரைத் திருநாளின் மகிமையை விளக்கினார்கள். அவர்களது பதிகத்தின் அருமையே திருஞானசம்பந்தப் பெருமானை உடனே திருவாரூர்க்கு வரச்செய்தது. தியாகப் பெருமானுக்குத் திருவாதிரையன்று மகாபிஷேகம் நடைபெறும்.

**ஆடிப்பூரம்:** கமலாம்பாளுக்கு நடைபெறும் பெரியதோர் உற்சவம். இது பதினொந்து நாட்கள் நடைபெறும். தேரோட்டமும் உண்டு. ஆடிப்பூரத்தன்று அம்மை தீர்த்தம் வழங்கியன்றிரவு வெள்ளை சாத்தி, வெண்சாந்து, வெள்ளைப்பூச்சூடி எழுந்தருளிப் பார்வதீசுவரர் கோயிலில் இறைவனுடன் ஒன்றுபடுவதாக ஐதீகம் நடைபெற்று வருகின்றது.

இவ்விழாக் காலங்களில் உத்ரபாத தரிசனத்திற்கும், மார்கழித் திருவாதிரைத் தரிசனத்திற்கும் திருவிளமரிலிருந்து பதஞ்சலி வியாக்ரபாதர் எழுந்தருளிவந்து தரிசனம் பெற்றுச் செல்வர்.



## கட்டளைகள்

இந்தத்திருக்கோயிலை நிர்வகிக்க பதின்மூன்று கட்டளைகள் இருக்கின்றன. ஒவ்வொரு கட்டளைக்கும் தனித் தனியான தர்மகர்த்தாக்களும் சொத்துக்களும் உண்டு. இந்தக் கட்டளைகளுள் மிகச் சிறந்தவை அபிஷேகக் கட்டளை, அன்னதானக் கட்டளை, இராஜாங்கக்கட்டளை, உள்துறைக்கட்டளை என்பவை. அந்தந்தக் கட்டளையிலிருந்தும் கைங்கரியங்களுக்கு வேண்டியன பணமாகவும் பொருள்களாகவும் திட்டப்படி கொடுக்கப்படுகின்றன. கோயில்நிர்வாகமும் அந்தந்தக் கட்டளைநிர்வாகமும் தனித்தனியானவை.

இந்தக் கோயில் ஆயிரத்து எண்ணூற்றுப் பத்தாம் வருஷம் முதல் பஞ்சாயத்துச் சபையாரால் மேற்பார்வை செய்யப்பட்டு வந்தது. 1820 ல் இராஜன் கட்டளையினுடைய முழுப்பொறுப்பையும் தருமபுரம் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். 1847 ல் ஏனைய கட்டளைக் காரர்களிடமிருந்து சர்க்கார், கட்டளைகளைச் சரிவர நடத்தி வருவதாக உறுதிமொழி எழுதி வாங்கிக் கொண்டார்கள்.

## இராஜாங்கக்கட்டளை

இந்தக் கட்டளையில் தம்பிரானாக இருந்தவர்கள் பலர் கட்டளைக்கு நிலபுலன்கள் வாங்கிச்சேர்த்திருக்

கிறார்கள். சுவாமிகளின் நிர்வாகம் முழுமையும் சிவப்பணியைச் சரிவரச் செய்வதும், மிச்சத்தைச் சேமித்துவைத்துக் கட்டளைகட்கு நிலம் வாங்கிச் சேர்ப்பதுமேயாகும்.

தருமபுரம் 17-வது குருமூர்த்திகள் காலத்திலிருந்த ஸ்ரீமத் அருணாசலத் தம்பிரான் சுவாமிகள் இந்தக் கட்டளையில் வெகு நாள் நிர்வாகத்தில் இருந்திருக்கிறார்கள். திருவாரூர் தெற்குக் கோபுரம் இவர்களால் திருப்பணி செய்யப்பெற்று கி. பி. 1897-ல் முடிவுற்றது. இந்நிகழ்ச்சியை அறிவிக்கும் கல்வெட்டொன்று அக்கோபுரத்தில் இருக்கிறது. அவ்வாறே பழனியப்பத் தம்பிரான் சுவாமிகளும் இங்கிருந்தபோது கட்டளைக் களஞ்சியத்தைக் கட்டி முடித்திருக்கிறார்கள். பெருவாரியான நிலங்கள் இவர்கள் காலத்து வாங்கிச் சேர்க்கப்பட்டன. சிதம்பரநாதத்தம்பிரான் சுவாமிகள் என்பவர்களும் கட்டளையின் நிர்வாகத்தைச் சீர்பெற நடத்திச் சில நிலங்களை வாங்கிச் சேர்த்திருக்கின்றார்கள். மகா சந்நிதானங்களுடைய நிர்வாகத் திறத்திலும், கட்டளைத் தம்பிரான்களின் கவனத்திலும் கட்டளையின் சொத்து பெருவாரியாகப் பெருகிற்று. இக் கட்டளை இயற்றிவரும் கைங்கரியங்களும் அவற்றின் திட்டங்களும் இங்குத் தரப்படுகிறது.

## தருமபுர ஆதீனம், திருவாரூர் ஸ்ரீ [illegible]கராஜஸ்வாமி தேவஸ்தானம் இராஜன் கட்டளை திட்டம்.

| | நித்தியபடி ரூ. | அ. | பை. | வருஷ 1க்கு திட்டம் ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|---|---|
| நித்தியப்படி நாள் 1க்கு திட்டம் ... | 40 | 11 | 6 | 14903 | 1 | 0 |
| ஸ்ரீ தெக்ஷணாமூர்த்தி சுவாமிக்கு நித்தியபடி திட்டம் | 1 | 6 | 3 | 508 | 15 | 6 |
| ஸ்ரீ தெக்ஷணாமூர்த்தி சுவாமிக்கு சோமவாரம் நாள் 1 க்கு திட்டம் .... | 0 | 14 | 6 | 47 | 2 | 0 |
| வார ஏறுபடி ஆதி வாரம் நாள் 1-க்கு திட்டம்... | 0 | 7 | 3 | 23 | 9 | 0 |
| ,, மங்கள வாரம் ,, .... | 0 | 6 | 0 | 19 | 8 | 0 |
| ,, சுக்ர வாரம் ,, .... | 1 | 8 | 2 | 78 | 8 | 8 |
| ,, சனி வாரம் ,, ... | 0 | 8 | 9 | 28 | 7 | 0 |
| பிரதோஷம் ,, .... | 5 | 13 | 7 | 140 | 6 | 0 |
| அமாவாசை ,, ... | 8 | 8 | 6 | 102 | 6 | 0 |
| திருவாதிரை ,, ... | 0 | 9 | 2 | 6 | 14 | 0 |
| கார்த்திகை ,, ... | 7 | 8 | 1 | 97 | 9 | 1 |
| அசலேஜ்வரம் மாகாப்பு ,, .... | 1 | 9 | 8 | 19 | 4 | 0 |
| நித்தியபடி மாகாப்பு ,, .... | 0 | 4 | 0 | 91 | 8 | 0 |
| நித்தியாக்கினி ஹோமம் ,, .... | 0 | 12 | 10 | 293 | 9 | 0 |
| ஆடிமாச பூசை ஏறுபடி ,, ... | 11 | 12 | 8 | 11 | 12 | 8 |
| ஆவணிமாச பூசை ஏறுபடி ,, .... | 13 | 6 | 5 | 13 | 6 | 5 |
| புரட்டாசிமீ ,, ... | 19 | 3 | 11 | 19 | 3 | 11 |
| ஐப்பசிமீ அன்னாபிஷேக பூசை ,, ... | 141 | 8 | 9 | 141 | 8 | 9 |

| | ரூ. | அ. | பை. | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|---|---|
| கார்த்திகையீ பூசை ஏறபடி ,, ... | 9 | 10 | 0 | 9 | 10 | 0 |
| மார்கழி தையீ பூசை ஏறபடி ,, .... | 25 | 11 | 0 | 25 | 11 | 0 |
| மாசியீ பூசை ஏறபடி ,, .... | 13 | 4 | 6 | 13 | 4 | 6 |
| பங்குனியீ பூசை ஏறபடி ,, ... | 11 | 7 | 0 | 11 | 7 | 0 |
| சித்திரையீ பூசை ஏறபடி ,, .... | 13 | 8 | 7 | 13 | 8 | 7 |
| வைகாசியீ பூசை ஏறபடி ,, ... | 11 | 7 | 4 | 11 | 7 | 4 |
| ஆனியீ பூசை ஏறபடி ,, ... | 14 | 14 | 2 | 14 | 14 | 2 |
| ஆடி அயன அபிஷேக ஏறபடி ,, ... | 189 | 13 | 3 | 189 | 13 | 3 |
| ஆடிச்சுவாதி ஏறபடி ,, ... | 11 | 15 | 11 | 11 | 15 | 11 |
| ஆடி பதினெட்டாம்பேறு ஏறபடி ,, ... | 39 | 13 | 10 | 39 | 13 | 10 |
| ஆடிப்பூர உத்சவம் ஏறபடி ,, .... | 400 | 0 | 0 | 400 | 0 | 0 |
| விநாயக சதுர்த்தி ஏறபடி ,, ... | 19 | 3 | 4 | 19 | 3 | 4 |
| ஆவணி உள் ஆதித்தன் ஏறபடி ,, ... | 2 | 1 | 7 | 2 | 1 | 7 |
| ஆவணி மூலம் ஏறபடி ,, ... | 10 | 2 | 0 | 10 | 2 | 0 |
| கேதாரபூஜை ஏறபடி ,, ... | 5 | 10 | 8 | 5 | 10 | 8 |
| நவராத்திரி ஆதி அந்தம் ஏறபடி ,, .... | 1 | 11 | 10 | 1 | 11 | 10 |
| நவராத்திரி அங்குரம் ,, .... | 0 | 10 | 0 | 0 | 10 | 0 |
| நவராத்திரி நாள் 10க்கு திட்டம் ... | 40 | 15 | 8 | 40 | 15 | 8 |
| அட்டதார்க்கை அபிஷேக நைவேத்தியம் ... | 10 | 2 | 6 | 10 | 2 | 6 |

| | ரூ. | அ. | பை. | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|---|---|
| நவராத்திரி கட்டளை உபயம் நாள் 1-க்கு திட்டம் ... | 126 | 12 | 2 | 126 | 12 | 2 |
| மகாநவமி ஏறபடி ,, .... | 3 | 7 | 11 | 3 | 7 | 11 |
| விரவண்டையம் அபிஷேகம் & நைவேத்தியம் | | | | | | |
| நாள் 1-க்கு திட்டம் ... | 2 | 5 | 1 | 2 | 5 | 1 |
| சரஸ்வதி பூஜை களஞ்சியம் ஏறபடி ... | 5 | 6 | 2 | 5 | 6 | 2 |
| விஜயதசமி ஏறபடி திட்டம் ... | 3 | 5 | 2 | 3 | 5 | 2 |
| அம்பு மண்டபம் ஏறபடி ... | 55 | 7 | 7 | 55 | 7 | 7 |
| திறைபணி ஏறபடி திட்டம் .... | 229 | 3 | 6 | 229 | 3 | 6 |
| ஐப்பசி விஷு அபிஷேகம் ... | 179 | 4 | 11 | 179 | 4 | 11 |
| தீபாவளி ஏறபடி .... | 240 | 10 | 2 | 240 | 10 | 2 |
| சூரசம்ஹாரம் ஏறபடி உள்குமாரர் ... | 12 | 5 | 4 | 12 | 5 | 4 |
| விடயாத்தி ஏறபடி ... | 13 | 4 | 5 | 13 | 4 | 5 |
| ஐப்பசி பரணி ஏறபடி .... | 2 | 12 | 11 | 2 | 12 | 11 |
| ஐப்பசி பூரம் ஏறபடி .... | 11 | 8 | 9 | 11 | 8 | 9 |
| பொரி நைவேத்தியம் .... | 3 | 0 | 9 | 3 | 0 | 9 |
| கார்த்திகை சோமவாரம் நாள் 4-க்கு ... | 37 | 8 | 2 | 37 | 8 | 2 |
| கார்புதார் ஏறபடி ... | 9 | 14 | 1 | 9 | 14 | 1 |
| திருக்கார்த்திகை அங்குரம் ... | 1 | 3 | 5 | 1 | 3 | 5 |
| மடைப்பள்ளி விளக்கு மறு தினமும் | 9 | 1 | 6 | 9 | 1 | 6 |

| | ரூ. | அ. | பை. | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|---|---|
| சொக்கு மரம் ஏறுபடி ... | 39 | 2 | 9 | 39 | 2 | 9 |
| திருக்கார்த்திகை ஏறுபடி ... | 13 | 2 | 0 | 13 | 2 | 0 |
| திருக்கார்த்திகை ஏறுபடி .. | 17 | 11 | 0 | 17 | 11 | 0 |
| தனுர்மீ கணப்பு நாள் 29க்கு ... | 22 | 15 | 0 | 22 | 15 | 0 |
| தனுர்மீ திருப்பட்சி ஏறுபடி ... | 8 | 13 | 9 | 8 | 13 | 9 |
| திருப்பட்சி ஏறுபடி ராஜன் கட்டளை ... | 63 | 10 | 4 | 63 | 10 | 4 |
| ஆருத்ராதெரிசனம் அபிஷேகம் ... | 244 | 2 | 8 | 244 | 2 | 8 |
| ஆருத்ரா தெரிசனம் சுவாமி முன் மண்டபம்வர ... | 159 | 15 | 11 | 159 | 15 | 11 |
| சங்கராந்தி அபிஷேகம் ... | 203 | 6 | 5 | 203 | 6 | 5 |
| சங்கராந்தி பாவாடை ... | 75 | 12 | 4 | 75 | 12 | 4 |
| சங்கராந்தி விநியோக செலவு ... | 77 | 5 | 3 | 77 | 5 | 3 |
| பூசம் ஏறுபடி ... | 3 | 3 | 6 | 3 | 3 | 6 |
| களஞ்சியம் பந்தக்கால் முகூர்த்தம் ... | 0 | 2 | 11 | 0 | 2 | 11 |
| பூஜை மண்டப பாவாடை & அலங்காரம் ... | 106 | 13 | 10 | 106 | 13 | 10 |
| மகாவிபதீர்த்தம் .... | 14 | 1 | 5 | 14 | 1 | 5 |
| பிசான்புதூர் ஏறுபடி ... | 11 | 7 | 1 | 11 | 7 | 1 |
| மகாசிவராத்திரி அபிஷேகம் ... | 111 | 15 | 5 | 111 | 15 | 5 |
| சித்திரை விஷு அபிஷேக ஏறுபடி ... | 200 | 13 | 0 | 200 | 13 | 0 |
| கிரகண அபிஷேகம் ... | 197 | 12 | 11 | 197 | 12 | 11 |

| | ரூ. | அ. | பை. | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|---|---|
| புதுப்பஞ்சாங்கம் வாசிக்க திட்டம் ... | 18 | 0 | 7 | 18 | 0 | 7 |
| அட்சய திருதியை ... | 4 | 6 | 6 | 4 | 6 | 6 |
| வேடை உச்சி நைவேத்தியம் ... | 13 | 9 | 3 | 13 | 9 | 3 |
| சித்திரை பரணி சிராளன் கறி ... | 20 | 0 | 10 | 20 | 0 | 10 |
| அக்கினி நட்சத்திரம் நாள் 9க்கு .... | 87 | 15 | 8 | 87 | 15 | 8 |
| விசாகம் பால் மாங்காய் .... | 14 | 6 | 2 | 14 | 6 | 2 |
| விரை முகூர்த்தம் ... | 4 | 7 | 6 | 4 | 7 | 6 |
| சித்திரை கோடை உத்ஸவம் ... | 41 | 12 | 1 | 41 | 12 | 1 |
| ஊஞ்சல் உத்ஸவம் ... | 40 | 7 | 1 | 40 | 7 | 1 |
| பாணக பூசை ஏறுபடி ... | 46 | 12 | 3 | 46 | 12 | 3 |
| | | | | 1600 | 0 | 0 |
| Grand Total Rs. | 3491 | 9 | 8 | 21282 | 4 | 8 |

# கல்வெட்டுக்கள்

# கல்வெட்டுக்கள்

## நாடு:

புலவர் நாவிற் பொருந்தியுள்ள பெருமை சோழநாட்டிற்குப் பழமையானது. உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோர்களாதலின், உண்டிதரும் சோழநாட்டை வாழ்த்தாதவர்கள் யார்? சோழநாடு வெற்றுணவால் மட்டுமல்ல; அறிவு நிலைக்களன்களான ஆலயங்களாலும் தனிச்சிறப்புடையது. தெய்வமணங்கமழச் சிவாலயப்பூங்கா அமைத்தவர்கள் சோழர்களே. "தென்னாடுடைய சிவன்" என்ற அருள்வாக்குச் சோழநாட்டின் சிவாலயங்களின் பரப்பைக்கொண்டே எழுந்தது எனலாம்.

சோழர்கள் தம் அரண்மனைத்தெய்வமாக வைத்துப் போற்றிவந்த சிவாலயங்கள் இரண்டு. அவை திருவாரூரும், தஞ்சை இராஜராஜேச்சரமுமாம். அவற்றுள் திருவாரூரே மிகப்பழமையானது; சிறந்தது. சோழர்கள் தம்தலைநகரை மாற்றித் தஞ்சையில் அமைத்துக்கொள்ள விரும்பியபோது, இடம் மாற்றியும், இடத்திலுள்ள இறையன்பு மாற்ற முடியாமையால் புதிதுகண்ட தஞ்சைத் தலைநகரில் திருவாரூர்த் தியாகப்பெருமான் போலவே ஒரு படிமஞ் செய்வித்து, திருவாரூரைப் போலவே எல்லாப் பணிகளும் இயற்றுவித்தார்கள் என்ற நிகழ்ச்சி திருவாரூரின் தொன்மையையும், அரசர்க்

குள்ள அளவிறந்த அன்பையும் காட்டும் தக்க சான்றாம்.

சோழ மன்னர்களுடைய நேர்ப் பார்வையில் கண்காணிக்கப்பெற்றுவந்த சிவதலங்கள் நான்கு. அவை திருவாரூர், காஞ்சிபுரம், சிதம்பரம், திருவிடைமருதூர் என்பன.

அவற்றுள் திருவாரூர் மிகச்சிறந்தது. சோழ மன்னர் சிறந்த ராஜதானியாகக்கொண்டிருந்தமையாலும், தாங்கள் புதிதுகண்ட தலைநகரங்களிலும் தியாகப்பெருமானையே வைத்து வழிபட்டார்கள் ஆதலாலும், பெரியபுராண அடியார்களிற் பெரும்பாலோர் வசித்த இடமாதலாலும், சுந்தரர் பெருமானையும் சேரமான்பெருமானையும் நோக்கி இறைவனே வழிப்படுத்தியனுப்புகின்ற சிறப்பாலும் சிறந்ததென்பது வெளிப்படை. முதல் இராஜராஜன் காலத்தில் திருவாரூரும், தஞ்சையுமே முதன்மைத் தானமாக இருந்தன.

இத்தலம், கயாமாணிக்கவளநாட்டைச் சார்ந்த திருவாமூர்க் கூற்றத்துத் திருவாரூர் என்றும்[1], அதிராஜவளநாட்டுத் திருவாரூர்க்கூற்றத்துத்திருவாரூர் என்றும்[2], க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டுத் திருவாரூர்க் கூற்றத்துத் திருவாரூர் ஏன்றும்[3], கல்வெட்டுக்கள் குறிக்கின்றன.

[1] S. I. I. 553 of 1904. [2] S. 1. I. 670 of 1919.
[3] S. I. 1. 674 of 1919.



இவற்றுள் முதற் கல்வெட்டு இரண்டாம் குலோத்துங்கன் காலத்தது (கி. பி. 1113-1150). இரண்டாவது விசயராஜேந்திரனாகிய இராஜாதிராஜன் I (கி. பி. 1018) காலத்தது. மூன்றாவது இன்னாரதென் றறியப்படாவிட்டாலும் 'கோனேரின்மைகண்டான்' என்று தொடங்குவதால் முதல் ராஜராஜனதுகாலம் (985-1014) என்று கல்வெட்டறிஞர்கள் கருதுகிறார்கள். ஆகவே முதல் இராஜராஜன் காலத்து க்ஷத்திரிய சிகாமணி வளநாடாக இருந்தது. பின்னர் Iம் ராஜாதிராஜன் காலத்து அதிராஜராஜவளநாடாக ஆயிற்று. அதற்குப் பின்பு IIம் குலோத்துங்கன் காலத்துக் கயாமாணிக்கவளநாடாகப் பெயர் சூட்டப்பெற்றது. இதனால் அரசர்கள் தத்தம் ஆட்சிக்காலத்தில் நாடுகளைப் பிரித்துக் கட்டித் தம் மரபிற்கும் அன்பிற்கும் ஏற்பப் பெயர் சூட்டினார்கள் என்பது அறியப்படும்.

II-ம் குலோத்துங்கன் திருவாரூரையே வளநாடாக்காது கயாக்கரையை வளநாடாக்கியதின் காரணம் சோழமன்னரின் அரண்மனை அங்கு இருந்தமை என்று ஊகிக்கலாம். அதற்குச் சான்றாக அரண்மனைவெளி என்ற இடமொன்று கயாக்கரைபோகும் வழியிலுள்ளது என்பது அறியத்தக்கது.

ஊர்த்தெருக்களுக்கும் அடிமுடிதேடிய திருவீதி, திருவடிப்போது நாறிய திருவீதி, பொன்பரப்பிய திருவீதி, புகழாபரணர் திருவீதி எனவும், ராஜ

ராஜன் திருவீதி, குலோத்துங்கன் திருவீதி எனவும் பெயர்கள் அமைக்கப்பட்டிருந்தன. அவை இன்ன திருவீதி எனத் தெளிய அறியப்படாவாயினும் புகழாபரணர் திருவீதி என்பது இப்போது காரைக் காட்டுத்தெரு என வழங்கும் திருவீதி நான்கையும் அறிவிப்பதாகும்.

## கோயில்:

II-ம் ராஜாதிராஜன் தம் ஆட்சியாண்டு 16-ல் பெரிய கோபுரத்தையும், சபாபதி மண்டபத்தையும் கட்டினான்[1]. புற்றிடங்கொண்ட பெருமான் கோயிலுக்குப் பூங்கோயிலெனவும்[2], அதனெதிரில் தென் பக்கத்துள்ள அசலேசத்திற்கு அரநெறி எனவும்[3], நாயக்கர் காலத்துக் கல்வெட்டுக்களில் அரநெறி அசலேசம் எனவும்[4] பெயர்கள் வழங்கிவந்தன. ராஜநாராயண மண்டபம் என்பது வீரநாராயணன் கட்டியதாக இருக்கலாம். இதனால் ராஜநாராயணன் என்ற பெயரோடு ஒரு அரசனில்லாதது அறியத் தக்கது.

## பணிகள்:

ராஜராஜசோழனது பாட்டியாரும், மதுராந்தக உத்தம சோழனின் தாயாரும், கண்டராதித்த

1 நீலகண்ட சாஸ்திரிகள், சோழர் பக். 157
2 ஷை பக். 414
3 S. I. I. 571 of 1904. 4 S. I. I. 575.



சோழன் மனைவியுமான உடையபிராட்டியார் செம்பியன்மாதேவியார் அரநெறிக் கோயிலைக் கற்கோயிலாகக் கட்டுவித்தார்[1]. அதில் இரண்டு திருவுருவங்களை எழுந்தருளுவித்தார். சகம் 1362 ல் கி. பி. 1440ல் தக்ஷிண சமுத்திராதிபதியான லக்கம தண்டநாயகவுடையாருக்கு நன்றாக அவர் மந்திரி கோபுரம் கட்டினான்[2]. இந்தக் கோபுரம் எது என்று அறியக்கூடவில்லை. பரகேசரி II-ம் ராஜேந்திர சோழன் வீதிவிடங்கப்பெருமான் கர்ப்பக்கிருகமும், வன்மீகவுடையார் மண்டபமும் பொன்வேய்ந்தான்[3]. இது வெள்ளாளக்கூத்தனாகிய செம்பியன் மூவேந்த வேளானைக்கொண்டு நிறைவேற்றப் பட்டது.

## அணிகள் :

வீதிவிடங்கத் தேவர்க்கும், காமக்கோட்டமுடைய நாச்சியாருக்கும் மணிகளும் மாலைகளும் அளிக்கப் பெற்றன[4]. பொற்பல்லக்குச் செய்ய, உத்தரவிடப்பட்டது. காதணியும் செய்து வழங்கப் பட்டது.

## திருப்பெயர்கள் ;

கல்வெட்டுக்களில் வன்மீக நாதரின் பெயர் புற்றிடங்கொண்டார் என்றும், தியாகேசர் பெயர்

1 S. I. I. 570, 571 of 1904. 2 S. I. I. 566 of 1904.
3 S. I. I. 669 of 1919. 4 S. I. I. 676 of 1919.

வீதி விடங்கமுடையா ரென்றும்[1] குறிப்பிக்கப் பெறுகின்றன. பொற்படிக்க நாயக ஈச்சரமுடையாரென்று இறைவனின் திருநாமம் குறிப்பிக்கப்படுகிறது. பொற்படிக்கநாயகம் என்பது ஆடகேச்சரம் என்பதின் தமிழ்மொழியாக இருத்தல் வேண்டும்[2]. திருமண்டளியுடைய மாதேவரென்றும் சத்தியவாகேசர் என்றும் பரவையுண்மண்டளிப் பெருமான் வழங்கப்பெறுகின்றார்[3]. கமலாலயத்திற்குப் புதுநீர் வருவாயில் அமைந்திருக்கின்ற விநாயகர், திக்குநிறைந்த விநாயகர் எனக் குறிப்பிடப்படுகிறார்[4].

மற்றும், [5]விக்ரமசோழீச்சர முடையார், [6]ஆனந்தேசரமுடைய நாயனார், உலகேசரமுடையார் முதலிய பெயர்களும் வருகின்றன.

தியாகராஜர் என்ற திருநாமம் கல்வெட்டுக்களில் குறிக்கப்பெறவில்லை. திருவாரூருடையார் வீதிவிடங்க மாதேவர் என்றே வழங்கப்படுகிறார்[7]. அம்மை காமக்கோட்டமுடையநாச்சியார் என்று குறிக்கப் பெறுகிறார். இந்த அம்மை நீலோத்பலாம்பிகையா, கமலாம்பிகையா என்று அறிந்துகொள்ளுதற்குரிய சான்று ஒன்றுமில்லை.

---

[1] S. I. I. 559 of 1904.
[2] S .I. I, 557 of 1904
[3] S. I. I. 577. 580 of 1904.
[4] S. I. I. 550 of 1904
[5] S. I. I. 576 of 1904.
[6] S. I. I. 575 of 1904 .
[7] S. I. I. 679 of 1919.



## அரசர்கள் :

இக்கோயிலுக்குப் பணிசெய்து - அணிசெய்து பரிபாலித்த அரசர் பெருமக்கள் பராந்தகன் I, ராஜராஜன் I, ராஜேந்திரன் I, ராஜாதிராஜன் I, குலோத்துங்கன் I, குலோத்துங்கன் II, விக்கிரம சோழன், ராஜாதிராஜன் II, குலோத்துங்கன் III, ராஜராஜன் III, ராஜேந்திரன் III முதலிய சோழ அரசர்களும், மாறவர்மன், ஸ்ரீவல்லபன் குலசேகரன் ஆகிய பாண்டிய அரசர்கள் இருவரும், வீரபூபதி நாயக்கர், லக்கமதண்டநாயக்கர் ஆகிய நாயக்க மன்னர் இருவரும், பிற்காலத்திய மகாராஷ்டிர அரசர்களுமாவர்.

## விழாக்கள் :

அநபாயகுலோத்துங்கன் காலத்தில் வருஷத்துக்கு 56 விழாக்கள் நடைபெற்றன[1]. கோனேரின்மை கொண்டானாகிய முதல் இராஜராஜனால் தந்தை பிறந்த நாள், தான் பிறந்த நாளாகிய ஐப்பசிச்சதயத்திலும் ஆடித் திருவாதிரையிலும், விழாக்கள் கொண்டாடப்பட்டதாகத் தெரிகிறது[2].

## நிர்வாகம் :

திருவாரூர்க்கோயிலை அரசன் தனது நேர்ப் பார்வையிலேயே வைத்திருந்தான். தேவகாரியம்

---

[1] S. I. I. 269 of 1901. [2] S. I. I. 674 of 1919.

சீர்பெற நடக்க அரசகாரியம் பார்ப்பாரும், திருமந்திர ஓலைநாயகமும், ஸ்ரீகாரியம் பார்ப்பாருமாகப் பலர்கூடிய குழுவினாலேயே நிர்வாகம் நடைபெற்று வந்தது. நிர்வாகக்குழு நிகழ்ச்சிகள் தேவாசிரிய மண்டபத்திலேயே[1] நடைபெற்றுவந்தன.

## திருமுறைகள் :

திருக்கோயிலில் திருமுறைத் திருப்பணி செய்வார்க்கு இறையிலியாக நிலம்வழங்கித் திருமுறைகளுக்கு அரசர்கள் தந்த ஆக்கம் மிக நுணித்து இன்புறக் கூடியது. அன்றியும் மூவர் முதலிகளை அவரவர்கள் திருநாட்களில் வழிபடவும் வகைகள் செய்யப்பெற்றன[2].

## வரலாறுகள் :

நம்பியாரூரர் பிதாமாதாக்கள் சடையனாரும் இசைஞானியாரும் என்பதனையும்; இசைஞானியார் கௌதமகோத்திரரான ஞான சிவாச்சாரியருடைய புத்திரி என்பதனையும் அறிவிக்கின்ற S. I. I. Vol. IV 397-ம் கல்வெட்டு மிகச்சிறந்த கருத்தை அறிவிப்பதாகும். சேக்கிழார் பெரியபுராணத்தில் தநித்தாட்கொண்ட புராணத்தும் இசைஞானியார் புராணத்தும், 'ஏதமில் கற்பின் வாழ்க்கை மனை இசைஞானியார்' என்றும், 'இழியாக்குலத்திசைஞானி' என்றும்

[1] S I. I. 561 of 1904. [2] S. I. I. V of VII 485.



குறிப்பித்தார்களேயன்றி ஊரும், தந்தை பெயரும், கோத்திரமும் குறித்தார்களல்லர். அவைகளைக் கல்வெட்டு விளக்குவது கண்டு மகிழ்தற்குரியது.

அரசர்பெயரும் காலமும் அறியமுடியாத கல்வெட்டு ஒன்று அக்கால மக்களுடைய சாதிப்பாகுபாடுகளையும் அவர்களின் கடமைகளையும் அறிவிக்கிறது. அதில் கௌதமர், நாரதர், யாஸ்கர், யாக்ஞவல்கியர் முதலிய ஸ்மிருதி கர்த்தாக்களுடைய ஞாயங்களை எடுத்துக்காட்டி அநுலோமப் பிரதிலோமருடைய உரிமைகளை அறிவிக்கிறது. சிறப்பாகப் பாரசைவர் என்பவருடைய தீக்ஷைமுறையும், தியாகர் சந்நிதியில் அவர் செய்யவேண்டிய தொழிலும் அறிவிக்கின்றது.

## கலை:

திருக்கோயில்கள் நுண்கலையாகிய இசைக்கும் கூத்திற்கும் முதலிடம் தந்து காப்பாற்றி வந்தன. பூங்கோயில் நம்பி என்பவர் வீராணுக்கவிஜயம் இயற்றியதற்காகப் பாதுகாக்கப்பட்டு வந்தார் என்பதை S. I. I. 548-ம் கல்வெட்டு கூறுகிறது. 678-ம் கல்வெட்டு இசைபாடுவோர்க்குப் பொன் கொடுத்த செய்தியைக் காட்டுகிறது. நகைகள் செய்யும் கலையைக் காப்பாற்ற ராஜேந்திரன் I. காலத்தில் தந்திசத்திவிடங்கியாரால் தட்டாரக்கூலியாக நிலம்விடப் பெற்றது. நிலம்பெற்ற தட்டான் இறைபணியைச்

சரிவர இயற்றுமையால் அதனைத்திருவாரூர்க்கோயி லொடு மறுபடியும் இணைத்துக்கொண்டார்[1].

இன்னும் கூத்துவல்லானாகிய பூங்கோயில் நம்பி என்பவனுக்குப் பூங்கோயில் நாயகத் தலைக்கோல் என்ற சிறப்புப்பட்டமுங்கொடுத்து இறையிலி நில மும் வழங்கியிருக்கிறார்கள்[2].

அரசியல்:

கோயில் காரியங்களில் குற்றம் கண்டால் அதனைக் குழுவில் வைத்து ஆராய்ந்து குற்றத் தண்டனை விதித்தல் மரபு[3]. அரசாங்கத்து பொன் னிறையாக இராஜராஜன் மாடை என்ற ஒன்று வரையறுக்கப்பட்டிருந்தது. அது மூன்று கழஞ்சு ஒரு மஞ்சாடி ஒரு குன்றுமணி எடையுள்ளது. கோயில் நிலங்கட்கும், பூந்தோட்ட நிலங்கட்கும், தட்டாரப்பட்டம் போன்றதான ஊதிய மாணியங் கட்கும், இறையிலி செய்யப்பெற்றது. சில பொன் முதலீடுகளை முதல் பெருகுவதற்காக, அவ்வூரில் உள்ள பெரிய வியாபாரியிடம் கொடுத்து அவர் களையே அப்பணி செய்யுமாறு பணித்தது மிகவும் ஊன்றி அறிந்து இன்புறத்தக்க நிகழ்ச்சிகளுள் ஒன்றும். பணப்பெருக்கம் வியாபாரத்தாலன்றிப் பெருகாது என்பதை உணர்ந்து, கோயிலுக்காக

1 நீலகண்ட சாஸ்திரிகள், சோழர் பக். 392.
2 ஷை பக். 514.
3 ஷை பக். 382.



ஒதுக்கப்படும் அரசாங்க முதலீட்டை அவர்களிடம் கொடுத்து வியாபாரப்பெருக்கமும் பொருளாதாரப் பெருக்கமும், அறப்பாதுகாப்பும் செய்துகொண்ட சோழமன்னர்களின் நுண்மதி மிகவும் பாராட்டத் தக்கதொன்றும். இதனை II ம் ராஜேந்திரனுடைய 8-ம் ஆண்டில் உய்யக்கொண்டவளநாட்டு அம்பர் நாட்டுப் புறக்குடி. புறக்கடையான் சுற்றி ஆதித்த னான சோழவிச்சாதரவிழுப்பரையான் கோயிலில் இசை பாடுவோர்க்கும் பணியாளர்க்கும் கோயில் எண்ணெய்க்குமாகத் திருவாரூர் வணிகர்களிடத்தில் பொன் கொடுத்தான் என்ற கல்வெட்டுப் பகுதி* சிறந்த எடுத்துக்காட்டாகும்.

சோழமன்னர்கள்:

தமிழ்நாட்டு மூவேந்தர்களில், நாட்டில் தமிழை வளர்த்தவர்கள் பாண்டியர்கள்; தெய்வத்தன்மை யை வளர்த்தவர்கள் சோழர்கள்; வீரத்தை வளர்த் தவர்கள் சேரர்கள் என்பதை வரலாற்றாசிரியர் அனைவரும் ஒப்புவர். அங்ஙனமாகிய தெய்வச் சோழர்களில், வீதிவிடங்கப் பெருமானிடத்து என்றும் நீங்கா அன்பு பூண்டவர்கள் பலரிருந்தனர் எனக் கல்வெட்டுகள் காட்டுகின்றன. அவர்களில் காலத்தாலும், பணியாலும் முற்பட்டவன் முதற் பாராந்தகனே.

* S. I. I. 678 of 1919.

**பராந்தகன் I** —கி. பி. 907.-947.

இவன் ஆதித்தசோழமன்னன் மகன். கி. பி. 907-ல் முடிசூடியவன். இவ்வரசனுக்கு வீரநாராயணன் என்னும் மறுபெயரும் உண்டு. எண்ணெய்க் காப்பு மண்டபம் என்னும் ராஜநாரயண மண்டபமும் இவன் கட்டியதாதல்வேண்டும். ஆனால் பெயர் ஒற்றுமை தவிர அதற்குத் தக்க ஆதாரம் எதுவும் கிடைத்திலது. இவன் மதுரைகொண்ட கோப்பரகேசரி என்றே குறிக்கப்பெறுவான். இவனுடைய ஆட்சி முப்பத்திரண்டாவது ஆண்டில் திருவாரூர்ப் பூங்கோயிலுக்கு விளக்கிடப் பொன்வழங்கினான் [1].

**இராஜராஜன் I** —கி. பி. 985.-1014.

மதுராந்தகன் அரசுபுரியுங்காலத்திலேயே இளவரசுப்பட்டம் ஏற்றவன். இரண்டாம் பராந்தகன் மகன். கடற்போரிலும் வல்லவன். அமரபுஜங்க பாண்டியனை வென்று மதுரையைப் பிடித்தவன். இன்று சைவவுலகத்தைத் - திருக்கோயில்களை - தெய்வத்தீந்தமிழைக் காத்துவரும் திருமுறைகளைத் தேடிக்கண்டவன் இவனே. அதனாலே திருமுறை கண்ட சோழன் என்னும் சிறப்பும் பெற்றான். இவனுடைய ஆட்சிக்காலத்தில் உடைய பிராட்டியார் செம்பியன்மா தேவியார் உத்தமசோழதேவர்க்கு நன்றாகத் திருக்கோயிலுக்கு வெள்ளிப்பாத்திரம்

[1] S. I. I. 573, 574 of 1904.



செய்துவைத்தார் [1]. செம்பியன்மாதேவியார் திருவாரூரரநெறியுடைய ஆழ்வார்க்குக் கற்கோயில் எடுப்பித்தார் [2]. (இந்தக்கல்வெட்டுக் கோனேரின்மைகொண்டான் எனத் தொடங்குவதால் முதல் இராஜராஜனுடையதாகலாம் என்று கருதப்படுகிறது.) இவன் க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டுத் திருவாரூர்க் கூற்றத்து திருவாரூர் மூலத்தானமுடைய மகாதேவர்க்கு பன்னீரபிஷேகத்திற்கும், திருப்போனகத்திற்கும் ஆகக் கோயில்காரியம் பார்ப்பார்க்கு ஆணையிட்டான். அதுவன்றித் தன் தகப்பன் பிறந்தநாளிலும், தான்பிறந்தநாளிலுமாக (அதாவது ஐப்பசி சதயம், ஆடி, ஆருத்ரா) திருவிழாக்கொண்டாட ஏற்பாடுகள் செய்வித்தான் [3].

**இராஜேந்திரன் I** —கி. பி. 1012-1044.

இவன் முதல் இராஜராஜன்மகன். பரகேசரி இராஜேந்திரன் எனவும் வழங்கப்பெறுவான். இவனுக்கு மதுராந்தகன் முதலிய பல பெயர்கள் உள்ளன. வடநாடுகளையும் வென்று தமிழராற்றலை வடவரும் அறியச்செய்தவன். மகிபால மன்னன் தலையில் கங்கைக்குடம் கொண்டுவந்தவன். இவன் ஆட்சியாண்டு இருபதில் தானும், அணுக்கியர் பரவை நங்கையாருமாகத் திருக்கோயிலுக்குப்பொன் வேயப் பெரும்பொன் அளித்துள்ளனர். இதேயாண்டில்,

[1] S. I. I. 570 of 1904. [2] S. I. I. 571 of 1904.
[3] S. I. I. 674 of 1904.

இவன் அரசகாரியம் பார்ப்பவனான அருமொழிக் கூத்தனான லோகமாராயன் என்பான் முத்துமாலை, பவழமாலைகளும், வேறுபல மணிகளும் திருக்கோயிலுக்கு அளித்திருக்கிறான்[1].

### இராஜாதிராஜன் I —கி. பி. 1018.

இவன் இராஜகேசரி இராஜாதிராஜன் என்று அழைக்கப்படுவான். இராஜேந்திர சோழனுடைய ஏழாவது ஆட்சியாண்டிலேயே இராஜாங்கக்காரியங்களில் தலையிட்டானென்று தெரிகிறது. மிண்டிங்கல் என்னுமிடத்துள்ள கல்வெட்டொன்று இவன் கி.பி. 1018 ல் பட்டமேற்றான் என்கிறது[2]. இவனுடைய 27 ம் ஆட்சியாண்டில் திருவாரூர் அரநெறியுடையாருக்கு வழிபாட்டுச் செலவிற்காகத் தானும் அனுக்கியார் பரவை நங்கையாருமாகத் திபங்குடி மேல் மங்கலம் கிராமத்து நிலம்வாங்கிவிட்டனர். இக்கல்வெட்டு 'திங்களேர்தரு' எனத் தொடங்குகிறது. ஆட்சி 31 ம் ஆண்டில் அதிராஜராஜ வளநாட்டுத் திருவாரூர்க் கூற்றத்துத் திருவாரூருடையார் வீதி விடங்கதேவர் கோயில் விமானம் பொன்வேயப் பொற்பண்டாரத்துள்ள பொன்வெள்ளிப் பாத்திரங்களை அரசாங்க அதிகாரி இருமுடிச்சோழ மூவேந்த வேளானான வேங்கடன் திருநீலகண்டன் பயன்படுத்திக்கொள்வானாக என்னும் பொருள்தரும் பாட்டு குறிக்கப்பெற்றிருக்கிறது. பூண்டிக்கூத்தன் செம்

[1] S. I. I· 680 of 1919 [2] சோழவம்சம், பக். 19.



பியன் மூவேந்தவேளான் இவ்வரசன் ஆணைப்படி பொன்னாபரணங்கள் செய்வித்தான். இக்கல்வெட்டு நான்குபாடல்களாலாகியது. இதுவும் 'திங்களேர் தரு' என்று தொடங்கும் மெய்க்கீர்த்தியுடையது[1].

### குலோத்துங்கன் I —கி. பி. 1070-1120.

இவன் வடநாடு பாண்டியநாடுகளை வென்றவன். குடகுமலை நாட்டையும் கைப்பற்றியவன். கலிங்கத்தின்மீது தனது படைத்தலைவன் கருணாகரத் தொண்டைமானை அனுப்பி, வெற்றிகண்டவன். திரிபுவன சக்கரவர்த்தி என்ற பட்டமும் இவனுக்கு உண்டு. சுங்கந்தவிர்த்த சோழனென்றும் பெயர் பெற்றான். தன் தாய்வழிச் சோழர்வழக்கத்தின்படி, பேரம்பலத்தைப் பொன்வேய்ந்தான். அதனால் பேரம்பலம் பொன்வேய்ந்தசோழன் எனப் பெயர் பெற்றான். திருநீற்றுச்சோழன் என்ற பெயரும் இவனுக்கு உள்ளதாகத் தெரிகின்றது. இவனே சேக்கிழாரைக்கொண்டு பெரியபுராணம் பாடுவித்தான் என்று கோபிநாதராவ் கூறுவர். சீனுவாச அய்யர் இவனே அநபாயன் என்று குறிக்கப்பெற்றவன் என்று சொல்லுகிறார். அதற்கு ஆதாரமாக் செங்கற்பட்டு ஜில்லா திரிசூலம் ஸ்ரீ கருமபுரீசுவரர் கோயில் (1332 of 1901.) கல்வெட்டு அரசனுடைய 39 வது ஆட்சி ஆண்டில் முன்னலூர்க் கிராமத்தைத் திருநீற்றுச்சோழநல்லூர் என்ற பெயரால்

[1] S. I. I. 670 of 1919.

மாற்றி, அக்கோயிலுக்கு அளித்தான் என்று அறிவிக்கிறது. இரண்டாவதாகத் திருவானைக்கோயில் சாசனம் ஆட்சி 12 வது ஆண்டில் நென்மலை என்ற ஊருக்குத் திருநீற்றுச்சோழநல்லூர் என்று பெயர் வைத்ததாக அறிவிக்கிறது. அதில் திருமந்திரவோலை என்னும் அதிகாரியின் பெயர் 'அநபாய மூவேந்த வேளான்' என்று வருகிறது. மேலும் அக்கோயிலில் உள்ள (S.I.I. 359 of 1911.) கல்வெட்டு அரும்பாக்கம் என்ற ஊரை அநபாயநல்லூர் என மாற்றியதாக அறிவிக்கின்றது. அதிலும் அநபாய மூவேந்த வேளானே குறிப்பிடப்பட்டுள்ளான். இவைகள் மூன்றும் முதற் குலோத்துங்கன் கல்வெட்டுக்களே. திருமந்திரவோலையின் பெயர் அரசனது பெயரையொட்டி வழங்குதலே மரபு. உத்தமசோழப்பல்லவராயன் என்ற வழக்காறு வீரராஜேந்திரன் ஆட்சி 4 வது ஆண்டிலேயே தருமாபுரம்தாலூகா முத்தூர்கோயில் கல்வெட்டில் காணப்படுகிறது. வீரராஜேந்திரன், முதற் குலோத்துங்கனுக்கு முற்பட்டவன். முதற் குலோத்துங்கன் ஆட்சி 12 வது ஆண்டில் ஏற்பட்ட திருவானைக்கோயில் களத்தூர் சாசனங்கள் தன் அரசாங்கத்ததிகாரி தொண்டைமானுக்கு அனுப்பியதாகக் காணப்படுகின்றன. தொண்டைமான் என்றபட்டம் சேக்கிழார் விலகியபின்பு மந்திரியாய் இருந்த அவர் தம்பி பாலறாவாயருக்கு அரசன் அளித்தது; என்ற இவைகளைக் காட்டுகிறார்.

இவனுடைய அட்சி 15 ம் ஆண்டில் ஏதோ பணிகள் செய்திருக்கிறான். இக்கல்வெட்டு தேதி



யோடு நின்றுவிட்டது[1]. 23ம் ஆண்டில் நிலங்கள் கொடுத்த செய்தி அறிவிக்கப்படுகின்றது[2], 24ம் ஆண்டில் அபிஷேகத்திற்கு 450 குழி நிலத்தை அருமொழி ராஜேந்திரவேளானைக்கொண்டு விடச் செய்திருக்கின்றான். இராஜராஜன் மாடையினால் பொன்னுமளித்திருக்கின்றான்[3]. அதே ஆண்டில் கயாமாணிக்கவளநாட்டுத் திருவாரூர்க் கூற்றத்துத் திருவாரூர் மூலட்டானமுடையார்க்கு நாராயண சிங்கவத்தரையன் 96 ஆடுகள் திருவிளக்கிற்காகக் கொடுத்திருக்கின்றான்[4]. 34ம் ஆண்டில் உலகீச்சரமுடைய நாயனார்க்கு நிலம் அளித்திருக்கிறான்[5]. இக்கோயில் விசுவேசமாக இருத்தல்வேண்டும்: இதனுடைய அழகிய சிற்பத்திறனைக்கண்டு விசுவேசத்தை விசுவகன்மேசமெனப் புராணகாரர்கள் பொருந்தக் கூறினர்போலும். 44ம் ஆண்டில் திருவாரூர்ப் பூங்கோயிலுடையார்க்கு நிலம் அளித்திருக்கிறான்[6]. 48ம் ஆண்டில் செய்தபணி தெரியவில்லை[7]. 49ம் ஆண்டில் தேவாசிரியமண்டபத்தில் கோயில் காரியங்களை மேற்பார்க்கக் குழு அமைத்த செய்தி அறிவிக்கப்படுகிறது[8]. இதில் தேவாசிரியமென்றே மண்டபம் குறிக்கப்படுகிறது. திருமண்டளியுடைய மாதேவரான சத்யவாகேசுவரருக்குப் பலபணிகள் செய்திருக்கிறான்[9]. மற்றொருகல்வெட்டிலும் இக்

---

1 S. I. I. 549 of 1904. 2 S. I. I. 533 of 1904.
3 S. I. I. 671 of 1919. 4 S. I. I. 672 of 1919.
5 S. I. I. 544 of 1904. 6 S. I. I. 578 of 1904.
7 S. I. I. 541 of 1904. 8 S. I. I. 561 of 1904.
9 S. I. I. 577 of 1904.

குறிப்பு காணப்படுகிறது[1]. இவ்விரு கல்வெட்டுக்களிலும் ஆட்சியாண்டு காணப்படவில்லை.

## இராஜேந்திரன் II

இவன் சுந்தரமூர்த்தி சுவாமிகள், நரசிங்க முனையரையர் காலத்தவன்[2]. இவன் பரகேசரி ராஜேந்திரன் எனப்படுவான். இவனுடைய ஆட்சி 3 ம் ஆண்டில் பொன்னின் திருமண்டபம் பொன் வேயப் பொன்னளித்திருக்கிறான்[3]. இக்கல்வெட்டு 'இரட்டபாடிஏழரையும்' எனத் தொடங்குகிறது. 8ம் ஆண்டில் கங்கைகொண்டசோழபுரத்துப் பெருமக்களுடையான் வேளான் செய்யபாதமுடையார் வீதிவிடங்க தேவர்க்கும், திருக்காமக்கோட்டமுடைய நாச்சியார்க்கும் நவரத்தினங்களும் மணிமாலைகளும் அமைத்தான்[4]. அதே ஆண்டில் அதிராசராசவளநாட்டுப் பாலைச்சுற்றுப்பூண்டி பிடாகைப்பூண்டிக் கூத்தனை செம்பியன் மூவேந்தவேளான் நிலம் வாங்கிவிட்டான். அவன் தம்பி மாறனை செம்பியன் மூவேந்தவேளான் விஜயராஜேந்திரவளநாட்டுப் பிரமதேயமான புலிவலம் மகாசபையாரிடமிருந்து நிலம் வாங்கிக் காதணியும் 12 சிவயோகியர்க்குச்

[1] S. I. I. 580 of 1904.
[2] நீலகண்ட சாஸ்திரிகள், சோழர் - பக். 166.
[3] S. I. I. 669 of 1919.
[4] S. I. I. 676 of 1919.



சாப்பாடும் அளிக்க ஏற்பாடுசெய்தான்[1]. காதணி என்பது தோடு என்னும் மாலைவகை. அதே ஆண்டிலேயே உய்யக்கொண்ட வளநாட்டு அம்பர்நாட்டுப் புறக்குடி புறக்குடையான் சுற்றி ஆதித்தனை சோழவிச்சாதரவிழுப்பரையன் கோயிலில் இசை பாடுவோர்க்கும் பணியாளர்க்கும் கோயில் எண்ணெய்க்குமாகத் திரளான பொன்னைத் திருவாரூர் வணிகரிடத்தில் கொடுத்து என்றும் அறம் நிலைக்கச் செய்தான்[2]. கர்ப்பக்கிருக அர்த்தமண்டபங்களுக்குப் பொன் வேயும்படியாக வெள்ளாளக்கூத்தனை செம்பியன் மூவேந்தவேளானுக்கு உத்தரவளித்தான்[3]. திருமஞ்சனக்குடம் மூடும் துணிக்கு 5 காசும் தூக்குக்கூலியாக நெல்லும் கொடுத்தான்[4]. 9 ம் ஆண்டில் நிலமளித்திருக்கிறான்[5]. 13 ம் ஆண்டில் மகனை வீரசோழ அணுக்கனைக் கௌரவிப்பதற்காக வீராணுக்கவிஜயம் நடிக்கப் பூங்கோயில் நம்பி என்பானுக்கு நிலம் அளித்திருக்கிறான்[6]. 568-ம் கல்வெட்டு சிதைந்திருத்தலின் ஒன்றும் அறியப்படவில்லை.

## குலோத்துங்கன்: II —கி. பி. 1113. 1150.

இவனே அநபாய குலோத்துங்கனெனவும், பெரியபுராணம் கொண்டானெனவும் பிற்கால ஆராய்ச்சியாளர் கருதுகின்றார்கள். அதற்குக்

[1] S. I. I. 677 of 1919.
[2] S. I. I. 678 of 1919.
[3] S. I. I. 675 of 1919.
[4] S. I. I. 673 of 1919.
[5] S. I. I. 534 of 1904.
[6] S. I. I. 548 of 1904.

காரணங்களாகப்பெரியபுராணம், மூவருலா, குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ், தக்கயாகப்பரணி இவைகள் ஒத்த கருத்துடைய சொற்களை வழங்குதலும், திருமாணிகுழி, திருப்புறம்பயம் திருவாரூர் திருவாவடுதுறைக் கல்வெட்டுக்கள் கூறுதலுமாமென்பர். இத்தலத்துக் கல்வெட்டு இவனைப்பற்றி 'அநபாயன், தில்லை நடராஜப்பெருமான் திருவடியில் ஈப் போன்றவன்' என்றறிவிக்கிறது.

இவன் ஆட்சி ஆண்டு 10-ல் கயாமாணிக்க வளநாட்டுத் திருவாரூர்க் கூற்றத்து ராஜராஜ பிரமமங்கலத்தில் திருவாரூர்க் கோயில் நிலங்களை இறையிலியாகச்செய்யவேண்டுமென்று தேவாசிரிய மண்டபத்தில் குழுவினர் கூடி உத்தரவிட்டார்கள்[1]. 12 ம் ஆண்டில் முதற்குலோத்துங்கனால் அவன் ஆட்சி 16 ல் அளிக்கப்பட்ட பூந்தோட்டத்திற்குச் சுங்கம் தவிர்த்தான்[2].

**விக்கிரமசோழன்:** கி. பி. 1118-1136.

இவன் குலோதுங்கன் I மகன். கருணாகரத் தொண்டைமானுடன் கலிங்கப்போருக்குச் சென்றவன். கருணாகரத்தொண்டைமான் திருவுருவம் வடக்குக் கோபுரத்திலிருப்பது கருதத்தக்கது. ஆட்சி 3 ம் ஆண்டில் கோயிலுக்கு நிலம்விட்டான்[3]. அதே யாண்டிலும் மற்றொருமுறை அப்பணியைச்செய்திருக்கிறான்[4]. 4 ம் ஆண்டில் குளம்வெட்டி அதனை

1 S. I. I. 553 of 1904.
2 S. I. I. 552 of 1904.
3 S. I. I. 560 of 1904.
4 . I. 562 of 1904



கோயிலுக்குரிமையாக்கினான்[1]. 5 ம் ஆண்டில் மனு வேந்தன் மந்திரியான உடயகுலாமலன் வம்சத்தனான பாலையூருடையான் சந்திரசேகரன் ஆதிவிடங்கனை குலோத்துங்கசோழ மகாபலிவாணராயனுக்கு மனை, மாளிகை பாலையூரில் தந்தான்[2]. 565 எண்ணுள்ள கல்வெட்டு சிதிலமானது. 6 ம் ஆண்டிலும் நிலம் விட்ட செய்தி காணப்படுகிறது.

**ராஜாதிராஜன்: II** —கி. பி. 1150-1178.

இவன் கங்கைகொண்டசோழன் மகன். ராஜகேசரி ராஜாதிராஜன் என்றும் திரிபுவனசக்ரவர்த்தி ராஜாதிராஜன் என்றும் அழைக்கப்படுவன். இவன் ஆட்சி 2 ம் ஆண்டில் ஜெயங்கொண்ட சோழமண்டலத்து மேன்மலைப்பழையனூர் நாட்டு பழையனூருடையான் வேதவனமுடையான் அம்மையப்பனாகிய அண்ணன் பல்லவராயன் நிலம் விட்டான்[3]. 5 ம் ஆண்டில் விக்கிரமனுடைய 9 ம் ஆண்டைய நிகழ்ச்சியை மீட்டும் தெரிவித்துள்ளான்[4]. 9 ம் ஆண்டில் முற்கூறியவனல்லாத பழையனூரானொருவனைக்கொண்டு நிலம் விடச் செய்தான்[5]. 10 ம் ஆண்டிலும் முன்னவனைக்கொண்டே நிபந்தங்கள் அளிப்பித்திருக்கிறான்[6].

1 S. I. 563, 564 of 1904.
2 S. I. I. Vol. V 456.
3 S. I. I. 538 of 1904.
4 S. I I. 545 of 1904.
5 S. I. I. 542 of 1904.
6 S I. I. 540 of 1904.

## குலோத்துங்கன் III — கி. பி. 1178-1218

இவன் ராஜராஜனுக்குப் பின் முடி சூடியவன். இவனது 23 ம் ஆண்டில் வெட்டப்பட்ட கடலூர்க் கல்வெட்டால் வீராந்தகப்பல்லவதரையர் இவனது ஆஸ்தான வித்துவானாக இருந்தார் என்றறியப் படுகிறது. 8 ம் ஆண்டில் கோயில் விளக்குக்கு நிலம் விட்டான்[1]. 13 ம் ஆண்டில் புதுநீர் வருவழியிலுள்ள திக்குநிறைந்த விநாயகராலயத்தைத் திருப்பணிசெய்வித்து, நித்யபூசைக்காக நிலமும்விட்டிருக்கிறான்[2]. 22 ம் ஆண்டில் குடிகள் கோயில் நிலங்களுக்குச் சரிவர வருமானம் அளிக்காமையால் திரும்பவாங்கி அளந்து ஒப்படைசெய்திருக்கிறான்[3]. 39 ம் ஆண்டில் ஸ்ரீ மகேசுவர நல்லூரிலுள்ள விக்கிரமசோழீச்சரமுடையார் கோயிலுக்கு ஜயங்கொண்டசோழ மண்டலத்துப் பல்குன்றக்கோட்டத்து வாழைப்பந்தல் கிராமத்து ஒருகாணி நிலம் அளித்திருக்கிறான். வாழைப்பந்தலென்பது ஆரணிக்குப் பக்கத்திலிருக்கிறது.

## ராஜராஜன் III — கி. பி. 1216 - 1246

இவன் மூன்றாங்குலோத்துங்கன் மகன். இவன் ஆட்சிகாலத்தில் சிற்றரசர்களால் பெருந்தொல்லையிருந்துவந்தது. மாறவர்மன் சுந்தரபாண்டியன் I இவனாட்சியின் கீழிருந்து சோழநாட்டையும் தன்னகப்படுத்தி ஆண்டுவந்ததாக அவன் மெய்க்கீர்த்தியறிவிக்கிறது. போசளநரசிம்மன் உதவியால் இழந்த நாட்டைத் திரும்பப்பெற்றான்[1]. இவனாட்சி இருபத்துமூன்றாம்யாண்டில் திருவாரூர்க் கோயிலுக்கு நிலம் விட்டான்.

[1] S. I. I. 537 of 1904.
[2] S. I. I. 550 of 1904.
[3] S. I. I 554 of 1904.



## இராஜேந்திரன் III — கி. பி. 1246.

இவன் மூன்றாம் ராஜராஜன் மகன். 1246ல் அரியணை ஏறிய இவன் 22 ஆண்டுகள் அரசாண்டான் என்று அறியப்படுகின்றது. ஜடாவர்மன் சுந்தர பாண்டியனால் சோழநாட்டுக்கு அடிக்கடி தொந்தரவு இருந்துவந்தது. அதனால் சோழராஜ்யம் மிகமிகக்குறுகி தஞ்சை திருச்சி ஜில்லாக்களளவில் இருந்திருக்கவேண்டும். இவன் கல்வெட்டுகள் இவ்விரண்டு ஜில்லாக்களிலும் மிகுதியும் உள்ளன. இவன் ஆட்சி 13ம் ஆண்டில் அழகிய திருச்சிற்றம்பலமுடையார்க்கும், பொற்படிக்கநாயக ஈசுரமுடையார்க்கும் நிலம் அளித்திருக்கிறான். 20ம் ஆண்டில் கோயிலுக்கு முன்புள்ள தெற்குவீதியில் திருமாளிகை விநாயகப்பிள்ளையார் கோயிலைக் கட்டி முடித்தான். இது ராஜங்கக்கோடி என வழங்கும் கமலாலயம் தென்கிழக்கு மூலையிலிருக்கிறது. 22ம் ஆண்டில் சுப்பிரமணியப்பிள்ளையார் கோயிலைக் கட்டினான்[2].

[1] Fleet's Dynastics of the Kanarees Dt. P. 507.
[2] S. I. I. 557 of 1904.

**மாறவர்மன் ஸ்ரீவல்லபன்:**

இவன் ஆட்சி 35ம் ஆண்டில் திருக்கோயிலுக்கு நிலம் அளித்திருக்கிறான்[1]. இவன் 14ம் நூற்றாண்டிலிருந்த பாண்டியரினத்தைச் சேர்ந்தவனாக இருத்தல் கூடும்.

**குலசேகரன்:** —கி. பி. 1268-1311

கொல்லம், சோழநாடு, இலங்கை இவைகளை வென்றவன். இவன் தன் ஆட்சி 40ம் ஆண்டில் 3ம் ஆண்டில் நிலம் அளித்தமைக்கு ஒப்பாகவே சகம் 1229லும் (கி. பி. 1307) நிலம் வழங்கியிருக்கிறான். இக்குறிப்பால் இவனுடைய 3ம் ஆண்டிலும் இக்கோயில் நிலம் பெற்றிருக்கிறதென்பதறியப்படும். இவன் மெய்க்கீர்த்தி 'எம்மண்டலமும் கொண்டு' என்று தொடங்கும்[2].

**நாகராசா:** —கி. பி. 1440

லக்கமதண்டநாயக உடையாருக்கு நன்றாக நாகராசா சித்தராசா மகன் கோபுரத்தைச் சகம் 1362 ரௌத்திரியில் கட்டினான்[3]. இவன் ஒருமந்திரி தன் அரசனை தக்ஷிண சமுத்திராதிபதி லக்கணை தண்டமநாயக்கன் எனக் குறிப்பிடுகின்றான்[4].

---

[1] S. I. I. 539 of 1904.
[2] S. I. I. 551 of 1904.
[3] S. I. I. 566, 567 of 1904.
[4] S. I. I. 1905 P. 58, 59.



**வீரபூபதிராயர்:**

இவர் ராயர் பரம்பரையைச் சார்ந்தவர். இரண்டாம் புக்கணன் காலத்தவராக இருக்கலாமென்று E. P. 1909. P. 115 கூறுகிறது. இவர் அசலேசுரத்தில் திருப்பணிசெய்ததாகவும், நிலம் விட்டதாகவும் தெரிகிறது. கல்வெட்டு சிதைந்துள்ளது*.

**ஆகாரவல்லபன்:**

இவனைப்பற்றிய வரலாறொன்றும் அறியப்படவில்லை. கமலாலயத்தின் நடுவிலுள்ள நாகராஜா கோயில்கல்வெட்டு (553 of 1918) கல்அளித்ததாகவும் கோயிலுக்கு நிலம் விட்டதாகவும் தெரிவிக்கிறது.

**சிதைந்த கல்வெட்டுக்கள்:**

இவையன்றிப் பெயரும் காலமும் அறிய முடியாது சிதைந்த கல்வெட்டுக்களும் எட்டுக்குமேல் உள்ளன. அவைகளில் 546 of 1904, கல்வெட்டு வடமொழியிலும் தமிழிலும் வெட்டப்பட்டது. நிலம் அளித்த செய்தி அறிவிக்கிறது. 547 of 1904 கல்வெட்டு 'பூமருவிய பொழின்மன்னு' என்று தொடங்கி முடிவுறாதிருக்கிறது. 548 of 1904 கல்வெட்டு மகனை வீரசோழ அணுக்கரைக் கௌரவிப்பதற்காக வீராணுக்க விஜயம் நடித்த பூங்கோயில் நம்பிக்கு நிலம் விட்ட செய்தியை அறிவிக்கிறது.

---

* S. I. I. 575 of 1904.

558 of 1904ம் கல்வெட்டு ஸ்மிருதி ஆசிரியர் கருத்துப்படி கலப்புச் சாதியாரின் உரிமையைப் பற்றிப் பேசுகிறது. 572 of 1904ம் கல்வெட்டு ராஜ கேசரிவர்மன் என்று தொடங்கி, முடிவுபெறவில்லை. 579 of 1904ம் கல்வெட்டுத் திருசந்தனவனம், திரு விளக்கு நாள்விழா இத்தகைய பலவேறு காரியங் களுக்கு நிலம்விட்டதை அறிவிக்கிறது. 553 of 1918ம் கல்வெட்டு ஆகரவல்லபன் கல் அளித்ததை அறிவிக்கிறது. 681 of 1919ம் கல்வெட்டு திருக் கோயில் காரியம் பார்ப்பார் சிலர் தம் கடமையி லிருந்து தவறியதால் பொற்பண்டாரத்து இருப்பு குறைய, பிரமராயர் விழுப்பரையர் இருவருக்கும் பொற்பண்டாரத்துரிமை வழங்கியதாக அறிவிக் கின்றது.

முடிபு:

இக்கல்வெட்டுக்களால் அறியப்படும் வரலாறு களில் மிகச்சிறந்தது விக்கிரமசோழன் ஆட்சி யில் வெட்டப்பட்ட கல்வெட்டிற் காணப்படும் மநுச் சோழன் வரலாறு ஆகும். அதில் மனுவேந்தன் மந்திரி உபயகுலாமலன் என்று குறிப்பிடப்படுவன். இவன் வம்சத்தில் பாலையூருடையான் சந்திரசேக ரன் என்பவன் ஒருவன் இருந்தான் என்றும், அவனுக்கு நிலம் அளிக்கப்பட்டதென்றும் அறிவிக் கின்றது*.

---

* S. I. I. Vol. V. 456.



கன்றிழந்த பசுவின் கலைத்தோற்றம்

## மநுச்சரிதம் கண்ட கல்வெட்டு.

சுவஸ்தி ஸ்ரீ பூமாலை இடைந்து பொன் மாலை திகழப்பாமாலை மலிந்த பருமணித்திரள் புயத்திரு நிலமடந்தையொடு ஜயமகளிருப்ப - வேதம் மெய்மையும் ஆதியுகம்போலத் தலைத்தலை சிறப்ப வந்தருளி வெலற்கரும் போர்புலி ஆணை பார்த்திபர் சூட மண் முழுதுங்களிப்ப மநுநெறி வளர்த்து தன்கோயில் கொற்ற வாயிற்புறத்து மணிநாவொடுங்க-திரிபுவன முடையானிவன் திருவுளத்தருள் முழுதுடையானை உடனிருப்பச் செம்பொன் வீரசிம்மாசனத்துச்சேக்கிழானடிகளோடும் எழுந்தருளிய கோப்பரகேசரிவர்மனை திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ விக்கிரமசோழ தேவர்க்கு யாண்டு ஐஞ்சாவது மிதுன ஞாயிற்று பூர்வபட்சத்து சப்தமியும் ஞாயிற்றுக்கிழமையும் அத்தமுமான நாள் 340 கேயாமாணிக்கவளநாட்டுத்திருவாரூர்க் கூற்றத்துத் திருவாரூர் உடையார் வீதிவிடங்கர் சித்திரைத் திங்கள் திருநாவில் சதைய......திருக்காவணத்தில் சிம்மாசனத்து எழுந்தருளியிருந்து பதியிலாளர் தியாகவிநோதத்......கண்டருளாநிற்ப ஸ்ரீகாரியம் சுப்பிரமங்கல முடையார் மாதவன் இரவியான மானுலைய மூவேந்த வேளார் விண்ணப்பத்தினால் பதிபாதமூலபட்டுடை பஞ்சாசாரிய தேவகன்மிகளுக்கும் கோயிலங்......யார்க்கும் திருவாய்மொழிக்

---

A. R. No. 164 of 1894. திருவாரூர் ஸ்ரீ தியாகராஜஸ்வாமி கோயில் 2ம் பிராகாரம் வடபுறச்சுவரில் உள்ளது.

திருளியபடி நம் ஏவலால் பூலோகராஜ்யம் செய்கிற சூர்யபுத்திரன் மநு தன் புத்திரன் ஏறிவருகிற தேரில்பசுவின் கன்றகப்பட்டு பிரமாதப்பட அதின் மாதாவான சுரபிகண்டு துக்கித்து,மநுவின்வாசலில் மணியை யெறிய, அதுகேட்டு, மநு தன்மந்திரி இங்களூட்டுப் பாலையூருடையான் உபயகுலாமலனைப் பார்த்து நீசென்று இதனை அறிந்து......வாயிற் புறத்து ஒருபசு மணி எறியா நின்றது என்று சொல்ல, அதுகேட்டு, மநு புறப்பட்டு; பசுவையும் பட்டுகிடந்தது......படி வினவி தன்புத்திரன் பிரிய விருத்தனைத் தேரிலே ஊர்ந்து, குறுக்கவென்று உபயகுலாமனுக்குச் சொல்ல அவன் சந்தாயத் தோடும் புறப்பட்டுத் தன் செவிகளைத் தரையிலே குடைந்துகொண்டு துக்கித்தனாய், மநு தானே புறப் பட்டு, தன்புத்திரனைத் தானே தேரிலே ஊர்ந்து குடுக்க அப்போதே நாம் அவனை அநுக்கிரகித்து கன்றுக்கும், மந்திரிக்கும், மநுபுத்திரனுக்கும்ஜீவன் குடுக்க, அதுகண்டு மநு சந்தோஷித்துக் கன்றினை எடுத்துக்கொண்டு, பசுவுக்குக் காட்டிகுடு......... அபிஷேகம்பண்ணி இவனுக்குத் தன்புத்திரன் மாளிகை....மங்கல....மூரும் குடுத்து மநுவும் உபய குலாமலனும் தபசினைத் தலைநின்றமையால், பாலை யூர் உடையான் உபயகுலாமலன் வம்சத்தனாகிய பாலையூர் உடையார் சந்திரசேகரனாதிவிடங்கனை குலோத்துங்கசோழ மகாபலிவாண வம்சாதி யாக வருகிற மாளிகைமனை பழயபடி மாளிகை ஆக எடுத்துக் குடிவைப்பதாகநாம்சொல்ல... இதிலேநித் தமும் நம் அடியார்க்குச் சோறு இடப்பெற வேணு



மென்று இவன் நமக்குச் சொன்னமையில் காட்டிப் பெறுவதாகவும் இம்மாளிகை வம்சாதி ஆகஸ்வ மாய்வரு...மாளிகையிலே எழுத்து வெட்டிவித்துக் கொடுக்க வென்று......பாலையூருடைய உபயகுலா மலன் மநுவின் பக்கல் பெற்றுடைய மாளிகைமனை தனக்கும்...... நாம் காணியாகத் தந்தோம். இம் மாளிகை பழ ப....... மனை நிலத்துக்குக் கீழ்பாற் கெல்லை தாது...... மூடுக்கு மேற்கும் தென்பாற் கெல்லை... வடக்கும் மேற்பாற்கெல்லை அருமொழீஸ் வரமுடையார் தனிச்சேரி பால்நத்தத்துக்கு கிழக் கும் வடபாற்கெல்லை பாலையூருடையான் மாளிகைத் தெருவுக்குத் தெற்கும் இவ்விசைந்த பெருநான்கு எல்லை நடுவுட்பட்ட மாளிகை மனைகுழி நாற்றிரு பதும், இப்பாலை யூருடையான் சந்திரசேகரனாதி விடங்கனை குலோத்துங்க சோழமகாபலிவாண ராஜனுக்கு வம்ஸாதியாக ஸ்வமானபடி ஸ்ரீகர்மேஸ் வரருக்கும் பதிபாத மூலபட்டுடை பஞ்சாசாரியதேவ கன்மிகளுக்கும்.......ர்க்கும் உடையார் வீதிவிடங்க தேவர் திருவாய்மொழி..........கல்வெட்டியது இது. பலமாகேஸ்வர.........

## A. R. No. 73 of 1890.

**தியாகராஜஸ்வாமிகோயில் 2-ம் பிரகாரத்துச் சுவரில்.**

श्रीमद्ब्रह्मपुरीश वागधिपतिः स्व स्वामिमित्राश्रये
तेभ्यो हेमसभाधिनाथचरणन्यासोल्लसन्मस्तकः ।
प्रादाद्भूमि हिरण्यकं सरजतानन्यान्धनान्सोत्तमान्
श्रीयारूरधिपस्य मूलवसतौ देवोऽनपायो नृपः ॥ १ ॥

लक्ष्म्यालये रचितधर्मपरानुपाल
श्रीलान्नृपाङ्घ्रिकमलान् शिरसा नमामि ।
व्याघ्राग्रहारवरहेमसभानटेश
पादारविन्दमधुपो ह्यनपायनामा ॥ २ ॥
जननिभवतो ज्ञानशिवाचार्य कुलेभवत् ।
शैवे गौतमगोत्रेऽस्मिन्ज्ञानन्याख्याकमलापुरे ॥ ३ ॥

A. R. No. 74 of 1890.

ஸ்ரீ. கோயில் முதற்பிராகாரத்து கிணற்றுக்
கருகேயுள்ள கல்லில்

शङ्खतीर्थमिति ख्यातं कमलालयमध्यगम् ।
वल्मीकसंभवस्याग्रे सर्वरोगक्षयावहम् ॥ १ ॥
सर्वव्याधिहरं चैव क्षीरकुण्डमिदं शुभम् ।
हीनाङ्गो व्याधिताङ्गो वा योऽत्र स्नानं करिष्यति ॥ २ ॥
चैत्रशुक्ले निराहारः चित्रसंस्थे निशाकरे ।
संपूर्णाङ्गः स तेजस्वी भविष्यति न संशयः ॥ ३ ॥

## திருவாரூர்ப் பதிகொன்வகைப் பண்கள்

**சம்பந்தர்:** குறிஞ்சி வியாழக்குறிஞ்சி, காந்தாரம், நட்டபாடை, கௌசிகம்.

**அப்பர்:** காந்தாரம், சீகாமரம், குறிஞ்சி, சேரிகை, விருத்தம், குறுந்தொகை, தாண்டகம்.

**சுந்தரர்:** தக்கேசி, புறநீர்மை, செந்துருத்தி, கொல்லிக்கௌவாணம், பழம்பஞ்சுரம், இந்தளம், கொல்லி, காந்தாரம்.



தஞ்சை கெசட்டியர் கூறுவது:

"தஞ்சை ஜில்லாவிலேயே தஞ்சை, திருவாரூர் கோயில்களே அழகானவை. திருவாரூர் தேரைப் போல் மாதிரி ஒன்று செய்து சென்னைக் கண்காட்சிச்சாலையில் வைக்கப்பெற்றுளது. இது திராவிடச் சிற்பத்திற்கே ஒரு தனிமதிப்பளிப்பது என்று என்சைக்ளோபீடியா பிரிட்டானிகா கூறுகிறது. இங்குப் பன்னீர்த்தொழிலும், நெல்லரைக்கும் தொழிலும் மிகுதியாக நடைபெறுகின்றன. இங்கு டிஸ்டிரிக்ட் முன்ஸிப் கோர்ட்டும் போலீஸ்டேஷனும் உள்ளன. இது மேஜர் யூனியனை நாகப்பட்டினம் தாலூகா போர்டு நிர்வாகத்திலடங்கியிருக்கிறது. 1895ம் ஆண்டில் திருவாரூர் முனிஸிபாலிடியாகச் சபாரிசு செய்யப்பெற்றது. திருவாரூர்க்கும் அம்பலுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. அது சோமயாஜீமாற நாயனர் உண்டுபண்ணியது. அப்போதிருந்த ஜனத்தொகை (1906ல்) 15463. கோயிலுக்குள்ள நிலமாக 6000 ஏகரும், வருமானம் 7000 ரூபாயுமாக இருந்தது. வேளாக்குறிச்சி ஆதீனத்தாருடைய நிர்வாகமும் இருந்தது. கிழக்கு மேற்குக் கோபுரங்கள் முறையே 118 அடி, 101 அடி உயரமுள்ளவை. தேவாசிரயமண்டபம் மிகப்பழமையானது. அதிக வேலைப்பாடில்லாததே அதற்கு ஆதாரம். கமலாயம் தென்கரையிலுள்ள அரண்மனை Travalar's பங்களாவாக இருக்கிறது. மிக அழகான காற்றுவசதியான குளிர்ந்த இடம்."

# பெருந்தொகையிற்கண்ட பாடல்கள்

### *திருவாரூருலாவைப்பற்றிய பாடல்கள்,*

தென்னாதமி ழாரூர்த் தியாகேசர் மெய்யன்பு
கொள்ளுங் கமலையுலாக் கூறினனால்—உள்ளக்
குவிவீர ராகவன்சொற் கூடிற் புலவீர்
கவிவீர ராகவன்சொற் கண்டு.

புவியோர் பெறுந்திரு வாரூ ருலாவைப் புலவர்க்கெலாம்
செவியே சுவைபெறு மாறுசெய் தான்சிவ ஞானவனு
பவியே யெனுநங் கவிவீர ராகவன் பாடியதற்
கவியே கவியவ னல்லாத பேர்கவி கற்கவியே.

ஒட்டக்கூத் தன்கவியு மோங்கியகம் பன்கவியும்
பட்டப் பகல்விளக்காய்ப் பட்டவே - யட்டதிக்கும்
வீசுங் கவிவீர ராகவனும் வேளாளன்
பேசுங் கவிகேட்ட பின்.

### *திருவாரூர் விசேடங்கள்*

சங்குதீர்த் தந்திருச் சாளரவா யில்வீர
சிங்கா தனந்திருவந் திக்காப்பு—பங்குனிமா
தத்திருநா டீர்த்தந் திருவிழா தன்கோயில்
உத்தரபா தந்திருவா ரூர்.

### *சத்தவிடங்கத்தலங்கள்*

சீரார் திருவாரூர் தென்னாகை நள்ளாறு
காரார் மறைக்காடு காறாயல் - போரான
ஒத்ததிரு வாய்மூர் உவந்ததிருக் கோளிலி
சத்த விடங்கத் தலம்.

---

# தோத்திரங்கள்



காமக்கோட்டமுடைய நாச்சியார்

[கமலாம்பிகை]

உ

சிவமயம்

# தேவாரம்

## திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்

அருளிச்செய்தவை

### 1. திருவிருக்குக்குறள்: பண் — குறிஞ்சி.

இராகம்: அரிகாம்போதி] [தாளம்: திருபுடை.

திருச்சிற்றம்பலம்.

[செல்வத் தியாகேசர் சேவடி தொழவேண்டும் என்ற அன்பு வெள்ளம் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் உள்ளத்துப் பெருகி வழிகின்றது. அப்பர் பெருமானும் ஆரூர்த் தியாகேசப் பெருமானின் ஆதிரைநாளின் திருவோலக்கச் சிறப்பை எடுத்து விளக்கினார்கள். அதனால் அன்புவெள்ளம் உடைப்பெடுத்து ஓடுகின்றது. ஆரூர்க்கு வழிக்கொண்டு வருகின்றார்கள். கனிந்த சிந்தை கவிதைகளாக வெளிப்படுகின்றது. 'பாடல னான்மறை' என்ற பதிகமாகின்றது. விற்குடி முதலியவற்றை வணங்கிக்கொண்டு திருவாரூர் திருமதிற் புறத்து அணுகுகின்றபோது சிவிகையினின்றும் இறங்கித்தலத்தையும் சிவமாகக்கண்டு, செங்கைநிறைய மலர்களை யேந்தித் தூவுகின்றவர்கள் திருவிருக்குக்குறளாகிய இதனைத் தமிழ்நாடுய்ய அருளிச் செய்கின்றார்கள்.

திருவிருக்குக்குறள் என்பது வீடுகாதலிப்பவரால் விரும்பப் பெறும், இரண்டு சீர்களான் யாக்கப்பெற்ற இருக்குமந்திரம்போன்ற பாடல் என்பதாம். வேதங்களுள் இருக்கு, மந்திர வடிவாக உளது. அதுபோல இப்பதிகமும் மந்திர வடிவாக உள்ளது எனலுமாம். மந்திரம் சொற்சுருக்கமுடையது; எண்ணுவார் எண்ணத்தை ஈடேற்றவல்லது. அதுபோல இதுவும் அமைந்திருப்பது காண்க.

அநாதியே ஆன்மாவைப்பற்றி நிற்கும் பாசத்தால் இருவினைக் கீடாகக் கருவயிற் பிண்டமாய் வளர்ந்து பிறந்து, பரிபாகமுற்ற வினைகள் துன்பவின்பங்களை யூட்டுகின்றகாலத்து வருந்தி மகிழ்ந்து, அலைகின்ற ஒழியாத்துன்பத்தினின்றும் உய்திவேண்டும் உத்தமர்களை யழைத்து, அன்போடு மலர் தூவுங்கள்; கைகளாற் றொழுங்கள்; எடுத்து வாழ்த்துங்கள்; உங்களுடைய பற்றற்று, வினைகள் விண்டு, இன்பமுத்தி யெய்தலாம் எனப் பயனும், வழியும் வகுப்பன இப்பத்துப்பாடல்களும்.]

**சித்தந் தெளிவீர்காள், அத்த னாரூரைப்**
**பத்தி மலர்தூவ, முத்தியாகுமே. 1**

இத்திருப்பாட்டு முத்தி யெய்தலாம் என்பதனைத் தெரிவித்து, அதற்கு உபாயம் உணர்த்துகின்றது.

சித்தம் தெளிவீர்காள் - மலமறைப்பாற் கலக்குண்ட சித்தந்தெளிய விரும்புபவர்களே!. அத்தன் - அனைவர்க்குந் தலைவன். தியாகேசப்பெருமான் எழுந்தருளியுள்ள ஆரூரைப் பத்தியோடு மலர்தூவி வழிபடுங்கள் முத்தியாகும் என்பது போந்தபொருள். தெளிவீர்காள் என்று எதிர்காலத்தாற் கூறியது மலர்தூவல் முதலிய கிரியைத்



தொண்டுகள் சித்தந்தெளிதற்கு ஏதுவென்பது தெரித்தற்கு. 'கிரியையென மருவும் யாவையும் ஞானங் கிடைத்தற்கு நிமித்தம்' என்பது ஞானசாத்திரமாகலின். மலர் தூவ என்றது இறைவனும், ஞானாசாரியனும் எழுந்தருளியுள்ள இடங்களை மலர்தூவி வழிபடல் மரபு என்பதை விளக்கிநிற்கின்றது. முத்தியாகும் என முத்தியை வினைமுதலாகக் கூறியருளியது திருவருட்பதிவு உற்றகாலத்துத் தாமே வந்தெய்துவதோர் சிவானந்த மாதலின்.

**பிறவி யறுப்பீர்காள், அறவ னாரூரை**
**மறவா தேத்துமின், துறவி யாகுமே. 2**

2. முத்தியாவதற்குப் பிறவி இடையூறாதலின் அப் பிறப்பு, பாவத்தைப்பற்றி வருவதொன்றாதலின், பாவமோ பற்றுள்ளங் காரணமாக எழுவதாகலின், காரியமாகிய பிறப்பினை யறுக்க விரும்புவார்க்குத் துறவியாதலே சிறந்த உபாயம் என்பதுணர்த்துகின்றது இப்பாட்டு.

அறவன் - தருமவடிவன். மறவாது ஏத்துமின்- நினைப்பின்றி நினைத்து வழிபடுங்கள். நெஞ்சொடுபடாத செயலும் உண்டன்றே! அங்ஙனன்றிக்கே புத்திபூர்வமாக வழிபடுங்கள். துறவியாகும் - பிறவிக்கு ஏதுவாகிய பற்றுள்ளங்கழியும் என்பதாம். மறங்கடிய அறவனாலன்றி யாகாது என்பது உணரக்கிடக்கின்றது. துறவி - துறவு - வி தொழில் விகுதி.

**துன்பந் துடைப்பீர்காள், அன்ப னணியாரூர்**
**நன்பொன் மலர்தூவ, இன்பமாகுமே. 3**

3. பிறந்தார் உறுவது பெருகிய துன்பமாதலின் அதனைத் துடைக்கவேண்டும் என்பதும், அதற்கு உபாயம் மலர்தூவலே என்பதும் உணர்த்துகின்றது இம்மூன்றாம் பாடல்.

அன்பன் - சிவன். அன்பனணி யாரூர் - அன்பனால் அழகுபெறும் ஆரூர். பொன்மலர்தூவ என்பது செம்பொன்னும் வெண்பொன்னுமாகிய இரண்டாலும் பூக்கள் செய்து அவற்றை முல்லைமலரோடு கலந்துதூவுதல் மரபு. இன்பம் ஆகும் - துன்பநீக்கத்திற்குத் தொழுத உங்கட்கு இன்பமும் ஆகும் என்பதாம். இன்பம் என்றது இம்மை யின்பத்தையும் நிரதிசயானந்தப் பேரின்பத்தையும்.

உய்ய லுறுவீர்காள், ஐய னாரூரைக்
கையி னாற்றொழ, நையும் வினைதானே. 4

4. மேற்கூறியவாறு துன்பந் துடைத்து உய்தியை விரும்புவீராயின் கைகளாற் றொழுங்கள் என்றருளிச் செய்கின்றது நாலாம் பாட்டு.

ஐயன் - தலைவன். வினை தானே நையும் என்றது தொழுவாரிடம் இருப்புக்கொள்ள இடமின்மையால் வல்வினைகள் மெலிந்துபோம் என்பதாம். வினை உண்டாலன்றிக் கழியாதாகலின் நையும் என்றருளப் பெற்றது.

பிண்ட மறுப்பீர்காள், அண்ட னாரூரைக்
கண்டு மலர்தூவ, விண்டு வினைபோமே. 5



5. கீழைத்திருப்பாட்டு பிராரத்தவினை நைந்துபோம் என்றது; இத்திருப்பாட்டு வரக்கடவ வினைகளும் விண்டு போம் என்கின்றது.

பிண்டம் - கருவில் உறுப்பு நிரம்பாதிருக்கும் தசைத் திரள். 'சிறப்பில் சிதடும் உறுப்பில் பிண்டமும்' என்பது புறநானூறு. பிண்டம் அறுப்பீர்காள் - மீண்டும் விளையும் கருவிடைப் பிண்டநிலைமை யறுப்பவர்களே! அண்டன் ஆரூர் என்றது தேவலோகத்தில் எழுந்தருளியிருந்ததை மனக்கொண்டு கூறியது. அண்டன் - தேவன். வினை விண்டுபோம் - வினைகள் மீண்டும் அங்குரியாதவாறு கெடும். நெல் வாய்விண்டது என்பதுபோல.

பாச மறுப்பீர்காள், ஈச னணியாரூர்
வாச மலர்தூவ, நேசம் ஆகுமே 6

6 கீழைத்திருப்பாட்டு வினை நீக்கங் கூறியது. அவ்வினையோடு ஒருங்கு எண்ணப் பெறுவதாய், அநாதியே பந்தித்துள்ள பாசமும் கெடும்; இறைவன் நேசமாகும் என்று சொல்கிறது இப்பாட்டு.

பாசம் - ஆணவம். கட்டிநிற்பதாகலின் அதனை யறுக்கவேண்டுமாயிற்று. ஆன்ம அறிவைப் பந்தித்து அடக்கிநிற்றலின் பாசம் எனப்பெற்றது. நேசமாகுமே என்பதை யுற்றுநோக்குகின்ற எம்போலியர்க்கு, பாச மறுத்த நம்பியாரூரர்க்குத் தோழரானாற்போல நமக்கும் நேசமாவர் என்ற நினைப்பு உண்டாகும். அன்புமுதிரும் என்றுமாம்.

வெய்ய வினைதீர, ஐயன் அணியாரூர்
செய்ய மலர்தூவ, வையம் உமதாமே. 7

7. இருவகை வினையும் தீரவேண்டும் என்றும், தீர்ந்தால் உலகமுழுவதும் உடைமையாம் என்றும் உணர்த்துகிறது இப்பாடல்.

வெய்யவினை - விரும்பத்தக்க நல் வினையும் கொடிய தீவினையும். இரண்டும் பொன் விலங்கும் இருப்பு விலங்கும் போலத் தளைத்து நிற்பவாகலின் நல்வினையும் தீர வேண்டுவதாயிற்று. செய்ய மலர் - சிவந்த மலர். வையமுமதாம் - எளி மாவலியாகி வையமுழுதாண்டாற்போல உமதாம் என்பதாம். விளி முதற்பாட்டிலிருந்து கொள்ளப் பெறும்.

அரக்க னாண்மையை, நெருக்கி னாரூர்
கரத்தி னால்தொழத், திருத்த மாகுமே. 8

8. செய்யமலர் தூவி வையந்தமதாய காலத்து உண்டாகிய தருக்கையும் களைந்து திருத்தம் நல்குவர் தியாகேசராதலின் அவர் தலத்தைக் கையினாற் றொழவேண்டும் என்கிறது இப்பாடல்.

அரக்கன் - சிவபூசையை விதிமுறை யியற்றி ஆட்சியும் படையும் பெற்ற இராவணன். ஆண்மை - திருவருட்பதிவின்மையால் தன் முனைப்பால் எழுந்த வன்மை. நெருக்கினான் - அடர்த்தவன். திருத்தம் - தூய்மை. திருத்தமாகும் - கோணல் நீங்கும் என்றுமாம். அரக்கன் தருக்கழித்த இறைவனது ஆரூர்தொழத் திருத்தமாம் என்று கொண்டுகூட்டுக.



துள்ளும் இருவர்க்கும், வள்ள லாரூரை
உள்ளு மவர்தம்மேல், விள்ளும் வினைதானே. 9

9. அருள்பெற்றுச் சிறிது திருந்திப் பதவிகளில் நிற்பாரும், பதவி மோகத்தான் மயங்குவாராயினும் அவர்கள் மிகைநோக்காதே அதுதான் ஆன்மவியல்பென்று திருவுளங்கொண்டு அருள்செய்யுங் கருணையாளன் எழுந்தருளியுள்ள ஆரூரை நினைக்கவேண்டும் என்றும், நினைத்தால் ஆகாமிய சஞ்சிதவினைகள் அழியும் என்றும் அறிவிக்கின்றது இப்பாடல்.

துள்ளும் இருவர் - அதிகாரம்பெற்ற சகலான்மாக்களாதலின் மலமுனைப்பால் தாம் பெரியர்எனத் துள்ளுகின்ற பிரம விஷ்ணுக்கள். வள்ளல் - அவர்களுடைய மிகுதி கண்டும் நகையாது வழங்குபவர். உள்ளுதல் - தியானித்தல். மேல்வினை விள்ளும் எனவும் கூட்டலாம்.

கடுக்கொள் சீவரை, அடக்கி னாரூர்
எடுத்து வாழ்த்துவார், விடுப்பார் வேட்கையே. 10

10. அதிகார மலத்தான் துள்ளுவாரையும் ஆட்கொள்ளும் இறைவன், ஏனைய விஷத்தன்மை பொருந்திய ஆன்மாக்களையும் அடக்கியாளுவர் என்ற கருணையின் மேன்மையைக் காட்டுகிறது இச்செய்யுள்.

கடுக்கொள் சீவர் - விடத்தன்மை பொருந்திய ஆன்மாக்கள். அடக்கினர் - அத்தன்மை கெடுமாறு அடக்கியவர். எடுத்து வாழ்த்துவார் - உள்ளத்துட்கிடந்த உணர்ச்சி

வெள்ளம் உரை பிறந்துவருதலின் கேட்டாரும் தம்போல உய்ய உரக்க வாழ்த்துபவர்கள். வேட்கை விடுப்பர் - உரையினைச் செவிகேட்க, கேட்டதனைச் சித்தம் தியானிக்க, அதனால் மனம் ஒடுங்குதலின் பற்றுள்ளத்தை விடுவர் என்பதாம்.

சீரூர் சம்பந்தன், ஆரூரைச் சொன்ன
பாரூர் பாடலார், பேரா ரின்பமே. 11

11. முத்தியாகுமேனன முதற்பாட்டில் அருளியவர்கள் அதற்கிடையூறான பிறவி, வினை, பாசம் இவைகளையும், இவைகளை நீக்கும் உபாயங்களையும், நீங்கியார் எய்தும் பயனையும் முறையே கூறினார்கள். இத்தகைய பாடல்கள் பத்தையும் பயில்வாரும் அத்தகைய இன்பத்தை எய்துவர்; பேரார்; நிலையாவெனத் திருக்கடைக்காப்புச் செய்தருளினார்கள்.

சீரூர் - சீர்காழி. பாரூர் பாடல் - உலகமுழுதும் பரவிப் பண்படுத்தும் பாடல். இன்பம் பேரார் - பெற்ற இன்பத்தினின்றும் மீளார். பேராவின்பப் பெருவாழ்வு எய்துவர் என்பதாம்.

இப்பாடல்களுள் ஆரூரை மலர் தூவ அடையும் பயனை ஐந்து பாடல்களும், தொழுவார் எய்தும் பயனை இரண்டு பாடல்களும், வாழ்த்துவார் எய்தும் பயனை ஒரு பாடலும், ஏத்துவார் எய்தும் பயனை இரண்டு பாடல்களும், பாடற் பயனை ஒரு பாடலும் உணர்த்துகின்றன.



## 2. பண் - வியாழக்குறிஞ்சி

இராகம் - சவுராட்டிரம்] [தாளம் - ஆதி.

திருச்சிற்றம்பலம்

[அப்படிகளால் ஆதிரைத் திருநாள் மகிமையைக் கேட்டுத் திருவாரூருக்கு எழுந்தருளுகின்ற திருஞானசம்பந்தப்பிள்ளையார், சலந்தரனை வென்ற தலமாகிய விற்குடியை வணங்கிக்கொண்டு, அடியார்கள் புடைசூழ வருகின்றவர்கள், இப்பதிகத்தைப் பாடிக் கொண்டே எழுந்தருளுகின்றார்கள்.

இதில், திருமதிற்புறத்தினின்றும் உட்புகும் விருப்பம் உற்று, சொல்லியதிலே, 'சித்தர் தெளிவீர்காள்' என்றபடியிருக்க, அதற்கும் சிறிது தூரத்தில் இருக்கச்செய்தே, அதாவது விற்குடியைவிட்டு எழுந்தருளும்போதே ஆரூரமர்ந்தான் திருக்கோலச் சிறப்புக்களைத் திருவுள்ளத்து அறிவுக்காட்சியாக அடைய அவற்றை ஒவ்வொன்றாகச் சொல்லி, கேட்டார் மனத்தும், படிப்பார் மனத்தும் பதிய வைத்தருளுகின்றார்கள்.]

பாடலன் நான்மறையன் படுபட்ட கோலத்தன் திங்கள்
சூடலன் மூவிலைய சூலம் வலனேந்திக்
கூடலர் மூவெயிலு மெரியுண்ணக் கூரெரிகொண் டெல்லி
ஆடலன் ஆதிரைய னாரூ ரமர்ந்தானே. 1

1. இப்பாட்டு, தியாகேசப்பெருமானது உடை, கோலம், அணி, வீரம் முதலியவற்றை விளக்கி யருளுகின்றது.

பாடலன் நான்மறையன் - பாடப்பெறுகின்ற நான்கு வேதங்களை யுடையவன். அன் தவிர்வழி வந்த சாரியை.

அன்றிப் பாடலன் நான்மறையன் எனப் பிரித்துத் (தோத்திரத்) தமிழ்ப் பாடல்களையும் நான்மறைகளையும் உடையன் எனலுமாம். படிபட்ட கோலத்தன் - எஞ்ஞான்றும் எவ்வகையிலும் ஒப்பில்லையாம்படி யுயர்ந்த திருமேனி யழகினையுடையான். சூடலன் - சூடுதலையுடையவன். கூடலர் - பகைவர்; திரிபுராரிகள். கூர் எரி - மிக்க எரி. எல்லி - இரவு. ஆதிரையன் என்பது அப்பர் அடிகள் தெரிவித்த சிறப்பு திருவுள்ளத்து நிற்றலான் எழுந்தது. ஆரூரமர்ந்தான் பாடலன் முதல் ஆதிரையன் என்பதிறுதியாகக் கூட்டி முடிவுகாண்க.

சோலையில் வண்டினங்கள் சுரும்போ டிசைமுரலச் சூழ்ந்த
ஆலையின் வெம்புகைபோய் முகில்தோயு மாரூரில்
பாலொடு நெய்தயிரும் பயின்றாடும் பரமேட்டி பாதம்
காலையு மாலையும் போய்ப் பணிதல் கருமமே. 2

2. இப்பாட்டு இறைவனை இருபோதும் வணங்கல் கடமையென்றறிவிக்கிறது.

வண்டினங்கள் சுரும்போடு இசைமுரல - வண்டின் சாதி நான்கில் வண்டும் சுரும்பும் தம்மினத்தோடு மாறி யொலிக்க. வண்டுஞ் சுரும்பும் இசை முரல ஆலையின் வெம்புகை வானத்து முகிறோயும் ஆரூர் என்றது, பரமேட்டி பாதம் பணிவார் மங்கள வாத்தியம் ஒலிக்க இன்பவுலகடைவார் இது உறுதி என்ற உள்ளுறை தோன்றநிற்கின்றது. கருமம் - கடமை. பயின்று - விரும்பி. பாலொடு நெய் தயிரும் எனப் பஞ்சகவ்வியத்துள் மூன்றேகூறினார்கள்; இறைவன் ஆடுதற்குரியன இவையேயாதலின். கோசல



கோமயம் நீக்கி மோரும் வெண்ணெயும் கொள்வார் இனம் பற்றி அவ்விரண்டும் கொள்க. ஆடற்குரிய ஐந்தனுள் பாடற்குரியன மூன்றுமே யாதலின் அவற்றை யெடுத்தோதினா ரென்றுமாம்.

உள்ளமோ ரிச்சையினா லுகந்தேத்தித் தொழுமின் றொண்டீர்
கள்ள மொழிந்திடுமின் கரவா திருபொழுதும் [மெய்யே
வெள்ளமோர் வார்சடைமேற் கரந்திட்ட வெள்ளேற்றான் மேய
அள்ள லகன்கழனி யாரூ ரடைவோமே. 3

3. சென்ற திருப்பாட்டில் பணிதல் கருமமே எனப் படர்க்கையாக உணர்த்தியவர்கள் இத்திருப்பாட்டில் தன்மையில் வைத்து இருபொழுதும் அடைவோம் என்கின்றார்கள்.

உள்ளமோர் இச்சையினால் - மனத்தினால் ஓர்ந்து இதுவே உறுதியெனக் கடைப்பிடிக்கப் பெற்ற இச்சையால், அன்றி மந்தர பக்குவர்க்காயின், ஏதோ ஒரு விருப்பத்தால் மகிழ்ந்து எனக்கொள்க. ஓர் அசையுமாம். வெள்ளம் ஓர் வார்சடை கரந்திட்ட - வானுலகன்றித் தரணி தனக்கிடமாதல் ஆகாது எனத் தருக்கிவந்த கங்கையை ஒரு சடைக்கும் காணாது என்னும்படித் தருக்கடக்கி, இருக்குமிடமும் தெரியாதபடி மறைத்த கரந்திட்ட என்றது - மறைத்தவன் வேண்டும்போது வெளிப்படுத்தும் வன்மையும் உடையவன் என்பது தோன்றநின்றது. வெள்ளேற்றான் - அறவடிவான வெள்ளிய இடபத்தையுடையவன். தருக்கடக்கியதோடன்றித் தண்ணருளும வழங்க இருக்கின்றான் என்பது சிந்தை கொள்ளக் கரந்திட்ட என்பதனை யடுத்து வெள்ளேற்றான் என்பதனைத் தெரித்தார்கள்.

**வெந்துறு வெண்மழுவாட்படையான்மணிமிடற்றுனரையின்**
**ஐந்தலை யாடரவ மசைத்தா னணியாரூர்ப்**
**பைந்தளிர்க் கொன்றையந்தாரப் பரமன் னடிபரவப் பாவம்**
**நைந்தறும் வந்தணையு நாடொறு நல்லனவே. 4**

4. இவைத்திருப்பாட்டில் தொண்டர்க்கு உகந்தேத்தப் பணித்த பிள்ளையார், இத்திருப்பாட்டில் அடைந்தார் அல்லல்களைய ஆயுதந்தாங்கி இருக்கின்றார் என்பதையும் அடைந்தாரைப் பாதுகாத்த அடையாளமாகக் கண்டத்துக் கறையுடையர் என்பதையும் விளக்குகின்றார்கள்.

வெந்துறு வெண்மழு - அடியார்கள் வினை வெந்து போதற்குக் காரணமாகிய கறையற்ற மழு. மழுவும், வாளும் அடைந்தாரைக் காக்க ஏந்திய ஆயுதங்கள் மணிமிடற்றான் - நீலகண்டன். இது கலங்கிய தேவரைக் காத்த அடையாளம். அடியார்களுடைய ஐம்பொறிகளையும் தத்தம் புலன்களில் செல்லவிடாது தடுத்தாட்கொள்ளும் தன்மையைப்போல, ஆடுந்தன்மை வாய்ந்த ஐந்தலைப் பாம்பைச் சேட்டியாதே திருவரையில் இறுகக் கட்டினான் என்பது. பாவம் நைந்தறும்-தீவினைகள் நைந்து இல்லையாம். அடிபரவுவார் சிந்தை தீவினையை மிகுவிக்காமையின் நல்லனவே வரும் என்பதாம்.

**விடுபிறப்பெளிதா மதனை வினவுதிரேல் வெய்ய**
**காடிட மாகநின்று கனலேந்திக் கைவீசி**
**ஆடு மவிர்சடையா னவன்மேய வாரூரைச் சென்று**
**பாடுதல் கைதொழுதல் பணிதல் கருமமே. 5**



5. முற்கூறியவாறு வினைகளும் நைந்து நல்லன வந்தடைந்தவிடத்து வீடடைதல் எளிதாம் என்கின்றது இத்திருப்பாடல்.

வீடு பிறப்பு - வீட்டின்கண் பிறத்தல்; என்றது வீடடைதல் என்னுமளவிற்று. அதனை-உபாயத்தை. வெய்ய காட்டை இடமாகக்கொண்டு வெய்யகனலைக் கையேந்தி ஆடுவானாதலின், பாடுவார் தன்மை நோக்காது, கருமம் நோக்கிக் கருணை செய்வான் என்பதாம்.

**கங்கையோர் வார்சடைமேற் கரந்தான் கிளிமழலைக் கேடில்**
**மங்கையோர் கூறுடையான் மறையான் மழுவேந்தும்**
**அங்கையி னனடியே பரவி யவன்மேய வாரூர்**
**தங்கையி னாற்றொழுவார் தடுமாற் றறுப்பாரே. 6**

6. அவ்வண்ணம் கடமைகளை விடாது செய்தவர் வீடெய்துவார் ஆதலின், பிறவிக்கடலில் வினைச்சுழலில் தடுமாறார் என இப்பாடல் தெரிவிக்கின்றது.

கிளி மழலை மங்கை - கிளிபோன்ற மழலைச் சொல்லினையுடைய உமாதேவி. 'கங்கை கரந்தான், மங்கையோர் கூறுடையான்' என்றது தருக்கிவந்த தாழ்குழலை மறைத்தடக்கி, அநுக்கிரக சக்தியைத் தன் இடமாகக்கொண்டிருக்கின்ற அருமைப்பாடு அறிவிக்கின்றது. மறையான் - விதிமுறையாலும் விலக்குமுறையாலும் அறிவுறுக்கும் ஆணைமொழியாகிய வேதங்களை யுடையவன். பரவித் தொழுவார் தடுமாற்று அறுப்பார் எனக் கூட்டுக. தடுமாற்று - துணிவுபெறாத தொல்லை.

**நீறணி மேனியனாய் நிரம்பா மதிசூடி நீண்ட**
**ஆறணி வார்சடையா னாரூ ரினிதமர்ந்தான்**
**சேறணி மாமலர்மேற் பிரமன் சிரமரிந்த செங்கண்**
**ஏறணி வெல்கொடியா னவனெம் பெருமானே. 7**

7. அங்ஙனம், ஆன்மாக்களின் தடுமாற்றமறுப்பவரே தலைவர். அவருடைய திருமேனியமைப்பும் இடமும் இத்தகைய என்பன முதலியவற்றை இப்பாடலில் அறிவிக்கின்றார்.

நிரம்பாமதி - இறைவன் முடியிலிருக்கும் நிரம்பாத பிள்ளைமதி. நிரம்பா மதிசூடி, நீண்ட ஆறு அணிசடையன் என்றது குறைப் பொருளையும், நிறைப் பொருளையும் ஒப்ப நோக்குவான் என்பது விளக்கிற்று. சேறணி மாமலர் - சேற்றிற் பிறந்து அழகுசெய்யும் தாமரை. பிரமன் உந்தியந் தாமரையிலிருக்கும் சேறணி மாமலர் மேற்பிரமன் எனக்கூறியது, தாமரை என்ற பொதுமை நோக்கி. 'புற்றில்வாளரவன்' (திருக்கோவை) என்று மணிவாசகர் கூறியருளியதுபோல. பிரமன் சிரமரிந்த செங்கண் ஏறணி வெல்கொடியான் என்றது மகன்றலை யறுக்கவும் ஒருகரத்துக் கொடியாக இருந்த இடப வடிவினனாகிய திருமால், பார்த்துக்கொண்டே யிருப்பதைத்தவிரத் தவிர்க்கமுடியாத வண்ணம் தலைமை படைத்தவன் அவனே எம் தலைவன் எனத் தலைவனின் தனிச் சிறப்பினை விளக்கியவாறு.





**வல்லியந் தோலுடையான் வளர்திங்கட் கண்ணியினான்**
**நல்லிய னான்முகத்தோன் றலையின் னறவேற்றான் [வாய்த்த**
**அல்லியங் கோதைதன்னை யாகத் தமர்ந்தருளி யாரூர்ப்**
**புல்லிய புண்ணியனைத் தொழுவாரும் புண்ணியரே 9**

9. அத்தலைவன், அடைவார் எளிதிலடைந்துய்ய அல்லியங் கோதையுடன் அருள்மூர்த்தியாய் ஆரூரில் அமர்ந்திருக்கின்றான் என இப்பாடலில் இடம் குறிக்கின்றனர்.

வல்லியம் - புலி. நல்லியல் வாய்த்த நான்முகத்தோன் - தான் பிரமம் என்ற தன்மை யொழிந்து தலைவனை யுணர்தலாகிய நல்லியல்பு வாய்க்கப் பெற்ற பிரமன், நல்லியல் வாய்க்கப்பெற்றமையாலேயே கபாலம் இறைவன் கரத்து ஏற்குங் கலமாக விளங்கிற்று. நறவு - அமுதம், விஷ்ணு மார்பிலுள்ளது. அல்லியங்கோதை-பூங்கோயில் பக்கத்துக் கோயில்கொண் டெழுந்தருளியிருக்கும் நீலோத் பலாம்பிகை. ஆகம் - திருமேனி.

**செந்துவ ராடையினா ருடைவிட்டு நின்றுழல்வார் சொன்ன**
**இந்திர ஞாலமொழிந் தின்புற வேண்டுதிரேல்**
**அந்தர மூவெயிலும் மரணம் மெரியூட்டி யாரூர்த்**
**தந்திர மாவுடையா னவனெந் தலைமையனே. 10**

10. புண்ணியனைத் தொழும் புண்ணியம் பெற்ற நீங்கள், புறச்சமயிகள் கூறும் இந்திரஞாலம் நீங்கி, இன்பம் பெறவேண்டின், ஆரூருடையானைத் தலைவனாக அறியுங்கள்; என்று அறிவித்தருள்கின்றார்.

செந்துவர் ஆடை - காவியாடை. சைன சந்நியாசிகளில் காவியாடை யுடுத்தியவரும், திகம்பர சந்நியாசிகளும் என இருவகையார். இந்திரஞாலம் - இந்திரஞாலமான மாயப்பேச்சுக்கள். அந்தரம் - ஆகாயம். அரணம் - கோட்டை. ஆரூர் தம் திரமாவுடையான் - ஆரூரைத் தமது நிலைக்களனாகக் கொண்டவன். திரம் ஸ்திரம் என்பதன் திரிபு. சிவபூஜா துரந்தரர்களாகிய திரிபுராரிகள் தம் நிலைகெட்டது புத்தாவதாரங்கொண்ட திருமாலின் இந்திரஜாலப்பேச்சால். திருமால் உபதேசம் மனத்தைக் கெடுத்ததையும், அதனால் அசுரர்கள் அழிந்ததையும் ஆகிய வரலாற்றை நினைப்பூட்டுவது இப்பகுதி.

நல்ல புனற்புகலித் தமிழ்ஞான சம்பந்த நல்ல
அல்லி மலர்க்கழனி யாரூ ரமர்ந்தானை
வல்லதோ ரிச்சையினால் வழிபாடிவை பத்தும் வாய்க்கச்
சொல்லுதல் கேட்டல் வல்லார் துன்பந் துடைப்பாரே.

11. அத்தகைய தலைவனாகிய ஆரூரமர்ந்தானை மனங்கொண்ட மகிழ்ச்சியால் எழுந்த பாடல்கள் பத்தினையும் பாடுவாரும் கேட்பாரும் துன்ப நீக்கம் பெறுவர்; என்று உணர்த்துகிறது திருக்கடைக் காப்பாகிய இறுதிப் பாடல்.

நல்லபுனல் - கழுமலவள நதி. வழிபாடு பத்தும், இப்பத்துப் பாடல்களுமே வழிபாடு ஆகும் என்பதாம். வாய்க்கச் சொல்லுதல் கேட்டல் - சொல்லும் வாயும் கேட்கும் செவியும் இவற்றை இயக்கும் உள்ளமும் பிறவழி போகாது பொருந்தச் சொல்லுதலும், கேட்டலும்



துன்பந் துடைப்பார் - ஈரந்துடைத்தார் என்பதுபோலத் துன்பம் இருந்த சுவடுந் தெரியாதபடித் துடைப்பார் என்பதாம்.

இப்பதிகத்தான் திருவாரூர் உடையானே தலைவன், அவனே புண்ணியன், அவனை இருபோதும் வணங்கல் நம் கடமை, அவனை வணங்குவார் தடுமாற்றமறுப்பார், புண்ணியர். ஆகலின் அவனை வணங்கும் சமயம் வாய்த்திலதாயினும் அவன் தன்மைகளை யறிவிக்கும் பாடல் பத்தையும் சொல்லுதல் கேட்டல் செய்யின், துன்பம் நீங்கும் எனத் திருக்கடைக்காப்பிடுகின்றார்.

### 3. பண் - காந்தாரம்.

இராகம் - நவரோஸ்] [தாளம் - ஜம்பை

திருச்சிற்றம்பலம்

[காதல் கைம்மிக்கார்க்குக் காதலர் தீண்டிய பொருளும், அவர் வாழும் இடமும் விரும்பப்பெறுமாறுபோல அன்பராகிய பிள்ளையாருக்கு ஆரூரான் வாழும் ஆரூரைத் தொழவேண்டும் என்ற பற்றுள்ளம் வைக்கத் திருவாரூர்ப் புறத்து எழுந்தருளுகின்ற பிள்ளையார் அன்பின் மிகுதியால் உட்புகாது பெருமானைத் தரிசிக்கும் காலமும் நெடிதாய்த் தோன்ற, ஆற்றாமை மிக்கு, ஆரூரைத் தொழுகின்றவர், 'அவமொழிப்படாத மனமே! நீ திருவாரூரைச் சென்று தொழலாம்' என மனத்திற்குத் தேறுதல் கூறுவதாக அருளிச் செய்கின்றார் 'பவனமாய்' எனபது முதலாக.]

பவனமாய்ச் சோடையாய் நாவெழாய்
        பஞ்சுதோய்ச் சட்டவுண்டு
சிவனதாட் சிந்தியாப் பேதைமார் போலநீ
        வெள்கி னாயே
கவனமாய்ப் பாய்வதோ ரேறுகந்தேறிய
        காளை கண்டன்
அவனதா ரூர்தொழு துய்யலா மையல்கொண்
        டஞ்சல் நெஞ்சே. 1

இப்பாட்டு, சிவனது தாள்களைச் சிந்தியாத பேதை வெட்கப்படவேண்டும்; நெஞ்சே! சிந்திக்கும் நீ ஏன் மயங்குகின்றாய் எனச் சிந்திப்பார் செம்மாந்திருக்க வேண்டிய நிலையை எடுத்துக்காட்டுகின்றது.

பவனமாய் - மேல்மூச்சு கண்டு. பவனம் - காற்று. சோடையாய்-நாவுலர்ந்து. சோடை சோஷையென்பதன் திரிபு. பஞ்சு தோய்ச்சு அட்டவுண்டு - பால் முதலியன உள்ளிறங்காமையால் பஞ்சிற் றோய்த்துப் பிழிய உண்டு. சிவன தாள் - சிவபெருமானுடைய திருவடி. அ - ஆறன் பன்மையுருபு. பொறிகலங்கி அறிவழியாக் காலத்தே சிந்தியாது வீணே காலங் கழிய விட்டமையின் பேதைமார் என்றார். கவனம் - வேகம். காளம - விடம். மையல் - மயக்கம்.

தந்தையார் போயினார் தாயரும் போயினார்
        தாமும் போவார்
கொந்தவேல் கொண்டொரு கூற்றத்தார் பார்க்கின்றார்
        கொண்டு போவார்



எந்தநாள் வாழ்வதற் கேமனம் வைத்தியால்
        ஏழை நெஞ்சே
அந்தணா ரூர்தொழு துய்யலா மையல்கொண்
        டஞ்சல் நெஞ்சே. 2

2 ஆரூரைக் காட்டிலும் பற்றலாவதோர் இடமில்லையெனின் அன்றே ஆரூரைத் தொழுது உய்யவேண்டும். தந்தை முதலாயினார் ஆதாரமாக இருக்கின்றார்களே! என்றெண்ணி ஏமாக்கின்ற நெஞ்சிற்குக் களைகணாக, நினைப்பன யாவும் காலற்றன; ஆதலால், எந்தநாள் ஆரூரைத் தொழ வரப்போகிறாய் என வினவுகின்றார் இரண்டாம் பாட்டில்.

தாதையார் தாயார் என்பன உயர்த்தற் பொருளில் வந்த பன்மை. அன்றிப் பல பிறவிகளிலும் வந்த பல தந்தை பல தாயரைக் குறித்ததெனலுமாம். அன்றியும் களைகணாக எண்ணிய அவர்களும் போயினார் என இகழ்ச்சிக் குறிப்பும் ஆம்; நரியார் போனார் நாயார் வந்தார் என்பது போல. கொந்த - கொத்த. கூற்றம் பின்னையே நின்றதென் றெண்ணாமல் எந்தநாள் வாழ்வதற்கு எண்ணுகின்றாய்? என்பதாம். ஏழை - அறிவிலி.

நிணங்குடர் தோல்நரம் பென்புசே ராக்கைதா
        னிலாய தன்றால்
குணங்களாற் கல்லது குற்றநீங் காதெனக்
        குலுங்கி னாயே
வணங்குவார் வானவர் தானவர் வைகலு
        மனங்கொ டேத்தும்
அணங்கனா ரூர்தொழு துய்யலா மையல்கொண்
        டஞ்சல் நெஞ்சே. 3

3. உடற்பற்று அலைக்க அதனைச் சதமென்று எண்ணியிருக்கும் நெஞ்சிற்கு அருளிச்செய்கின்றார் இப் பாட்டில்.

பிணம், குடர் முதலிய தாதுக்களின் கூட்டத்தானாய உடல் நிலையற்றது. கூட்டப்பெற்ற ஒன்று பிரியின் இல்லையாம் அன்றோ? குணங்களார்க்கு அல்லது குற்றம் நீங்காது என-குணமுடையவர்க்கு அன்றி, குற்றம் ஒழியாதாகென. குலுங்கினாய்-குணமே தரித்தவர்களும், குற்றமேயின்றி இருப்பவர்களும் இருக்கமுடியாதென்ற உண்மையினாலே இரண்டும் உடைய நான் உய்யமுடியுமா? என்று; குலுங்கி வருந்தினாய். பெருமான் குணமுடைய வானவரும், குற்றமுடைய தானவர்களும் மனங்கொண்டு வணங்கும் தன்மையனாதலின் இரண்டும் உடைய நீயும் உய்யலாம் என்பது கருத்து. அணங்கன் - தெய்வத்தன்மையுடையவன்.

நீதியால் வாழ்கிலை நாள்செலா நின்றன
　　நித்த நோய்கள்
வாதியா வாதலா னாலுநா னின்பமே
　　மருவி னாயே,
சாதியார் கின்னரர் தருமனும் வருணனும்
　　ஏத்து மூக்கண்
ஆதியா ரூர்தொழு துய்யலா மையல்கொண்
　　டஞ்சல் நெஞ்சே. 4

4. உழைக்காதவன் ஊதியம் விரும்பலாமா? வினை வித்திட்டவன் தினையறுக்கஇயலுமா? அதுபோல, நெஞ்சே! நீ வாழுமா வாழகிற்றில்லை! ஆனாலும், இன்பமே விரும்புகிறாய்! நீ உய்யுநெறி ஆரூரைத்தொழுதலே; அறிந்துய்க என்கிறார்.



நீதியால்வாழ்கிலை - வாழ்விற்கு வேண்டிய நீதிபிறர்க்கு இன்னா செய்யாமையும், நடுவுநிலைமையும், கடமையறிந்து ஆற்றலும், சரியை கிரியை யோகமாதியன செய்தலுமாதலின் அவற்றை யறிந்து வாழ்கிலை. நாள்செலா நின்றன- வாழ்நாட்கள் வீணேசெல்கின்றன. வாதியா - வாதிப்பன வாயின. திருவாரூரைக் கின்னரர்களும், யமனும், வருணனும் வழிப்பட்டுய்ந்தமையை விளக்குகிறார்.

பிறவியால் வருவன கேடுள வாதலாற்
　　பெரிய வின்பத்
துறவியார்க் கல்லது துன்பநீங் காதெனத்
　　தூங்கி னாயே
மறவனீ மார்க்கமே நண்ணினாய் தீர்த்தநீர்
　　மல்கு சென்னி
அறவனா ரூர்தொழு துய்யலா மையல்கொண்
　　டஞ்சல் நெஞ்சே. 5

5. பிறப்பாற் கேடே வளர்கின்றன. ஆதலால், பேரின்பத்துள் திளைக்குந் துறவிகட்கு அல்லது துன்ப நீக்கம் இல்லை யெனச் சோம்பியிருக்கின்ற நெஞ்சிற்குத் துணையாவன கூறியருளுகிறார்.

பெரிய இன்பத் துறவியார்க்கு - பேரின்பத்தில் விருப்புடைய மெய்ஞ்ஞானிகட்கு. துன்பம் - வினையான்வரும் துன்பங்கள். தூங்கினாய்-நமக்குக் கிட்டாதென்று சோம்பியிருந்தாய். நீ மறவன் மார்க்கமே நண்ணினாய் - நெஞ்சமே

நீ பாவிகள் நெறிகளைப் பின்பற்றினாய்; ஆதலால் உனது மறநெறி நீங்க அறவன் ஆரூர் தொழுக என்பதாம்.

செடிகொணோ யாக்கையைம் பாம்பின்வாய்த்தேரைவாய்ச்
சிறு பறவை
கடிகொள்பூந் தேன்சுவைத் தின்புற லாமென்று
கருதி னாயே
முடிகளால் வானவர் முன்பணிந் தன்பராய்
ஏத்து முக்கண்
அடிகளாரூர்தொழு துய்யலா மையல்கொண்
டஞ்சல் நெஞ்சே. 6

6. உடலும், உடலால் நுகரும் இன்பமும் நிலையற்றன. இவ்வுடலைத் துணைகொண்டு என்ன புண்ணியம் செய்ய இயலும்? என்றிருக்கின்ற மனத்திற்கு ஆரூர்த் தொழுதுய்யலாம் என உபாயந் தெரிவிக்கின்றார்.

செடி - முடைநாற்றம். நோய் யாக்கை - நோயுடைய உடலானது. பாம்பின்வாய்த் தேரைவாய்ச் சிறுபறவை கடிகொள் பூந்தேன் சுவைத்து இன்புறல் ஆம் - பாம்பின் வாயில் பிடிபட்ட தேரை, அந்தத்தேரைவாயில் பிடிபட்ட வண்டு, அந்தவண்டு மணமுள்ள பூத்தேனைச் சுவைப்பது போன்றது நீ யடையும் இன்பம் என்பதாம். வானவர் ஏத்தும் அடிகள்என்றது அவர் விரும்பாதசேவருலகிலேயே பெருமான் எழுந்தருளியிருக்கின்ற காலத்து ஏத்திய தொடர்பாலும், அன்புடன் ஏத்த மறந்த குறையாலும் அவரே விரும்பி எழுந்தருளுகின்ற இத்தலத்து வந்து அன்புடன் ஏத்துகிறார்கள் என்பதாம்.



ஏறுமால் யானையே சிவிகையந் தளகமீச்
சோப்பி வட்டில்
மாறிவா முடம்பினார் படுவதோர் நடலைக்கு
மயங்கி னாயே
மாறிலா வனமுலை மங்கையோர் பங்கினர்
மதியம் வைத்த
ஆறனா ரூர்தொழு துய்யலா மையல்கொண்
டஞ்சல் நெஞ்சே. 7

7. தோன்றியழியும் உடம்பினையுடையாராயும் சிலர் எடுபிடிகளுடன் புறப்படும் நடலையைக்கண்டு அதனை நிலையென்று எண்ணி மயங்குகின்றாயே! நெஞ்சமே நீ உய்யும் நெறியுரைக்கக்கேள் என்கின்றார்.

மால்யானை - பெரியயானை. சிவிகை - பல்லக்கு. ஈச்சோப்பி - ஆலவட்டம். வட்டில் - தாமரைப்பூ வடிவான ஒருவகை விருது. மாறிவாழ் உடம்பு - தோன்றியழியும் உடம்பு; அன்றிக் கணந்தோறும் இளைத்தும் பருத்தும் குன்றியும் வளர்ந்தும் பரிணமைத்துடன் வாழ்கின்ற உடம்பு எனலுமாம். நடலை - அடக்கமற்ற வாழ்வு. மாறிலா வனமுலை மங்கை - என்றும் மாறாத இளமையும் அழகும் உடைய உமாதேவி. ஆறன் - திருமுடியில் கங்கையையுடையவன்.

என்பினாற் கழிநிரைத் திறைச்சிமண் சுவரெறிந்
திதுநம் மில்லம்
புன்புலா னாறுதோல் போர்த்துப்பொல் லாமையான்
முகடு கொண்டு

முன்பெலா மொன்பது வாய்தலார் குரம்பையின்
மூழ்கி டாதே
அன்பனா ரூர்தொழு துய்யலா மையல்கொண்
டஞ்சல் நெஞ்சே. 8

8. மேற்றைத் திருப்பாட்டில் 'செல்வக்களிப்பில் மயங்காதே' யென்று அறிவுறுத்தியவர்கள் இத்திருப்பாட்டில் 'உடல் ஒருவீடு. அது ஒன்பதுவாசலை உடையது. புலால் மணங்கமழும் தோல் போர்த்தியது. அதில் உறுதி வைத்து மயங்காதே' என்று யாக்கையினிழிவையும் நிலையாமையையும் உபதேசிக்கிறார்கள்.

உடலாகிற குடிலுக்கு என்பு கழி; இறைச்சியே அவர்மண்; புலால் நாறும் தோலே மேற்போர்த்திய ஓடு. பொல்லாமை முகடு. கன்மேந்திரியங்களில் இரண்டும் ஞானேந்திரியங்களில் ஏழுமாகிய ஒன்பதுமே வாயில்கள். ஆதலால், அதில் மயங்காதே. ஆரூர் தொழுதுய்யலாம் என்பதாம்.

தந்தைதாய் தன்னுடன் தோன்றினார் புத்திரர்
தார மென்னும்
பந்தநீங் காதவர்க் குய்ந்துபோக் கில்லெனப்
பற்றி னாயே
வெந்தநீ றாடியா ராதியார் சோதியார்
வேத கீதர்
எந்தையா ரூர்தொழு துய்யலா மையல்கொண்
டஞ்சல்நெஞ்சே.



9. உற்றார் உறவினரோடு இல்லறப்பற்றிலேயே இடர்ந்து மயங்கி, நமக்கெல்லாம் போக்கு எங்கே? என்று மயங்கும் மனத்திற்கு உபதேசிக்கும் பாடல் இது.

தாரம் புத்திரர் என்ன வேண்டியதே முறையாயினும் புத்திரர் தாரம் என்பது பந்தம் நீங்குதற்கு அருமை தோன்ற*. போக்கு - போக்கிடம். வெந்தாலல்லது நீறாகாதாயினும் வெந்தநீறு என்றது மற்றும் ஒருமுறை வேகவைத்தாலும் மாற்றமடையாத நீறு என்பது உணர்த்த.

நெடியவனும் பிரமனு நீண்டுமண் ணிடந்தின்ன
தேடிக் காணாப்
படியனார் பவளம்போ லுருவனார் பனிவளர்
மலையாள் பாக
வடிவனார் மதிபொதி சடையனார் மணியணி
கண்டத் தெண்டோள்
அடிகளா ரூர்தொழு துய்யலா மையல்கொண்
டஞ்சல் நெஞ்சே. 10

10: இங்ஙனமாக, நெஞ்சம் தன்னைப்பற்றி எண்ணிக்கொண்டிருந்த தகுதியின்மைகள் பலவற்றையுங்கூறி, தகுதியற்ற நீ உய்யமுடியாது என்று எண்ணியிராதே. ஆரூர்

* கௌதமபுத்தர் அரசுதுறந்தும், அழகிய மனைவியைத் துறக்க எண்ணியும், பிறந்த பிள்ளையைப் பார்த்துப் போவோம் என்றெண்ணியது காண்க.

தொழுதுய்யலாம் என உபாயம் உணர்த்திவந்த பிள்ளையார் இத் திருப்பாட்டில், பெருமான் அருமைப் பாட்டினையும், அவர் திருமேனி அழகினையும், அருளும் வள்ளற்றன்மை யையும் அறிவிக்கின்றார்.

நெடியமால் மண்ணிடந்தும் பிரமன் நீண்டும் தேடி இன்னுங் காணு எனக் கூட்டுக. நீண்டது - வானத்திற் பறந்தது. மணி - கருமை. படியனர் - தன்மையுடையவர்.

பல்லிதழ் மாதவி யல்லிவண் டியாழ்செயுங்
காழி யூரன்
நல்லவே நல்லவே சொல்லிய ஞானசம்
பந்த னூர்
எல்லியம் போதெரி யாடுமெம் மீசனை
யேத்து பாடல்
சொல்லவே வல்லவர் தீதிலா ரோதநீர்
வைய கத்தே. 11

11. இப் பத்துப் பாடல்களிலும் செல்வமுதலிய வற்றையும், தந்தை முதலிய உறவினரையும், களைகண் என எண்ணியும், தன் குறையைத் தானெண்ணியும், கடமையைத் தவிர்த்துக்கரையேற முயன்றும், முடியாமையான் படுகுழி வீழும் யானையைப்போல மயங்கும் மனத்திற்கு ஆரூர் தொழுதுய்யலாம் என ஒருமுகமாக உணர்த்தி, இத்திருப் பாடலால் இப்பத்துப்பாடலைச் சொல்லவல்லவர் தீதிலர் என்கின்றார்கள்.



## 4. திருவிராகம். பண் - நட்டராகம்.

இராகம்: பந்துவராளி.] [தாளம்: ரூபகம்.

திருச்சிற்றம்பலம்.

[விற்குடியை வணங்கிப் புறப்படுகின்ற தவஞானச் செம்மல் திருவாரூர்த் தொழுதுய்யலாம் என மனத்திற்கு அறிவித்துவந்த வர்கள் திருவாரூர்த் தொன்னகாம திருக்கண்ணிற் கிலக்காக, அதன் வெளித்தோற்றத்தைத் தூரத்தே கண்டு, 'இதுதானு அந்தணூர் என்பது' என அதன் அழகில் ஈடுபடுகின்றார்கள்.]

பருக்கையானை மத்தகத் தரிக்குலத் துகிர்ப்புக
நெருக்கிவாய நித்திலம் நிரக்குநீள் பொருப்பனூர்
கருக்கொள்சோலை சூழநீடு மாடமாளி கைக்கொடி
அருக்கன்மண்ட லத்தணாவு மந்தணூரு ரென்பதே. 1

இம் முதற்பாட்டு திருக்கயிலையை இடமாகக் கொண்ட இறைவனூர் இந்த ஆரூர்தானே! என்று வியக்கின்றது.

பருக்கையானை - பருத்த துதிக்கையினையுடைய யானை. அரிக்குலத்து உகிர் பருக்கையானை மத்தகத்துப் புக நெருக்கி வாயநித்திலம் நிரக்கும் பொருப்பு எனக்கூட்டுக. இதன்பொருள் சிங்கக்கூட்டத்தின் நகங்கள் யானையின் மத்தகத்திற் புகும்படி அழுத்த உகிர்வாயில் அடைந்த முத்துக்கள் எங்கும் உதிர்ந்து பரவும் கயிலை யென்பதாம். நெருக்கி - நெருக்குதலால் எனக் காரணப்பொருளில் வந்த வினைஎச்சம். இங்ஙனம் சிங்கமும் யானையும் செறிந்து,

முத்து முதலிய மணிகள் பொருந்திய பொருப்பனூர் எனத் திருக்கயிலையின் அழகு சிந்தைகொண்டது. கருக்கொள் சோலை - வளமிகுதியால் கருமை நிறங்கொண்ட சோலை. அருக்கன் மண்டலம் - சூரிய மண்டலம். அணுவும் - கலக்கும். இங்ஙனம் சோலையழகும், மாளிகை வளமும் மன்னிய ஆரூர், பிள்ளையார் கண்ட ஆரூர்.

விண்டவெள் ளெருக்கலர்ந்த வன்னிகொன்றை மத்தமும்
இண்டைகொண்ட செஞ்சடை முடிச்சிவ னிருந்தவூர்
கெண்டைகொண் டலர்ந்தகண்ணி னார்கள்கீத வோசைபோய்
அண்டரண்ட மூடறுக்கு மந்தணாரூ ரென்பதே. 2

2. தலத்தின் புறவழகுகள் யாவும் இறைவன் எண்ணத்தை மிகுவித்தலின், ஆரூரில் மாதர்கள் பாடும் இசை அண்டங்களை ஊடறுக்கின்றன என்கின்றார்.

விண்ட வெள்ளெருக்கு - வாய்விண்ட வெள்ளெருக்கம் பூ. மத்தம் - கருவூமத்தம்பூ. இண்டை - ஒருவகைமாலை. 'புல்லிலை யெருக்கமாயினும் தேவர் சூடேம் என்னார்' என்றாற்போல புல்லிய எருக்கம் பூவையும், முள்ளுள்ள வன்னியையும், மணமும் நிறமும் வழிவழகும் பொருந்திய கொன்றையையும், சிறுமணம் படைத்த ஊமத்தத்தையும் ஒப்பச் சூடும் முடிச்சிவன் என்றமையால் அவர் யாவரையும் ஆட்கொண்டருளும் பெருங் கருணைத்திறம் விளங்கும். கெண்டைகொண்டு அலர்ந்த கண்ணினார் - கெண்டை மீனின் செவ்வரியும், உருவமும் ஆகிய அழகினை வென்று மலர்ந்த கண்களையுடைய பெண்கள். அண்டரண்டம் - பல அண்டங்கள்.



கறுத்தநஞ்ச முண்டிருண்ட கண்டர்கால னின்னுயிர்
மறுத்தமாணி தன்றனாகம் வண்மைசெய்த மைந்தனூர்
வெறித்துமேதி யோடிமூச வள்ளைவெள்ளை நீள்கொடி
அறுத்துமண்டி யாவிபாயு மந்தணாரூ ரென்பதே. 3

3. முதற்பாட்டில், கொடி தெரியக்கூடிய தூரத்திலிருந்து ஆரூரைக்கண்ட பிள்ளையார் இரண்டாம்பாட்டில் இசைகேட்குந் தூரம் சென்று கண்டு, இந்தப்பாட்டில் எருமைமுதலியன குளத்துப்பாயும் புறநகர்க்காட்சியைக் கண்டு கூறுகிறார்கள்.

தேவர் பலரைக்காக்க நஞ்சமுண்ட பெருமான் ஒரு பிரமசாரியைக்காக்கக் காலனைக் காய்ந்தார். இங்ஙனம் அடைந்தாரைக்காக்கும் அண்ணல் ஊர் ஆரூர் என்று முடித்துப் பொருள்காண்க. இன்னுயிர் மறுத்து - மார்க்கண்டேயர் இனிய உயிரை அவன்வேண்ட மறுத்து. மாணி தன் ஆகம் - பிரமசாரியாகிய மார்க்கண்டேயருடைய உடலுக்கு. வண்மைசெய்த - உயிரைக்கொடுத்தலாகிய வள்ளன்மையைச் செய்த. மைந்தன் - வீரம்பொருந்திய இறைவன். மேதி வெறித்து ஓடி - எருமைகள் மருண்டு ஓடி. மூசுவள்ளை வெள்ளைநீள் கொடி - நெருங்கிய வெண்மையான வள்ளைக்கொடிகளை அறுத்து மண்டி - அறுத்து நெருக்கி. ஆவிபாயும் - குளங்களிற் பாயும். மேதி வள்ளைக் கொடிகளையறுத்துக் குளத்திற் பாயும். ஆரூர் எனவே ஆன்மாக்கள் கருக்கொடியறுத்துத் தண்ணிழலாம் பதி பெய்துமிடம் இதுவே என்பது பெறப்பட்டது.

அஞ்சுமொன்றி யாறுவீசி நீறுபூசி மேனியில்
குஞ்சியார வந்திசெய்ய அஞ்சலென்னி மன்னுமூர்
பஞ்சியாரு மெல்லடிப் பணைத்தகொங்கை நுண்ணிடை
அஞ்சொலா ரரங்கெடுக்கு மந்தணாரூ ரென்பதே. 4

4. சித்தம்ஒருக்கி வழிபடுவார்க்கு அபயம் அளிப்பவன் ஊர் ஆரூர் என்கிறது இப்பாடல். இது அரங்கெடுக்கும் மாதர் ஒலிகேட்கும் அண்மையில் அருளப்பெற்றது.

அஞ்சும் ஒன்றி - பொறிகள் ஐந்தும் தத்தம் புலன் வழிச் செல்லாது உள்ளத்தின் ஒருவழிப்பட்டு. ஆறு வீசி - காமமாதிய பகைகள் ஆறும் கெடுத்து. மேனியில் குஞ்சியார - நீராடியமையாமல் உலர்வதற்காக நுனியில் முடியிட்ட மயிர்முடி மேனியின்மீது பொருந்த. குஞ்சி - ஆண்மக்களின் தலைமயிர். அந்தி செய்ய - திருவந்திக்காப்பில் சென்றுவணங்க. இந்த திருவந்திக்காப்பு (சாயரட்சை) வழிபாடு சிறந்தது. இதனால் தியாகேசனுக்குத் திருவந்திக் காப்பழகர் என்றும் பெயர். அஞ்சல் என்னி - அஞ்சல் என்று சொல்லும் இறைவன். என்னி குறிப்பு வினையாலணையும்பெயர். பஞ்சியாரும் மெல்லடி - செம்பஞ்சுக் குழம்பு பூசப்பெற்ற மெல்லிய அடி, இசைக்கும், கூத்திற்கும் இனிமை கொடுப்பன இளமையும், மென்மையும், பெண்மையுமாதலின் பஞ்சியாரும் மெல்லடியினையும், இளமையாற்பணைத்த கொங்கையினையும், நுண்ணிடையினையும், அழகிய சொல்லினையும் உடைய பெண்கள் ஆடலரங்கு ஏறுகிறார்கள் என்றார்கள். அரங்கு எடுக்கும் - நாடக மன்றன் நடிக்கும். இதனால் ஐம்புல இன்பங்களும் ஆரத் துய்க்கும் அணங்கனார் அமைந்த ஆரூர் என்றது; அந்தி



செய்ய வருவார் அஞ்சும் ஒன்றி ஆறும் வீசுதற்கு இடையூறாயினும் தடையை வென்று பொறிகளைக் கட்டுவதே வீரமாதலின், அந்திசெய்ய வருவாரது புலப்பகைவென்ற வீரம் விளங்கிற்று.

சங்குலாவு திங்கள்சூடி தன்னையுன்னு வார்மனத்
தங்குலாவி நின்றவெங்க ளாதிதேவன் மன்னுமூர்
தெங்குலாவு சோலைநீடு தேனுலாவு சண்பகம்
அங்குலாவி யண்டநாறு மந்தணாரூ ரென்பதே. 5

5. இப்பாடல் உன்னுவார் மனத்து உலாவும் கருணையாளனாகிய இறைவனின் ஊர், செண்பக மணம் எங்கும் பரவி, அண்டங்களிலும் செல்லும் ஆரூர் என்கிறது.

சங்கு உலாவு திங்கள் - சங்கினையொத்த வளைந்த பிறை. அங்கு அசை. மனத்து உலாவி நின்ற எனக் கூட்டுக. உன்னுவார் மனத்தை யுல்லாசவனமாகக்கொண்டு உலாவிவருகின்றான் என்பது. செண்பகத்தில் வண்டுகள் மொய்க்காவாயினும் தேனுலாவு சண்பகம் என்றது பூவென்ற பொதுமை நோக்கி. தேனுலாவு சண்பகம் - தேனிறைந்த சண்பகம் என்றும் ஆம். வண்டு, தான் மொய்க்கத்தகாத சண்பகத்தும் உலாவிவருகின்றது என்றதால் உன்னுவார் மனம் எத்தகையதாயிருப்பினும் சென்று புகுகின்ற எளிவந்தகருணை விளங்குகிறது.

கள்ளநெஞ்ச வஞ்சகக் கருத்தைவிட் டருத்தியோ
டுள்ளமொன்றி யுள்குவா ருளத்துளா னுகந்தவூர்
துள்ளிவாளை பாய்வயற் சுரும்புலாவு நெய்தல்வாய்
அன்னனாரை யாரல்வாரு மந்தணாரூ ரென்பதே. 6

6. மனம் ஒருங்கித் தியானிப்பார் உள்ளத்து அறிவுருவாகிய இறைவன் இருக்கும் ஊர் ஆரூர் என்கின்றது.

கள்ள நெஞ்ச வஞ்சகக் கருத்தை விட்டு - பிறர் பொருளைக் கவர்வதே குறிக்கோளாகக்கொண்ட நெஞ்சத்திலுள்ள கவர்வதற்கான சூழ்ச்சிகளைச் செய்யும் கருத்தை நீக்கி. உள்குவார் - தியானிப்பார். வாளை துள்ளி பாய் வயல் என்றும், வயலிலேயுள்ள கரும்பு உலாவும் நெய்தல் என்றும், நெய்தல் வாய் ஆரல் நாரை வாரும் என்றும் கூட்டிப் பொருள் காண்க. நாரை உள்ளம் ஒன்றி சேற்றினின்று உழைப்பில்லாமலே நெய்தற்பூவினிடம் விழுந்த ஆரல்மீனை வாரிக் கொள்வதுபோல, உள்குவார் உள்ளத்து இறைவன் தானேவந்து அன்பர்கள் காண நித்யவாசம்பண்ணுகிறான் என்பதாம்.

கங்கைபொங்கு செஞ்சடைக் கரந்தகண்டர் காமனை
மங்கவெங்க ணால்விழித்த மங்கைபங்கன் மன்னுமூர்
தெங்கினூடு போகிவாழை கொத்திறுத்து மாவின்மேல்
அங்கண்மந்தி முந்தியேறு மந்தணாரு ரென்பதே. 7

7. மாரனை வென்ற வீரனாகிய தியாகேசன் எழுந்தருளிய ஊர் ஆரூர் என்கின்றது.

கண்டர் - கண்டத்தில் விசேடமுடையார்; கரந்த கண்டர் என்றபடி. ஈண்டுக் கண்டர் என்றது பெயர் மாத்திரையாய் நின்றது. மங்க - அழிய. வெங்கண் - நெற்றிக்கண். போகி - போக என்பதன் திரிபு. மங்கை பங்கனாக இருந்தும் காமனை யெரித்தமை கருதற்பாலது.



மந்தி தென்னையிலேற வாழைக்கொத்தை முறித்து, மாவில் முந்தியேறுகின்றன என்பதால் ஆன்மாக்கள் சிவபோக நெறியிற் சேர, பழுத்த-பழுக்க இருக்கின்ற வினைகளைக் கெடுத்து, இறையருள் துணைசெய விளங்குகின்றன என்ற பொருள் தோன்றுதல் காண்க.

வரைத்தலம் எடுத்தவன் முடித்தலம் முரத்தொடும்
நெரித்தவன் புரத்தைமுன் னெரித்தவ னிருந்தவூர்
நிரைத்தமாளி கைத்திருவி னேரனார்கள் வெண்ணகை
அரத்தவாய் மடந்தைமார்க ளாடுமாரு ரென்பதே. 8

8. வல்லாளனுக்கும் வல்லாளனாகும் இறைவன் இருக்கும் ஊர் மெல்லியலாராடும் ஆரூர் என்கின்றது.

வரைத்தலம் எடுத்தவன் - கைலையை அடித்தலத்தோடு பெயர்த்தெடுத்த இராவணன். உரத்தலம் - மார்பு. திருவின் ஏர் அனார்கள் - திருமகளின் அழகையொத்த மகளிர். அரத்தவாய் - செவ்வாய். ஏர் அன்னார்களாய மடந்தைமார்கள் என்க.

இருந்தவன் கிடந்தவன் இடந்துவிண் பறந்துமெய்
வருந்தியு மளப்பொணாத வானவன் மகிழ்ந்தவூர்
செருந்திஞாழல் புன்னைவன்னி செண்பகம் செழுங்குரா
அரும்புசோலை வாசநாறு மந்தணாரு ரென்பதே. 9

9. செருக்குற்றோர் இருவரது செருக்கடக்கிய இறைவன் ஊர் இதுவென்கின்றது.

இருந்தவன் - உந்தித்தாமரையிலிருந்தவனுய பிரமன். கிடந்தவன் - பாற்கடலிற் பாம்பணையிற் கிடந்தவனுகிய திருமால். இடந்து - தோண்டி. இருவரும் முயன்றும் அறியொணுத பெருமான் ஊராதலின் செருந்தி முதலிய பலவகை மரங்களின் மலர்மணமுங்கூடி அறியொணுதபடி இருக்கின்றது என்பதாம்.

பறித்தவெண் டலைக்கடுப் படுத்தமேனி யார்தவம்
வெறித்தவேடன் வேலைநஞ்ச முண்டகண்டன் மேவுமூர்
மறித்துமண்டு வண்டல்வாரி மிண்டுநீர் வயற்செநெல்
அறுத்தவா யசும்புபாயு மாரூரென் பதே. 10

10. புறச்சமயிகளாகியசமணர் தவம்வெறுத்த பெருமான் ஊர் அசும்புபாயும் ஆரூர் என்கின்றது.

பறித்த வெண்டலை - மயிர்பறித்த வெண்டலை. புதிதாகப் பறித்தமையின் வெண்டலையாயிற்று. கடுப்படுத்த மேனியார் - கசப்புப் பொருள்களைத்தேய்த்த மேனியை உடைய சமணத்துறவிகள். மேனிமேல் 'இங்குதி' (புன்னைக் கொட்டை) எண்ணெய் பூசிக்கொள்ளுதல் மரபு வெறித்த - வெறுத்து நோக்கிய. வேடன் - கிராத வடிவு கொண்ட இறைவன். மறித்துமண்டு வண்டல் வாரி - இடை மறிக்கப் பட்டமையால் மண்டிய வண்டல் மண்ணை வாரிச்செல்கின்ற. மிண்டு - மிக்க. வயற்செந்நெல் அறுத்த வாய் - வயலிலே செந்நெற் பயிரறுத்த இடங்களில். அசும்பு பாயும் - நீரூற்று மிக்கு, வழுக்கு நிலமாகப் பாயும் ஆரூர் என்க. அணைகட்டிய நீர் இடங்கண்ட இடங்களில் அசும்பு பாய்ந்தாவது வெளிப்படுவதுபோல, தலைபறித்தலும், மேனிகசப்பெண்ணெய் பூசுதலுமாகிய தவ ஒழுக்கத்தான் மனத்தைத் தடைப்படுத்தினுலும், உள்ளத்துறவு இன்மையால், உள்ளம் புறம்பே செல்லும் ஒழுக்கத்தர் சமணர் என்பதும், அதனுலேயே இறைவன் வெறித்தார் என்பதும் கருதற்குரியன.



வல்லிசோலை சூழ்ந்துமன்னு வீதி பொன்னுலா
அல்லிமா தமர்ந்திருந்த வாரூரா தியை
நல்லசொல்லு ஞானசம் பந்தனாவி னின்னுரை
வல்லதொண்டர் வானமாள வல்லர்வாய்மை யாகவே. 11

11. இத்திருப்பாடல்களில் இறைவனை, வீரம் அழகு வள்ளன்மை முதலிய குணங்களையுடையவனுகக் கண்ட பிள்ளையார், அவனுடைய ஊரைப் பலவகை இயற்கை நலன்களுஞ் செறிந்தனவாகப் பார்த்து, இறுதிப் பாடலில், ஆரூர் ஆதியைச்சொன்ன பாடல் பத்தையும் பயின்றார் எய்தும் பயனை விளக்குகின்றார்.

வல்லி - கொடி. சூழ்தல் - மா பொன் உலா அல்லி மாது - பொன்னிறமான அகவிதழில் இருக்கும் திருமகள். ஆரூர் ஆதியை நல்லசொல்லும் ஞானசம்பந்தன் - தியாகேசனைப்பற்றிச் சிறந்தன கூறும் திருஞானசம்பந்தன். உரை வல்ல தொண்டர் வாய்மையாகவே வானம் ஆளவல்லர் எனக்கூட்டுக. வானத்திலுள்ள இன்பங்கள் பலவற்றையும் திருவாரூரில் உள்ளனவாகத் திருப்பாட்டிற் கண்டாராகலின் அப்பாடல்வல்லார் இந்திரர்களாகி ஆளவல்லார் என்பதாம்.

## 5. பண் - கௌசிகம்

இராகம்: பைரவி] [தாளம்: ஆதி.

திருச்சிற்றம்பலம்.

[இவ்வண்ணம் ஆரூர் இயற்கைகளைச் சிவபெருமான் தோற்றமாகத் தெளிந்து, அணுகிய பிள்ளையார், திருவாரூரை அணுகியவுடன் "சித்தம்தெளிவீர்காள்" என்றதிற் கூறியபடி மலர் தூவி, வாழ்த்தி, வணங்கி, உட்புகுந்து, பெருமான் என்னையும் ஒன்று கொள்ளுமோ? என்னை அஞ்சல் என்றது என்? வாடாதே என்றது என்? என்று வினவுகின்றார்கள்]

அந்த மாயுல காதியு மாயினான்
வெந்த வெண்பொடிப் பூசிய வேதியன்
சிந்தை யேபுகுந் தான்திரு வாரூரெம்
எந்தை தானெனை யேன்றுகொ ளுங்கொலோ. 1

இப்பாட்டு, எல்லாமாய இறைவன் என்னை ஏன்று கொள்வனோ என்பதை விளக்குகிறது.

அந்தமாய் உலகு ஆதியும் ஆயினான் - உலகத்திற்கு இறுதியாகவும், முதலாகவும் உள்ளவன். 'அந்தம் ஆதி என்மனார் புலவர்' என்பராதலின் இவ்வாறு கூறினர். ஆதியுமாயினான் என்ற உம்மை திரிகாலத்தும் உதவியாய் இருத்தலை உணர்த்தியது. வெந்த வெண்பொடி யென்பதற்கு வெந்த நீறு என்றதற்குரைத்தது கொள்க. சிந்தையே புகுந்தான்—ஆன்மாக்கள் புகுத்துஞ் சுதந்தரத்தை என்றைக்கும் பெற்றன இல்லை ஆதலால், எளிவந்த கருணையால் தானே வந்து புகுந்தான்.



ஆதியுமாயினான் என்றதால் அருமையும், வேதியன் என்றதால் அறிவுக்கு இலக்காகும் எளிமையும், புகுந்தான் என்றமையால் மிகுந்த சௌலப்பியமும், எந்தை என்றதால் தந்தை உரிமையும் மாறிமாறி உள்ளத்தில் தோன்ற ஏன்றுகொள்ளுங்கொலோ? என்று ஐயமுற்றார்.

கருத்த னைக்கரு தார்புர மூன்றெய்த
ஒருத்த னையுமை யாளொரு கூறனை
திருத்த னைத்திரு வாரூரெந் தீவண்ணனை
அருத்த னென்னை யஞ்சலென் றததே. 2

2. ஐயமுற்ற பிள்ளையாருக்கு ஐயத்தின் வழியாக அச்சம் தோன்ற, அஞ்சல் என்றது என்? என்று இப் பாடல் எழுகின்றது.

கருத்தன் - தலைவன். கருத்தில் உள்ளவன் என்றுமாம். கருதார் - பகைவர். திருத்தன் - பரிசுத்தன்; நிறைந்தவன் என்றுமாம். இது திருப்தன் என்றதன் சிதைவு. அருத்த - பொருளாக உள்ளவனே. தலைவனாயிருந்தும் ஒப்பற்ற வீரனாயிருந்தும் கருணைவடிவான உமையாள் ஒருகூறனாயிருந்தும் திருத்தனாயிருந்தும் பொருளாயிருந்தும் என்னை அஞ்சல் என்றது ஏன் என்கின்றார்கள்.

மறையன் மாமுனி வன்மரு வார்புரம்
இறையின் மாத்திரை யில்லெரி யூட்டினான்
சிறைவண் டார்பொழில் சூழ்திரு வாரூரெம்
இறைவன் றானெனை யேன்றுகொ ளுங்கொலோ. 3

3. மீட்டும் என்றுகொளுங்கொலோ என்று ஐயம் தோன்ற அருளிச் செய்கின்றார்.

மறையன் - வேதங்களையுடையவன். மருவார் - பகைவர். இறையின் மாத்திரை - கணப்பொழுது.

பல்லி லோடுகை யேந்திப் பலிதிரிந்
தெல்லி வந்திடு காட்டெரி யாடுவான்
செல்வ மல்கிய தென்திரு வாரூரான்
அல்லல் தீர்த்தெனை யஞ்ச லெனுங்கொலோ. 4

4. மீட்டும் ஏற்றுக்கொள்வதுமட்டும் அன்றி அதன் மேனிலையாகிய அபயமளித்தலையும் செய்யுமோ! என்கிறார்.

பல் இல் ஓடு - பல்லில்லாத கபாலம்; பிரம கபாலம். பலி - பிச்சை. அல்லல் - பிறவிநோய்

குருந்த மேறிக் கொடிவிடு மாதவி
விரிந்த லர்ந்த விரைகமழ் தேன்கொன்றை
திருந்து மாடங்கள் சூழ்திரு வாரூரான்
வருந்தும் போதெனை வாடலெ னுங்கொலோ. 5

5. இறைவன் அஞ்சல் என்பது மட்டும் அமையாது, வாடாதே என்றும் கருணைவழங்கவும் வேண்டும் என்கின்றார்.

மாதவி - குருக்கத்தி. திருந்துமாடங்கள் - அழகால் திருந்திய மாடங்கள். மாதவியும், கொன்றையும், மாடங்களும் சூழ்ந்த ஆரூர். பெயல்வேண்டும் பொழுதில்



மழைபெற்றாற் போலத் துணைவேண்டியகாலத்து வருந்தாதே என்னுமோ! என்றார்.

வார்கொண் மென்முலை யாளொரு பாகமா
ஊர்க ளாரிடு பிச்சைகொ ளுத்தமன்
சீர்கொண் மாடங்கள் சூழ்திரு வாரூரான்
ஆர்க ணுவெனை யஞ்சலெ னாததே. 6

6. இறைவற்கும் தமக்கும் உரிமைமிக, இதுவரை அஞ்சற்க என்னுமோ? என்று ஐயப்பாட்டிலிருந்த பிள்ளையார் ஐயம் நீங்கி, அஞ்சல் என்னாதது என் என்று உரிமையுடன் உசாவுகிறார்.

வார் - கச்சு. ஊர்களார் - ஊரிலுள்ளார். ஊரார்கள் என்பது எதுகையான் மாறியது. ஆர்கணு - அன்பத்தை யுடையவனே. என்னை 'ஆர்கணு! அஞ்சல் என்னாதது என்' எனக்கூட்டுக.

வளைக்கை மங்கைநல் லாளையோர் பாகமாத்
துளைக்கை யானை துயர்படப் போர்த்தவன்
திளைக்குந் தண்புனல் சூழ்திரு வாரூரான்
இளைக்கும் போதெனை யேன்றுகொ ளுங்கொலோ. 7

7. இளைப்பு வந்த காலத்து, இவன் இளைத்தவன் அடிமைக்கு உதவான் என்று விலக்குதல் அன்றே ஆண்டான் செய்யுந் தொழில் என்ற எண்ணம் திருவுள்ளத்து எழ, என்றுகொளுங்கொலோ என்கின்றார்.

மங்கை நல்லாளை......போர்த்தவன்-அச்சம் பெண்கள் குணமாயிருக்க, அதனையுடைய உமாதேவியாரை ஒரு பாகமாகக் கொண்டிருந்தும் யானையின் தோலைப் போர்த்தவன் என்கின்றார். திளைக்கும் - கரையோடு மோதுகின்ற. இளைக்கும்போது - என்னுடைய ஒறுப்புத்தன்மை போகும்படி வினைகள் திரண்டு வந்து இளைக்கச்செய்த காலத்தும்.

இலங்கை மன்ன னிருபது தோளிறக்
கலங்கக் கால்வி ரலாற்கடைக் கண்டவன்
வலங்கொள் மாமதில் சூழ்திரு வாரூரான்
அலங்கல் தந்தெனை யஞ்சலெ னுங்கொலோ. 8

8. சென்ற திருப்பாடல்களில் தன்னை இளைத்தவனாகவும் வருந்தியவனாகவும் கண்ட பிள்ளையார், இத் திருப்பாடலில் தன்னைக் காதலியாக எண்ணி, காமம் மிகத் தடைபட்ட நீருக்கு ஒரு போக்கு விடுமாப்போலே என் விருப்பத்தை, தன்னைத்தந்து தியாகேசன் தணிக்காவிட்டாலும் தான் அணிந்த மாலையைத் தந்தாவது அபயம் அளிக்குமோ என்கின்றார்.

கடைக்கண்டவன் - உறுதியைக் கண்டவன். அலங்கல் - மாலை; திருமார்பிற்கிடந்து இங்கும் அங்குமாக அசைதலால் அலங்கல் ஆயிற்று. இது தொழிலாகுபெயர். மாலை திருமார்பைத் தீண்டியது ஆதலின் இவரும் விரும்பினர்.



நெடிய மானும் பிரமனும் நேர்கிலாப்
படிய வன்பனி மாமதிச் சென்னியான்
செடிக ணீக்கிய தென்றிரு வாரூரெம்
அடிகள் தானெனை யஞ்சலெ னுங்கொலோ. 9

9. காதலனாக எண்ணிய பிள்ளையார், இப்பாட்டில் இறைவனை அடிகளாக எண்ணி அபயம் வேண்டுகிறார்.

நேர்கிலாப் படியவன் - காண முடியாத தன்மையுடையவன். பனி - குளிர்ச்சி. செடிகள் - குற்றங்கள். பிறவிக் குற்றங்களாகிய அனைத்தும் திருவாரூரில் வசித்தால் தீரும் பிறவியாகிய குற்றம் திருவாரூரில் பிறந்தால் தீரும்.

மாசு மெய்யினர் வண்டுவ ராடைகொள்
காசை போர்க்குங் கலதிகள் சொற்கொளேல்
தேச மல்கிய தென்றிரு வாரூரெம்
ஈசன் றனையே யென்றுகொ ளுங்கொலோ. 10

10. தம் நெஞ்சைப்பார்த்துச் சொல்வாராக, 'கீழ் மக்கள் சொல்லைக்கேளாதே என்று பணித்து' இறைவனை என்றுகொள்ளச் சொல்கிறார்.

மாசுமெய்யினர் - அழுக்குத் தேய்த்துக் குளித்தலைனத் துறவிகள் மாபு அன்று ஆகலின் மாசுமெய்யினர் என்றார். வண்துவர் ஆடை - கடுங்காவி ஆடை. காசை போர்க்கும் கலதிகள்-குற்றத்தால் மூடிய கீழ் மக்களாகிய சமணர்கள். சொல் அத்தி நாத்தி என்னும் சொல். தேசம் மல்கிய திருவாரூர்-உலகமெல்லாம் நிறைந்த புகழினையுடைய திருவாரூர்; ஒளிமிக்க திருவாரூர் என்று உரைத்தலுமாம்.

வன்னி கொன்றை மதியொடு கூவிளம்
சென்னி வைத்த பிரான்திரு வாரூரை
மன்னு காழியுண் ஞானசம் பந்தன்வாய்ப்
பன்னு பாடல்வல் லார்க்கில்லை பாவமே. 11

11. பத்துப் பாடல்களிலும் பரமேசுவரனைத் தந்தையாகவும், காதலனாகவும், அடிகளாகவும், ஈசனாகவும், பொருளாகவுங் கண்டு, அபயமளித்து, ஏற்றுக்கொள்ளும் படி வேண்டியவர்கள் திருக்கடைக்காப்பாகிய இதில் அப் பத்துப் பாடல்களையும் வல்லார் எய்தும் பயனை விளக்குகிறார்.

முள்ளோடு கூடிய வன்னியையும், மணமும் வடிவழகுங் கூடிய கொன்றையையும் விரும்பிச் சூடுகின்ற இறைவன் உடற்குறையுற்ற சந்திரனையும் ஒக்கச் சூடினார் என்றமையின் குற்றவர், மற்றவர் யாவரையும் ஒக்க ஆளும் கருணைத் திறமுடையான் என்பதை விளக்கினார்.

பன்னுபாடல் - இறைவன் குணங்களில் ஈடுபட்டு ஒன்றையே பலகால் சொல்லிய பாடல். இப்பாடல் பத்தும் வல்லார்க்குப் பாவம் இல்லை என்பதாம்.

உ

சிவமயம்

# தேவாரம்

## திருநாவுக்கரசு சுவாமிகள்

அருளிச்செய்தவை.

## 6. பண் - காந்தாரம்

இராகம்: நவரோஸ்] [தாளம்: ரூபகம்

திருச்சிற்றம்பலம்

[அப்பரடிகள் திருச்சேறை, விளமர் முதலியதலங்களை வணங்கிக் கொண்டு, அடியார்கள் வரவேற்க ஆரூரையடைந்தார்கள். புற்றிடங் கொண்டபெருமானையும், செல்வத் தியாகேசனையும் வழிபட்டு, நற்றொண்டும் சொற்றொண்டுஞ் செய்து எழுந்தருளியிருக்கின்ற காலத்து, ஒருநாள் நாடிய ஆர்வம் ஒருகாலைக் கொருகால் மண ஊற்றுப்போலப்பெருகிற்று; அதனால் மனங்கரைந்து உருகிப் "பாடிளம் பூதத்தினானும்" என்னும் ஆரூர்ப்பெருமான் தூயப்புகளை விளக்கும் இத்திருப்பதிகத்தை அருளிச்செய்தார்கள்.

இப்பதிகத்துள்ள பத்துப்பாடல்களுமே, ஆரூரமர்ந்த அம்மான் நித்தவாநிதன்; உலகமே வடிவானவன்; அவனணி பாம்பு, ஆடை தோல் எனவும், பேசற்கரிய பிறவியல்புகளும் உடையவன் எனவும் தெரிவிக்கின்றன.

பாடிளம் பூதத்தி னானும் பவளச்செவ் வாய்வண்ணத் தானும்
கூடிள மென்முலை யாளைக் கூடிய கோலத்தி னானும்
ஓடிள வெண்பிறை யானு மொளிதிகழ் சூலத்தி னானும்
ஆடிளம் பாம்பசைத் தானு மாரூ ரமர்ந்தவம் மானே. 1

1. இப்பாட்டு ஆரூர்ப்பெருமானுடைய படையும், நிறமும், கோலமும், அணியும் இவையென எடுத்துக்காட்டுகிறது.

பாடு இளம்-பூதம்; இறைவனது ஆடற்கேற்பப் பாடுகின்ற இளையபூதம். அழியாத பூதமாதலின் இளம்பூதம் என்றார். கூடு இள மென் முலையாள்-நானிடைபுகாது கூடிய இளமை நீங்காத மெல்லிய முலையுடைய உமாதேவி. கோலம்-அழகு. ஓடு இளவெண்பிறை - விநாயகப்பெருமானுடையதும், தக்கனுடையதுமான சாபத்திற்கு அஞ்சி ஓடிய பிள்ளைப்பிறை. இளமை ஓடு பிறையெனப் பிரித்துக் கூட்டி ஒளிமழுங்கிய பிறையெனக் கருத்துப்பொருள் காண்பாரும் உளர். ஒளி - கண்டார் அஞ்சுந்தெறல்; சூலத்திற் கடை. "ஒளி திருன்" என்புழிப்போல. ஆடிளம்பாம்பு - நிக்கிய இறைவன் சூடியதால் பாம்பும் அழியாத இளமைபெற்றது. அசைத்தான் - கட்டியவன்.

நரியைக் குதிரைசெய் வானு நரகரைத் தேவுசெய் வானும்
விரதங்கொண் டாடவல் லானும் விச்சின்றி நாறுசெய் வானும்
முரசதிர்ந் தானைமுன் னோட முன்பணிந் தன்பர்க ளேத்த
அரவரைச் சாத்திநின் றானு மாரூ ரமர்ந்தவம் மானே. 2

2. முதற் பாட்டில், ஆரூர்ப்பெருமானுடைய வண்ணம், அணி, கோலம் முதலியவற்றைக் கூறிய அப்பாடி



கள், இப்பாட்டில் அவனியல்பு எம்மாற் சிறிது கூறப்பெறுவதாயினும் அவன் செய்யும் அருட்டிறம் இயம்புந் தரத்ததன்று. அகடித கடனசாமர்த்தியம் பொருந்தியவன் என்கிறார்.

இத்திருப்பாட்டில்; நரியைக் குதிரை செய்வான் - ஊனையே உண்டு, ஒற்றித்திரியும் நரியை, புல்லுண்டு நாட்டிற்கு அணிசெய்து போர்முதலியவற்றிற்குப் பயன்படும் குதிரையாகச் செய்யும் வன்மைவாய்ந்தவன் என்றது; ஆன்மவியல்பை அடியோடு மாற்றும் வல்லாளன் என்பதை விளக்கிற்று. இதனை மாணிக்கவாசக சுவாமிகட்கு நரியைக் குதிரையாக மாற்றிய திருவிளையாடலை யுட்கொண்டதென் பாரும் உளர். இதனைப் பற்றிய பேராராய்ச்சி யுண்டு. முடிவு காண்க. நரகர் - பாவங்களை மிகச்செய்த தீமையால் யாதனா சரீரங்கொண்டு கும்பீபாகம் முதலிய நரகத்தழுந்தியவர்கள். தேவு - புண்ணிய மிகுதியால் தேவசரீரங்கொண்டு கவற்சியற்று இன்பம் நுகர்பவர்கள். விரதங்கொண்டாடவல்லான் - மக்களால் விரதங்களாற் கொண்டாடவல்லான். அன்றி, பிறந்ததன்பயன் பெருமானைப் போற்றுதலே யென்று விரதமாகப் பக்குவிகளாற் கொண்டாடவல்லான். விச்சின்றி நாறு செய்வான் - விதையில்லாமலே முளைக்கச்செய்பவன். இக்கருத்து "விச்சதின்றியே விளைவு செய்குவாய்" என்ற திருவாசகத்தை யொத்திருத்தல் காண்க. இவை புணருற்பவம் வருமாறு உணர்த்துவன என்றும், தனக்கு ஒருவித்தும் இன்றியே தோன்றுவன் எனப் பொருள்படும் என்றும் சிவஞானசுவாமிகள் கூறுவார்கள். ஆனை முரசதிர்ந்து முன் ஓட - விழுப்பரையர் ஆனைமீது ஏறியிருந்து, அடிக்கின்ற முரச

ஒலித்துக்கொண்டு முன்செல்ல. இட, எத்த, சாத்தி னின்றனும் அம்மானே யெனக் கூட்டுக.

நீறுமெய் பூசவல் லானு நினைப்பவர் நெஞ்சத்து ளானும்
ஏறுகந் தேறவல் லானு மெரிபுரை மேனியி னானும்
நாறு கரந்தையி னானு நான்மறைக் கண்டத்தி னானும்
ஆறு சடைக்கரந் தானு மாரூ ரமர்ந்தவம் மானே. 3

3. அங்ஙனம் அளவிடற்கரிய வல்லமைகள் உடையவனாயினும், பலவும் எளிவந்த கருணையுடையவன் ஆரூரான் என அறிவிக்கிறது இப்பாடல்.

நீற்றினைத் திருமேனியின்கட் பூசுதலை ஒரு வல்லமையாகக் கூறலின், இது சர்வசங்காரத்திலெழுந்த நீறு எனக் கொள்ளக்கிடக்கின்றது. அங்ஙனம் காலங்கடந்தானாயினும் கனிவுடன் கருதுவார் கருத்தினுள்ளான் என்க. ஏறு - தருமவடிவான இடபம். ஏறவல்லான் என்றது அநுக்ரகரூபியாய் எழுந்தருளுநிலையை. கரந்தை - சிவகரந்தை.

கொம்புநல் வேனி லவனைக் குழைய முறுவல்செய் தானும்
செம்புனல்கொண் டெயின்மூன் றுந் தீயெழக்கண் சிவந்தானும்
வம்புநற் கொன்றையி னானும் வாட்கண்ணி வாட்டம தெய்த
அம்பர வீருரி யானு மாரூ ரமர்ந்தவம் மானே. 4

4. எளிவந்த கருணையனாயினும் முனைப்புக்கண் இடத்து, அதனையடக்கி யாள்பவன் என்கின்றது.



வேனிற்காலத் தோற்றத்தை யறிவிப்பன கொம்புகளாதலின் கொம்பு நல்வேனிலவன் என்றார்கள். வேனிலவன் - மன்மதன். குழைய முறுவல்செய்தான் - சோறு குழைந்தாற்போல உருவேயின்றிக் குழையப் புன்சிரிப்புச்செய்தான். மன்மதனைச் சிரித்தெரித்ததாகவும் தேவாரங்களில் பிரயோகம் பலவுள. அங்ஙனமே திரிபுரங்களை விழித்தெரித்ததாகவும் உள்ளன. செம்புனல் கொண்டு - சிவந்த நீரைக்கொண்டு. புரங்கள் மூன்றும் பொன் முதலிய உலோகப் பொருள்களாதலின் தீயெனச் சிவப்பவாயின. வம்பு - மணம். அம்பரம் - ஆடை.

ஊழி யளக்கவல் லானு முகப்பவ ருச்சியுள் ளானும்
தாழிளஞ் செஞ்சடை யானுந் தண்ணமர் திண்கொடி யானும்
தோழியர் தூதிடை யாடத் தொழுதடி யார்கள் வணங்க
ஆழி வளைக்கையி னானு மாரூ ரமர்ந்தவம் மானே. 5

5. அவற்றோடு, காலமாகிய அருவப்பொருளையும் அளப்பவனாக ஒருமேனியிலேயே உமையையும் உடையவன் என அறிவிக்கின்றது இப்பாடல்.

ஊழி - யுகவூழி, பிரமவூழி, மாவூழி, சர்வசங்காரவூழி முதலிய பலவூழிகள். உகப்பவர் - சித்தத்தைச் சிவன் பாலே வைத்துக் களித்திருக்கும் உண்மை ஞானிகள். தண்ணமர் திண்கொடியான் - குளிர்ச்சி பொருந்திய இடபக்கொடியையுடையவன். கொடிக்குக் குளிர்ச்சி அன்பர்களுடைய அகப்பகைகளையும்போக்க அபயமளித்த கருணை. தோழியர் - ஜய, விஜயை என்ற தோழியர்கள். தூதிடையாட - பிரணய கலகத்துத் தூதுபோய்க் கொண்டிருக்க. ஆழி

வளைக்கையினன் - கடற்கண்ணதாய சங்குவளையலை பணிந்த திருக்கரத்தையுடையவன். இறைவன் தனது திருமேனியின் இடப்பாகத்திலேயே வளையலணிந்த உமாதேவியை வைத்திருந்தும், அதனையறியாதே உடலுள் நாவழிப்பார் போல, தோழியர்கள் அம்மைக்கும் ஐயர்க்கும் உள்ள ஊடலைத் தீர்த்துவைக்கத் தூதுசெல்கின்றனர். இந்த நிலையுணர்ந்த அடியார்கள் சத்தன் சக்தியோடு இருக்கும் உண்மைநிலை கண்டு தொழுகின்றார்கள் என அனுக்கிரா யிருந்தும் தோழியர்க்கு அருள்வாய்ப்பின்மையும், அடியார்க்கு அஃதுண்மையும் காட்டியருளுகின்றார்கள். அன்றி, ஆழி வளைக் கையினன் என்பதற்குச் சங்கு தரித்த திருமால் வடிவினன் என்று பொருள் கொள்வாரும் உளர். அந்தப்பொருள் "தோழியர் தூது இடையாட" என்பதற்குப் பொருந்துமாறின்மை காண்க.

ஊர்திரை வேலையுள் ளானு முலகிறந் தொண்பொரு ளானும்
சீர்தரு பாடலுள் ளானுஞ் செங்கண் விடைக்கொடி யானும்
வார்தரு பூங்குழ லாளை மருவி யுடன்வைத் தவனும்
ஆதிரை நாளுகந் தானும் மாரூ ரமர்ந்தவம் மானே. 6

அங்ஙனம் காலங்கடந்த கடவுள் எங்குமாய் இருக்குந் தன்மையை இப்பாடல் அறிவிக்கின்றது.

ஊர்திரைவேலை - திரையூர்வேலை; அலைமோதுங் கடல். உலகிறந்த ஒண்பொருளான் - மாயாகாரியமான உலகிற்கு அப்பாற்பட்ட ஒளிப்பொருளானவன். கடந்தபொருளாயினும் தெய்வப் பாடலுள் அவனைக்காணலாம் என்பது சீர்தருபாடலுள்ளான் என்பதால் அறிவிக்கப்பெறுகின்றது.



தொழற்கங்கை துன்னிநின்றார்க்குத் தோன்றியருளவல்லானும்
கழற்கங்கை பன்மலர் கொண்டு காதல் கனற்றநின் றானும்
குழற்கங்கை யாளையுள் வைத்துக் கோலச்சடைக்கரந் தானும்
அழற்கங்கை யேந்தவல் லானு மாரூ ரமர்ந்தவம் மானே. 7

7. பாற்கடலுள் பரவிநின்ற அமுதம்போல இறைவன் கடலுள்ளும், உலகிலுள்ளும், பரவியும் அவற்றைக் கடந்தும், பாடலுள், பரவி நின்றானும் அவனை வெளிப்படுக்க ஒரு சிறு உபாயம் உண்டு. அதுதான் பூவும் நீருங் கொண்டு போற்றுதல் என்றறிவிக்கிறது இப்பாடல்.

தொழற்கு அங்கை துன்னி நின்றார்க்கு - வணங்கக் கைகளைச்சேர்த்து நின்றவர்களுக்கு. தோன்றி - எளிமை வெளிப்பட்டு. கழற்கு அங்கை பன்மலர் கொண்டு காதல் கனற்ற - திருவடிகட்குச் சாத்தக் திருக்கரங்களில் பல மலர்களை ஏந்தி அன்பு மேன்மேலும் தீக்கொழுந்து விடுமாப்போல மிக. குழல் - கூந்தல்.

ஆயிரந் தாமரை போலு மாயிரஞ் சேவடி யானும்
ஆயிரம் பொன்வரை போலு மாயிரந் தோளுடை யானும்
ஆயிர ஞாயிறு போலு மாயிர நீண்முடி யானும்
ஆயிரம் பேருகந் தானு மாரூ ரமர்ந்தவம் மானே. 8

8. அங்ஙனம்தொழ வெளிப்படுகின்ற இறைவன் அன்பர்கட்கு எங்கும் திருவடியாய், எங்கும் தோளாய், எங்கும் முடியாய்க் காட்சி வழங்குவன் என்கின்றது இப் பாடல்.

ஆயிரம் என்பது அளவிறந்தன என்னும் பொருட்டு. ஆயிரம் நீண்முடியான் என்றது 'சகஸ்ரசீர்ஷ: புருஷ' என்னும் வேதமந்திரத்தை நினைவூட்டுவது.

வீடரங் காநிறுப் பானும் விசும்பினை வேதி தொடர
ஓடரங் காகவைத் தானு மோங்கியோ ரூழியு ளானும்
காடரங் காமகிழ்ந் தானுங் காரிகை யார்கண் மனத்துள்
ஆடரங் கத்திடை யானு மாரூ ரமர்ந்தவம் மானே. 9

9. இறைவன் எங்கும் பரவியிருந்து, பசித்த மகனுக்கு உணவும், பசியாத மகனுக்கு மருந்தும் கொடுக்கும் தாய்போல வணங்குவார்க்கு வீட்டையும் செருக்கியவர்க்கு மயக்கத்தையும், அளித்து, இடுகாட்டிலும், ஆடரங்கத்திலும் காட்சியளிக்கின்றான் என்கின்றது இப்பாடல்.

வீடு அரங்கா நிறுப்பான் - பக்குவான்மாக்களுக்கு முத்தியுலகையே தங்குமிடமாக நிலைபெறச்செய்பவன். வேதி - வேதமோதிய பிரமன். வேதி தொடர விசும்பினை ஓடு அரங்காவைத்தான் என்றது மனங்குவிந்து இருந்து நோக்க வேண்டிய பிரமன் வேதியாயிருந்தும் விசும்பிற் றேடிப் பறந்தமையால் விசும்பை ஓடுதற்குரிய இடமாக வைத்தான் என்பது விளங்குகின்றது. ஓங்கி ஓர் ஊழியுள்ளான் - நெருப்பு மலையாக வளர்ந்து ஓர் ஊழிக்காலம் உள்ளவன். இது பன்றியான திருமாலுக்காக வளர்ந்தமை கூறியது. காரிகையார்கண் மனத்துள் - ஆடுகின்ற பெண்களின் கண்ணுள்ளும் மனத்துள்ளும். அங்ஙனமே அவர்கள் ஆடுகின்ற அரங்கத்திலும் இருப்பவன் என்பதாம்.



பையஞ் சுடர்விடு நாகப் பள்ளிகொள் வானுள்ளத் தானும்
கையஞ்சு நான்குடை யானைக் கால்விர லாலடர்த் தானும்
பொய்யஞ்சி வாய்மைகள் பேசிப் புகழ்புரிந் தார்க்கருள் செய்யும்
ஐயஞ்சி னப்புறத் தானு மாரூ ரமர்ந்தவம் மானே. 10

10. ஆரூரமர்ந்தபெருமான் திருமாலின் நெஞ்சத்திருந்தும் தத்வாதீதனாக விளங்குகின்றார் என்று அறிவிக்கிறது இப்பாடல்.

பை அம் சுடர்விடு நாகம் - படங்களில் அழகிய மாணிக்கவொளி வீசுகிற ஆதிசேடன். தியாகேசப்பெருமான் திருமாலின் நெஞ்சத்திருந்து அஜபா நடனங்கொண்டவராதலின் உள்ளத்தான் என்றார். கை அஞ்சு நான்கு உடையான் - இருபது கைகளையுடைய இராவணன். புகழ் புரிந்தார் - இறைவன் புகழை விரும்பிய அடியார்கள். ஐயஞ்சு - இருபத்தைந்து. அவை ஆன்மதத்துவங்களாகிய இருபத்தைந்து.

## 7. பழமொழி - பண் - காந்தாரம்

இராகம் - நவரோஸ்] [தாளம் - ஜம்பை.

திருச்சிற்றம்பலம்.

[அப்பர்சுவாமிகள் திருவாரூரில் எழுந்தருளியிருக்கின்ற காலத்துத் தேவாசிரய மண்டபத்தைச்சார்ந்து, அதில் எப்பொழுதும் கூடியிருக்கின்ற அடியார்களின் சிவப்பேரின்பமயச் சிந்தையைக்கண்டு இத்தனைநாளும் இந்த ஆனந்தக்களிப்பில் யாமும் மூழ்கித் திளைக்கும் பேறு பெற்றிலேமே! என்ற செயலறவு சிந்தையில் மிக, இந்தப் பதிகத்தை யருளிச்செய்கின்றார்கள்.

சைவமாம் சமயஞ்சாரும் ஊழ்பெறலரிதெனப் பேசியிருப்பினும் பூர்வபுண்ணிய விசேடத்தால் அந்த நல்லூழ் வாய்க்கப்பெற்றும், நம்பர் அருளாமையினால், புறச்சமயம் போய்ச் சென்னே காலங் கழித்தமைக்கு இரங்கி, எளியோர்க்குத் தாரணைபுகலா போகங்களைத் தந்தாட்கொண்ட நாயனார்க்கு ஆட்செய்யாதே அவமாயினேன்; என, இந்தப்பதிகத்தால் தன்னிலை கூறுவார்போல, உலக மக்களாகிய நமக்கு உண்மையுணர்த்தியருளுகிறார்கள்.]

மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்த
மேனியான் தாள்தொழாதே
உய்யலா மென்றெண்ணி யுறிதூக்கி
யுழிதந்தென் னுள்ளம் விட்டுக்
கொய்யுலா மலர்ச்சோலைக் குயில்கூவ
மயிலாலு மாரூ ரரைக்
கையினாற் றொழாதொழிந்து கனியிருக்கக்
காய்கவர்ந்த கள்வ னேனே.

1. பழத்தோட்டத்தில் திருடப்போயும் கனியிருக்கக் காயைத் திருடியதுபோல, அடியேன் வாழ்க்கை அவலமாயிற்று என்று அறிவிக்கின்றார்கள்.

சண்ணித்தல்-நிரப்பப்பூசுதல். 'எண்ணி' என்றமையால் எண்ணம் ஈடேறாமை யுணர்த்தியவாறு. உறிதூக்கல்-கையில் கமண்டலம்வைத்த உறியைத் தூக்கிவருதல் சமணர்களுக்கு மரபு. உள்ளம் விட்டு- மனத்தைப் புறம்பே விட்டு. கனிஇருக்கக் காய்கவர்ந்தகள்வன் ஒருபழமொழி. 'இனிய உளவாக இன்னாதகூறல் கனியிருப்பக் காய் கவர்ந்தற்று' குறள். ஆலும் - ஆடும். இந்தப்பாடலால் தொழாமையினால்உண்டாகும் தீமை சொல்லப்பெற்றது.



என்பிருத்தி நரம்புதோல் புகப்பெய்திட்
டென்னையோ ருருவ மாக்கி
இன்பிருத்தி முன்பிருந்த வினைதீர்த்திட்
டென்னுள்ளங் கோயி லாக்கி
அன்பிருத்தி யடியேனைக் கூழாட்கொண்
டருள்செய்த வாரூ ரர்தம்
முன்பிருக்கும் விதியின்றி முயல்விட்டுக்
காக்கைப்பின் போன வாறே. 2

2. தொழாமற்போனாலும் போகட்டும். இறைவன் திருமுன்னாவது இருந்திருக்கலாமே! அதனையும் இழந்தேன். என்ன நன்றிகெட்ட தன்மை! என்று கையாறை தெரிவிக்கின்றார்கள்.

'என்பிருத்தி.....உருவமாக்கி' என்ற பகுதி இறைவன் உடல்கொடுத்த நன்றியும், இன்பிருத்தி என்றது போகம் அளித்த நன்றியும், வினைதீர்த்திட்டு என்றது மலமாயை கன்மங்களைத் தீர்த்துப் பக்குவம் மேவச்செய்த பண்பாடும், உள்ளங்கோயிலாக்கி என்றது மனங் கோயிலாக்கொண்டருளிய மாண்பும், ஆட்கொண்டு அருள் செய்தது என்பது அருளிப்பாடும் அறிவிப்பன. ஒன்றற்கும் பற்றாத அடியேற்கு இத்தனை நன்றிசெய்த இறைவன் முன்பாவது இருந்து அநவரததரிசனம் செய்ய வேண்டுமே அதனையும் இழந்தேன் ஆதலால் என்னிலை முயல்விட்டுக் காக்கைபின் போன வேடன் கதையாயிற்று என்பதாம். கூழ்-முறைமை. கூழை என்பதன் குறையாகக் கொண்டு இழிந்த ஆளாக ஏற்று எனலுமாம்.

பெருகுவித்தென் பாவத்தைப் பண்டெலாங்
குண்டர்கடஞ் சொல்லை கேட்டு
உருகுவித்தென் னுள்ளத்தி னுள்ளிருந்த
கள்ளத்தைத் தள்ளிப் போக்கி
அருகுவித்துப் பிணிகாட்டி யாட்கொண்டு
பிணிதீர்த்த வாரூ ரர்தம்
அருகிருக்கும் விதியின்றி யறமிருக்க
மறம்விலைக்குக் கொண்டவா றே. 3

3. முன்பிருக்கும் வாய்ப்பேயன்றி, அணுக்கத் தொண்டனாக, அருகில் இருக்கும் வாய்ப்பிருந்ததே அதனையும் இழந்தேன் என்று அவலம் அறிவிக்கிறது இப்பாடல்.

குண்டர்கள் - சமணர்கள். சொல்லை கேட்டு பாவத்தைப் பெருகுவித்து என்றும், கள்ளத்தைத் தள்ளிப் போக்கி உருகுவித்து என்றும், பிணிகாட்டி யருகுவித்து ஆட்கொண்டு தீர்த்த ஆரூரர் என்றும் வினை முடிவுசெய்க. கள்ளம் - ஆணவம். அது இருந்தவரையில் மனம் உருக வில்லை; அதனைத் தள்ளியவுடன் உருகியது என்பதாம். பிணி - சூலை. அருகுவித்து - அணுகச்செய்து. அறம் இருக்க மறம் விலைக்குக் கொண்டவாறு - புண்ணியமிருக்கப் பாவத்தை விலைக்கு வாங்கியதுபோல,

குண்டனாய்த் தலைபறித்துக் குவிமுலையார்
நகைகாணா துழிதர் வேனைப்
பண்டமாய்ப் படுத்தென்னைப் பால்தலையிற்
றெளித்துத்தன் பாதங் காட்டித்



தொண்டெலா மிசைபாடத் தூமுறுவ
லருள்செய்யு மாரூ ரரைப்
பண்டெலா மறியாதே பனிநீராற்
பாவைசெயப் பாவித் தேனே. 4

4. மேலும் மேலும் தம்மறியாமை தம்மைக் கவற்ற அருகிருப்பதில் தவறினேன். அதுகிடக்க இருந்த இடத்தில் இருந்தாவது தியானித்திருக்கலாமே! அதுவும் செய்திலேன் என்று கவல்வதைக் காட்டுவது இப்பாடல்.

தலைபறித்து - தலைமயிரைக் கையாற் பிடுங்கி. இது சமணசந்நியாசிகள் மரபு. பெண்கள் நகைக்கவும் வெட்கமில்லாமல் நிர்வாணியாகத் திரிதலும் மரபு. பண்டமாய்ப் படுத்து - ஒருபொருளாக ஏற்றுக்கொண்டு. பால் தலையில் தெளித்தல் - தீண்டற்பாத்திரங்களைப் பால் தெளித்து அலம்பியெடுக்குமாறு போல் புறச்சமயஞ் சென்று தீண்டல்பட்ட என் தலையில் பால் தெளித்துத் தூய்மைசெய்து. பாதம் காட்டி - அருள் விளக்கந்தந்து. தொண்டு - தொண்டர். வேந்து அமைச்சு என்பனபோல தொழிலாகு பெயர். பனிநீராற் பாவை செய்யப்பாவித்தல் - கைவெப்பம் பட்டவுடன் நீராகும் பனித்தண்ணீரால் பதுமைசெய்ய எண்ணியது போல உறுதியற்ற புறச்சமயத்தினால் உறுதி யடைய எண்ணினேன் என்பதாம்.

துன்னாகத் தேனாகித் துர்ச்சனவர்
சொற்கேட்டுந் துவர்வாய் கொண்டு
என்னாகத் திரிதந்தீங் கிருகையேற்
றிடவுண்ட வேழையேனான்

பொன்னாகத் தடியேனைப் புகப்பெய்து
பொருட்படுத்த வாரூரரை
என்னாகத் திருத்தாதே யேதன்போர்க்
காதனா யகப்பட் டேனே. 5

5. அறியாமற் போனதற்காக வருந்துவது மிக, இறைவனை எந்நெறியில் இருத்தல் கடமையன்றே! அதனை யும் மறந்தேன், என்றறிவிக்கிறது இப்பாடல்.

ஊன் ஆகத்தேன் - (பயனின்றிப்) பருத்த உடம்பினன். அவர்வாய்க்கொண்டு - வாயிற் சொற்படி. என் ஆக - என்னபயன் உண்டாகவோ! இருகை இட ஏற்று உண்ட ஏழையேன் - இருகைகளிலும் மாதர் பிச்சையிட அதனை ஏற்று உண்ட அறிவிலியேன். பொன் ஆகத்து அடி யேனைப் புகப்பெய்த - பொன்போன்ற தமது நெஞ்சகத்து இரும்புபோன்ற அடியேனைப் புகச்செய்த; என்றது திரு வுள்ளத்தடியேனை இருத்திய தென்பதாம். அதாவது சிஷ்ய தேகத்தினின்றும் ஆன்மாவை வாங்கி ஆசாரிய இருதயத் தில்வைத்து ஆன்மாவைப் பரிசுத்தஞ் செய்தலாகிய தீக்கை முறையாம். ஏதன் - குற்றம் பொருந்தியவன். ஆதன் - குருடன்.

பப்போதிப் பவணனாய்ப் பறித்ததொரு
தலையோடே த்திரிதர்வேனை
ஒப்போட வோதுவித்தென் னுள்ளத்தி
னுள்ளிருந்தங் குறுதி காட்டி
அப்போதைக் கப்போது மடியவர்கட்
காரமுதா மாரூரரை
எப்போது நினையாதே யிருட்டறையின்
மலடுகறந் தெய்த்தவாறே. 6



6. மேலும், நெஞ்சம் அன்பில் ஆழங்காற் பட்டதாக, எப்போதும் நினையாமல் இளைத்தேனே! என்ற கையறு வைக் காட்டுகிறது இப்பாடல்.

பப்பு ஓதி - பரந்துபட்ட சமணசாத்திரங்களை ஓதி. பவணன் - சமணகுருமார் பட்டங்களில் ஒன்று. ஒப்புஓட ஓதுவித்து - அடியேற்கு யாரும் ஒப்பில்லையாம்படி கற் பித்து. அப்போதைக் கப்போது ஆரமுதாம் என்றது சிவாநுபவத்தில் ஒருகாலைக்கொருகால் இன்பம் மிகுந் தோன்றும் அநுபவநிலையை. இருட்டறையில் மலடுகறந்து எய்த்தது - மலட்டுப்பசுவைக் கறந்து உதையுண்டிளைத்தாற் போலச் சமணம்புக்கதால் வருத்தமே மிஞ்சிற்று என்ப தாம்.

கதியொன்று மறியாதே கண்ணழலத்
தலைபறித்துக் கையி லுண்டு
பதியொன்று நெடுவீதிப் பலர்காண
நகைநாணா துழிதர் வேற்கு
மதிதந்த வாரூரில் வார்தேனை
வாய்மடுத்துப் பருகி யுய்யும்
விதியின்றி மதியிலியேன் விளக்கிருக்க
மின்மினித்தீக் காய்ந்த வாறே. 7

7. தேனாயிருக்குஞ் சிவபெருமானைப் பருகியுய்யும் விதியையும் இழந்தேனே! என்று கூறுவது இப்பாடல்.

கதி - அடையத்தக்கது. தலையைப் பறிப்பதால் கண் வெப்பந் தாங்காது அழன்றுவிடும். ஒன்று - பொருந்திய.

மதி - உண்மைஞானம். குளிர் காய்வான் வெப்பமும் ஒளியும் உள்ள விளக்கிருக்க, அதனை விட்டுத் தோன்றி மறையும் ஒளிமட்டும் உடைய மின்மினியில் குளிர்காய்வது போலாம் என்பது.

பூவையாய்த் தலைபறித்துப் பொறியற்ற
சமணீசர் சொல்லே கேட்டுக்
காவிசேர் கண்மடவார்க் கண்டோடிக்
கதவடைக்குங் கள்வ னேன்றன்
ஆவியைப் போகாமே தவிர்த்தென்னை
யாட்கொண்ட வாரூ ரரைப்
பாவியே னறியாதே பாழூரிற்
பயிக்கம்புக் கெய்த்த வாறே.

8. தியானப்பொருளாயுள்ள தியாகேசரைத் தியானியாதே காலங்கழித்தமையை இப்பாடல் அறிவிக்கின்றது.

பூவை - நாகணவாய்ப்புள். பூவையாய்ச் சொல்கேட்டு என்றுகூட்டுக. சொன்னதையே சொல்லும் பூவைபோல, சமணர்சொல்லே கேட்டுச்சொல்லி என்றார்கள். பொறி - அறிவு. காவி - நீலோற்பலம். பொறிகள் வெறுப்புணர்ச்சி கொண்டும் அடங்காமையால் பெண்களைக் கண்டவுடன் எங்கே மனம் பொறிவழிபோய்ப் புலனுகர எண்ணுமோ என்று புலிகண்டார் அஞ்சியோடி வீடு புகுந்து கதவடைத்துக்கொள்வதுபோல, பள்ளியிற் புகுந்து கதவடைத்துக் கொண்டேன், என்று, உண்மைத்துறவின் உயர்வினைக் காட்டுகிறார்கள். பாவியேன் - தியானியேன். பயிக்கம் -



பிச்சை. பாழூரிற் பிச்சைக்குப் போனால் ஒன்றுங் கிடையாதவாறு போலச் சமணம் புக்கு உறுதி ஒன்றும் கிடைத்திலது என்பதாம்.

ஒட்டாத வாளவுணர் புரமூன்று
மோரம்பின் வாயின் வீழக்
கட்டானைக் காமனையுங் காலனையுங்
கண்ணினொடு காலில் வீழ
அட்டானை யாரூரி லம்மானை
யார்வச்செற் றக்கு ரோதம்
தட்டானைச் சாராதே தவமிருக்க
அவஞ்செய்து தருக்கினேனே. 9

9. எல்லையற்ற வீரத்தையும், எளிவந்தகருணையையும் உடைய ஆரூர்ப்பெருமானை அடையாது போனேன் என்பதைக் காட்டுகிறார் இப்பாட்டில்.

ஓரம்பு - திருமாலாகிய அம்பு. காமனைக் கண்ணினொடு, காலனைக் காலின் வீழ அட்டானை யெனக் கூட்டுக. அட்டான்-கொன்றவன். ஆர்வம் செற்றம் குரோதம் தட்டான் - பொருட்பற்றும், அது பெருமையால் வெறுப்புணர்ச்சியும், அதுகாரணமாக நிகழும் கோபமும் ஆகிய மூன்றும் பொருந்தாதவனை. அவம் - வீண் செயல். தருக்கினேன் என்றது அறியாது அவற்றையே தவமெனக் கொண்டதால் விளைந்தகேடு.

மறுத்தானோர் வல்லரக்க னீரைந்து
முடியினொடு தோளுந் தாளும்
இறுத்தானை யெழின்முளரித் தவிசின்மிசை
யிருந்தான்றன் தலையி லொன்றை

அறுத்தானை யாரூரி லம்மானை
யாலால முண்டு கண்டம்
கறுத்தானைக் கருதாதே கரும்பிருக்க
இரும்புகடித் தெய்த்த வாறே. 10

10. உலகியலுக்கு மாறாகப் பத்துத்தலையும், இருபது கையும் படைத்த இராவணன் வலியடக்கியும், வேதமோதியும் உண்மையுணராத பிரமன் சிரங்கொய்தும், தேவர்கள் எல்லாரையுங் காக்க விடமுண்டும் வீரமுங் கருணையும் விளங்கக்காட்டிய இறைவனைக் கருதாமலிருந்துவிட்டேனே! என்று அறிவிக்கிறார் இப்பாடலில்.

முளரி-தாமரை. கரும்பு - சுவைமிக்க கரும்பு. இரும்பு - சுவைக்கமுடியாத இரும்பு. எய்த்தல் - இளைத்தல்.

## 8. பண் - சீகாமரம்.

இராகம்: நாதநாமக்கிரியை.] [தாளம்: திருபுடை.

திருச்சிற்றம்பலம்.

[பாடிளம்பூதத்தினானும், என்ற திருப்பதிகத்தால் ஆரூரமர்ந்த பெருமான் தன்மையை விளக்கிக்காட்டிய அப்பர் சுவாமிகள் அத்தகைய பெருமானைத் தான்கண்ட இடம் திருவாரூர் என்று கூறினார்கள்.]

சூலப் படையானைச் சூழாக வீழருவிக்
கோலத்தோட் குங்குமஞ்சேர் குன்றெட் டுடையானைப்
பாலொத்த மென்மொழியாள் பங்கனைப் பாங்காய
ஆலத்தின் கீழானை நான்கண் ட தாரூரே. 1



1. கல்லாலின்கீழ் உபதேசந்தந்த குருமூர்த்தமா யிருந்தருளும் காட்சியை யறிவிக்கின்றது இப்பாடல்.

சூழ் - சுற்றுடை. சூழ்தலையுடையது என முதனிலைத் தொழிலாகுபெயர். தோளிலிருந்து ஆடை விழுவது மலையிலிருந்து அருவி வீழ்வது போல. எட்டுத் திசைகளுமே இறைவனுக்குத் தோள்களாதலின் தோட்குன்று எட்டுடையானை யென்றார். அம்மையின் மார்பு பொருந்துவதால் குங்குமஞ்சேர் குன்றாயிற்று. பாங்கு - அழகு. ஆலத்தின் கீழான் - குருமூர்த்திவடிவினன்.

பக்கமே பாரிடங்கள் சூழப் படுதலையில்
புக்கவூர்ப் பிச்சையேற் றுண்டு பொலிவுடைத்தாய்க்
கொக்கிறகின் றூவல் கொடியெடுத்த கோவணந்தோ
டக்கணிந்த வம்மானை நான்கண்ட தாரூரே. 2

2. பிக்ஷாடனத் திருக்கோலந் தாங்கி, ஊர்கள் தோறும் வந்து காட்சி வழங்குங் கருணைத்திறத்தையறி விப்பது இப்பாடல்.

பாரிடம் - பூதம். படுதலை - கபாலம். புக்க ஊர் - புகுந்த ஊர்களில் எல்லாம். கொக்கிறகு - கொக்கிறகம் பூ. தூவல் - தூவுதல். கொடியெடுத்த கோவணம் - கொடியாக வுயர்த்திய கோவணம். அரைஞாண் கொடியிற் சேர்த்திய கோவணம் என்றுமாம். அக்கு - எலும்புமணி. பிச்சையேற்றுண்டு, உடைத்தாய், அணிந்த அம்மான் எனக் கூட்டிப் பொருள் காண்க.

சேய வுலகமுஞ் செல்சார்வு மானானை
மாயப்போர் வல்லானை மாலைதாழ் மார்பானை
வேயொத்த தோளியர்தம் மென்முலைமேற் றண்சாந்தின்
ஆயத் திடையானை நான்கண்ட தாரூரே. 3

3. பிக்ஷாடனக்கோலத்துடன் ரிஷிபத்தினிகள் கூட்டத்திடையே நிற்கும் நிலையை யுட்கொண்டு அத்தகைய இறைவனைக்கண்டது ஆரூரில் என்கிறது இப்பாடல்.

சேயவுலகம் - செம்மையாகிய உலகம்; என்றது வீட்டுலகம். செல்சார்வு - கதி. மாயப்போர் - சொல்லாமலே கொன்று வீட்டுலக மளிக்கும் போர். வேய் - மூங்கில். தோளியர் என்றது முனிபன்னியரை. தண் சாந்தின் ஆயம் - சந்தனத்தை யணிந்த மகளிர் கூட்டம். இறைவன் போகியாயிருக்கின்ற நிலை இதில் உணர்த்தப்பெறுகின்றது.

ஏறேற்ற மாவேறி யெண்கணமும் பின்படர
மாறேற்றார் வல்லரணஞ் சீறி மயானத்தில்
நீறேற்ற மேனியராய் நீள்சடைமே னீர்ததும்ப
ஆறேற்ற வந்தணனை நான்கண்ட தாரூரே. 4

4. முனைப்புக்கண்ட இடத்து, கருணைகொண்டு, முனைப்பு முத்திக்கு ஆகாதெனத்திருவுளம்பாலித்து, திரிபுராரிகள் முதலியோரை அடக்கியாண்ட வள்ளன்மையை விளக்குவது இப்பாடல்.

ஏறு ஏற்றமா ஏறி - இடபத்தை ஊர்தியாக ஏறி. ஏற்றமா என்பது ஏற்றமாக என்பதன் விகாரம். ஆறு - கங்கை. எண்கணம் - எண்ணப்படுகிற பூதகணங்கள்.



தாங்கோல வெள்ளெலும்பு பூண்டுதம் மேறேறிப்
பாங்கான வூர்க்கெல்லாஞ் செல்லும் பரமனார்
தேங்காவி நாறுந் திருவாரூர்த் தொன்னகரில்
பூங்கோயி லுண்மகிழ்ந்து போகா திருந்தாரே. 5

5. பிக்ஷாடனத் திருக்கோலம் கொண்டு பலவூர்களுக்குச்செல்லும் பரமன் திருவாரூரை நீங்கார் என்று விளக்குகிறது இப்பாடல்.

கோலம் - அழகு. பாங்கானவர் - தம்மிடம் அன்பு செலுத்துபவர். பூங்கோயில் - திருவாரூர்க் கோயிலின் பெயர். பலவூர்களையும் பார்த்துவந்த பண்பால், இவ்வூர், நலமணமும், தொன்மையுமுடையதாய், கோயிலும் பூங்கோயிலாயிருத்தலின் பாற்கடலும் தேவருலகமும் போல இருந்து பிரியாது இதில்என்றும் விளங்குகிறார் என்பதாம்.

எம்பட்டம் பட்ட முடையானை யேர்மதியின்
நும்பட்டஞ் சேர்ந்த நுதலானை யந்திவாய்ச்
செம்பட் டுடுத்துச் சிறுமா னுரியாடை
அம்பட் டசைத்தானை நான்கண்ட தாரூரே. 6

6. எம்மை வழிவழியாளாகவுடைய பிறைமுடிப் பெருமானைப் பார்க்கின்றது ஆரூரில் என்கிறது இப்பாடல்.

எம் பட்டம் பட்டம் உடையான் - எமது உரிமையை என்றும் தமக்குரிமையாகக் கொண்டவன். பட்டம் - உரிமை. வழிவழி முதல்வன் என்பது குறிப்பு. நும்பட்டம் சேர்ந்த நுதலான் - நும் என்பது முன்னிலைக்கண்வரும்



ஆழிக் தேர்

காரணமாகிய சர்வசங்கார இருட்டு. ஆடல் உகந்தானை - ஊழித்தாண்டவம் புரிந்தவனை. தொண்டர் நெஞ்ச இருண் கூரும் பொழுது - ஐந்தெழுத்தோதுதல் ஆலயவழிபாடு முதலியவற்றில் சோர்வுற்று, தொண்டர்கள் மனம் வாசனா மலத்தால் தாக்குண்ணும் காலத்து. நிலாப்பாரித்து அம் சுடராய் நின்றான் என்றது பூதச்சுடர்கள் ஒளியோடு வெப்பந் தருவதாதலின் இறைவனாகிய சுடர் தண்ணிலாவோடு ஒளிதந்தது என்பதாம்.

காரமுது கொன்றை கடிநாறு தண்ணென்ன
நீரமுது கோதையோ டாடிய நீண்மார்பன்
பேரமுத முண்டார்க ளுய்யப் பெருங்கடனஞ்
சாரமுதா வுண்டானை நான்கண்ட தாரூரே. 9

9. அமுதம் உண்டாரையும் நஞ்சு வருத்த, நஞ்சை அமுதாகக்கொண்ட இறைவன் தங்கியிருப்பது ஆரூர் என்றறிவிக்கிறது இப்பாடல்.

கார நீர என்பனவற்றுள் அகரம் சாரியை; ஆறும் வேற்றுமை யுருபுமாம். நீர் முது கோதை-கங்கை. அமுதம் உண்டும் பயனில்லை என்பார் பேரமுத முண்டாரென்றார். ஆர் அமுதா-விருப்பம் நிறைந்த அமுதாக. தேவர்கள் அமுதமுண்டும் இறந்தமையும், இவர் நஞ்சமுண்டு இறவாமையும் ஈண்டு வியப்பு.

தாடவுடுக் கையன் றாமரைப்பூஞ் சேவடியன்
கோடலா வேடத்தன் கொண்டதோர் வீணையினான்
ஆடரவக் கிண்கிணிக்கா லன்னானோர் சேடனை
ஆடுந்தீக் கூத்தனை நான்கண்ட தாரூரே. 10

10. ஊழிக்கும் அப்பாற்பட்டு விளங்குகிற ஒருவனைக் கண்டது ஆரூரில் என்கிறது இப்பாடல்.

தாடஉடுக்கையன் - அடிக்கப்படும் உடுக்கையை யுடையவன். கோடலா வேடத்தன் - பிறரால் கொள்ளுதற்கரிய திருமேனிப் பொலிவினை யுடையான். ஆடரவக் கிண்கிணிக்காலன்னன்-தியாகேசருடைய திருநாமங்களில் இது ஒன்று. சேடன் - எல்லாம் அழிந்த காலத்தும் மிச்சமாயிருப்பவன்.

மஞ்சாடு குன்றடர வூன்றி மணிவிரலால்
துஞ்சாப்போர் வாளரக்கன் தோணெரியக் கண்குருதிச்
செஞ்சாந் தணிவித்துத் தன்மார்பிற் பால்வெண்ணீற்
றஞ்சாந் தணிந்தானை நான்கண்ட தாரூரே. 11

11. ஆணவ வடிவினனாகிய இராவணனை அடக்கி ஆட்கொண்ட இறைவன் ஆரூரன் என்கிறது இப்பாடல்.

மஞ்சு - மேகம். அடர - நெருங்க. அஞ்சாப்போர் அரக்கன் -போரில் இறந்துபடா தவரம்பெற்ற இராவணன். இராவணனது கண்களில் இரத்தச் சாந்தப்பித் தன்மார்பில் வெண்ணீற்றுச்சாந்தைப் பூசிக்கொண்டான் இறைவன் என்றதொரு நயம்தோன்றுதல் காண்க.

## 9. பண் - சீகாமரம்

இராகம் - நாதநாமக்கிரியை] [தாளம் - சாபு.

திருச்சிற்றம்பலம்.

[அப்பரடிகள் புற்றிடங்கொண்டபிரானை வணங்கித் தாண்டகம் பலசெய்து, அண்டாவிளக்கை ஒத்த வன்மீகநாதர் முன்னின்று இப்பதிகத்தைச் சொல்லித் துதிக்கின்றார்.]



காண்டலே கருத்தாய் நினைந்திருந்தேன்
மனம் புகுந்தாய் கழலடி
பூண்டுகொண் டொழிந்தேன்
புறம்போயி னலறையோ !
ஈண்டுமாடங்க ணீண்டமா ளிகைமேலெழுகொடி
வானிளம்மதி
தீண்டிவந் துலவுந்
திருவாரூ ரம்மானே. 1

1. இப்பாட்டு, என்னுடைய எண்ணம் ஈடேறிற்று; இனிப்பிரிவில்லை என்று அப்பர் அடைந்த பேற்றின் ஏற்றத்தைப் பேசுகிறது.

ஒழிந்தேன் - பிறசெயலிற் போக்கின்றிக் கழலையே நினைந்திருந்தேன். புறம் போயினால் அறையோ - திருமுன்பு நின்றும் வெளிப்போந்தால் குற்றமோ? மண்ணிலுள்ள மாடங்களின் கொடி வான் மதியத்தைத் தீண்டி உலாவும் ஆரூருக்கு இறைவன் ஆதலின் உன்னடியேன் புறம்போனாலும் திருவடி மறவேன்; குற்றமில்லை என்பதாம். அன்றி அறையோ என்பதற்குச் சொல்லுந்தரமோ என்றும், பிரியமாட்டேனே என்றும் பொருள் காண்பாரும் உளர்.

கடம்படந்நட மாடினாய்களை கண்ணினக்கொரு
காதல் செய்தடி
யொடுங்கி வந்தடைந்தே
னொழிப்பாய் பிழைப்பவெல்லாம்

முடங்கிறான் முது நீர்மலங்கிளை வாளைசெங்கயல்
　　சேல்வ ரால்களி
றடைந்த தண்கழனி
　　யணியாரூ ரம்மானே. 2

2. *நீயே எனக்கடைக்கலம். உனது திருவடிகளை அடைந்தேன். என்பிழை எல்லாவற்றையும் ஒழி என்று வேண்டுகின்றது இப்பாட்டு.*

*கடம் பட நடமாடினாய் - அழிந்த உலகமானது மீளவும் தோன்றுமாறு திருநடனம் செய்தனை. களைகண்ணினக்கு - பற்றுக்கோடாகிய உனக்கு. ஒடுங்கிவந்து - பொறிவழிச் செல்லாது உன்திருவடியொன்றையே உற்று நோக்கி வந்து. பிழைப்பை எல்லாம் ஒழிப்பாய் - இனித் தவறுவனவற்றைப் பிழை என்றும் கருதாதே நீக்குவாய்; என்றது இறைவனைக் கண்டபொழுதே இறந்தகாலத் தவறுகள் கடியப்படுமாதலின், வரக்கடவ பிழைகளை ஒழிப்பாய் என வேண்டிக்கொள்கிறார். முடங்கு - வளைந்த. களிறு - ஒருவகைமீன். இறால் மலங்கு முதலிய மீன்கள் செறிந்த வயல்சூழ்ந்த ஆரூராதலின் என் பிழையை ஒழிப்பதும் உனக்கியல்பு என்பதாம்.*

அருமணித்தடம் பூண்முலை யரம்பையரோ
　　டருளிப் பாடியர்
உரிமையிற் றொழுவா
　　ருருத்திர பல்கணத்தார்
விரிசடைவிரதிக ளந்தணர் சைவர்பாசுப
　　தர்க பாலிகள்
தெருவினிற் பொலியுந்
　　திருவாரூ ரம்மானே. 3



3. *தேவரம்பையரோடு, பலவேறு சமயிகளும் செறிந்த திருவாரூருக் கிறைவன் என்றருளிச் செய்கின்றது இப்பாடல்.*

*தடம் - பரப்பு. இது பூணை விசேடித்தது. அருளிப் பாடியர் - இறைவன் கட்டளையை எடுத்தியம்புவோர். உரிமையிற்றொழுவார் - வணங்கும் உரிமையும் பணிசெயும் உரிமையும் என்ற இரண்டினாலும் தொழுபவர்கள். உருத்திரபல்கணத்தார் - உருத்திரர்களைப் போலவே சூலமும் கபாலமும் தரித்து உருத்திர கல்பிதமான ஆகமநெறியில் ஒழுகும் காளாமுகர்.*

பூங்கழறொழுதும் பரவியும் புண்ணியாபுனி
　　தாவுன் பொற்கழல்
ஈங்கிருக்கப் பெற்றே
　　னென்னகுறை யுடையேன்
ஓங்குதெங்கிலை யார்கமுகிள வாழைமாவொடு
　　மாதுளம்பல
தீங்கனி சிதறுந்
　　திருவாரூ ரம்மானே. 4

4. *திருவடி சிந்தையிற் றிளைக்கப்பெற்றதால் இனி ஒரு குறையுமில்லை என்கிறது இப்பாடல்.*

*பரவுதல் - தோத்திரித்தல். ஈங்கு - மனத்து. ஓங்கு தெங்கு எழுவாய். தெங்கு கனி சிதறும் திருவாரூர் என்க. தெங்கு ஆகுபெயர்; தேங்காய்.*

நீறுசேர்செழு மார்பினாய்நிரம் பாமதியொடு
    நீள்சடையிடை
ஆறுபாய வைத்தா
    யடியே யடைந்தொழிந்தேன்
ஏறிவண்டொடு தும்பியஞ்சிறை யூன்றவிண்ட
    மலர்த் தழ்வழி
தேறல் பாயுந் தொழுகுந்
    திருவாரூ ரம்மானே. 5

5. குறைமதியையும் செருக்குற்ற கங்கையையும் திருமுடிக்கண் வைத்தனையாதலால் குறைகண்டு தள்ளமாட்டாயென்று உன் திருவடியடைந்தேன் என்றறிவிக்கிறது இப்பாட்டு.

ஒழிந்தேன் - புகலிடம் வேறில்லை என்றபடி. வண்டு தும்பி என்பன வண்டுவகைகள். தேறல்-தேன்.

அளித்து வந்தடி கைதொழுமவர் மேல்வினைகெடு
    மென்றி வையகம்
களித்துவந் துடனே
    கலந்தாடக் காதலராய்க்
குளித்துமூழ்கியுந் தூவியுங்குடைந் தாடுகோதையர்
    குஞ்சி யுட்புகத்
தெளிக்குந் தீர்த்தமறாத்
    திருவாரூ ரம்மானே. 6

6. வழிபடும் அடியார்களது ஆகாமிய சஞ்சித வினைகளை நீக்கும் தீர்த்தங்கள் நீங்காத திருவாரூர் என்கிறது இப்பாட்டு.



அளித்து - காதலித்து. மேல்வினை -வரக்கடவனவாய ஆகாமிய சஞ்சிதங்கள். கெடும் என்று இவ்வையகம் களித்து கலந்து ஆட எனக்கூட்டுக. கோதையர் குஞ்சியுட்புகத் தெளிக்கும் தீர்த்தம் என்றது மங்கையர் நீராடித் தீர்த்தம் கொணர்ந்து கணவர்கள் தலையில் தெளிப்பார்கள் என்ற நிகழ்ச்சியை விளக்குவது. பங்குனித் தீர்த்த விழாவில் இதனை இன்றும் காணலாம்.

திரியுமூவெயி றீயெழச்சிலை வாங்கிநின்றவ
    னேயென் சிந்தையுள்
பிரியுமா றெங்ஙனே
    பிழைத்தேயும் போகலொட்டேன்
பெரியசெந்நெற் பிரம்புரிகெந்த சாலிதிப்பிய
    மென்றி வையகத்
தரியுந் தண்கழனி
    யணியாரூ ரம்மானே. 7

7. திரிபுரம் எரித்தவீசனாகிய உன்னைப் பிரியேன். தவறியும் போகவொட்டேன் என்று இறைவனை இறுகப்பிடித்தமையை இயம்புகின்றது இப்பாடல்.

திரியும் மூவெயில் -பறந்து செல்லும் மூன்று கோட்டைகள். சிலைவாங்கி நின்றவன் - மேருமலையாகிய வில்லை வளைத்தவன். திருவாரூர் வயலில் செந்நெல், பிரம்புரி, கெந்தசாலி, திவ்வியம் என்ற நெல்வகைகள் விளைந்து அறுக்கப்படுகின்றன என்பதாம். என்று இவை அகத்து அரியும் கழனி எனப்பிரிக்க.

பிறத்தலும்பிறந் தாற்பிணிப்பட வாய்ந்தசைந்துட
    லம்பு குந்துநின்
றிறக்குமா றுளதே
    யிழித்தேன் பிறப்பினை நான்
அறத்தையேபுரிந் தமனத்தனா யார்வச்செற்றக்கு
    ரோத நீக்கியுன்
திறத்தனா யொழிந்தேன்
    திருவாரூ ரம்மானே. 8

8. உடலின் இழிவையும் உமது பெருமையையும் உணர்ந்தேன். என்னைக் காப்பாற்று என வேண்டிக் கொள்கின்றார்.

பிறந்தபிறகு நோயடைந்து தளர்ந்து உறைவாகிய உடலுக்குள்ளிருந்தும் இறப்பு உண்டு; இது உறுதி. ஆகையால், பிறப்பை இழித்தேன். பிறப்புக்குக் காரணமாகிய காமமாதியவற்றைக் கடிந்தேன். ஆதலால் பிறப்பில்லை என்றபடி.

முளைத்தவெண்பிறை மொய்சடையுடை யாயெப்போது
    னெஞ்சிடங் கொள்ள [மென்
வளைத்துக் கொண்டிருந் தேன்
    வலிசெய்து போகலொட்டேன்
அளைப்பிரிந்த வலவன்போய்ப்புகு தந்தகாலமுங்
    கண்டு தன்பெடை
திளைக்குங் கழனித்
    திருவாரூ ரம்மானே. 9

9. அம்மானே! தேவரீர் அடியேன் நெஞ்சத்தை இடமாக்கிக்கொள்ள ஆவனசெய்தேன். நீரும் எழுந்தருளினீர் இனிப்போக ஒட்டேன் என்கிறார் இப்பாடலில்.



எப்போதும் வலிசெய்துபோக லொட்டேன் என்றது பிழைத்தேயும் போகலொட்டேன் என்றதை (7ம் பாடலை) அறிவுறுத்துகின்றது. வளையை விட்டுப்பிரிந்த ஆண் நண்டு, மீட்டும் புகுந்தகாலத்து, பெண்நண்டு விடாது திளைக்கும் ஆரூர் என்றது இறைவனது வருகைக்காக எதிர்நோக்கியிருந்த நெஞ்சகமாகிய வளையில் இறைவன் வந்ததும் போகவொட்டேன் என்று தடுத்த இவர் நிலையோடு ஒத்திருத்தல் காணற்பாலது. இறைவனுக்கு அலவனும் பெடைக்கு அப்பரும், அளைக்கு நெஞ்சம் ஒப்பாதல் காண்க.

நாடினர்கமல மலரய னோடிரணிய
    னாகங் கீண்டவன்
நாடிக் காணமாட்டாத்
    தழலாய நம்பானைப்
பாடுவார்பணி வார்பல்லாண்டிசை கூறுபத்தர்கள்
    சித்தத் துள்புக்குத்
தேடிக் கண்டுகொண்டேன்
    திருவாரூ ரம்மானே. 10

10 அப்பர், இருபெருந்தேவர்க்கும் எட்டாத தேவனை அன்பர்களிதயத்துள் தாம் கண்டதாக இப்பாடலில் அறிவிக்கிறார்.

அயனோடு ஆகம் கீண்டவன் நாடிக் காணமாட்டா நம்பான் எனக்கூட்டுக. இரணியன் ஆகம் கீண்டவன் - திருமால். நம்பான் - குணங்களால் நிறைந்தவன்; நம்பப் படத்தக்கவன் என்றுமாம்.

## திருவாதிரைத் திருப்பதிகம்

## 10. பண் - குறிஞ்சி

இராகம்: யதுகுலகாம்போதி] [தாளம்: திருபுடை

திருச்சிற்றம்பலம்

[புகலிப்பெருமான் பூம்புகலூரில் எழுந்தருளியிருக்கின்றபோது அப்பர் சுவாமிகள் திருவாரூரை வழிபட்டு, அடியார்கூட்டத்தோடு புகலூர்க்கு எழுந்தருளினார்கள். அப்போது புகலிவேந்தராகிய ஞானசம்பந்தப்பிள்ளையார் இவர்களை நோக்கி, திருவாரூர்ப் பெருமைகளை வகுத்துரைத்தருள்க என வேண்டிக்கொண்டனர். அப்போது ஆதிரைநாளில் ஆரூர்ச்செல்வர் கொண்டருளிய திருவிழாச்சிறப்பை என்னென்று கூறுவேன்! என வியந்து முத்துவிதானம் என்ற இந்தப் பதிகத்தை மொழிந்தருளினார்கள். இப்பதிகத்தில் திருவாதிரைத் திருவிழாவின் சிறப்புக்கள் பலவும் கூறப்பெறுகின்றன ]

**முத்துவிதான மணிப்பொற்கவரி முறையாலே**
**பத்தர்களோடு பாவையர்சூழப் பலிப்பின்னே**
**வித்தகக்கோல வெண்டலைமாலை விரதிகள்**
**அத்தனாரூ ராதிரைநாளா லதுவண்ணம். 1**

1. இப்பாட்டில் எடுபிடிகளும், அன்பர்களும், மாவிரதி போன்ற அகப்புறச்சமயத்தார்களும்கூடி இறைவன்பின்னே செல்வதைத் தெரிவிக்கின்றார்கள்.

விதானம் - மேற்கட்டி. மணிப்பொன் கவரி - மணிகள் இழைக்கப்பெற்றுப் பொற்பிடிபோட்ட சாமரை. பத்தர்கள் - அன்பர்களாகிய ஆடவர்கள். பாவையர் - பெண்கள். பாவையர் உடன்வந்தும் அன்புள்ளம்திரியாத ஆடவர்களைப் பத்தர்கள் என்றே குறித்தார்கள். பலி - எட்டுத்திக்குப் பாலகர்களுக்குத் தம் இடப்பெறுகின்றபலி. வித்தகக்கோலம் - வியக்கத்தக்க வேடம். ஆதிரைநாள் வண்ணம் விதானம் கவரி முறையாலே (சூழ), பத்தர் பாவையர் சூழ, பலிப் பின்னே விரதிகள் (சூழ), அத்தன் (வருதல்) அது என முடிக்க.



**நணியார் சேயார் நல்லார் தீயார் நாடோறும்**
**பிணிதான்தீரு மென்று பிறங்கிக் கிடப்பாரும்**
**மணியே பொன்னே மைந்தா மணாளா வென்பார்கட்**
**கணியாரூ ராதிரைநாளா லதுவண்ணம். 2**

2 குணத்தாலும், இடத்தாலும் வேறுபட்ட மக்கள் பிணிதீரப் போற்றுகின்றார்கள். அவர்கட்கு அண்ணியனாகிய ஆரூர்ப்பெருமானின் ஆதிரைத் திருநாள் வண்ணம் இது என்றுணர்த்துகிறது இப்பாட்டு.

நணியார் - அணுகியவர். சேயார் - தூரத்திலுள்ளவர்கள். பிறங்கிக்கிடத்தல் - வரங்கிடத்தல். மணியே - இயற்கை ஒளியமைந்த மணிபோன்றவனே. அணியான் - அண்மையிலுள்ளவன்.

**வீதிகடோறும் வெண்கொடியோடு விதானங்கள்**
**சோதிகள்விட்டுச் சுடர்மாமணிக ளொளிதோன்றச்**
**சாதிகளாய பவளமுத்துத் தாமங்கள்**
**ஆதியாரூ ராதிரைநாளா லதுவண்ணம். 3**

3. ஆதிரைநாளின் வீதியலங்காரத்தை விளக்குகிறது இப்பாட்டு.

வெண்கொடி - விழாக்காலத்து, நகரில் மங்கலமாகத் தூக்கப்பெறுவது. "விதானமும் வெண்கொடியும் இல்லா ஊரும்......வூரல்ல" தேவாரம். விதானங்கள் மணிகள் தாமங்கள் ஒளிதோன்ற நிற்பது. அது ஆதிரைநாள் வண்ணம் எனமுடிக்க.

குணங்கள்பேசிக் கூடிப்பாடித் தொண்டர்கள்
பிணங்கித்தம்மிற் பித்தரைப்போலப் பிதற்றுவார்
வணங்கிநின்று வானவர்வந்து வைகலும்
அணங்கனாரூ ராதிரைநாளா லதுவண்ணம்.

4. விழாவிலீடுபட்ட அன்பர்கள் இறைவனைப்பாடிப் பேசிப் பிதற்றும் இயல்பை அறிவிப்பது இச்செய்யுள்.

குணங்கள் பேசி - இறைவனின் குணங்களைப் பேசி. பிணங்கி - இறைவனின் அருட்செயல்களில் இது பெரிது இது பெரிது எனத் தம்முள் மாறுபட்டு. அணங்கன் - தெய்வத்தன்மையுடையவன்.

நிலவெண்சங்கும் பறையுமார்ப்ப நிற்கில்லாப்
பலருமிட்ட கல்லவடங்கள் பரந்தெங்கும்
கலவமஞ்ஞை காரென்றெண்ணிக் களித்துவந்
தலமாரூ ராதிரைநாளா லதுவண்ணம். 5

5. ஆதிரைவிழாவின் வாத்தியச் சிறப்புகளை விளக்குவது இப்பாட்டு.



நிலவெண்சங்கு - நிலாப்போலும் வெள்ளிய சங்கு. கல்லவடம் - ஒருவகைப் பறை. கலவமஞ்ஞை - ஆண் மயில். அலமரும் - சுழலும்.

விம்மாவெருவா விழியாத்தெழியா வெருட்டுவார்
தம்மாண்பிலராய்த் தரியார் தலையான் முட்டுவார்
எம்மானீச னெந்தையெனப்ப னென்பார்கட்
கம்மானாரூ ராதிரைநாளா லதுவண்ணம். 6

6. விழாவிற்கலந்த ஏனையமக்களின் பரவசத் தன்மையைக் காட்டுகிறது இப்பாடல்.

தெழியா - அதட்டி. தம்மாண்பிலராய் - பசுபோத மற்று, பாலரொடு உன்மத்தர் பிசாசர்குணம் மருவிப் பரவசராய். தரியார் - நிலைகொள்ளாராய்.

செந்துவர்வாயார் செல்வனசேவடி சிந்திப்பார்
மைந்தர்களோடு மங்கையர்கூடி மயங்குவார்
இந்திரனாதி வானவர்சித்த ரெடுத்தேத்தும்
அந்திரனாரூ ராதிரைநாளா லதுவண்ணம். 7

7. திருவடிச்சிந்தனை மறவாத மக்கள் தம்முட்கூடி மயங்குகின்றார் என்பதை அறிவிக்கிறது இப்பாட்டு.

செந்துவர் - செம்மையான பவழம். செல்வன சேவடி - இறைவனுடைய திருவடிகள், அந்திரன் - அழியா அழகுடையான். அம் - அழகு. திரம் - நிலை பேறு.

முடிகள்வணங்கி மூவாதார்கள் முன்செல்ல
அடிகொள்வேய்த்தோள் வானரமங்கையர் பின்செல்லப்
பொடிகள்பூசிப் பாடுந்தொண்டர் புடைசூழ
அடிகளாரூ ராதிரைநாளா லதுவண்ணம். 8

8. விழாவில் உடன்செல்வார் முறையை அறிவிக்கிறது இச்செய்யுள்.

மூவாதார் - மூப்பில்லாத யோகியர். அவர்கள் முடியைவணங்கி முன்செல்கின்றார்கள். அடிகொள் வேய் - கிளை மூங்கில். என்றது பசுமை விளக்கிற்று. தேவமங்கையர் பின்செல்கின்றார்கள். மெய்யெலாம் நீறுபூசி, வாய்மணக்கப் புகழ்பாடும் அடியார்கள் இருமருங்கும் செல்கின்றார்கள். இடையில் இறைவன் செல்கின்றான்.

துன்பநும்மைத் தொழாதநாள்க ளென்பாரும்
இன்பநும்மை யேத்தும்நாள்க ளென்பாரும்
நும்பினெம்மை நுழையப்பணியே யென்பாரும்
அன்பனாரூ ராதிரைநாளா லதுவண்ணம். 9

9. உடன்வருவோர் வேண்டுகோள்களை இப்பாடல் அறிவிக்கிறது.

ஏத்தும் நாள்களே இன்பந்தருநாள்கள் என்கிறார் சிலர். ஏத்தாத நாட்கள் துன்ப நாட்கள் என்கின்றார் சிலர். ஒருவரைப்பார்த்து ஒருவர் உங்கள் பின்னே என்னையும் அழைத்துக்கொண்டு போங்கள் என்று வேண்டுகின்றார். இவ்வண்ணமாக இருந்தது விழாவின் சிறப்பு.



பத் தானைப்பத்தர் பணிந்தேத்தச்
சீரூர்பாட லாடலறாத செம்மாப்பார்ந்
தோரூரொழியா துலகமெங்கு மெடுத்தேத்தும்
ஆரூரன்ற னாதிரைநாளா லதுவண்ணம். 10

10. ஆதிரைநாள் உலகு அனைத்தும் கொண்டாடும் ஒரு பெருநாள் என்கிறது இப்பாடல்.

பௌவத்தானை - கடல்போன்றசேனை. 'தொண்டர்காள் தூசிசெல்லீர்' என்றதால் பத்தர்கள் கூட்டத்தைத் தானை என்றல் மரபாதல் காண்க. செம்மாப்பு-இறுமாப்பு.

## 11. திருநேரிசை

இராகம் - நவரோஸ்] [தாளம் - ஆதி.

திருச்சிற்றம்பலம்

[திருவாரூரில் வசிக்கின்ற நாளில் ஒருநாள் திருமூலட்டானரை அந்தியில் வழிபட்டு நிற்கும் பொழுது இந்திரியச் சேஷ்டைகளை எண்ணி, என் உயிர் மத்துறுதயிர்போல் மறுகுகின்றது; ஆழ்குழிப் பட்டு அலமருகின்றது; அலந்தேன்; ஆற்றேன்; இனி என்னால்வாழ முடியாது முடியாது காக்கவேண்டும் என்று அப்பரடிகள் வேண்டுவதாக எழுந்தது இப்பதிகம்.]

படுகுழிப் பவ்வத்தன்ன பண்டியைப் பெய்தவாற்றால்
கெடுவதிம் மனிதவாழ்க்கை காண்டொறுங் கேதுகின்றேன்
முடுகுவ ரிருந்துளைவர் மூர்க்கரே யிவர்களோடும்
அடியனேன் வாழமாட்டே னாரூர்மூ லட்டனீரே. 1

1\. மனிதவாழ்க்கை வயிற்றால் மடிவதைக்கண்டு வருந்துகின்றார் இப்பாடலில்.

பவ்வத்தன்னபண்டி - கடலன்னவயிறு. என்றுநாள் தோறும் மூன்றுவேளை ஆர்த்தும் ஆராமையால். கேதுகின்றேன் - அஞ்சுகின்றேன். ஐவர் - பஞ்சேந்திரியங்கள். முடுகுவர் - துரத்துவார்கள்.

புழுப்பெய்த பண்டிதன்னைப் புறமொரு தோலான் மூடி
ஒழுக்கறு வொன்பதுவா யொற்றுமை யொன்றுமில்லை
சழக்குடை யிதனுளைவர் சங்கடம் பலவுஞ்செய்ய
அழிப்பனாய் வாழமாட்டே னாரூர்மூ லட்டனீரே. 2

2\. மேலும், உடலின் இழிவை விளக்குவாராகப் புழுத்த வயிற்றைத் தோலால் மூடியது. ஒழுகிக் கொண்டே இருக்கும் ஒன்பது வாயில்களையுடையது என்கின்றார் இப்பாட்டில்.

ஒன்பதுவாய் முன்னர்க் கூறப்பட்டுள்ளது. ஒற்றுமை ஒன்றுமில்லை என்றார்; வாயில்களும் ஒரு தன்மையற்றனவாய், ஒன்றுபோனவழி ஒன்று போவதில்லையாகலின். சழக்கு-பொய். அழிப்பன் - வருந்தியவன்.

பஞ்சின்மெல் லடியினார்கள் பாங்கரா யவர்கணின்று
நெஞ்சினோய் பலவுஞ்செய்து நினையினு நினையவொட்டார்
நஞ்சணி மிடற்றினானே நாதனே நம்பனே நான்
அஞ்சினேற் கஞ்சலென்னீ ராரூர்மூ லட்டனீரே. 3

3\. தேவரீரை நினைப்பதற்குத் தடையாயினார் மாதர்களாதலின், அவர்களுக்கு அஞ்சினேன் என்கிறார் இப் பாடலில்.



பஞ்சின் மெல்லடியினார்கள் - பஞ்சுபோன்ற மெல்லிய அடியையுடையார்கள். நெஞ்சின் நோய் - காமநோயும் பிரிவு நோயும்.

கெண்டையந் தடங்கணல்லார் தம்மையே கெழுமவேண்டிக்
குண்டராய்த் திரிதந்தைவர் குலைத்திடர்க் குழியினூக்கக்
கண்டுநான் றரிக்ககில்லேன் காத்துக்கொள் கறைசேர்கண்டா
அண்டவா னவர்கள்போற்று மாரூர்மூ லட்டனீரே. 4

4\. பொறிக்குண்டர் பூங்குழலாள்மேற் செலுத்துகின்றார்களாதலின் அதனின்றும் காக்கவேண்டுமென்கிறது இப்பாடல்.

கெழும - புணர, காமவழிப்பட்டார்க்குத் தக்க இன்னதகாதன இன்ன என்று ஒக்க உன்னும் அறிவு இல்லையாதலின் குண்டர் என்றார். இடர்க்குழி - நோயும் பழியுமாகிய துன்பக்குழி.

தாழ்குழ லின்சொனல்லார் தங்களைத் தஞ்சமென்று
ஏழையே னாகிநானு மென்செய்கே னெந்தைபெம்மான்
வாழ்வதே லரிதுபோலும் வைகலு மைவர்வந்து
ஆழ்குழிப் படுக்கவாற்றே னாரூர்மூ லட்டனீரே. 5

5\. மாதரையே தஞ்சமாகக்கொண்டு மதியிழந்தமையை அறிவிக்கிறது இப்பாடல்.

ஏழையேன் - மடமையுடையேன், மாதரைத் தஞ்சமென்று மடமையானதற்கு அவர்களின் தாழ்குழலும்

இன்சொல்லுமே காரணம் என்றார். ஐவர் வந்து ஆழ்குழிப் படுத்தல் - மாதர்போகம் மன்னச்செய்தல்.

மாற்றமொன் றருளகில்லீர் மதியிலேன் விதியிலாமை
சீற்றமுந் தீர்த்தல்செய்யீர் சிக்கன வுடையராகிக்
கூற்றம்போ லைவர்வந்து குலைத்திட்டுக் கோகுசெய்ய
ஆற்றவுங் கில்லேனாயே னாரூர்மூ லட்டனீரே. 6

6 என் நிலைகண்டும் இரக்கமில்லீர் என்று வருந்தி நிற்கும் நிலையைக் காட்டுகிறது இப்பாடல்.

மாற்றம் - மறுமொழி. சென்ற திருப்பாடல்களில் உடற்பகைவராயும் - உடனுறைபகைவராயும் உள்ளவர்களின் தீமையை எடுத்துச் சொல்லியும் பரிகாரம் அருளாமையால் 'மாற்றமொன் றருளகில்லீர்' என்றார்; சீற்றம் - தவறான வழியில் நடப்பதாலுண்டான சினம். சிக்கனவு - உறுதியாகப் பிடித்தல். 'சிக்கெனப் பிடித்தேன்' என்பதும் இப் பொருட்டு. கோகு - துன்பம்.

உயிர்நிலை யுடம்பேகாலா வுள்ளமே தாழியாகத்
துயரமே யேற்றமாகத் துன்பக்கோ லதனைப்பற்றிப்
பயிர்தனைச் சுழியவிட்டுப் பாழ்க்குநீ ரிறைத்துமிக்க
அயர்வினா லைவர்க்காற்றே னாரூர்மூ லட்டனீரே. 7

7. வாழ்க்கைநீரை பாழுக்கிறைக்கச்செய்த ஐவரின் அவதியை அறிவிக்கிறது இப்பாடல்.

உயிர்நிலை உடம்பு - உயிர் நிற்றற்கிடமாய உடம்பு. கால் - கவைக்காலாகிய துலாமரம். தாழி - ஏற்றச்சால்.



துயரம் ஏற்றம் - துயரங்களே கவைக்காலில் இடப்பட்ட ஏற்றமரம். துன்பம் பற்றுக்கோல். பயிர் - மனித உடம் பெடுத்ததின் குறிக்கோளாகிய சிவபோகம் விளைக்கும் தவ ஞானம். இப்பாடல் ஏகதேசவுருவகம். துயரம் - பிணி. துன்பம் - அதனால் விளைந்த மனமாற்றம்.

கற்றதே லொன்றுமில்லை காரிகை யாரோடாடிப்
பெற்றதேற் பெரிதுந்துன்பம் பேதையேன் பிழைப்பினாலே
முற்றினா லைவர்வந்து முறைமுறை துயரஞ்செய்ய
அற்றுநா னலந்துபோனே னாரூர்மூ லட்டனீரே. 8

8. வாணாள் வீணாயிற்று; வருந்தியது ஒன்று தான்பயன்; என்பதை அறிவிக்கிறது இப்பாட்டு.

கற்றது ஒன்றுமில்லை என்றார் படித்தபயன் எய்தாமையின். பேதையரிடம் பெற்றது துன்பமென்றது, ஒளியைக் காட்டி விட்டிலை இழுக்கும் விளக்குப்போல அழகைக்காட்டி வசப்படுத்தித் துன்பம்தந்தார் என்பதாம். காரிகை - அழகு. பிழைப்பினாலே முற்றினால் - சீவனோபாயங்காரணமாகத் தொழிலில் ஈடுபட்டால். அற்று - பயனற்று.

பத்தனாய் வாழமாட்டேன் பாவியேன் பரவிவந்து
சித்தத்து ளைவர்தீய செய்வினை பலவுஞ்செய்ய
மத்துறு தயிரேபோல மறுகுமென் னுள்ளந்தானும்
அத்தனே யமரர்கோவே யாரூர்மூ லட்டனீரே. 9

9. மனக்கலக்கம் விளைவது இந்திரியங்களாலேயே என்றறிவிக்கிறது இப்பாடல்.

ஐவர், தீய செய்வினை சித்தத்துள் பரவிவந்து பலவும் செய்ய, உள்ளம் தயிர்போல மறுகும் எனக் கூட்டி முடிவு காண்க.

தடக்கைநா லைந்துங்கொண்டு தடவரை தன்னைப்பற்றி
எடுத்தவன் பேர்க்கவோடி யிரிந்தன பூதமெல்லாம்
முடித்தலை பத்துந்தோளு முறிதர விறைபோயூன்றி
அடர்த்தருள் செய்ததென்னே யாரூர்மூ லட்டனீரே. 10

சென்ற ஒன்பது பாடல்களாலும் அடியேனுக்குவந்த இடையூற்றை அறிவித்தும், பரிகாரம்தேடாத தேவீர்; உமக்கிடையூறுசெய்த இராவணனை அடர்த்ததுமட்டும் என்னே தன்னலம் என்று வினவுகின்றார்.

## 12. திருநேரிசை

இராகம்: நவரோஸ்] . [தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்

[இறைவன் அம்மையோடெழுந்தருளியிருக்கும் திருவோலக்கத்தினைத் தொழப் பிறந்தவர்களே பிறந்தவர்கள் என அறிவிக்கிறார் அப்பரடிகள்.]

குழல்வலங் கொண்டசொல்லாள் கோலவேற் கண்ணிதன்னைக்
கழல்வலங் கொண்டுநீங்காக் கணங்களக் கணங்களார
அழல்வலங் கொண்டகையா னருட்கதி ரெறிக்குமாரூர்
தொழல்வலங் கொண்டல்செய்வான் றோன்றினார்
[தோன்றினாரே. 1

1. இறைவனைத்தொழவும் வலஞ்செய்யவும் பிறந்த பிறப்பே பிறப்பு என்று இம் முதற்பாடல் அறிவிக்கிறது.



குழல் வலங்கொண்ட சொல்லாள் - புல்லாங்குழலை வெற்றிகண்ட சொல்லினையுடைய உமாதேவி. சொல்லாளாகிய வேற்கண்ணியை வலம்வந்து நீங்காத சிவகணங்களுக்கு, அக்கணங்கள் மிகுதியும் நகர, இறைவன் அருள் ஒளியை வீசும் ஆரூரைத்தொழ, வலங்கொள்ளத், தோன்றியவர்களே தோன்றியவர்கள் என வினைமுடிவுசெய்க. கணங்கள் அம்மையாரை வழிபட அதற்காக இறைவன் அருளொளிவீசுகின்றார் என்பது கருத்து. வலங்கொண்ட அழல் - வலமாகச் சுற்றி எழும் நெருப்பு.

நாகத்தை நங்கையஞ்ச நங்கையை மஞ்ஞையென்று
வேகத்தைத் தவிரநாகம் வேழத்தி னுரிவைபோர்த்துப்
பாகத்தி லொளிர்தல் செய்யாத் திங்களை மின்னென்றஞ்சி
ஆகத்திற் கிடந்தநாக மடங்குமா ரூரனார்க்கே 2

2. இறைவன் திருமேனியிலுள்ள நாகம் முதலியன, ஒன்றற்கொன்று பயந்து ஒடுங்கிக்கிடக்கின்றன என்பதை இப்பாடல் தெரிவிக்கிறது.

மஞ்ஞை - மயில். நங்கையை மயிலென்றெண்ணியது நிறம்பற்றி. பெருமான் திருமேனியிற்கிடந்த நாகம் யானைத் தோல் போர்வையில் மறைந்து தோன்றுகின்ற திங்களை மின்னென்று அஞ்சியது.

தொழுதகங் குழையமேவித் தோட்டிமை யுடையதொண்டர்
அழுதகம் புகுந்துநின்றா ரவரவர் போலுமாரூர்
எழிலக நடுவெண்முத்த மன்றியு மேர்கொள்வேலிப்
பொழிலகம் விளங்குதிங்கட் புதுமுகிழ் சூடினாரே. 3

3. கனிந்த அடியார்கள் சிந்தையில் விளங்குகின்ற இறைவன் சூடிய அணிகளை அறிவிக்கின்றது இப்பாடல்.

தோட்டிமை - ஒற்றுமை. அழகிய முத்துமாலையே யல்லாமல் சோலையில் விளங்குகின்ற அரும்புபோலும் இளம்பிறையும் சூடினவர் ஆரூரர்.

நஞ்சிருண் மணிகொள்கண்டர் நகையிரு ளீமக்கங்குல்
வெஞ்சுடர் விளக்கத்தாடி விளங்கினார் போலுமூவா
வெஞ்சுடர் முகடுநீண்டி வெள்ளிநா ராசமன்ன
அஞ்சுட ரணிவெண்டிங்க ளணியுமா ரூரனாரே. 4

4. ஆரூர்த் திங்கள்முடித் தம்பிரான் ஆகாத நஞ்சையும் உண்டு நள்ளிருளில் நட்டமாடுவார் என்பது இப்பாடலில் அறிவிக்கப்படுகிறது.

மணி - நீலமணி. நகை - ஒளி. ஈமக்கங்குல் என்றது பேரூழிக்காலத்து இருளை. வெஞ்சுடர் - அக்காலத்து விளங்கும் வலது கண்ணாகிய சுடர். மூவாவெஞ்சுடர் முகடு - அழியாத விரும்பத்தக்க ஒளிவீசுகின்ற மணிபதித்த மாளிகையினுச்சி. வெள்ளி நாராசம் - வெள்ளிக்கம்பி. முகடு நீண்டி, வெள்ளிக்கம்பியைப்போன்ற கிரணத்தையுடைய வெண்திங்கள்; அதனை அணியும் ஆரூரர் என முடிக்க.

எந்தளிர் நீர்மைகோல மேனியென் றிமையோரேத்தப்
பைந்தளிர்க் கொம்பரன்ன படர்கொடி பயிலப்பட்டுத்
தஞ்சடைத் தொத்தினாலுந் தம்மதோர் நீர்மையாலும்
அந்தளி ராகம்போலும் வடிவரா ரூரனாரே. 5



5. தியாகேசன் திருமேனி இளந்தளிர்போல யாவரையும் வசப்படுத்துவது என்பது உணர்த்தப் படுகின்றது இப்பாடலில்.

இமையோர் கோலமேனி எந்தளிர் நீர்மை என்று ஏத்த - தேவர்கள் இறைவனின் அழகிய திருமேனியானது எமது கற்பகத்தளிரின் நிறம்போலப் பொன்னிறமானது என்று வணங்க. பைந்தளிர்க்கொம்பரன்ன படர்கொடி பயிலப்பட்டு - பசிய தளிரோடு கூடிய பூங்கொம்பை ஒத்த படர் கொடியாகிய உமாதேவியால் பழகப்பெற்று. தம் சடைத் தொத்தினாலும் - தமது சடைக்கூட்டத்தினாலும். தம்மதோர் நீர்மையாலும் - தமது ஆராயப்படுகின்ற சிவந்த நிறத்தாலும். பசுமையும் செம்மையும் கலந்த அந்தளிராகம்போலும் - அழகிய தளிரின் சிவப்பினைப் போலும் வடிவுடையார் ஆரூரனார் என்க. தேவர்கள் பொற்றளிர்போலும் திருமேனி என்றாலும் யாம் பசுந் தளிர்போலும் திருமேனி என்பேம் என்பது கருத்து.

வானகம் விளங்கமல்கும் வளங்கெழு மதியஞ்சூடித்
தானக மழியவந்து தாம்பலி தேர்வர்போலும்
ஊனகங் கழிந்தவோட்டி லுண்பது மொளிகொணஞ்சம்
ஆனகஞ் சுமாடு மடிகளா ரூரனாரே. 6

6. இறைவன் இளமதி சூடிய பெருமையுடையாரா யிருந்தும் பலிதேர்வதும் ஓட்டிலுண்பதுமாகிய எளிவந்த செய்கையுடையார் என்கிறது இச்செய்யுள்.

அகம் அழியவந்து - மனம் வருந்தவந்து; இரப்பார்க்கு மனம் வருந்துதல் இயல்பு. அன்றி, தான் அகம்

அழியவந்து - தாருகாவனத்து முனிவர்களின் ஆணவம் கெடவந்து என்றுமாம். ஆனகம் அஞ்சு - பஞ்சகவ்யம். ஆடும் அடிகள் ஆரூரனார் மதிசூடி அழியவந்து பலிதேர்வர் போலும் எனமுடிக்க.

அஞ்சணை கணையினானை யழலுற வன்றுநோக்கி
அஞ்சணை குழலினாளை யமுதமா வணைந்துநக்கு
அஞ்சணை யஞ்சுமாடி யாடரா வாட்டுவார்தாம்
அஞ்சணை வேலியாரூ ரதரித் திடங்கொண்டாரே. 7

7. காமத்தெய்வத்தை அழித்து போகியாயிருக்கும் இறைவன் இயல்பைக் காட்டுகிறார் இப்பாடலில்.

அஞ்சணைகணையினான் - மன்மதன். அஞ்சணை குழலினாள்-ஐம்பாலாக முடிக்கப்படும் கூந்தலையுடைய உமாதேவி. அஞ்சணை அஞ்சு - பஞ்சகவ்வியம். கோயில் ஐவேலி குளம் ஐவேலி செங்கழுநீரோடை ஐவேலியாதலின் அஞ்சணை ஆரூர்வேலி என்றார்.

வணங்கிமுன் னமரரேத்த வல்வினை யானதீரப்
பிணங்குடைச் சடையில்வைத்த பிறையுடைப் பெருமை யண்ணல்
மணங்கம ழோதிபாகர் மதிநிலா வட்டத்தாடி
அணங்கொடி மாடவீதி யாரூரெம் மடிகளாரே. 8

8. பிறைமுடித்த பெருமையண்ணல் ஆரூரடிகளாரே என்கிறது இப்பாடல்.

பிணங்குடைச்சடை - பின்னியசடை. ஓதி - கூந்தலையுடைய உமாதேவி; ஆகுபெயர். மதிநிலாவட்டத்துக்கொடி



ஆடி அணம் மாடவீதி - சந்திரவட்டத்திலே கொடிகள் ஆடிக் கலந்திருக்கின்ற மாடங்களையுடைய வீதி. அணவும் கொடி என்பது அணங்கொடி எனச் செய்யும் என்னும் எச்சத்து உயிர்மெய் ஏகியது.

நகலிடம் பிறர்கட்காக நான்மறை யோர்கடங்கள்
புகலிட மாகிவாழும் புகலிலி யிருவர்கூடி
இகலிட மாகநீண்டங் கொண்டெழி லழலதாகி
அகலிடம் பரவியேத்த வடிகளா ரூரனாரே. 9

9. நாம் பெரியர் நாம் பெரியர் என்னும் இருவரின் பகையைத் தீர்க்க அழல்வடிவாய் நின்றவன் ஆரூரனே என்கின்றது இப்பாடல்.

பிறருக்கு நகலிடமாக - பிறர்நகைக்க. நான்மறையோர்கள் தங்கள் புகலிடமாகிவாழும் புகலிலி - அந்தணர்களுக்கு அடைக்கலத் தானமாய் வாழுகின்ற, தமக்கோரடைக்கலம் விரும்பாத மாலும் அயனும். இகலிடமாக நீண்டு - பகை மிக்கு.

ஆயிரந் திங்கண்மொய்த்த வலைகட லமுதம்வாங்கி
ஆயிர மசுரர்வாழ மணிமதின் மூன்றும்வேவ
ஆயிரந் தோளுமட்டித் தாடியா வசைவுதீர
ஆயிர மடியும்வைத்த வடிகளா ரூரனாரே. 10

10. பலவேறு அற்புதங்களைச் செய்யாமலே செய்த பரமன் ஆரூரன் என்கின்றது இத்திருப்பாடல்.

ஆயிரம் என்பது பல என்றும் பொருளில் வந்தது. அமுதம் கடைந்து, திரிபுரம்வேவச்செய்து ஆயிரம் தோள்களும் அசையத் திருவடியைவைத்து ஆடியவர் ஆரூரர் என்பதாம்.

## 13. திருவிருத்தம்

இராகம்: நவரோஸ்] [தாளம்: திருபுடை

திருச்சிற்றம்பலம்

[அப்பர் சுவாமிகள் திருவாரூர் எல்லையை அடைந்தபோது அடியார்கள் எதிர்கொள்ள அவர்களைநோக்கித் 'திருமூலட்டானருடைய தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியம் நமக்கும் உண்டோ?' என்று வினவித் திருவாரூர்த் திருவீதியை அடைகின்றவர்கள் இப் பதிகத்தை அருளிச்செய்கின்றார்கள்.]

குலம்பலம் பாவரு குண்டர்முன்
னே நமக் குண்டுகொலோ
அலம்பலம் பாவரு தண்புன
லாரு மவிர்சடையான்
சிலம்பலம் பாவரு சேவடி
யான்றிரு மூலட்டானம்
புலம்பலம் பாவரு தொண்டர்க்குத்
தொண்டராம் புண்ணியமே. 1

1. இப்பாடலால் இறைவன் திருமுடியையும் திருவடியையும் தியானித்து, அத்தகைய திருமூலட்டானமுடையாருடைய அடியார்க்கடியாராகும் தன்மையை வேண்டுகிறார்.



குலம் பலம் பாவரும் - பல குலமாகப் பரவிய. குண்டர் - சமணர். அம் சாரியை அலம்பு அலம்பாவரும் - எல்லா இடங்களையும் பன்முறை கழுவிவருகின்ற. தண்புனல் - கங்கை. சிலம்பு அலம்பாவரு சேவடி - மறைச்சிலம்பு கிடந்து ஒலிக்கின்ற திருவடி. புலம்பு அலம்பாவரும் - அன்பால் கிடந்து அரற்றுதலையுடைய. அவிர்சடையான் சேவடியான் திருமூலட்டானம் புலம்புகின்ற தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியம் குண்டர்முன் நமக்கு உண்டுகொலோ எனக் கூட்டுக.

மற்றிட மின்றி மனைதுறந்
தல்லுணா வல்லமணர்
சொற்றிட மென்று துரிசுபட்
டேனுக்கு முண்டுகொலோ
விற்றிடம் வாங்கி விசயனோ
டன்றொரு வேடுவனாய்ப்
புற்றிடங் கொண்டான்றன் றொண்டர்க்குத்
தொண்டராம் புண்ணியமே. 2

2. கள்ளனோடு வழிச்சென்றதுபோல, புறச்சமயத்தாரோடு பொருந்திய எமக்கும் மேற்கூறிய புண்ணியம் கிட்டுமோ என்கிறார் இப்பாடலில்.

அல்லுணா - இரவில் உண்ணாத. சொல்திடமென்று - சொல்லே உறுதியானதென்று. துரிசுபட்டேனுக்கும் - குற்றப்பட்ட எனக்கும். வில்திடம் - வில்லின் வலிமை. வேடுவனாய்க்கொண்டான் எனக் கூட்டுக.

ஒருவடி வின்றிநின் றுண்குண்டர்
முன்னமக் குண்டுகொலோ
செருவடி வெஞ்சிலை யாற்புர
மட்டவன் சென்றடையாத்
திருவுடை யான்றிரு வாரூர்த்
திருமூலட் டானன்செங்கண்
பொருவிடை யானடித் தொண்டர்க்குத்
தொண்டராம் புண்ணியமே. 3

3. சென்றடையாத் திருவுடைய திருமூலட்டான னுடைய அடியார்க்கு அடியராகும் புண்ணியம் கிட்டுமோ என்கிறது இப்பாடல்.

*நின்று உண்குண்டர் - நின்ற நிலையிலேயே உண்டல் சமணத் துறவியரியல்பு. செருவடி வெஞ்சிலை - போரில் வல்ல கூரியவடித்தெடுக்கப்பட்ட கொடியவில். சென்றடையாத்திரு - தாமேவந்து பொருந்தும் ஞானத்திரு.*

மாசினை யேறிய மேனியர
வன்கண்ணர் மொண்ணரைவிட்
டீசனை யேநினைந் தேசறு
வேனுக்கு முண்டுகொலோ
தேசனை யாரூர்த் திருமூலட்
டானனைச் சிந்தைசெய்து
பூசனைப் பூசுரர் தொண்டர்க்குத்
தொண்டராம் புண்ணியமே. 4

4. இறைவனையே யன்றி வேறொன்றையும் எண்ணாத எமக்கும் அப்பேறு கிட்டுமோ என்கிறார்.



*வன் கண்ணர் - கொடுமை யுடையவர்கள். மொண்ணர் - கூர்த்த அறிவற்றவர்கள். தேசன் - ஒளியுடையவன். பூசனைப் பூசுரர் - திருமேனி தீண்டும் ஆதிசைவர்கள். ஏசறுவேன் - இடைவிடாக் கவலையால் துன்புறுவேன்.*

அருந்தும் பொழுதுரை யாடா
வமணர் திறமகன்று
வருந்தி நினைந்தர னேயென்று
வாழ்த்துவேற் குண்டுகொலோ
திருந்திய மாமதி லாரூர்த்
திருமூலட் டானனுக்குப்
பொருந்துந் தவமுடைத் தொண்டர்க்குத்
தொண்டராம் புண்ணியமே. 5

5. என்னுடைய அரற்றுரையாவும் அரனே அரனே என்பதே. ஆதலால், அப்பேறு கிட்டுமோ. என்கிறார் இப்பாடலில்.

*திறம் - பொய்யுரையாகிய உபதேசமொழி. பொருந்தும் தவம் - தொண்டாதற்கேற்ற தவம்.*

வீங்கிய தோள்களுந் தாள்களு
மாய்நின்று வெற்றரையே
மூங்கைகள் போலுண்ணு மூடர்முன்
னேநமக் குண்டுகொலோ
தேங்கமழ் சோலைத்தென் னாரூர்த்
திருமூலட் டானன்செய்ய
பூங்கழ லானடித் தொண்டர்க்குத்
தொண்டராம் புண்ணியமே. 6

6. முற்கூறியபேறு, ஊமைகளைப்போல நின்றன் இன்ற மூடர்களுக்கு முன்னே நமக்குமுண்டுகொலோ என்கிறார் இப்பாடலில்.

வீங்கிய - பருத்த. மூங்கைகள் - ஊமைகள்.

பண்ணிய சாத்திரப் பேய்கள்
பறிதலைக் குண்டரைவிட்
டெண்ணில் புகழீசன் றன்னருள்
பெற்றேற்கு முண்டுகொலோ
திண்ணிய மாமதி லாரூர்த்
திருமூலட் டானனெங்கள்
புண்ணியன் றன்னடித் தொண்டர்க்குத்
தொண்டராம் புண்ணியமே.

7. ஈசனருள்பெற்ற எனக்கு அப்பேறுகிட்டாது ஒழியாதெனத் தேற்றம் தெரிவிக்கிறார்.

பண்ணிய சாத்திரப்பேய்கள்-பதிநாலன்றி பசுபோத முனைப்பாற் செய்யப்பட்டனவாகிய சாத்திரங்களையே நம்பிவாழ்கின்ற பேய்போன்ற சமணர்கள்.

கரப்பர்கண் மெய்யைத் தலைபறிக்
கச்சுக மென்னுங்குண்டர்
உரைப்பன கேளாதிங் குய்யப்போந்
தேனுக்கு முண்டுகொலோ
திருப்பொலி யாரூர்த் திருமூலட்
டானன் றிருக்கயிலைப்
பொருப்பன் விருப்பமர் தொண்டர்க்குத்
தொண்டராம் புண்ணியமே. 8



8. சமணர் சழக்குரைகேளாது உய்யவந்த எனக்கு அப்பேறு உறுதியாகக் கிட்டுமோ என்கிறார்.

மெய்யைக் கரப்பர்கள் - உடலைப் பாயால் மறைப்பவர்கள். திருப்பொலி ஆரூர் - வீடும் செல்வமும் விளங்கும் திருவாரூர்.

கையிலிடு சோறு நின்றுண்ணுங்
காத லமணரைவிட்
டுய்யு நெறிகண்டிங் குய்யப்போந்
தேனுக்கு முண்டுகொலோ
ஐய னணிவய லாரூர்த்
திருமூலட் டானனுக்குப்
பொய்யன் பிலாவடித் தொண்டர்க்குத்
தொண்டராம் புண்ணியமே. 9

9. உய்யும்நெறி கண்டுவந்த எனக்கு மெய்யன்பர் அடித்தொண்டுகிட்டுமோ என்று அறிவிக்கிறார்.

உய்ய - இதுகாறும் புறச்சமயிகளால் பட்டதீமைகளில் தப்பிப்பிழைக்க. பொய்யன்பிலா அடித்தொண்டர் - நிலையான அன்பு கொண்ட அடியார்கள்.

குற்ற முடைய வமணர்
திறமது கையகன்றிட்
டுற்ற கருமஞ்செய் துய்யப்போந்
தேனுக்கு முண்டுகொலோ
மற்பொலி தோளா னிராவணன்
றன்வலி வாட்டுவித்த
பொற்கழ லானடித் தொண்டர்க்குத்
தொண்டராம் புண்ணியமே. 10

10. இராவணனின் முனைப்பறுத்து ஏற்றுக்கொண்ட பெருமான் அடித்தொண்டர்க்குக் கிடைத்த பெருமை எனக்கும் கிட்டுமோ என்கின்றார்.

உற்றகருமம் செய்து - சைவசமயம் சார்தற்கேற்ற பஸ்மதீட்சை முதலியன பெற்றுச் சரியை முதலிய எல்லாம் செய்து. தோளான் வலிவாட்டுவித்த பொற்கழலான் என்றது தோள் வலியைத் தாள்வலி வென்றது என்ற அருமை தோன்றற்கு.

## 14. திருவிருத்தம்.

இராகம்: நவரோஸ்.] [தாளம்: திருபுடை.

திருச்சிற்றம்பலம்.

திருவாரூர்ப் பூங்கோயிலை வழிபட்ட அப்பரடிகள் அரநெறியையும் வணங்கும்போது, நீரால் விளக்கெரித்த நமிநந்தி அடிகளது அருந்தொண்டு நினைவுக்குவர, அதனையும் அமைத்துத் தம்மொத்த தொண்டர்களுக்கும் அறிவுறுத்துவார்களாக இப்பதிகத்தை அருளிச் செய்கின்றார்கள்.]

**வேம்பினைப் பேசி விடக்கினை யோம்பி வினைபெருக்கித்**
**தூம்பினைத் தூர்த்தங்கோர் சுற்றந் துணையென்**
**[றிருந்திர்தொண்டீர்**
**ஆம்பலம் பூம்பொய்கை யாரூ ரமர்ந்தா னடிநிழற்கீழ்ச்**
**சாம்பலைப் பூசிச் சலமின்றித் தொண்டுபட் டுய்ம்மின்களே. 1**



1. உடலையேபேணும் தொண்டர்களை நோக்கி ஆரூரமர்ந்தான் கழலுக்குத் தொண்டுபடுங்கள்; என்று அறிவுரை வழங்குகிறார்கள் முதற்பாட்டில்.

வேம்பினைப்பேசி - வேம்புபோன்ற கைப்பான வார்த்தைகளைப் பேசி. வேம்பு உவமையாகுபெயர். விடக்கு - ஊன், ஈண்டு, உடல் சினையாகுபெயர். வினைபெருக்கி - ஆகாமிய வினைகளை மிகச் செய்து. தூம்பு - வயிறு. வேம்பினைப் பேசி என்பது முதல் துணையென்றிருந்திர் என்பது வரையிலும் தொண்டர்களின் பொழுதுபோக்கை உணர்த்தி, இனிக் கடமையை உணர்த்துகிறார். நீறுபூசி திருவாரூர் இறைவனுக்கு வஞ்சனையின்றி ஆட்படுங்கள் என்று. சலம்- வஞ்சனை.

வேம்பினைபேசி - வேம்புபோன்ற கைப்பான வார்த்தைகளைப் பேசி. வேம்பு உவமையாகுபெயர். விடக்கு - ஊன், ஈண்டு, உடல்; சினையாகுபெயர். வினைபெருக்கி - ஆகாமிய வினைகளை மிகச்செய்து. தூம்பு - வயிறு. வேம்பினைப்பேசி என்பது முதல் துணையென்றிருந்திர் என்பது வரையிலும் தொண்டர்களின் பொழுதுபோக்கை உணர்த்தி, இனிக்கடமையை உணர்த்துகின்றார் நீறுபூசி திருவாரூர் இறைவனுக்கு வஞ்சனையின்றி ஆட்படுங்கள் என்று. சலம் - வஞ்சனை.

**ஆராய்ந் தடித்தொண்ட ராணிப்பொ னாரூ ரகத்தடக்கிப்**
**பாரூர் பரிப்பத்தம் பங்குனி யுத்திரம் பாற்படுத்தான்**
**ஆரூர் நறுமலர் நாத னடித்தொண்ட னம்பிநந்தி**
**நீராற் றிருவிளக் கிட்டமை நீணா டறியுமன்றே. 2**

2. இப்பாடல் நமிநந்தி அடிகள் நீரால் திருவிளக்கிட்ட திருத்தொண்டினையும், பங்குனி உத்திரம் முதலிய விழாக்கள் அமைக்கச்செய்த சிறப்பினையும் உணர்த்துகின்றது.

அடித்தொண்டர் ஆணிப்பொன் - திருவடித் தொண்டர்களாகிய பொன்னுக்கு உரையாணி போன்ற நமிநந்தி. இதனைச் சேக்கிழார் 'தொண்டர்க்கு ஆணியெனும் பேறு திருநாவுக்கரசர் விளம்பப்பெற்ற பெருமையினார்' என்று தெரிவிக்கின்றார். ஆரூர் அகத்தடக்கி - ஆரூர்ப்பெருமானைத் தம் மனத்துளிருத்தி. பாரூர்பரிப்ப - உலகமெல்லாம் கொண்டாட. பாற்படுத்தான் - செய்தான். அத்தகைய தியாகேசப்பெருமான் தொண்டராகிய நமிநந்தி அடிகள் நீரால் விளக்கிட்டமையை உலகம் அறியும். நம்பிநந்தி என்றது நமிநந்தி என்று மருவிற்றுப்போலும்.

பூம்படி மக்கலம் பொற்படி மக்கல மென்றிவற்றால்
ஆம்படி மக்கல மாகிலு மாரூ ரினிதமர்ந்தார்
தாம்படி மக்கலம் வேண்டுவ ரேற்றமிழ் மாலைகளால்
நாம்படி மக்கலஞ் செய்து தொழுது மடநெஞ்சமே. 3

3. இறைவனைக்காட்டும் கண்ணாடி தெய்வத்தமிழ்ப் பாக்களேயாம் என்கிறது இப்பாடல்.

படிமக்கலம் - கண்ணாடி. பூம்படிமக்கலம் பொற்படிமக்கலம் என்றிவற்றாலாம் ஆகிலும் - மண் கண்ணாடியும் பொற்கண்ணாடியும் என்றிவற்றாலாம் என்றாலும். ஆரூரினிதமர்ந்தார் தாம் படிமக்கலம் வேண்டுவரேல் - ஆரூர்ப்



பெருமான் கண்ணாடியை விரும்புவாராயின். நெஞ்சே! நாம் தமிழ் மாலைகளால் படிமக்கலம் செய்து - தமிழ்ப் பாடலாகிற கண்ணாடியைச் செய்து. தொழுதும் - வணங்குவோம். இது சொற்பொருட் பின்வருநிலையணி. கடவுளைக் காட்டும் கண்ணாடி கவி ஒன்றே என்பதாம்.

துடிக்கின்ற பாம்பரை யார்த்துந் துளங்கா மதியணிந்து
முடித்தொண்ட ராகிமுனிவர் பணிசெய்வ தேயுமன்றிப்
பொடிக்கொண்டு பூசிப் புகுந்தொண்டர் பாதம்
[பொறுத்தபொற்பால்
அடித்தொண்ட னந்தியென் பானுள னாரூ ரமுதினுக்கே. 4

4. ஆரூரிறைவனுக்குச் சிறந்த தொண்டர் நமிநந்தியடிகளே எனத்தெரிவிக்கின்றார்.

ஆர்த்து - கட்டி. முனிவர் ஆர்த்து அணிந்து ஆகி பணிசெய்வரேயன்றி; பூசிப்புகும் பொற்பால் நந்தி என்பான் ஆரூரமுதினுக்குளன் என்று கூட்டுக. இதன்கருத்து அடியார்கள் திருவடியைத் தாங்கும் அழகால் நமிநந்தி சிறந்தார் என்பதாம்.

கரும்பு பிடித்தவர் காயப்பட் டாரங்கொர் கோடலியால்
இரும்புபிடித்தவ ரின்புறப் பட்டா ரிவர்கள்நிற்க
அரும்பவிழ் தண்பொழில் சூழணி யாரூ ரமர்ந்தபெம்மான்
விரும்பு மனத்தினை யாதொன்று நானுன்னை வேண்டுவனே. 5

5. இறைவ! தேவரீர் திருவுள்ளக் குறிப்பு அறிய இயலாததொன்று; ஆதலால், தேவரீரை வேண்டுவது யாங்ஙனம்; என்று அருளுகின்றார்.

கரும்புபிடித்தவர் - மன்மதன். இரும்பு பிடித்தவர்- மழுவாய இரும்பைப் பிடித்த சண்டீசர். மன்மதன் எரிக்கப்பட்டான். சண்டீசர் இன்பமுற்றார். ஆதலால் இறைவ! கனிந்த உள்ளத்தினை ஆளுறும் நான் உன்னை வேண்டுவது. என்? ஒன்றும் விளங்கவில்லை என்பதாம்.

கொடிகொள் விதானங் கவரி பறைசங்கங் கைவிளக்கோ
டிடிவில் பெருஞ்செல்வ மெய்துவ ரெய்தியு மூனமில்லா
அடிகளு மாரூ ரகத்தின ராயினு மந்தவளப்
பொடிகொண் டணிவார்க் கிருளொக்கு நந்தி புறப்படலே. 6

6. அடியார்களுக்கு நமிநந்தியடிகளிடம் உள்ள பேரன்பும், தொண்டின் சிறப்பும் சொல்வது இப்பாடல்.

இடிவு இல் பெருஞ்செல்வம் - அழியாப் பெருஞ் செல்வம். தவளப் பொடி - வெளிய திருநீறு நந்தி - நமிநந்தியடிகள். எய்துவர் பெருஞ்செல்வம் எய்தியும், ஊன மில்லா அடிகளும் ஆரூர் அகத்தினராயிருந்தும், நந்திபுறப் படில் அணிவார்க்கு இருள் ஒக்கும் எனக்கூட்டி, அடையக் கூடிய அன்பர் பெருஞ்செல்வம் எய்தி பெருமகிழ்ச்சியால் ஒளி விளைய வேண்டுமல்லவா? அவ்வாறன்றி, இறைவன் தம்மைவிட்டுப் பிரியாது ஆரூரகத்திலே யிருப்பினும் ஒளி மிகவேண்டுமல்லவா அங்ஙனமன்றி விளக்கிடுகின்ற நந்தி புறப்பட்டுவிட்டால் பிற அடியார்கட்கு இருள் ஒக்கும் என்பது கருத்தாம்.

சங்கொலிப் பித்திடு மின்சிறு காலைத் தடவழலில்
குங்கிலி யப்புகைக் கூட்டென்றுங் காட்டி யிருபதுதோள்
அங்குலம் வைத்தவன் செங்குரு திப்புன லோடவஞ்ஞான்
றங்குலி வைத்தா னடித்தா மரையென்னை யாண்டனவே. 10



10. அடியேனை ஆட்கொண்டன இறைவன் திருவடித் தாமரைகளே என்கின்றார் இப்பாடலில்.

இருபது தோள் அங்கு உலம் வைத்தவன் - இருபது தோள்களையும் அவ்விடத்துத் திரண்ட கல்லாகப் பொருந் தியவன்; இராவணன். அங்குலி வைத்தவன் - அவன் உடலி லிருந்து உதிரம் வழிந்தோட விரலையூன்றிய இறைவன். அவனது அடித்தாமரை என்னை ஆண்டன ஆதலால் என்றும் சிறுகாலைத்தட அழலில் குங்கிலியப்புகை காட்டிக் கூட்டு என்று சங்கொலிப்பித்திடுமின் என்று மாறிப் பொருள்கொள்க. தட அழல் - வாய் [illegible] அகன்ற பாத்திரத்தி [illegible] உள்ள நெருப்பு.

## 15. திருக்குறுந்தொகை.

No. 109440

இராகம்: நாதநாமக்கிரியை] [தாளம்: சாபு.

திருச்சிற்றம்பலம்.

[ஆரூர்ப்பெருமான் எமக்கு இடர்வந்த காலத்து அஞ்சாதே என்று அபயம் அளிக்க எழுந்தருளுவர். அலமந்த தேவர்கட்கு அருள் செய்வர். ஆலமுண்டவராதலின் அபயமளிப்பர் என்று இப்பதிகத்தால் அறிவிக்கின்றார்கள் ]

எப்போ தும்மிறை யும்மற வாதுநீர்
முப்போ தும்பிர மன்றொழ நின்றவன்
செப்போ தும்பொனின் மேனிச் சிவனவன்
அப்போ தைக்கஞ்ச லென்னுமா ரூரனே. 1

O23:3?·2119
N49-2

1. மக்கள் கடமை மறவாது ஏத்துதல். அவர் கடமை வேண்டியகாலத்து வந்தருளுதல் என்று அறிவிக்கிறார்கள்.

இறையும் மறவாதிர் - கணமும் மறவாதீர்கள். சே போதும் பொனின் மேனிச் சிவன் - இடபவாகனத்து எழுந்தருளும் பொன்போலும் திருமேனி படைத்த சிவன். சே போதும் என்பது செப்போதும் என விகாரமாயிற்று- அப்போதைக்கு - கூற்றன் அடர்க்கவந்த காலத்து.

சடையின் மேலுமோர் தையலைவைத்த வர்
அடைகி லாவா வையரை யாத்தவர்
படையி னேர்தடங் கண்ணுமை பாகமா
அடைவர் போலிடு காடரா ரூரரே. 2

-2. இன்னலுற்றகாலத்து எங்கே! எங்கே! என்று அருட்சத்தியாகிய உமையொருபாகராக எழுந்தருளுவர் என்றறிவிப்பது இப்பாடல்.

தையல் - கங்கை, அடைகிலா அரவு - சினந்த பாம்பு (மூர்க்கப் பாம்பு). படை - வேற்படை. உமைபாகமா அடைவர் என்றது அடியார்கள் வேண்டிய காலத்து அருட் சத்தியோடி வெளிப்படுவர் என்பதாம். இடுகாடர்-சுடலையி லாடிப்பவர்.

விண்ட வெண்டலை யேகல னாகவே
கொண்ட கம்பலி தேருங் குழகனூர்
துண்ட வெண்பிறை வைத்த விறையவர்
அண்ட வாணர்க் கருளுமா ரூரரே. 3



3. ஓடே கலனாக ஊர்தோறும் பிச்சையெடுப்பவ ராயினும் தேவர்கட்கு அருள்வழங்குவார் என்கின்றதுப் இப் பாடல்.

விண்ட வெண்டலை - ஊன் பற்றுக்கழிந்தமையால் வாய் பிளந்திருக்கின்ற கபாலம். கலன்-பிச்சைப்பாத்திரம்.

விடையு மேறுவர் வெண்டலை யிற்பலி
கடைக டோறுந் திரியுமெங் கண்ணுதல்
உடையுஞ் சீரை யுறைவது காட்டிடை
அடைவர் போலரங் காகவா ரூரரே. 4

4. ஒன்றொடொன்று பொருந்தாத இயல்பினையுடை யாராக இருந்தும், வேண்டுவார் மனமே அரங்காக அடை தலிற்றவரூர்; இஃதென்ன வியப்பு என்கின்றதிப்பாடல்.

விடையும் ஏறுவர் என்ற உம்மை பலிக்குழல்வார் வாகன மூர்ந்து செல்லுதல் கூடாது என்ற பொருள் குறித்து. கடை - வாயில். சீரை - மரவுரி. அரங்காக அடைவர்போல்-(நினைப்பவர் மனத்தை) நடிக்குமிடமாகக் கொண்டு அடைவார்போலும் என்க.

துளைக்கை வேழத் துரியுடல் போர்த்தவர்
வளைக்கை யாளையோர் பாக மகிழ்வெய்தித்
திளைக்குந் திங்கட் சடையிற் றிசைமுழு
தளக்குஞ் சிந்தையர் போலுமா ரூரரே. 5

5. அவர் ஆரூரில் இருந்தும் அவர்சடை திசை முழுதும் பரவியிருப்பது என்று விளக்குகிறது இப்பாடல்.

துளைக்கைவேழம் - துளைபொருந்திய கையை யுடைய யானை. உரி - தோல். திளைக்கும் - கூடும். சடையினால் திசை முழுதும் அளந்துவிடவேண்டும் என்ற விருப்பம் உடையவர் போலும்; இதனால், அவர் சடை எங்கும் பரவியிருக்கிறது என்பதாம்.

பண்ணி னின்மொழி யாளையோர் பாகமா
விண்ணி னார்விளங் கும்மதி சூடியே
சுண்ண நீறுபொய்ப் பூசிச் சுடலையின்
அண்ணி யாடுவர் போலுமா ரூரரே. 6

6. உமாதேவியை ஒருபாகமாகக்கொண்டும், இறைவன் இடுகாட்டில் நடமாடுகின்றார் என்பது.

விண்ணின் ஆர் - விண்ணிடத்து நிறைந்து விளங்கும். அண்ணி - அணுகி.

மட்டு வார்குழ லாளொடு மால்விடை
இட்ட மாவுகந் தேறு மிறைவனார்
கட்டு வாங்கங் கனன்மழு மான்றனோ
டட்ட மாம்புய மாகுமா ரூரரே. 7

7. எட்டுப் புயங்களையுடைய இறைவன் அநுக்கிரக மூர்த்தியாய் அம்மையோடு இடபவாகனத்தில் எழுந்தருளுகிறார் என்று அறிவிக்கின்றது.

மட்டு - தேன். கட்டுவாங்கம் - கத்தி. கனல்மழு - கனலுகின்ற மழு. காந்துகின்ற தீ என்று பொருள்காணலும் உண்டு. கனலும் மழுவும் ஆம்.



தேய்ந்த திங்கட் கமழ்சடை யன்கலம்
ஏந்தி யெல்லியு லாடு மிறைவனார்
காய்ந்து காமனை நோக்கின கண்ணினார்
ஆய்ந்த நான்மறை யோதுமா ரூரரே. 8

8. வேதங்கள் விளம்பிய தலைவர் இவர் என்கிறது.

தேய்ந்த திங்கள் - ஒரு கலைப்பிறை. எல்லி - இரவு. காமனைக் காய்ந்து நோக்கிய கண்ணினார் என்றதால் நெற்றிக் கண்ணுக்கு இயற்கை பார்த்ததை எல்லாம் எரிப்பதன்று; எரிப்பது இறைவன் திருவுள்ளக்குறிப்பாலேயாம் என்பது விளங்கிற்று.

உண்டு நஞ்சுகண் டத்து ளடக்கியுங்
இண்டை செஞ்சடை வைத்த வியல்பினான்
கொண்ட கோவண வாடையன் கூரெரி
அண்டவாண ரடையுமா ரூரரே. 9

9. தேவர்கள் நாடோறும் வழிபாடுசெய்வது ஆரூர் என்கின்றது.

இண்டை - தலையிற் சூடப்படும் ஒருவகை மாலை. கூர் எரி - மிக்க அழல்வண்ணன்; எரி ஈண்டு உவமையாகுபெயர். ஆரூரர் இயல்பினன் ஆடையன் கூர் எரி எனக் கூட்டுக.

மாலு நான்முக னும்மறி கிற்கிலா
கால னாய வவனைக் கடந்திட்டுச்
சூல மான்மழு வேந்திய கையினார்
ஆல முண்டழ காயவா ரூரரே. 10

10. ஆரூரருக்கு ஆலமுண்டதும் ஓர் அழகாயிற்று என்பதை அறிவிக்கிறது.

அறிகிற்கிலார் - தமது பசுபோத முனைப்பால் அறிய மாட்டாராயினர். ஆலமுண்டழகாய ஆரூரர் இது 'கறைமிடறணியலும் அணிந்தன்று' என்பதை நினைவூட்டுவது.

## 16. திருக்குறுந்தொகை

இராகம்: நாதநாமக்கிரியை] [தாளம்: சாபு

திருச்சிற்றம்பலம்

[அப்பர் ஆரூரிலெழுந்தருளியிருந்தகாலத்து, ஒருநாள் உலகவரை நோக்கி, உங்கட்கு ஆயுள் உள்ளபோதே இறைவனைவந்து அடையுங்கள்; பண்டைவல்வினையும் பாவமும் பறையும்; அல்லல் அகலும்; விடாமற் பற்றி நின்றவர்களை அண்டமாளவும் வைப்பர்; ஆதலால் இன்னே அடையுங்கள், என்று இப்பதிகத்தில் அறிவிக்கின்றார்கள்.]

கொக்க ரைகுழல் வீணை கொடுகொட்டி
பக்க மேபகு வாயன பூதங்கள்
ஒக்க வாட லுகந்துடன் கூத்தராய்
அக்கி னோடர வார்ப்பா ரூரரே. 1

1. ஆரூரர் ஆடலுகந்து பூதங்களோடு உடனாடுவர் என்பதை அறிவிக்கின்றது.

கொக்கரை கொடுகொட்டி வாத்திய வகைகள்: அக்கு - உருத்திராக்கமணி.



எந்த மாதவஞ் செய்தனை நெஞ்சமே
பந்தம் வீடவை யாய பராபரன்
அந்த மில்புக ழாரூ ரனெறி
சிந்தை யுள்ளுஞ் சிரத்துளுந் தங்கவே 2

2. சிவநெறியைப் பின்பற்றியதற்கு யான் என்ன மாதவம் செய்தேன்; என இப்பாடலில் வியந்து கூறுகின்றார்.

பந்தம் வீடு அவையாய பாரபரன் - போக மோக்ஷம் இரண்டும்தரும் இறைவன். அரன்நெறி - சிவநெறி. தங்க நெஞ்சமே எந்தமாதவம் செய்தனை எனக் கூட்டுக.

வண்டு லாமலர் கொண்டு வளர்சடைக்
கிண்டை மாலை புனைந்து மிராப்பகல்
தொண்ட ராகித் தொடர்ந்து விடாதவர்க்
கண்ட மாளவும் வைப்பா ரூரரே. 3

3 மாலைபுனைதல் முதலாகச் சரியைத்தொண்டு செய்வார்க்கு வானுலகம் சித்திக்கும் என்கின்றது.

இராப்பகல் தொண்டராகி - எண்ணெய் ஒழுக்குப்போல இடைவிடாத அன்பால் எப்பொழுதும் தொண்டராகி தொடர்ந்து - அன்புகொண்டு. விடாதவர்க்கு - புறப்பற்றுச் சூழ்ந்து மனத்தைப் புறம்போக்கினும் பற்று விடாதார்க்கு.

துன்பெ லாமற நீங்கிச் சுபத்தராய்
என்பெ லாநெக் கிராப்பக லேத்திநின்
றின்ப ராய்நினைந் தென்று மிடையறு
அன்ப ராமவர்க் கன்பா ரூரரே. 4

4. அன்பர்க்கன்பர் ஆரூரர் என்கின்றது இப்பாடல்.

சுபத்தர் - நல்லன்புடையார். துன்பெலாம் அறநீங்கி - துன்பங்கள் அன்புசெய்தற்கு இடையூறுதலின் அறவே நீங்கி.

முருட்டு மெத்தையின் முன்கிடத் தாமுனம்
அரட்ட ரைவரை யாசறுத் திட்டுநீர்
முரட்ட டித்தவத் தக்கன்றன் வேள்வியை
அரட்ட டக்கிதன் ஆரூ ரடையினே 5

5. வாழ்நாள் உள்ளபோதே திருவாரூரை அடைந்துய்யுங்கள் என்கின்றது இப்பாடல்.

முருட்டுமெத்தை - சவச்சடங்கின்போது கிடத்தப்படும் விறகடுக்காகிய மெத்தை. அரட்டர் ஐவர் - துட்டராகிய பஞ்சேந்திரியங்கள். முரட்டடித்தவம் - முரட்டுத் தன்மைவாய்ந்த தவம். அரட்டு - செருக்கு. அடக்கி - அடக்கியவராகிய இறைவன்.

எம்மை யாரிலை யானு முளேனலேன்
எம்மை யாரு மிதுசெய வல்லரே
எம்மை யாரெனக் கென்றென் றாற்றினேற்
கம்மை யாரைத்தந் தாராரூ ரையரே. 6

6. மறுமைக்குத் துணையாவார் யார் என்று தேடிய போது எனக்கு ஆரூர்ப்பெருமான் அருளைத்தந்து போற்றினர் என்கிறது இச்செய்யுள்.



எம் ஐயார் இலை - எமக்குத் தலைவர் ஒருவரும் இல்லை. எமக்கு இன்பஞ்செய்வார் ஒருவரும் இல்லை எனினுமாம். எம்மை இதுசெய யாரும் வல்லரே - எம்மை இவ்வாறு அளிக்க வல்லவர் யாரேனும் உண்டோ? எத்தகைய பெருமையுடையாரும் இது செய்யவல்லரே என்றுமாம். அம்மை - மறுமைக்கு. யார் - (துணை) யார்; அம்மை யாரைத் தந்தார் - திருவருட்சத்தியைப் பதிவித்தார்; 'ஞானத்திரு நல்குதல்' தியாகேசன் வழக்கமாதல்காண்க. இலை அல்லேன் ஆதலால் ஆற்றினேற்கு ஆரூரர் தந்தார். யாரும் இதுசெய வல்லரே என வினைமுடிவுசெய்க.

தண்ட வாளியைத் தக்கன்றன் வேள்வியைச்
செண்ட தாடிய தேவர கண்டனைக்
கண்டு கண்டிவள் காதலித் தன்பதாய்க்
கொண்டி யாயின வாறென்றன் கோதையே. 7

7. இது தன்மகள் இறைவனிடத்து நீங்காக்காதலுடையளாதலைக் கண்ட நற்றாய் இரங்கிக்கூறியது.

தண்ட ஆளி - தண்டனையையாள்பவன். செண்டது ஆடிய - அழித்த; அது பகுதிப்பொருள் விகுதி. தேவர கண்டன் - தியாகர் திருநாமங்களில் ஒன்று. கண்டு கண்டு என்ற அடுக்கு பலகாற்காணல் காதல் மிகுதற்குஉபாயம் என்பதும், ஒருமுறை தேவரகண்டரைக் கண்டால் திரும்பவும் அவரழகு காணத்தூண்டும் என்பதுமாகிய குறிப்புகள் கொள்ளக்கிடக்கின்றன. கொண்டி - தலைவனைத் தேடிச்செல்லும் தலைமகள்.

இவண மைப்பல பேசத் தொடங்கினள்
அவண மன்றெனி லாரூ ராவெனும்
பவனி வீதி விடங்கனைக் கண்டிவள்
தவனி யாயின வாறென்றன் றையலே. 8

8. ஊரவர் பழிச்சொல்கேட்ட தோழி, ஊரவர்கள் என்னவோ பேசுகிறார்கள் அது அப்படியல்ல வீதிவிடங்கனைக்கண்டு என் தலைவி காமுற்றாள், என்று அறத்தொடு நின்றதைக் கூறுவது இச்செய்யுள்.

இவள் - ஊர்மகள். பல - உண்மையற்ற பலபேச்சுக்களை. அ(வ்)வணம் அன்று - அவ்வாறன்று. எனில் - உண்மை என்னெனில். பவனி வீதிவிடங்கனைக் கண்டு - பவனிவரும்போது வீதிவிடங்கப் பெருமானைக் கண்டு. தவனி - காமவெப்பம் உடையவள்.

நீரைச் செஞ்சடை வைத்த நிமலனார்
காரொத் தமிடற் றார்கனல் வாயரா
ஆரத் தருறை யும்மணி யாரூரைத்
தூரத் தேதொழு வார்வினை தூளியே. 9

9. ஆரூரைத் தூரத்தே கண்டு தொழுதாலும் தூளாகும் என்கிறது இச்செய்யுள்.

காரொத்தமிடற்றார்; கார் கருமைநிறத்தால் மட்டுமன்று; தேவர்களுக்கு உயிர் வழங்கிய வள்ளன்மையாலும் ஒப்பாயிற்று. கனல்வாய் அரா ஆரத்தர் - நெருப்புக்கக்கும் பாம்பை ஆரமாகக் கொண்டவர். வினை தூளியே - வினை காற்றிற் புழுதிபோலப் பறக்கும் என்பதாம்.



உள்ள மேயொ ருறுதி யுரைப்பனான்
வெள்ளந் தாங்கு விரிசடை வேதியன்
அள்ளல் நீர்வய லாரூ ரமர்ந்தவெம்
வள்ளல் சேவடி வாழ்த்தி வணங்கிடே. 10

10. மனத்திற்கு ஒருறுதி உரைக்கிறது இச்செய்யுள்.

அள்ளல் - சேறு. உள்ளமே உறுதியுரைப்பன்; ஆரூர் வள்ளல் சேவடிவாழ்த்தி வணங்கிடு என முடிக்க.

வண்ட மாமலர் மேலுறை வானொடும்
கொண்டல் வண்ணனுங் கூடி யறிகிலா
அண்ட வாணன்ற னாரூ ரடிதொழப்
பண்டை வல்வினை நில்லா பறையுமே. 11

11. ஆரூர் தொழுவார்க்குப் பழவினைகள் நில்லா அழியும் என்கிறது இப்பாடல்.

விண்டமாமலர் - எப்பொழுதும் மலர்ந்திருக்கும் உந்தியந்தாமரை உறைவான்-பிரமன். கொண்டல் வண்ணன்-மேகவண்ணனாகிய திருமால். பறையும் - கெடும்.

மையு லாவிய கண்டத்த னண்டத்தன்
கையு லாவிய சூலத்தன் கண்ணுதல்
ஐய னாரூ ரடிதொழு வார்க்கெலாம்
உய்ய லாமல்ல லொன்றிலை காண்மினே. 12

12. ஆரூர்ப் பெருமான் அடிதொழுவார்க்கு அல்லலேயில்லை; உய்யலாம் என்கிறது இப்பாடல்.

மை - விடம். உலாவிய என்பன இரண்டும் அழகு செய்து விளங்குகின்றன என்பதைக் குறித்தல் காண்க.

## 17. திருத்தாண்டகம்.

[ இராகம் - ஹரிகாம்போதி. ]

திருச்சிற்றம்பலம்

[ஆரூர்ப் பெருமான் செம்மானத் தொளியன்னமேனியனாக, எம்மிடையே வினைக்கீடாக வரும் துன்பங்களைத் துடைப்பவனாக, தன்னொப்பாரில்லாதவனாய் இருக்கின்ற நிலையை எடுத்துக்காட்ட - அவன் கருணைத்திறங்களை எடுத்து உலகர்க்கு உணர்த்தி, அவன் என் சிந்தையிலுள்ளான் என்று கூறுவது இத்தாண்டகம்]

கைம்மான மதகளிற்றி னுரிவை யான்காண்
　　கறைக்கண்டன் காண்கண்ணார் நெற்றி யான்காண்
அம்மான்கா ணாடரவொன் றாட்டி னான்காண்
　　அனலாடி காணயில்வாய்ச் சூலத் தான்காண்
எம்மான்கா ணேழுலகு மாயி னான்கா
　　ணெரிசுடரோன் காணிலங்கு மழுவா ளன்காண்
செம்மானத் தொளியன்ன மேனி யான்காண்
　　திருவாரூ ரான்காணென் சிந்தை யானே. 1

1. மானம் - பெருமை. உரிவை - தோல். செம்மானம் - செவ்வானம். அயில் - கூர்மை.

ஊனேறு படுதலையி லுண்டி யான்கா
　　ணோங்காரன் காணூழி முதலா னான்காண்
ஆனேறொன் றூர்ந்துழலு மையா றன்கா
　　ணண்டன்கா ணண்டத்துக் கப்பா லான்காண்



மானேறு கரதலத்தெம் மணிகண் டன்காண்
　　மாதவன்காண் மாதவத்தின் விளைவா னான்காண்
தேனேறு மலர்க்கொன்றைக் கண்ணி யான்காண்
　　திருவாரூ ரான்காணென் சிந்தை யானே. 2

2. ஊன் ஏறு படுதலை - தசை காயாத பிரமகபாலம். ஓங்காரன் - பிரணவ வடிவினன்.

ஏவணத்த சிலையான்முப் புரமெய் தான்காண்
　　இறையவன்காண் மறையவன்கா ணீசன் றன்காண்
தூவணத்த சுடர்ச்சூலப் படையி னான்காண்
　　சுடர்மூன்றுங் கண்மூன்றாக் கொண்டான் றன்காண்
ஆவணத்தா லென்றன்னை யாட்கொண் டான்காண்
　　அனலாடி காணடியார்க் கமிர்தா னான்காண்
தீவணத்த திருவுருவிற் கரியுரு வன்காண்
　　திருவாரூ ரான்காணென் சிந்தை யானே. 3

3. ஏவணத்த சிலை - அம்போடுகூடிய நிறம் பொருந்திய வில். ஈசன் - பெருஞ்செல்வன். இறைவன் - எல்லாவுயிர்களிடத்தும் தங்கியிருப்பவன். சூலமிருந்தும் பயன்படுத்தாமையின் அது தூவணத்த சூலமாயிற்று. ஆவணம் - ஓலை. ஆவண்ணத்தால் என்னையாட்கொண்டான் என்று கூட்டி, சிவ நிலையினின்றும் சிவநிலையாகும்வண்ணம் ஆட்கொண்டான் என்றும் பொருள் காணலாம்.

கொங்குவார் மலர்க்கண்ணிக் குற்றா லன்காண்
　　கொடுமழுவன் காண்கொல்லை வெள்ளேற் றான்காண்
எங்கள்பாற் றுயர்கெடுக்கு மெம்பி ரான்காண்
　　ஏழ்கடலு மேழ்மலையு மாயி னான்காண்

பொங்குமா கருங்கடனஞ் சுண்டான் றான்காண்
பொற்றூண்காண் செம்பவளத் திரள்போல் வான்காண்
செங்கண்வா ளராமதியோ டுடன்வைத் தான்காண்
திருவாரூ ரான்காணென் சிந்தை யானே. 4

4. கொல்லை - முல்லைநிலம். எங்கள்பால் துயர் - எம்மிடம் உள்ள துன்பம். எங்கள் விதியால் விளைந்த துன்பம் என்றுமாம். கருங்கடல் - வலியகடல். பொற்றூண் என்றது அழகும், உறுதியும், திண்மையும் பற்றி.

காரேறு நெடுங்குடுமி கயிலா யன்காண்
கறைக்கண்டன் காண்கண்ணார் நெற்றி யான்காண்
போரேறு நெடுங்கொடிமே லுயர்த்தி னான்காண்
புண்ணியன்கா ணெண்ணாரும் பல்குணத்தி னான்காண்
நீரேறு சுடர்ச்சூலப் படையி னான்கா
ணின்மலன்கா ணிகரேது மில்லா தான்காண்
சீரேறு திருமாலோர் பாகத் தான்காண்
திருவாரூ ரான்காணென் சிந்தை யானே. 5

5. குடுமி - மலையுச்சி. போர் ஏறு - போர் செய்கின்ற இடபம். நீர் - ஒளித்தேக்கம்.

கயிலையில் மேகம் தவழாதாயினும் காரேறு நெடுங்குடுமி கயிலாயம் என்றது மலை என்ற பொதுமைபற்றி.

பிறையரவக் குறுங்கண்ணிச் சடையி னான்காண்
பிறப்பிலிகாண் பெண்ணோடா ணாயி னான்காண்
கறையுருவ மணிமிடற்று வெண்ணீற் றான்காண்
கழறொழுவார் பிறப்பறுக்குங் காபா லிகாண்



இறையருளக் கனவளையா ளிடப்பா கன்கா
ணிருநிலன்கா ணிருநிலத்துக் கியல்பா னான்காண்
சிறையுருவக் களிவண்டார் செம்மை யான்காண்
திவாரூ ரான்காணென் சிந்தை யானே. 6

6. அரவம்-பாம்பு. கறையுருவ மணிமிடறு-விடத்தால் அச்சஞ்செய்கின்ற நீலகண்டம். இறை-மணிக்கட்டு. சிறை உருவக்களிவண்டு ஆர்செம்மை-சிறகரோடு கூடிய நிறம் பொருந்திய களித்தவண்டை ஒத்த செம்மை. வண்டினிடம் உள்ள செம்மை, நிறமாற்றத்திற் செல்லாமை. அதுபோல இறைவர் பொக்கமிக்கவர்பால் பொருந்தார் என்பதாம்.

தலையுருவச் சிரமாலை சூடி னான்காண்
டமருலகந் தலைவனாப் பலிகொள் வான்காண்
அலையுருவச் சுடராழி யாக்கி னான்காண்
அவ்வாழி நெடுமாலுக் கருளி னான்காண்
கொலையுருவக் கூற்றுதைத்த கொள்கை யான்காண்
கூரெரிநீர் மண்ணோடுகாற் றாயி னான்காண்
சிலையுருவச் சரந்துரந்த திறத்தி னான்காண்
திருவாரூ ரான்காணென் சிந்தை யானே. 7

7. தமர் உலகம் - தம்மைச்சேர்ந்த அன்பர்கள் உலகத்திலேயே. அலை உருவச் சுடர் ஆழி - தாக்கினோரை வருத்தி அச்சம் விளைவிக்கும் ஒளிவிடுகின்ற சக்ராயுதம். சிலையுருவ - வில்லினின்றும் உருவிச்செல்ல.

ஐயன்காண் குமரன்கா ணாதி யான்காண்
அடன்மழுவா டானொன்று பியன்மே லேந்து
கையன்காண் கடற்பூதப் படையி னான்காண்
கண்ணெரியா லங்கனையோ னுடல்காய்ந் தான்காண்

வெய்யன்காண் தன்புனல்சூழ் செஞ்சடை யான்காண்
வெண்ணீற்றன் காண்விசயற் கருள்செய் தான்காண்
செய்யன்காண் கரியன்காண் வெளியோன் றான்காண்
திருவாரூ ரான்காணென் சிந்தை யானே. 8

8. ஐயன் - தலைவன்; தந்தையுமாம். பியல் - பிடரி. கடற்பூதப்படை - கடல்போன்ற பூதப்படை. ஐங்கணையோன் - மன்மதன். விசயன் - அருச்சுனன். செய்யன் கரியன் முதலியன சொல் முரணாயினும், இவ்வண்ணத்தன் என்று சொல்லொணாத்தன்மையை விளக்குவது.

மலைவளர்த்த மடமங்கை பாகத் தான்காண்
மயானத்தான் காண்மதியஞ் சூடி னான்காண்
இலைவளர்த்த மலர்க்கொன்றை மாலை யான்காண்
இறையவன்கா ணெறிதிரைநீர் நஞ்சுண் டான்காண்
கொலைவளர்த்த மூவிலைய சூலத் தான்காண்
கொடுங்குன்றன் காண்கொல்லை யேற்றி னான்காண்
சிலைவளர்த்த சரந்துரந்த திறத்தி னான்காண்
திருவாரூ ரான்காணென் சிந்தை யானே. 9

9. மலைவளர்த்த மடமங்கை என்றது உமாதேவி. வளர்த்தமுறையில் மட்டுமே மலைக்குமகள் என்பதைக் குறித்தவாறு. கொலைவளர்த்த சூலம் என்றதும் படையென்ற பொதுமைபற்றி. சிலை வளர்த்த சரம் - வில்லானது கதியின் வேகத்தை வளர்த்த அம்பு.

பொற்றாது மலர்க்கொன்றை சூடி னான்காண்
புரிநூலன் காண்பொடியார் மேனி யான்காண்
மற்றொருந் தன்னொப்பா ரில்லா தான்காண்
மறையோதி காணெறிநீர் நஞ்சுண் டான்காண்



எற்றாலுங் குறையொன்று மில்லாதான் காண்
இறையவன்காண் மறையவன்கா ணீசன் றான்காண்
செற்றார்கள் புரமூன்றுஞ் செற்றான் றான்காண்
திருவாரூ ரான்காணென் சிந்தை யானே. 10

10 மறையோதி - மறைகளால் ஓதப்பெற்றவன். வேதங்களை அருளிச்செய்தவன் என்றுமாம். எற்றாலும் - எவ்வகையாலும்.

## 18. திருத்தாண்டகம்.

[இராகம்: ஹரிகாம்போதி]

திருச்சிற்றம்பலம்.

[ஆரூர்ப்பெருமான் சிவயோகநெறி நிற்பவர்கட்கு அணியராய் தேவர்களுங்கூடப் பூவுலகில்வந்து வழிபட்டுய்யப் பல தலங்களிலும் எழுந்தருளி இங்கு நித்தியவாசம் செய்கிறார். ஆதலால் அவர்நாமம் கேட்டு, அடிமையாகி, தன்னைமறந்து அடிப்படுதலே உயிர்கள் செய்ய வேண்டிய கடமை என்பதை இத் திருத்தாண்டகம் பத்தும் உபதேசிக்கின்றன.]

உயிரா வணமிருந் துற்று நோக்கி
யுள்ளக் கிழியி னுரு வெழுதி
உயிரா வணஞ்செய்திட் டுன்கைத் தந்தா
லுணரப் படுவாரோ டொட்டி வாழ்தி
அயிரா வணமேறா தானே றேறி
யமரர்நா டாளாதே யாரூ ராண்ட
அயிரா வணமேயென் னம்மா னேநின்
அருட்கண்ணா னோக்காதா ரல்லா தாரே. 1

1. உயிராவணம் இருந்து - இடைபிங்கலை வழியாகச் செல்லும் மூச்சுக் காற்றை வெளிப்படுத்தாவாறு அடக்கியிருந்து. (பிராணாயாமஞ்செய்து) உயிர்த்தல் - மூச்சுவிடுதல். உற்றுநோக்கி - சுழுமுனை வழியாகக் காற்றைச் செலுத்திப் புருவமத்தியில் தியானித்து. உள்ளக்கிழி - மனமாகிற துணி. உரு - தியானப்பொருளின் வடிவம். உயிர் ஆவ(ண்)ணம் செய்திட்டு - உயிர் உண்டாகும்படி, பிராணப் பிரதிட்டை செய்து. உயிர் ஆவணம் செய்திட்டு என்று பிரித்து உயிரை அடிமைச்சாசனம் எழுதி இறைவர்க்குக்கொடுத்து; அதாவது ஆத்ம சமர்ப்பணம் செய்து என்றுரைப்பாரும் உளர். உணரப்படுவாரோடு - தியானப் பொருளாகிய சிவத்தோடு. ஒட்டி வாழ்தி - இடைவிடாத அத்தியந்த சம்பந்தம் வைத்துவாழ்வாய்; என்றது தன் உளத்தை நோக்கிக் கூறியது. அயிராவணம் - இரண்டாயிரம் கொம்புடைய இறைவன் ஏறும் வெள்ளை யானை. அயிர் ஆவணமே - நுண்மணல் வடிவாகப் புற்றிடங் கொண்ட பெருமானே.

எழுது கொடியிடையா ரேழை மென்றோள்<br>
இளையார்க ணம்மை யிகழா முன்னம்<br>
பழுது படநினையேல் பாவி நெஞ்சே<br>
பண்டுதா னென்னோடு பகைதா னுண்டோ<br>
முழுதுலகில் வானவர்கண் முற்றுங் கூடி<br>
முடியா லுறவணங்கி முற்றம் பற்றி<br>
அழுது திருவடிக்கே பூசை செய்ய<br>
இருக்கின்ற வூர்போலு மாரூர் தானே. 2

2. எழுது கொடியிடையார்-இயற்கைக் கொடியைக் காட்டிலும் எழுதுகொடி மிக நுண்ணியதாதலின் அதனை



இடைக்கு உவமித்தார். இடையாராகிய ஏழை என்க. நெஞ்சே! என்னோடு பழம் பகையுண்டோ? மகளிர், 'இவன் உதவான்' என்று இகழ்வதற்குமுன்பே தொண்டுவகையில் குற்றப்பட எண்ணாதே என்பதாம். முற்றம் - சந்நிதி.

தேரூரார் மாவூரார் திங்க ளூரார்<br>
திகழ்புன் சடைமுடிமேற் றிங்கள் சூடிக்<br>
காரூரா நின்ற கழனிச் சாயற்<br>
கண்ணார்ந்த நெடுமாடங் கலந்து தோன்றும்<br>
ஒரூரா வுலகெலா மொப்பக் கூடி<br>
யுமையாண் மணவாளா வென்று வாழ்த்தி<br>
ஆரூரா வாரூரா வென்கின் றார்கள்<br>
அமரர்கடம் பெருமானே யெங்குற் றாயே. 3

3. தேரூரார் மாவூரார் - இடபத்தை ஊர்வதன்றித் தேரையும் குதிரையையும் வாகனமாகக் கொள்ளார். திங்களூர் ஒரு தலம். கழனிச்சாயல் - வயல்நீரின் சாயலிலே. மாடம் கலந்து தோன்றும்-மாடங்கள் கலந்து காணப்படும். கண் - பலகணி (ஜன்னல்) தேவர்களழைக்கவும் நீ வெளிப்படுகின்றிலை எங்குற்றாய் என்கிறார்.

கோவணமோ தோலோ வுடை யாவது<br>
கொல்லேறோ வேழமோ வூர்வது தான்<br>
பூவணமோ புறம்பயமோ வன்றா யிற்றான்<br>
பொருந்தாதார் வாழ்க்கை திருந்தா மையே<br>
தீவணத்த செஞ்சடைமேற் றிங்கள் சூடித்<br>
திசைநான்கும் வைத்துகந்த செந்தீ வண்ணர்<br>
ஆவணமோ வொற்றியோ வம்மா னூர்தாம்<br>
அறியேன்மற் றாராமா ரூரர் தானே. 4

4. பூவணமோ புறம்பயமோ அன்று ஆயின் பொருந்தாதார் வாழ்க்கை திருந்தாமையோ - தேவரீர் எழுந்தருளியிருப்பது திருப்பூவணமா? திருப்புறம்பயமா? அவ்விரண்டுமன்றாயின் பகைவர்கள் வாழ்க்கைத் திருந்தாமையினாலோ. ஆரூர் ஆமாறு - தேவரீர் ஆரூரில் ஆயவிதம். அன்றி, ஆவணமோ ஒற்றியோ ஊர் - அவ்வூர்கள் சுத்தக் கிரய சாசனம் ஆனவையோ அனுபவ ஒற்றியோ அறியேன்.

எந்து மழுவாள ரின்னம் பரார்
எரிபவள வண்ணர் குடமூக்கிலார்
வாய்ந்த வளைக்கையாள் பாகமாக
வார்சடையார் வந்து வலஞ்சுழியார்
போந்த டிகள் புறம்ப யத்தே
புகலூர்க்கே போயினார் போரே றேறி
ஆய்ந்தே யிருப்பார்போ யாரூர் புக்கார்
அண்ணலார் செய்கின்ற கண்மா யமே. 5

5. இன்னம்பர் முதலாகப் புகலூர் இறுதியான தலங்களில் எழுந்தருளியிருக்கிற இறைவன் இடபமேறி ஆரூரிற்சென்று சேர்ந்தார்; இவர் செய்வன யாவும் மாயமே.

கருவாகிக் குழம்பிருந்து கலித்து மூளை
கருநரம்பும் வெள்ளெலும்புஞ் சேர்ந்தொன் றாகி
உருவாகிப் புறப்பட்டிங் கொருத்தி தன்னால்
வளர்க்கப்பட் டுயிராருங் கடைபோ காரால்
மருவாகி நின்னடியே மறவேனம் மான்
மறித்தொருகாற் பிறப்புண்டேன் மறவா வண்ணம்
திருவாரூர் மணவாளா திருத்தெங் கூரா
செம்பொனே கம்பனே திகைத்திட் டேனே. 6



6. கருவாகிக் குழம்பிருந்து என்பது முதல் உருவாகிப்புறப்பட்டு என்பது வரையில் தாயிடத்துக் கருவாகி, முற்றிப் பிறக்குமளவுமுள்ள வளர்ச்சியைத் தெரிவிப்பது. [1] கடைபோகார் - உறுதியடையார். மருவாகி - மருவுதல் உடையவனாய் வரும்பிறவியில் மறக்காதபடி அருள் செய்ய வேண்டுகிறார்.

முன்ன மவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி யவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னை யவனுடைய வாரூர் கேட்டாள்
பெயர்த்து மவனுக்கே பிச்சி யானாள்

---

1 "இக்காலத்து உடற்கூற்று விஞ்ஞான நூலாராய்ச்சியாளர் மிக முயன்றுகாணும் உண்மைகள் இவை, பனியிலோர் பாதி சிறு துளியாகத் தாயின் கருப்பைக்குள் புகுவது, கரு; அதன்பின் குழம்பாக வளுப்படுகின்றது; பின் அக்குழம்பு கடினத்தன்மை யடைகின்றது; அவ்வாறு கடினமாகி உருவாகும்போது முதலில் வளுவடைகின்ற பகுதி மூளையாம்; அது கருமையும் வெண்மையுமாகிய இரு பகுப்புடையது அவற்றை gray and white matter of the brain என்பர் நவீனர். இவை அசைதற்கும் அறிதற்கும் கருவிகளாக உதவுகின்றன. இவ்வாறு மூளையும் கருநரம்பும் வெள்ளெலும்பும் ஆக உருப்பட்ட பின்பு உடம்பின் எழு தாதுக்களாகிய, 'தோல் இரத்தம் இறைச்சி மேதை யெலும்பு மச்சை சுவேதநீர்' என்பவற்றுள் ஏனைத் தாதுக்களும் உண்டாகி உடல் உருவாக்கப்படுகின்றது. அவ்வாறு உரியபடி முற்றியபின் பிரசூதவாயு என்னும் காற்றினால் உந்தப் பட்டுக் குழவி கருப்பையினின்றும் பாகப்படுத்தப்படுகின்றது; என்ற இவையெல்லாம் இங்குச் சுருக்கிக் கூறப்பட்டன." (திருநாவுக்கரசு சுவாமி நாயனார் புராணம். பக்கம். 374.)

—திரு. C. K. சுப்பிரமணிய முதலியார்,

அன்னையையு மத்தனையு மன்றே நீத்தான்
அகன்றா ளகலிடத்தா ராசா ரத்தைத்
தன்னை மறந்தாடன் னாமங் கெட்டாள்
தலைப்பட்டா ணங்கை தலைவன் றாளே. 7

7. ஆன்மாக்கள் முதலில் இறைவன் நாமத்தைக் கேட்டு, பின்னர் அவன் இயல்புகளைக்கேட்டுப் பின்னர் இடங்களைக்கேட்டு, அடிமையாகித் தற்போதம் கெட்டு, புறத்து உறவு அகத்து உறவு எல்லாவற்றையும் விட்டு, உலகப்பழிப்பு இழிப்புக்களைப் பொருட்படுத்தாது, தான் கெட்டுத் திருவடியடையக் கடமைப் பட்டன. [1]அந்நிலை நற்றாய் தலைவியின் இயல்பு கூறுவனவாக வைத்து விளக்கப் பெற்றுள்ளது. ஆசாரம் - ஒழுக்கம். நாமங்கெடுதல்- சீவனாமம்கெட்டுச் சிவனாமம் பெறுதல்.

[1] "நங்கை முதற்கண் தலைவனை உத்தேச முறைபற்றி உணர்ந்தனள்; அதனால் அவனுக்கு உளதாய இலக்கணம் இவை என இடைவாய் உணர்ந்தாள்; அதனானே அதனைப் பரீட்சித்துணர்ந்தனள்; அதனானே உலகப் பற்றுப் போதலான் அவன்கட் பேரன்பு உடையளாயினள்: அதனானே மாயையோடு காரணக்கடவுள் வசப்படா தொழிந்தனள்; அதனானே, சீவத்துவம் நீங்கிச் சிவத்துவம் உடையளாயினள். அதனானே இனி அத்தலைவன்றாளைத் தலைப்படுதல் ஒருதலை என்பதாம்" என்றும், "இதனால் ஓதல் கேட்டல் முதலியவற்றி னியல்பும், அவற்றினிகழும் அனுபவமாமாறும், நிட்டை மேவியாரது ஒழுக்கமும், தற்போத முளையாதவாறு உபசரித்துச் சிவானுபவம் சுவானுபூதிகமாமாறு அடங்கி நிற்கு முறையும், பாசவீடு சிவப்பேறு என்பவற்றின் இயல்பும் கூறியவாறு." (திருநாவுக்கரசு நாயனார் புராணம். C. K. S. உரை. பக்கம் 875.)

—ஸ்ரீ செப்பறைச்சுவாமிகள்.



ஆடுவாய் நீநட்ட மளவிற் குன்றா
வவியடுவா ரருமறையோ ரறிந்தே னுன்னைப்
பாடுவார் தும்புருவு நார தாதி
பரவுவா ரமர்களு மமரர் கோனும்
தேடுவார் திருமாலு நான் முகனுந்
தீண்டுவார் மலைமகளுங் கங்கை யாளும்
கூடுமே நாயடியேன் செய்குற் றேவல்
குறையுண்டே திருவாரூர் குடிகொண் டீர்க்கே. 8

8. அருமறையோர் அளவிற்குன்றா அவியடுவார் எனக் கூட்டுக. தேவர்கள் இங்ஙனம் பணி செய்தலால் அடியேன் செய்யும் குற்றேவல் இவ்விடத்துக்கு ஏற்குமா? என்பதாம்.

நீருருஞ் சடையாய் நெற்றிக் கண்ணாய்
நிலாத்திங்கட் டுண்டத்தாய் நின்னைத் தேடி
ஒருரு மொழியாமே யொற்றித் தெங்கு
முலகமெலாந் திரிதந்து நின்னைக் காண்பான்
தேரூரு நெடுவீதி பற்றி நின்று
திருமாலு நான்முகனுந் தேர்ந்துங் காணா
தாரூரா வாரூரா வென்கின் றார்கள்
அமரர்கடம் பெருமானே யாரூ ராயே. 9

9. நிலாத்திங்கள் துண்டம் - இது ஒரு ஊர்; அன்றிப் பிறை யென்னலுமாம். நின்னைக்காண உலக மெலாஞ் சுற்றித் திருவாரூர் வந்து திருமாலும் பிரமனும் ஆரூரா என்றழைக்கின்றார்கள்; நீ இங்குதான் உள்ளாயோ என்கிறார். ஒற்றித்து-ஒருமித்து.

வெற்புறுத்த திருவடியாற் கூற்றட் டானை
விளக்கினொளி மின்னினொளி முத்தின் சோதி
ஒப்புறுத்த திருவுருவத் தொருவன் றன்னை
யோதாதே வேத முணர்ந்தான் றன்னை
அப்புறுத்த கடனஞ்ச முண்டான் றன்னை
யமுதுண்டா ருலந்தாலு முலவா தானை
அப்புறுத்த நீரகத்தே யழலா னானை
ஆரூரிற் கண்டடியே னயர்த்த வாறே. 2

2. வெற்புறுத்த திருவடி - கைலையில் ஊன்றிய திருவடி. காணும் ஆன்மாக்களுடைய பரிபக்குவத்திற் கேற்ப விளக்கொளி, மின்னொளி, முத்தொளி ஒப்பான சோதியுருவன். விளக்கொளி ஒரொருகால் காற்றுத் தீண்ட அசைந்து ஒளிர்வது. மின்னொளி தோன்றிமறைவது. முத்தொளி என்றும் ஒருபடித்தாய் நிற்கும் இயற்கைச்சோதி இவைபோல இறைவனும் ஒரொருகால் மனம் புறம்போக்கும் பக்குவிகட்கு மறைந்தும், அநுபவம் சிறிது முற்றியவர்கட்குப் பேரொளியாய்த் தோன்றி மறைந்தும், முதிர்ந்த ஞானிகட்கு முத்தொளியாய்க் கைவரப் பெற்றும் இருப்பார் என்பதாம். வேதம் ஓதாதே உணர்ந்தான் - வேதங்களையோதாமல் அருள்பெற்ற ஆன்மாக்களை யுணரச்செய்தவன். உணர்ந்தான் என்பது உணர்த்தினான் என்னும் பொருளது. அப்பு உறுத்த - நீர் மிகுந்த. அமுதுண்டார் - தேவர்கள். உலந்தாலும் - அழிந்தாலும். அப்புறுத்த நீர் - அப்பு என்னும் பெயர் பெற்ற நீர். நீரகத்தே யழல் - கடற்கண்ணதாகிய வடவைத்தீ.



ஒருகாலத் தொருதேவர் கண்கொண் டானை
யூழிதோ றூழி யுயர்ந்தான் றன்னை
வருகாலஞ் செல்கால மாயி னானை
வன்கருப்புச் சிலைக்காம னுடலட் டானைப்
பொருவேழக் களிற்றுரிவைப் போர்வை யானைப்
புள்ளரைய னுடறன்னைப் பொடிசெய் தானை
அருவேள்வி தகர்த்தெச்சன் றலைகொண் டானை
ஆரூரிற் கண்டடியே னயர்த்த வாறே. 3

3. ஒருதேவர் - திருமால். கண்கொண்டது - கண்ணைத் தாமரைப்பூவாக ஏற்றது. வருகாலம் செல்காலங் கூறவே இடைநின்ற நிகழ்காலம் சிறுபொழுதிற்றாகலின் அதுவும் [illegible]லையமையும். புள்ளரையன் - வண்டுகளுக்குத் தலைவனாகிய மன்மதன். எச்சன் - தக்கன்.

மெய்ப்பால்வெண் ணீறணிந்த மேனி யானை
வெண்பளிங்கி னுட்பதித்த சோதி யானை
ஒப்பானை யொப்பிலா வொருவன் றன்னை
யுத்தமனை நித்திலத்தை யுலக மெல்லாம்
வைப்பானை களைவானை வருவிப் பானை
வல்வினையேன் மனத்தகத்தே மன்னி னானை
அப்பாலைக் கப்பாலைக் கப்பா லானை
ஆரூரிற் கண்டடியே னயர்த்த வாறே. 4

4. வெண்ணீறு பூசிய சிவன் திருமேனி அப்பாடிகட்கு வெண்பளிங்கினுட் பதித்த சோதியை யுடனே நினைவூட்டிற்று. அன்றி வெண்பளிங்கு - மலமற்ற ஆன்மா. சோதி - சிவம். ஆன்மாவிற் சிவ விளக்கம் பளிங்கிற்

சோதியாயிற்று என்றுமாம். ஒப்பான் - தான் எப்பொருளுக்கும் ஒப்பானவன். ஒப்பிலான் - தனக்கு ஒருபொருளும் ஒப்பாகுந் தன்மையில்லாதவன். வைப்பான் - காப்பவன். களைவான் - அழிப்பவன். வருவிப்பான் - தோற்றுவிப்பவன்.

பிண்டத்திற் பிறந்ததொரு பொருளை மற்றைப்
பிண்டத்தைப் படைத்ததனைப் பெரிய வேதத்
துண்டத்திற் றுணிபொருளைச் சுடர்தீ யாகிச்
சூழ்காலாய் நீராகிப் பாரா யிற்றைக்
கண்டத்திற் றீநஞ்ச மமுது செய்து
கண்மூன்று படைத்ததொரு கரும்பைப் பாலை
அண்டத்துக் கப்புறத்தார் தமக்கு வித்தை
ஆரூரிற் கண்டடியே னயர்த்த வாறே.

5. பிண்டம் - உடல். பொருள் - உயிர். வேதத் துண்டம் - வேதசிரசாகிய உபநிடதங்கள். துண்டம் - முகம். பார் - பூமி. இற்றை - இன்று. கண் - கணு; கண். புற அண்டத்தார்க்கும் விதைபோன்றவர்.

நீதியாய் நிலனாகி நெருப்பாய் நீராய்
நிறைகாலா யிவையிற்றி னியமமாகிப்
பாதியா யொன்றாகி யிரண்டாய் மூன்றாய்ப்
பரமாணு வாய்ப்பழுத்த பண்க ளாகிச்
சோதியா யிருளாகிச் சுவைக ளாகிச்
சுவைகலந்த வப்பாலாய் வீடாய் வீட்டின்
ஆதியா யந்தமாய் நின்றான் றன்னை
ஆரூரிற் கண்டடியே னயர்த்த வாறே.



6. நிறை கால் - எங்கும் நிறைந்த காற்று. நியமம் - ஒழுங்கு. ஒன்று - சிவம். இரண்டு - சிவம், சத்தி மூன்று - சத் சித் ஆனந்தம், லய போக அதிகாரசிவம், உரு அரு அருவுரு. பிரம விஷ்ணு ருத்ரன் என மும்மூன்று பொருள்களாய் விரிந்த நிலை. பரம அணுவாய் என்றது ஒடுங்கு நிலை.

* * * * 7, 8, 9, 10.

## 20. திருத்தாண்டகம்

[இராகம்: ஹரிகாம்போதி]

திருச்சிற்றம்பலம்

[அப்பர் சுவாமிகள் திருவாரூரைவிட்டுத் திருப்புகலூரை யடைந்து பூம்புகலூர் மேவிய புண்ணியனைத் தொழுது, நின்றதிருத் தாண்டகம் முதலியவற்றை யருளிச்செய்து உழவாரப்பணிவிடையும் புரிந்து தங்கினார்கள். இவர்களுடைய உள்ளத்துறவை உலகத்தார்க்கு எடுத்துக் காட்ட இறைவன் உழவாரம் நுழையும் இடங்கடோறும் பொன்னும் மணியும் பொருந்தச் செய்தார். சுவாமிகள் அவற்றைக் குளத்தில் அள்ளி வீசினார்கள். பின், அரம்பை மாதர்கள் வந்து தமது நடனத்தாலும் இசையாலும் வசப்படுத்த முயன்றனர். சுவாமிகள் அவர்களைப்பார்த்துப் பேசவும் விருப்பமிலராய் தமது இருவினைகளை முன்னிலைப்படுத்தி, யாம் ஆரூர்த்தலைவர்க்கு அடிமை உம்மால் என்னகுறை எமக்குண்டு? ஆதலால், எமமை வருத்தா தொழியுங்கள்; என்று இந்த "பொய்ம்மாயப் பெருங்கடல்" என்ற திருத்தாண்டகத்தை யருளிச்செய்தார்கள்.]

பொய்ம்மாயப் பெருங்கடலிற் புலம்பா நின்ற
புண்ணியங்காள் தீவினைகாள் திருவே நீங்கள்
இம்மாயப் பெருங்கடலை யரித்துத் தின்பீர்க்
கில்லையே கிடந்ததுதான் யானேல் வானோர்
தம்மானைத் தலைமகனைத் தண்ணா ரூர்த்
தடங்கடலைத் தொடர்ந்தோரை யடங்கச் செய்யும்
எம்மான்ற னடித்தொடர்வா னுழிதர் கின்றேன்
இடையிலேன் கெடுவீர்கா ளிடறேன் மின்னே. 1

1. பொய்ம்மாயப் பெருங்கடல் - பொய்யான உலகத்தின்கண்ணதாகிய பாசபந்தங்கள் என்னும் கடல். புலம்பாநின்ற-பிதற்றுகின்ற. புண்ணியங்காள் தீவினைகாள் என்று விளித்தார் மனிதன் செய்த சிலவகைப்புண்ணியங்கள் சந்தனம் மாலை மாதர்போகமாக விளைதலின், மாதராக வந்த வினையை முன் விளித்தார் பின் புண்ணியம் போல வந்துசேரும் தீவினையை விளித்தார்; நுகர்ச்சிக்கேதுவாகிய திருவைப் பின் விளித்தார். அரித்து-கோய்போல அரித்து. கிடந்ததுதான் இல்லை - கிடப்பதொரு குறையில்லை. உழி தருகின்றேன் - திரிகின்றேன். இடையிலேன் - வேறுகுறையிலேன்; உம்மால் விரும்பப்படுதற்கு உரிய பொருளோ இடமோ உடையேனில்லை யென்றுமாம். இடறேன்மின் - வருத்தாதீர்கள்.

ஐம்பெருமா பூதங்கா ளொருவீர் வேண்டிற்
றொருவீர்வேண் டீண்டிவ் வவனி யெல்லாம்
உம்பரமே யும்வசமே யாக்க வல்லீர்க்
கில்லையே நுகர்போகம் யானேல் வானோர்
உம்பருமா யூழியுமா யுலகே யாகி
யொன்றானார் நன்னமிர்தாம் வன்னல் வானோர்
தம்பெருமா னாய்நின்ற அரனைக் காண்பேன்
தடைப்படுவே னாக்கருதித் தருக்கேன் மின்னே. 2



2. ஐம்பெருமா பூதங்காள் என்றார் ஐம்பூதங்களும் சுவை ஒளி முதலிய தன்மாத்திரைகளிலிருந்து தோன்றுவனவாகலின், தன்மாத்திரையின் வடிவாகக் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஐம்புலன்களாலும் நுகரத் தக்க அரம்பையரை மனத்துட் கொண்டு. ஒருவீர் வேண்டிற்று ஒருவீர் வேண்டீர் என்றது புலன்களில் ஒன்றறிந்தது ஒன்றறியாத் தன்மையை. நன் அமிர்து - விரும்பத்தக்க அமிர்தம். யான் இறைவனைக் காண்பேன் ஆதலால் உம்மால் தடைப்படுபவனாகக் கருதாதீர்கள் என்றார்.

சில்லுருவிற் குறியிருத்தி நித்தல் பற்றிச்
செழுகஞ்ற ரேக்குமிது வூக்க மன்று
பல்லுருவிற் றொழில்பூண்ட பஞ்ச பூதப்
பனைரும் வசமன்றே பாரே லெல்லாம்
சொல்லுருவிற் சுடர்மூன்று முருவ மூன்றாய்த்
தூநயன மூன்றாகி யாண்ட வாரூர்
நல்லுருவிற் சிவனடியே யடைவே னும்மால்
நமைப்புண்ணேன் கமைத்துநீர் நடமின் களே. 3

3. சில்உருவில் - சிலவாகிய உருவத்தில். குறியிருத்தி - இலக்கை நிறுத்தி. அழியுந் தன்மை வாய்ந்த சில் உருவைக் குறிக்கோளாகக்கொண்டு நிதம் நோக்குதல்

ஊக்கமல்ல என்றது கருத்து. பல்உருவில் தொழில்பூண்ட - பல்வேறு மாயாவிகார வடிவங்களைக்கொண்டு கன்மத்தை மேற்கொண்ட. பஞ்சபூதப் பளகிர் - பௌதிக சரீரம் வாய்ந்த குற்றமுடையவர்களே. சுடர்மூன்று - சோம சூரியாக்னி. உருவம்மூன்று - பிறையும் வட்டமும் சதுரமு மாகிய வடிவங்கள் மூன்று. அவற்றையே மூன்று நயனங் களாகக்கொண்டு. நமைப்புண்ணேன் - அரிக்கப்பட்டேன். கமைத்து - பொறுத்து; க்ஷமைத்து என்பதன் திரிபு.

உன்னுருவிற் சுவையொளியூ றோசை நாற்றத்
துறுப்பினது குறிப்பாகு மைவீர் நுங்கள்
மன்னுருவத் தியற்கைகளால் வைப்பீர் கையோ
வையகமே போதாதே யானால் வானோர்
பொன்னுருவைத் தென்னாரூர் மன்னு குன்றைப்
புவிக்கெழிலாஞ் சிவக்கொழுந்தைப் புகுந்தென் சிந்தை
தன்னுருவைத் தந்தவனை யெந்தை தன்னைத்
தலைப்படுவேன் துலைப்படுப்பான் றருக்கேன் மின்னே. 4

4. மன் உருவம் - நிலைபேறுடைய உருவம். ஐயோ வையகமே போதாதே என்றது உலகமுழுவதும் மாதரில் மயங்குகின்றமைபற்றி இரங்கிக் கூறியது. துலைப்படுப் பான் - நிறுத்து அறுதியிடுவதற்காக. தொலைப்படுப்பான் என்பது பாடமாயின் தூரமாக்குவதற்காக என்றாவது, வருத்தப்படுத்த என்றாவது பொருள் கொள்ளலாம்.

துப்பினைமுன் பற்றறா விறலே மிக்க
சோர்வுபடு சூட்சியமே சுகமே நீங்கள்
ஒப்பனையைப் பாவித்திவ் வுலக மெல்லாம்
உழறுமிது குறைமுடிப்பீர்க் கரிதே யென்றன்



வைப்பினைப்பொன் மதிலாரூர் மணியை வைகல்
மணாளனையெம் பெருமானை வானோர் தங்கள்
அப்பனைச்செப் பிடவடைவே னும்மா றுனும்
ஆட்டுணே னேட்டநீங் கலேயன் மின்னே. 5

5. துப்பு - உணவு. விறல் - சதுரப்பாடு. சோர்வு படு சூழ்ச்சியமே - அறிவுசோர்ந்தகாலத்து உண்டாகின்ற சூழ்ச்சியே. அம் சாரியை ஒப்பனையைப் பாவித்து - அலங்கரித்துக்கொண்டு. உழறுமிது - அலைகின்ற - இது. குறைமுடிப்பீர்க்கு - மக்களுடைய வினைக்குறையை முடிக்க இருக்கின்ற உங்களுக்கு. அரித்த - அரிதாகுமோ.

பொங்குமத மானமே யார்வச் செற்றக்
குரோதமே யுலோபமே பொறையே நீங்கள்
உங்கள்பெரு மாநிலத்தி னெல்லை யெல்லா
முழறுமிது குறைமுடிப்பீர்க் கரிதே யானால்
அங்கமலத் தயனொடுமா லாகி மற்று
மதற்கப்பா லொன்றாகி யறிய வொண்ணாச்
செங்கனகத் தனிக்குன்றைச் சிவனை யாரூர்ச்
செல்வனைச்சேர் வேனும்மாற் செலுத்து ணேனே. 6

6. அப்பாலொன்றாகி - இருந்து இயக்கும் சிவமாகி. மதம்மானமே என்றழைத்தார் மகளிரை அகப்பகை ஆறாக எண்ணி.

இடர்பாவ மெனமிக்க துக்க வேட்கை
வெறுப்பேயென் றனைவிரு முலகை யோடிக்
குடைகின்றீர்க் குலகங்கள் குலுங்கி நுங்கள்
குறிநின்ற தமையாதே யானால் வானோர்

அடையார்தம் புரமூன்று மெரிசெய் தானை
யமரர்கடம் பெருமானை யானை யாரூர்
உடையானைக் கடுகச்சென் றடைவே னும்மால்
ஆட்டுணே னோட்டந்நீங் கலையேன் மின்னே. 7

7. விருப்பு வெறுப்பு வடிவாக உலக முழுவதையும் குடைகின்ற உங்களுக்கு உலகமே அஞ்சி வசப்பட்டு உங்கள் குறிப்பின்படி நிற்கின்றது; இதுபோதாதா? யான் ஆரூர்ப் பெருமானை விரைந்து அடைவேன்; உங்களால் என்னைப் பிடித்தாட்ட முடியாது; வீணே ஓடிவந்து அலையாதீர்கள்.

விரைந்தாளு நல்குரவே செல்வே பொல்லா
வெகுட்சியே மகிழ்ச்சியே வெறுப்பே நீங்கள்
நிரந்தோடி மாநிலத்தை யரித்துத் தின்பீர்க்
கில்லையே நுகர்போகம் யானேல் வானோர்
கரைந்தோட வருநஞ்சை யமுது செய்த
கற்பகத்தைத் தற்பரத்தைத் திருவா ரூரில்
பரஞ்சோதி தனைக்காண்பேன் படேனும் பண்பிற்
பரிந்தோடி யோட்டந்து பகட்டேன் மின்னே. 8

8. வறுமையாக, செல்வமாக, கோபமாக, மகிழ்ச்சியாக, வெறுப்பாக, விருப்பாக உலகத்தையே அரிக்கின்ற உங்களுக்கு வேறு நுகர்ச்சியில்லையோ? கரைந்தோட - அழுதோட. தற்பரம் - எல்லாவற்றினும் மேலானது. நும் பண்பிற்படேன் - உங்களுடைய மயக்குரை சழக்குரடிப்பு இவற்றில் அகப்படேன். விரைந்தாளும் நல்குரவே என்றார் ஒருவனை அடிமைப்படுத்த எண்ணும் அரசாங்கம் பொருளைப்பறித்து ஆளுவதைப்போல இவர்களும் வறுமையாக விரைவில் அடிமைகொள்கின்றார்களாதலின்.



மூள்வாய தொழிற்பஞ்சேந் திரிய வஞ்ச
முகரிகாள் முழுதுமிவ் வுலகை யோடி
நாள்வாயு நும்முடைய மம்ம ரானை
நடாத்துகின் றீர்க் கமையாதே யானேல் வானோர்
நீள்வான முகடதனைத் தாங்கி நின்ற
நெடுந்தூணைப் பாதாளக் கருவை யாரூர்
ஆன்வானைக் கடுகச்சென் றடைவே னும்மால்
ஆட்டுணே னோட்டந்நீங் கலையேன் மின்னே. 9

9. மூள்வாயதொழில் - காரணகாரிய முறைமைப்படி தொடர்ந்துவருகின்ற தொழில். முகரிகாள் - படாடோபக் காரர்களே. நாள்வாயும் - நாடோறும். வானமுகடு - வானத்தின் உச்சி. பாதாளக்கரு - பன்னெடுங்காலம் பூமியின்கீழ் எழுந்தருளியிருந்தார் என்பது புராண வரலாறு.*

சுருக்கமொடு பெருக்கநிலை* நித்தல் பற்றித்
துய்ப்பறையொன் றனைவிரிவ் வுலகை யோடிச்
செருக்கிமிகை செலுத்தியும செய்கை வைகல்
செய்கின்றீர்க் கமையாதே யானேன் மிக்க
தருக்கிமிக வரையெடுத்த வரக்க னாகந்
தளரவடி யெடுத்தவன்றன் பாடல் கேட்டு
இரக்கமெழுந் தருளியவெம் பெருமான் பாதத்
திடையிலேன் கெடுவீர்கா ளிடறேன் மின்னே. 10

---

*“ துணைநவி ரின்பஞானத் துணைவியோ டாதியாகப்
பணியணி சோதியார்க்கும் அறிவரும் பண்பிற்பார்க்கீழ்
அணைதருங் காரணத்தா லந்தரகேசரப்பேர்.”

—திருவாரூர்ப் புராணம், தலமகிமை, பா. 13

10\. துப்பறையென்று - அநுபவிக்கப்படும் பொருள் என்று. மிகைசெலுத்தி - குற்றத்தின்கட் செலுத்தி. அடி யெடுத்து அவன் தன் பாடல் கேட்டு திருவடியை யன்றி, இராவணனது சாமகானத்தைக் கேட்டு. அடியெடுத்து என்பது படையெடுத்து என்பதுபோல ஒரு வழக்கு.

## 21. திருத்தாண்டகம்

[இராகம்: ஹரிகாம்போதி]

திருச்சிற்றம்பலம்

[திருவாரூர்ப் பூங்கோயிலில் எழுந்தருளியிருக்கும் திருமூலட் டானேசுவரராகிய வன்மீகநாதருடைய சிறப்பியல்புகளும், வீர முதலியனவும் பிற தேவர்யாவர்க்கும் இல்லாதபடியை, ஒப்பில் போலியால் உரைப்பது இப்பத்துத் திருத்தாண்டகங்களும்.]

நீற்றினையு நெற்றிமே லிட்டார் போலும்
நீங்காமே வெள்ளெலும்பு பூண்டார் போலும்
காற்றினையுங் கடிதாக நடந்தார் போலும்
கண்ணின்மேற் கண்ணொன் றுடையார் போலும்
கூற்றினையுங் குரைகழலா லுதைத்தார் போலும்
கொல்புலித்தோ லாடைக் குழகர் போலும்
ஆற்றினையுஞ் செஞ்சடைமேல் வைத்தார் போலும்
அணியாரூர்த் திருமூலட் டான னாரே. 1

1\. காற்றினையும் கடிதாக நடந்தார் - காற்றைக் காட்டி லும் விரைந்து பரவி உயிர்ப்பாய் வியாபித்திருக்கின்றார் என்பது. குரைகழல் - ஒலிக்குங் கழல்; என்றது ஒலிக்கும் - கழல் வீரத்தை விளக்கிநின்றது.



பரியதோர் பாம்பரைமே லார்த்தார் போலும்
பாசுபதம் பார்த்தற் களித்தார் போலும்
கரியதோர் களிற்றுரிவை போர்த்தார் போலும்
காபாலங் கட்டங்கக் கொடியார் போலும்
பெரியதோர் மலைவில்லா வெய்தார் போலும்
பேர்நந்தி யென்னும் பெயரார் போலும்
அரியதோ ரரணங்க ளட்டார் போலும்
அணியாரூர்த் திருமூலட் டான னாரே. 2

2\. பரியது - பருத்ததாகிய; வினையாலணையும் பெயர். கட்டங்கம் - கத்தி. கட்டுவாங்கம் என்பதன் றிரிபு. பெரிய தோர் மலை - மேரு. பேர்நந்தி - பெரியநந்தி. அரியதோர் அரணம் - பிறரால் வெல்லுதற்கரிய முப்புரம்.

துணியுடையர் தோலுடைய ரென்பார் போலுந்
தூயதிரு மேனிச் செல்வர் போலும்
பிணியுடைய வடியாரைத் தீர்ப்பார் போலும்
பேசுவார்க் கெல்லாம் பெரியார் போலும்
மணியுடைய மாநாக மார்ப்பார் போலும்
வாசுகிமா நாணாக வைத்தார் போலும்
அணியுடைய நெடுவீதி நடப்பார் போலும்
அணியாரூர்த் திருமூலட் டான னாரே. 3

3\. துணியுடையர் தோலுடையர் என்றது அவர் உடை இன்னதென்று அறுதியிட்டுச் சொல்லொணாது என்றபடி. பிணியுடைய அடியார் - உயிர்ப்பிணியாகியபிறவிப் பிணியும், உடற்பிணியாகிய சூலை முதலியனவும் உடைய அடியார்களை. மணி - மாணிக்கம். அணிவீதி - திருவாரூர்த் திருவீதியில் நடந்தமை சுந்தரருடைய பின்னிகழ்ச்சியாலும் அறியலாம்.

ஓட்டகத்தே ஊணாக வுகந்தார் போலும்
ஒருருவாய்த் தோன்றி யுயர்ந்தார் போலும்
நாட்டகத்தே நடைபலவு நவின்றார் போலும்
ஞானப் பெருங்கடற்கோர் நாதர் போலும்
காட்டகத்தே யாட லுடையார் போலும்
காமரங்கள் பாடித் திரிவார் போலும்
ஆட்டகத்தி லானைந் துகந்தார் போலும்
அணியாரூர்த் திருமூலட் டானனாரே. 4

4. ஓட்டகத்து - பிரமகபாலத்து. ஒருருவாய் - முன்னர் சிவமாய்ப் பின்னர் சத்திமுதலாகப் பலவாய். நாட்டகத்தே நடை பலவும் நவின்றார் - உலகத்தில் நடைபெறும் ஒழுக்கங்கள் யாவும் அவர் திருவாய்ப்பிறந்த வேத ஆகமங்கள் என்பது விளக்கும். ஆன்மாக்கள் பக்குவநிலைக்கேற்ப அறுவகைச் சமய நடைகளையும் விரித்தவர் எனவுமாம். ஞானப்பெருங்கடற்கு நாதர் - அந்த அறுசமய ஞானங்களாகிய பலவற்றிற்கும் தலைவராக விளங்குபவர். காடு - இடுகாடு. காமரம் - சீகாமரம் என்னும் பண். ஆட்டகத்தில் - திருமஞ்சனமாடுவதில். ஆனைந்து - பஞ்சகவ்யம்.

ஏனத் திளமருப்புப் பூண்டார் போலும்
இமையவர்க ளேத்த விருந்தார் போலும்
கானக் கல்லாற்கீழ் நிழலார் போலும்
கடனஞ்ச முண்டிருண்ட கண்டர் போலும்
வானத் திளமதிசேர் சடையார் போலும்
வான்கயிலை வெற்பின் மகிழ்ந்தார் போலும்
ஆனத்து முன்னெழுத்தாய் நின்றார் போலும்
அணியாரூர்த் திருமூலட் டானனாரே. 5



5. ஏனத்து இளமருப்பு பூண்டார் - ஆதிவராகத்தை வென்று அதன் கொம்பை வெற்றியின் அறிகுறியாகவும், முதுமையின் இலச்சினையாகவும் திருமார்பிலணிந்தவர். ஆனத்து முன்னெழுத்து - பசுக்களைக் குறிக்கும் ஆவென்பதன் முன்னெழுத்து அகரம். "அகரவுயிர்போ லறிவாகி யெங்கும் நிகரிலிறை நிற்கு நிறைந்து" என்பாராகலின். முன்னெழுத்தாய் நின்றார் என்றருளப்பெற்றது. அன்றி ஆனம் ஓர் எழுத்துச்சாரியை. சாரியை நின்று பொருள் பயவாமை மாத்திரமேயன்றித் தனித்தும் நில்லாதாகலின் முதலெழுத்துக் கூடியவழி பொருள் தருதலின் ஆனம்போற் சிறப்பிலதாகிய ஆன்மாவினிடமாக முதல் எழுத்துப்போல இறைவன் கலந்துள்ளார் என்பதைக் குறித்தது எனவுமாம்.

காமனையுங் கரியாகக் காய்ந்தார் போலும்
கடனஞ்ச முண்டிருண்ட கண்டர் போலும்
சோமனையுஞ் செஞ்சடைமேல் வைத்தார் போலுஞ்
சொல்லாகிச் சொற்பொருளாய் நின்றார் போலும்
நாமனையும் வேதத்தார் தாமே போலும்
நங்கையோர் பான்மகிழ்ந்த நம்பர் போலும்
ஆமனையுந் திருமுடியார் தாமே போலும்
அணியாரூர்த் திருமூலட் டானனாரே. 6

6. காமனையுங் கரியாகக் காய்ந்தார் என்றது கரி திரும்பவும் தீப்பற்றக்கூடியதாகலின் காமனைக் கரியாகக் காய்ந்தமை திரும்பவும் உயிர்ப்பிக்கும் உயர்வு விளக்குவது. சொல்லாகிச் சொற்பொருளாகி நின்றார் - சொல்லாயும் அதன் பொருளாயும் உள்ள இருவகைப் பிரபஞ்சமாகவும் நின்றார். நாமனையும் வேதம் - நாவே வீடாகவுறையும் வேதம். ஆம்

அணியும் திருமுடியார் - கங்கைநீர் பொருந்திய திருமுடியினை யுடையவர்.

முடியார் மதியரவம் வைத்தார் போலும்
மூவுலகுந் தாமேயாய் நின்றார் போலும்
செடியார் தலைப்பலிகொண் டுழல்வார் போலுஞ்
செல்கதிதான் கண்ட சிவனார் போலும்
கடியார்நஞ் சுண்டிருண்ட கண்டர் போலும்
கங்காள வேடக் கருத்தர் போலும்
அடியா ரடிமை யுகப்பார் போலும்
அணியாரூர்த் திருமூலட் டானனாரே. 7

7. செல்கதி - ஆன்மாக்கள் சென்றடைதற்குரிய பேறு யுள்ளவர். கடி - அச்சம். கங்காளவேடம் - முழு எலும்பை யணிந்த திருவேடம்.

இந்திரத்தை யினிதாக வீந்தார் போலும்
இமையவர்கள் வந்திறைஞ்சு மிறைவர் போலும்
சுந்தரத்த பொடிதன்னைத் துதைந்தார் போலும்
தூத்தூய திருமேனித் தோன்றல் போலும்
மந்திரத்தை மனத்துள்ளே வைத்தார் போலும்
மாநாக நாணாக வளைத்தார் போலும்
அந்திரத்தே யணியாநஞ் சுண்டார் போலும்
அணியாரூர்த் திருமூலட் டானனாரே. 8

8. இந்திரம் - பெருஞ்செல்வம். ஈத் என்னும் பகுதி பரமைஸ்வர்யாம் என்னும் பொருளதாதல் வடநூல் மரபு. சுந்தரத்த பொடி - அழகினைத்தரும் பூதி சாதனம்; "சுந்தர மாவது நீறு" என்பதும் நோக்குக. தூத்தூய - மிகத்தூய.



மந்திரம் - நினைப்பவனைக் காப்பது. மனத்துள்ளே வைத்தல் - இடைவிடாது தியானித்தல். அந்திரம் - இடைப்பாகம்; தலையின் இடைப்பாகமாகிய கழுத்து. "கறைமிடறணியலும் அணிந்தன்று" ஆகலின் அணியா நஞ்சுண்டார் போலும் என்றருளப்பெற்றது.

பிண்டத்தைக் காக்கும் பிரானார் போலும்
பிறவி யிறவி யிலாதார் போலும்
முண்டத்து முக்கண் ணுடையார் போலும்
முழுநீறு பூசு முதல்வர் போலும்
கண்டத் திறையே கறுத்தார் போலும்
காளத்தி காரோண மேயார் போலும்
அண்டத்துக் கப்புறமாய் நின்றார் போலும்
அணியாரூர்த் திருமூலட் டானனாரே. 9

9. பிண்டம் - கருவயிற்பிண்டம். இறவி - இறத்தல். வி - தொழிற்பெயர் விகுதி. "துறவியை யார்க்கும் அறிவரியோன்" என்பதுபோல. முண்டம் - நெற்றி. இறையே - சிறிது.

ஒருகாலத் தொன்றாகி நின்றார் போலும்
ஊழி பலகண் டிருந்தார் போலும்
பெருகாமே வெள்ளந் தவிர்த்தார் போலும்
பிறப்பிடும்பை சாக்காடொன் றில்லார் போலும்
உருகாதா ருள்ளத்து நில்லார் போலும்
உகப்பார்தம் மனத்தென்றுந் நீங்கார் போலும்
அருகாக வந்தென்னை யஞ்சே லென்பார்
அணியாரூர்த் திருமூலட் டானனாரே. 10

10. ஒருகாலத்து - அநாதி சிருட்டிக்காலத்து. ஒன்றாகி - சத்தியும் தனக்குள் ஒடுங்க சிவமொன்றேயாய். ஊழி பல என்றது பிரமகற்பம் முதலாக பேரூழியிறுதியாகப் பலவகையான் வரும் பல ஊழிகளையும் அடக்கி. வெள்ளப்பெருகாமே தவிர்த்தது - கங்கையின் மிடுக்கு ஒழித்தது. உருகாதார் - இறைவன் ஆன்மாக்களாய நமக்குச்செய்த கைம்மாறிலாக் கருணைத்திறம் பலவற்றையும் நினைந்து நினைந்து உருகாதார்.

நன்றாக நடைபலவு நவின்றார் போலும்
        ஞானப் பெருங்கடற்கோர் நாதர் போலும்
கொன்றாகிக் கொன்றதொன் றுண்டார் போலும்
        கோளரக்கர் கோன்றலைகள் குறைத்தார் போலும்
சென்றார் திரிபுரங்க ளெய்தார் போலும்
        திசையனைத்து மாயனைத்து மானார் போலும்
அன்றாகி லாயிரம் பேரார் போலும்
        அணியாரூர்த் திருமூலட் டான னாரே. 11

11. நன்றாக - உலகம் உய்ய. நடை - நன்னடைகளை விதி முறையால் விளக்கும் வேதங்களை. நடை - ஆகு பெயர். பலவேறு சமயவொழுக்கங்களை என்றுமாம். ஞானப்பெருங்கடல்; பெருங்கடல் பல ஆறுகள் வந்து கலத்தற்கு இடமாய் ஒன்றாய், பெரிதாய், மிகாதாய், குறையாதாய் இருப்பதுபோல ஞானமும் பலவேறு சமயங்கள் வகுத்துக்கலக்கினும் ஒருதன்மைத்தாக இருத்தலின். கோளரக்கன் - மாறுபாடுடைய அரக்கனாகிய இராவணன். சென்று ஆர் திரிபுரங்கள் - ஆங்காங்குச் சென்று பொருந்துகின்ற முப்புரங்கள்.



## 22. திருத்தாண்டகம்

[இராகம்: ஹரிகாம்போதி]

திருச்சிற்றம்பலம்

[உலகும் கடலும் மலையும் எல்லாமாகி, பலநாட்பழகிவந்த வல்வினைகளையும் வாட்டுவானாகி, முத்துமணி மாணிக்கம் முதலிய நவமணிகள்போல நல்லணிசெய்வானாகி, பால் தேன் கரும்பு இவற்றைப் போல இனியனுமாகிய ஆரூர்ப்பெருமான் காற்றும் தீயும் நீருமாகிச் சேயனாயிருப்பினும், எப்போதும் பத்தர்க்கு மிகமிக அண்ணியனாய் அருளாரமுதம் வாரி வழங்குவான். அத்தகைய பேருபகாரியை அடியேன் அயர்த்தது என்? என்று இரங்கியருளுகிறார்கள்.]

திருமணியைத் தித்திக்குந் தேனைப் பாலைத்
        தீங்கரும்பி னின்சுவையைத் தெளிந்த தேறற்
குருமணியைக் குழன்மொந்தை தாளம் வீணை
        கொக்கரையின் சச்சரியின் பாணி யானைப்
பருமணியைப் பவளத்தைப் பசும்பொன் முத்தைப்
        பருப்பதத்தி லருங்கலத்தைப் பாவந் தீர்க்கும்
அருமணியை யாரூரி லம்மான் றன்னை
        அறியா தடிநாயே னயர்த்த வாறே. 1

1. பருப்பதம் - கைலை, சீபருப்பதமும் ஆம். அருங்கலம் - திருமுடி. பெருமானைத் தீஞ்சுவைப் பொருள்களாக, நவமணிகளாக, மணிகள் இழைத்த முடியாக அநுபவித்து, இதுவரை அறியாதிருந்தமைக்கும் மறந்திருந்தமைக்கும் வருந்திக் கூறுகிறார்கள். இனிவரும் பத்துப் பாட்டும் அது.

பொன்னேபோற் றிருமேனி யுடையான் றன்னை
பொங்குவெண் ணூலானைப் புனிதன் றன்னை
மின்னானை மின்னிடையாள் பாகன் றன்னை
வேழத்தி னுரிவிரும்பிப் போர்த்தான் றன்னைத்
தன்னானைத் தன்னொப்பா ரில்லா தானைத்
தத்துவனை யுத்தமனைத் தழல்போன் மேனி
அன்னானை யாரூரி லம்மான் றன்னை
அறியா தடிநாயே னயர்த்த வாறே. 2

2. பொன் திருமேனியில் கிடந்த வெண்ணூல் விளங்கித் தோன்றுகின்றதாதலின் பொங்கு வெண்ணூல் ஆயிற்று.

ஏற்றானை யேழுலகு மானான் றன்னை
யேழ்கடலு மேழ்மலையு மானான் றன்னைக்
கூற்றானைக் கூற்ற முதைத்தான் றன்னைக்
கொடுமழுவாள் கொண்டதோர் கையான் றன்னைக்
காற்றானைத் தீயானை நீரு மாகிக்
கடிகமழும் புன்சடைமேற் கங்கை வெள்ள
ஆற்றானை யாரூரி லம்மான் றன்னை
அறியா தடிநாயே னயர்த்த வாறே. 3

3. ஏழ்உலகு ஏழ்கடல் ஏழ்மலை எல்லாம் இறைவன் திருவுருவே. கடி - மணம்.

முந்திய வல்வினைகள் தீர்ப்பான் றன்னை
மூவாத மேனி முக்கண் ணானைச்
சந்திரனும் வெங்கதிரு மாயி னானைச்
சங்கரனைச் சங்கக் குழையான் றன்னை



மந்திரமு மறைப்பொருளு மானான் றன்னை
மறுமையு மிம்மையு மானான் றன்னை
அந்திரனை யாரூரி லம்மான் றன்னை
அறியா தடிநாயே னயர்த்த வாறே. 4

4. முந்திய வல்வினை - பழமையாகிய, நுகர்ச்சியாலன்றிப் பிறவாற்றால் நீங்காத வலியவினை. அந்திரன் - (அழகு நிலைத்தவன்) நிலைத்த அழகன்.

பிறநெறியாப் பீடாகிப் பிஞ்ஞ கனுமாய்ப்
பித்தனாய்ப் பத்தர் மனத்தி னுள்ளே
உறநெறியா யோமமா யீமக் காட்டி
லோரிபல விடநட்ட மாடி னானைத்
துறநெறியாய்த் தூபமாய்த் தேற்ற மாகி
நாற்றமாய் நன்மலர்மே லுறையா நின்ற
அறநெறியை யாரூரி லம்மான் றன்னை
அறியா தடிநாயே னயர்த்த வாறே. 5

5. புறநெறி - புறச்சமயங்கள். பீடு - பெருமை. பிஞ்ஞகன் - மயிற்பீலி யணிந்தவன். ஈமக்காடு - இடுகாடு. ஓரி - நரி. பலவிட - சுற்ற. துறநெறி - துறவுநெறி. நன்மலர் - மனமலர்.

பழகி வல்வினைகள் பாற்று வானைப்
பசுபதியைப் பாவகனைப் பாவந் தீர்க்கும்
குழகனைக் கோளரவொன் றாட்டு வானைக்
கொடுகொட்டி கொண்டதோர் கையான் றன்னை
விழவனை வீரட்ட மேவி னானை
விண்ணவர்க ளேத்தி விரும்பு வானை
அழகனை யாரூரி லம்மான் றன்னை
அறியா தடிநாயே னயர்த்த வாறே. 6

6. பழகிய வல்வினை - நுகர்ச்சிக்கான விளையாத பக்குவமான வினைகள். பாற்றுதல் - சிதறச்செய்தல். பாவகன் - தியானிக்கப்படுபவன். குழகன் - இளமையுடையவன். கொடுகொட்டி என்பது ஒருவகைவாத்தியம். விழவன் - திருவிழாவுடையவன்.

சூளா மணிசேர் முடியான் றன்னைச்
சுண்ணவெண் ணீறணிந்த சோதி யானைக்
கோள்வா யரவ மசைத்தான் றன்னைக்
கொல்புலித்தோ லாடைக் குழகன் றன்னை
நாள்வாயும் பத்தர் மனத்து ளானை
நம்பனை நக்கனை முக்க ணானை
ஆள்வானை யாரூரி லம்மான் றன்னை
அறியா தடிநாயே னயர்த்த வாறே. 7

7. சூளாமணி - சூடாமணி (உச்சிமணி). நாள்வாயும் - தினந்தோறும்.

முத்தினை மணிதன்னை மாணிக் கத்தை
மூவாத கற்பகத்தின் கொழுந்து தன்னைக்
கொத்தினை வயிரத்தைக் கொல்லே றூர்ந்து
கோளரவொன் றாட்டுங் குழகன் றன்னைப்
பத்தனைப் பத்தர் மனத்து ளானைப்
பரிதிபோற் றிருமேனி யுடையான் றன்னை
அத்தனை யாரூரி லம்மான் றன்னை
அறியா தடிநாயே னயர்த்த வாறே. 8

8. மூவாத கற்பகம் - என்றும் ஒருபடித்தான கற்பகம். கொத்து - பூங்கொத்து. பரிதி - சூரியன்.



பையா டரவங்கை யேந்தி னானைப்
பரிதிபோற் றிருமேனிப் பானீற் றானை
நெய்யாடு திருமேனி நிமலன் றன்னை
நெற்றிமேன் மற்றொருகண் ணிறைவித் தானைச்
செய்யானைச் செழும்பவளத் திரளொப் பானைச்
செஞ்சடைமேல் வெண்டிங்கள் சேர்த்தி னானை
ஐயாறு மேயானை யாரூ ரானை
யறியா தடிநாயே னயர்த்த வாறே. 9

9. பை - படம். ஐயாறு என்பது - ஒரு தலம்.

சீரார் முடிபத் துடையான் றன்னைத்
தேசழியத் திருவிரலாற் சிதைய நூக்கிப்
பேரார் பெருமை கொடுத்தான் றன்னைப்
பெண்ணிரண்டு மாணுமாய் நின்றான் றன்னைப்
போரார் புரங்கள் புரள நூறும்
புண்ணியனை வெண்ணீ றணிந்தான் றன்னை
ஆரானை யாரூரி லம்மான் றன்னை
யறியா தடிநாயே னயர்த்த வாறே. 10

10. தேசு - ஒளி. நூக்கி - அழுத்தி. பேரார் பெருமை - இராவணன் என்ற பெயரையும், சந்திரகாசம் என்னும் வாளையும், வரத்தையும் அளித்தமை. பெண்ணிரண்டு - உமாதேவியும் கங்கையும். நூறும் - பொடிசெய்யும். ஆரான் - ஆத்திமாலை யணிந்தன்.

## 23. திருத்தாண்டகம்

[இராகம்: ஹரிகாம்போதி]

திருச்சிற்றம்பலம்.

[இத்திருத்தாண்டகம் பத்தும் திருமூலட்டானன் தேவர்க்கும் தனக்குஞ் செய்த பெரிய உபகாரங்களை உணர்த்துகிறது. தேவர்

களுக்கு அருள் வழங்கியதையும், திருமாலுக்குச் சக்கரம் அருளியதையும், தேவர்கள் பூசிக்க வெளிவந்து எழுந்தருளியிருக்கின்றமையுமாகிய செயல்களாலும் நாக்கு அருள்வதைச் சிறைமருள் நீக்கியதும், கன்றருளிய நீதகற்றவனும் ஆகிய நிகழ்ச்சிகளாலும் தெரிவிக்கின்றார்கள்.]

எம்பந்த வல்வினைநோய் தீர்த்திட் டான்காண்
　　ஏழ்கடலு மேழுலகு மாயி னான்காண்
வம்புந்து கொன்றையந்தார் மாலை யான்காண்
　　வளர்மதிசேர் கண்ணியன்காண் வானோர் வேண்ட
அம்பொன்றால் மூவெயிலு மெரிசெய் தான்காண்
　　அனலாடி யானஞ்சு மாடி னான்காண்
செம்பொன்செய் மணிமாடத் திருவா ரூரிற்
　　றிருமூலட் டானத்தெஞ் செல்வன் றானே. 1

1. எம்பந்த வல்வினை - எமக்குப்பந்தமான மலபாகங்களும் வலியவினையும். வம்பு - புதுமை. அம்பு ஒன்று - திருமாலாகிய பாணம். ஆனஞ்சு - பஞ்சகவ்யம்.

அக்குலா மரையினன்கா ணடியார்க் கென்றும்
　　ஆரமுதா யண்ணிக்கு மையாற் றான்காண்
கொக்குலாம் பீலியொடு கொன்றை மாலை
　　குளிர்மதியுங் கூரரவு நீருஞ் சென்னித்
தொக்குலாஞ் சடையினன்காண் டொண்டர் செல்லுந்
　　தூநெறிகாண் வானவர்கள் துதிசெய் தேத்துந்
திக்கெலா நிறைந்தபுகழ்த் திருவா ரூரிற்
　　றிருமூலட் டானத்தெஞ் செல்வன் றானே. 2

2. அக்கு - சங்கமணி. ஆரமுது - தெவிட்டாவமுது. அண்ணிக்கும் - இனிக்கும். கொக்குலாம் பீலி - கொக்கிறகு.



நீரேறு சடைமுடியெந் நிமலன் றான்காண்
　　நெற்றிமே லொற்றைக்கண் ணிறைவித் தான்காண்
வாரேறு வனமுலையாள் பாகத் தான்காண்
　　வளர்மதிசேர் சடையான்காண் மாதே வன்காண்
காரேறு முகிலனைய கண்டத் தான்காண்
　　கல்லாலின் கீழறங்கள் சொல்லி னான்காண்
சீரேறு மணிமாடத் திருவா ரூரிற்
　　றிருமூலட் டானத்தெஞ் செல்வன் றானே. 3

3. ஏறு - மிகுந்த. கண் ஒன்றாயிருந்தும் நிறைந்திருக்கிறது என்பார் நிறைவித்தான் என்றார். முகிலனைய கண்டம் என்றது நிறமும், தேவர்களின் உயிர்காத்த வள்ளன்மையும்பற்றி.

கானேறு களிற்றுரிவைப் போர்வை யான்காண்
　　கற்பகங்காண் காலனையன் றுதைசெய் தான்காண்
ஊனேறு முடைதலையிற் பலிகொள் வான்காண்
　　உத்தமன்கா ணொற்றியூர் மேவி னான்காண்
ஆனேறொன் றதுவேறு மண்ணல் தான்காண்
　　ஆதித்தன் பல்லிறுத்த வாதி தான்காண்
தேனேறு மலர்ச்சோலைத் திருவா ரூரிற்
　　றிருமூலட் டானத்தெஞ் செல்வன் றானே. 4

4. கானேறுகளிறு - காட்டிற்சுற்றும் யானை. முடை - நாற்றம். ஆதித்தன் - சூரியன்.

பிறப்போ டிறப்பென்று மில்லா தான்காண்
　　பெண்ணுருவோ டாணுருவு மாயி னான்காண்
மறப்படுமென் சிந்தைமரு ணீக்கி னான்காண்
　　வானவரு மறியாத நெறிதந் தான்காண்

நறப்படுபூ மலர்தூபந் தீப நல்ல
நறுஞ்சாந்தங் கொண்டேத்தி நாளும் வானோர்
சிறப்போடு பூசிக்குந் திருவா ரூரிற்
றிருமூலட் டானத்தெஞ் செல்வன் றானே. 5

5. 'என்றும்' என்றது அவதார விசேடங்கள் என்ற பெயராலும் என்பதாம். மறப்படும் - பாவத்திற்பட்ட, மருள் - அறியாமையாகிய மயக்கம். வானவர் தெரிந்த நெறி - போகநெறி. வானவரும் அறியாத நெறி - ஞான நெறி. நறப்படும் - தேன் பொருந்திய.

சங்கரன்காண் சக்கரமாற் கருள்செய் தான்காண்
தருணேந்து சேகரன்காண் டலைவன் றன்காண்
அங்கமலத் தயன்சிரங்க ளைந்தி லொன்றை
யறுத்தவன்கா ணணிபொழில்சூ ழையாற் றன்காண்
எங்கள்பெரு மான்காணென் னிடர்கள் போக
அருள்செய்யு மிறைவன்கா ணிமையோ ரேத்தும்
செங்கமல வயல்புடைசூழ் திருவா ரூரிற்
றிருமூலட் டானத்தெஞ் செல்வன் றானே. 6

6. தருணேந்து சேகரன் - திருவாரூரில் திருவிழாக் கொண்டருளும் சந்திரசேகர மூர்த்தியின் திருநாமம்.

நன்றருளித் தீதகற்று நம்பி தான்காண்
நான்மறையோ டாறங்க மாயி னான்காண்
மின்றிகழுஞ் சோதியன்கா ணாதி தான்காண்
வெள்ளேறு நின்றுலவு கொடியி னான்காண்
துன்றுபொழிற் கச்சியே கம்பன் றன்காண்
சோற்றுத் துறையான்காண் சோலை சூழ்ந்த
தென்றலார் மணங்கமழுந் திருவா ரூரிற்
றிருமூலட் டானத்தெஞ் செல்வன் றானே. 7



7. நன்று அருளி - தனக்கு நன்றென்று தோன்று பவைகளையருளி. தீதகற்றும் - ஆன்மாவின் ஞானநெறிக்குத் தீமையானவற்றை நீக்கும். ஆன்மாக்கள் சிற்றறிவினராதலின் நன்மையைத் தீமையென்றும் தீமையை நன்மையென்றும் மயங்கி அறியுமாதலின் இறைவனே அருளவேண்டுவதாயிற்று.

பொன்னலத்த நறுங்கொன்றைச் சடையி னான்காண்
புகலூரும் பூவணமும் பொருந்தி னான்காண்
மின்னலத்து நுண்ணிடையாள் பாகத் தான்காண்
வேதியன்காண் வெண்புரிநூன் மார்பி னான்காண்
கொன்னலத்த மூவிலைவே லேந்தி னான்காண்
கோலமா நீறணிந்த மேனி யான்காண்
செந்நலத்த வயல்புடைசூழ் திருவா ரூரிற் 8
றிருமூலட் டானத்தெஞ் செல்வன் றானே.

8. பொன்னலத்த - பொன்னிறமான. மின்நலத்த - மின்னலின் அழகுடைய. கொன் - பெருமை.

விண்டவர்தம் புரமூன்று மெரிசெய் தான்காண்
வேலைவிட முண்டிருண்ட கண்டத் தான்காண்
மண்டலத்தி லொளிவளர விளங்கி னான்காண்
வாய்மூரு மறைக்காடு மருவி னான்காண்
புண்டரிகக் கண்ணானும் பூவின் மேலைப்
புத்தேளுங் காண்பரிய புராணன் றன்காண்
தெண்டிரைநீர் வயல்புடைசூழ் திருவா ரூரிற் 8
றிருமூலட் டானத்தெஞ் செல்வன் றானே.

9. விண்டவர் - பகைவர். வேலை - கடல். மண்டலம்- பூமி. ஒளி - ஞானம். ஞானபூமி மண்ணுலகமேயாதலின்

இவ்வாறு கூறினர். வாய்மூரும் மறைக்காடும் மருவினான் எனச் சேர்த்திக்கூறியது மறைக்காட்டில் காட்டவேண்டிய திருக்கோலத்தை வாய்மூரிலும் தமக்குக்காட்டியபேரருளை எண்ணி. புண்டரிகக் கண்ணன் - திருமால். பூவின் மேலைப்புத்தேள் - பிரமன். ஐ - சாரியை. புராணன் - பழமையானவன்.

செருவளருஞ் செங்கண்மா லேற்றி னான்காண்
தென்னானைக் காவன்காண் தீயில் விழ
மருவலர்தம் புரமூன்று மெரிசெய் தான்காண்
வஞ்சகர்பா லணுகாத மைந்தன் றான்காண்
அருவரையை யெடுத்தவன்றன் சிரங்கள் பத்தும்
ஐந்நான்கு தோளுநெரிந் தலற வன்று
திருவிரலா லடர்த்தவன்காண் திருவா ரூரிற்
றிருமூலட் டானத்தெஞ் செல்வன் றானே. 10

10. செரு - போர். தென் - அழகு. ஆனைக்காவன் - திருவானைக்காவை யிடமாகக்கொண்டவன். மருவலர் - பகைவர். அடர்த்தவன் - நெருக்கியவன்.

## 24. திருத்தாண்டகம்

[இராகம் - ஹரிகாம்போதி]

திருச்சிற்றம்பலம்.

[தன்னெஞ்சை முன்னிலைப்படுத்தி, ஆரூர்ப்பெருமானுக்குத் தொண்டுகளைச் செய்; புகழ்ந்துபாடு என்கின்றது இத்தாண்டகம் முழுவதும்.]



இடர்கெடுமா றெண்ணுதியே னெஞ்சே நீவா
விண்டொளிசேர் கங்கைச் சடையா யென்றும்
சுடரொளியா யுள்விளங்கு சோதீ யென்றும்
தூநீறு சேர்ந்திலங்கு தோளா வென்றும்
கடல்விடமு துண்டிருண்ட கண்டா வென்றுங்
கலைமான் மறியேந்து கையா வென்றும்
அடல்விடையா யாரமுதே யாதீ யென்றும்
ஆரூரா வென்றென்றே யலறா நில்லே. 1

1. இடர் - பிறவித்துன்பம். உள் விளங்கும் சோதி - உள்ளத்தினுள்ளாக விளங்கும் ஞானஒளி.

செடியேறு தீவினைகள் தீரும் வண்ணஞ்
சிந்தித்தே நெஞ்சமே திண்ண மாகப்
பொடியேறு திருமேனி யுடையா யென்றும்
புரந்தரன்றன் றோள்துணித்த புனிதா வென்றும்
அடியேனை யாளாகக் கொண்டா யென்றும்
அம்மானே யாரூரெம் மரசே யென்றும்
கடிநாறு பொழிற்கச்சிக் கம்பா வென்றுங்
கற்பகமே யென்றென்றே கதறா நில்லே. 2

2. செடி - தூறு (கூட்டம்). புரந்தரன் - இந்திரன். தக்கன் யாகத்தில் இந்திரன் தோளையறுத்தது. 'இந்திரனைத் தோணெரித்து' திருவாசகம்.

நிலைபெறுமா றெண்ணுதியே னெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் னலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்

தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் மாதீ யென்றும்
ஆரூரா வென்றென்றே யலறா நில்லே, 3

3. புலர்வதன்முன் - விடிவதன்முன்.

புண்ணியமு நன்னெறியு மாவ தெல்லா
நெஞ்சமே யிதுகண்டாய் பொருந்தக் கேள்நீ
நுண்ணியவெண் ணூல்கிடந்த மார்பா வென்றும்
நுந்தாத வொண்சுடரே யென்று நாளும்
விண்ணியங்கு தேவர்களும் வேத நான்கும்
விரைமலர்மே னான்முகனு மாலுங் கூடி
எண்ணரிய திருநாம முடையா யென்றும்
எழிலாரூ ராவென்றே யேத்தா நில்லே. 4

4. நுந்தாத - தூண்டாத. தேவர்கள் எல்லாருங் கூடியும் எண்ணுதற்கரிய திருநாமம் உடையவன் எனக்கூட்டுக.

இழைத்தநா ளெல்லை கடப்ப தன்றால்
இரவினொடு பண்பகலு மேத்தி வாழ்த்திப்
பிழைத்ததெலாம் பொறுத்தருள்செய் பெரியோ யென்றும்
பிஞ்ஞகனே மைஞ்ஞவிலுங் கண்டா வென்றும்
அழைத்தலறி யடியேனுன் னரணங் கண்டாய்
அணியாரூ ரிடங்கொண்ட அழகா வென்றும்
குழற்சடையெங் கோனென்றுங் கூறு நெஞ்சே
குற்றமில்லை யென்மேனான் கூறி னேனே. 5

5. இழைத்த நாள் எல்லை கடப்பதன்று - வினைப் போகத்திற் கென்று வரையறுக்கப்பட்ட நாள்தான் எல்லை கடவாது. பிழைத்தது - தவறியது. மைஞ்ஞவிலும் - விடம் விரும்பிய. அரணம் - பாதுகாப்பு. நெஞ்சே உனக்கு உண்மையைத் தெரிவிக்க வேண்டிய காலத்துத் தெரிவித்துவிட்டேன்; தெரிவிக்கவில்லை யென்ற குற்றம் என் மேலில்லை; சொல்லிவிட்டேன்; இனித்தவறின் உன்பிழை என்பதாம்,



நீப்பரிய பல்பிறவி நீக்கும் வண்ணம்
நினைந்திருந்தேன் காணெஞ்சே நித்த மாகச்
சேப்பிரியா வெல்கொடியி னானே யென்றுஞ்
சிவலோக நெறிதந்த சிவனே யென்றும்
பூப்பிரியா நான்முகனும் புள்ளின் மேலைப்
புண்டரிகக் கண்ணானும் போற்றி யென்னத்
தீப்பிழம்பாய் நின்றவனே செல்வ மல்குந்
திருவாரூ ராவென்றே சிந்தி நெஞ்சே. 6

6. நீப்பரிய - நீக்கற்கரிய. சே பிரியா வெல்கொடி - இடபம் விட்டு நீங்காத வெற்றிக்கொடி. புள் - கருடன். தீப்பிழம்பு - அண்ணாமலை.

பற்றிநின்ற பாவங்கள் பாற்ற வேண்டில்
பரகதிக்குச் செல்வதொரு பரிசு வேண்டில்
சுற்றிநின்ற சூழ்வினைகள் வீழ்க்க வேண்டில்
சொல்லுகேன் கேணெஞ்சே துஞ்சா வண்ணம்
உற்றவரு முறுதுணையு நீயே யென்றும்
உன்னையல்லா லொருதெய்வ முன்கே னென்றும்
புற்றரவக் கச்சார்த்த புனிதா வென்றும்
பொழிலாரூ ராவென்றே போற்றா நில்லே. 7

7. பாற்ற - போக்க. பரிசு - உபாயம். சுற்றிநின்ற சூழ்வினை - உயிரைச் சுற்றிநின்று உண்மையுணரமாட்டாதே செய்கின்ற சூழ்ச்சிமிக்க வினைகள். அந்தாவண்ணம் - ஆங்காவண்ணம்.

மதிதருவ னெஞ்சமே யுஞ்சு போக
வழியாவ திதுகண்டாய் வானோர்க் கெல்லாம்
அதிபதியே யாரமுதே யாவீ யென்றும்
அம்மானே யாரூரெம் மையா வென்றும்
துதிசெய்து துன்றுமலர் கொண்டு தூவிச்
சூழும் வலஞ்செய்து தொண்டு பாடிக்
கதிர்மதிசேர் சென்னியனே கால காலா
கற்பகமே யென்றென்றே கதறா நில்லே. 8

8. மதி - புத்தி. உஞ்சுபோக - பிழைக்க. துன்று மலர் - நிறைந்த பூ.

பாசத்தைப் பற்றறுக்க லாகு நெஞ்சே
பரஞ்சோதீ பண்டரங்கா பாவ நாசா
தேசத் தொளிவிளக்கே தேவ தேவே
திருவாரூர் திருமூலட் டானா வென்றும்
நேசத்தை நீபெருக்கி நேர்நின் றுள்கி
நித்தலுஞ் சென்றடிமேல் வீழ்ந்து நின்று
ஏசற்று நின்றிமையோ ரேறே யென்றும்
எம்பெருமான் என்றென்றே யேத்தா நில்லே. 9

9. பாசத்தைப் பற்றறுக்கலாகும் - பாசத்தைப் பற்றிநின்ற பற்றினை நீக்கலாகும். பண்டரங்கா - பண்டரங்கம் என்னுங் கூத்துடையானே. தேசத்தொளிவிளக்கு - மிக்க ஒளியுள்ள விளக்கு. உள்கி - தியானித்து. ஏசற்று - வருந்தி.



புலன்களைந்தா லாட்டுண்டு போது போக்கிப்
புறம்புறமே திரியாதே போது நெஞ்சே
சலங்கொள்சடை முடியுடைய தலைவா வென்றும்
தக்கன்செய் பெருவேள்வி தகர்த்தா யென்றும்
இலங்கையர்கோன் சிரநெரித்த விறைவா வென்றும்
எழிலாரூ ரிடங்கொண்ட வெந்தா யென்றும்
நலங்கொளடி யென்றலைமேல் வைத்தா யென்றும்
நாடோறு நவின்றேத்தாய் நன்மை யாமே. 10

10. ஆட்டுண்டு - அலைக்கப்பெற்று. சலம் - கங்கை. நலங்கொள் அடி - நன்மையமைந்த திருவடி (சிவஞானம்.)

## 25. போற்றித் திருத்தாண்டகம்

[இராகம்: ஹரிகாம்போதி]

திருச்சிற்றம்பலம்

[தியாகேசனைத் தொழுது நிற்கும் அப்பாடிகளால் அருச்சனை பாட்டாக - இறைவனுடைய பலவேறு குணங்கள் காரணமாக எழுந்த நூற்றெட்டுத் திருநாமங்களைக்கொண்ட வணக்கப்பாடலாக அருளப்பெற்றது இப்போற்றித் திருத்தாண்டகம்.]

கற்றவர்க ளுண்ணுங் கனியே போற்றி
கழலடைந்தார் செல்லுங் கதியே போற்றி
அற்றவர்கட் காரமுத மானாய் போற்றி
யல்லலறுத் தடியேனை யாண்டாய் போற்றி
மற்றொருவ ரொப்பில்லா மைந்தா போற்றி
வானவர்கள் போற்றும் மருந்தே போற்றி
செற்றவர்தம் புரமெரித்த சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி. 1

1. கற்றவர்கள் உண்ணும் கனியே என்றது கனி அறிவு தெளிவை யளிப்பதுபோல, கற்றவர்கட்கு மிகுகல்வியால் விளையும் செருக்குக் கலக்கம் போக்கித் தெளிந்த ஞானம் அளித்தலான். "கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியே" என்றதும் இணைத்து நோக்குக. அடைந்தார் - தியானித்தார்.

வங்கமலி கடலைநஞ்ச முண்டாய் போற்றி
மதயானை யீருரிவை போர்த்தாய் போற்றி
கொங்கலரு நறுங்கொன்றைத் தாராய் போற்றி
கொல்புலித்தோ லாடைக் குழகா போற்றி
அங்கணனே யமரர்கடம் மிறைவா போற்றி
யாலமர நீழலறஞ் சொன்னாய் போற்றி
செங்கனகத் தனிக்குன்றே சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி. 2

2. வங்கம் - கப்பல். கொங்கு - தேன். அறம் - சிவ ஞான போதம்.

மலையான் மடந்தை மணாளா போற்றி
மழவிடையாய் நின்பாதம் போற்றி போற்றி
நிலையாக வென்னெஞ்சி னின்றாய் போற்றி
நெற்றிமே லொற்றைக்கண் ணுடையாய் போற்றி
இலையார்ந்த மூவிலைவே லேந்தீ போற்றி
யேழ்கடலு மேழ்பொழிலு மானாய் போற்றி
சிலையாலன் றெயிலெரித்த சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி. 3

3. மலையான் - இமவான். நிலையாக நின்றாய் என்றது, என் னெஞ்சைக்காட்டிலும் கைலாயமும் ஆரூரும் போன்ற



இடங்கள் சிறந்தனவாயினும், நாயன் உய்யட்டும் என்ற கருணைமிகுதியால் பெயராதே நிற்கின்றார் என்பதைக் காட்டும்.

பொன்னியலு மேனியனே போற்றி போற்றி
பூதப் படையுடையாய் போற்றி போற்றி
மன்னியசீர் மறைநான்கு மானாய் போற்றி
மறியேந்து கையானே போற்றி போற்றி
உன்னுமவர்க் குண்மையனே போற்றி போற்றி
யுலகுக் கொருவனே போற்றி போற்றி
சென்னிமிசை வெண்பிறையாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி. 4

4. இயலும்; உவமவுருபுவாசகப்படுகின்றது. மன்னிய சீர் மறை - இறைவன் புகழே நிறைந்த வேதம். மறி - மான் குட்டி. உன்னுமவர் - தியானிப்பவர்கள்.

நஞ்சுடைய கண்டனே போற்றி போற்றி
நற்றவனே நின்பாதம் போற்றி போற்றி
வெஞ்சுடரோன் பல்லிறுத்த வேந்தே போற்றி
வெண்மதியங் கண்ணி விகிர்தா போற்றி
துஞ்சிருளி லாட லுகந்தாய் போற்றி
தூநீறு மெய்க்கணிந்த சோதீ போற்றி
செஞ்சடையாய் நின்பாதம் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி. 5

5. விகிர்தன் - சதுரப்பாடுடையான். துஞ்சு இருள் - உயிரெலாம் இறக்கும் ஊழிக்கால இருட்டு.

சங்கரனே நின்பாதம் போற்றி போற்றி
சதாசிவனே நின்பாதம் போற்றி போற்றி
பொங்கரவா நின்பாதம் போற்றி போற்றி
புண்ணியனே நின்பாதம் போற்றி போற்றி
அங்கமலத் தயனோடு மாலுங் காணா
வனலுருவா நின்பாதம் போற்றி போற்றி
செங்கமலத் திருப்பாதம் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி. 6

6. *சங்கரன் - சுகத்தைச் செய்பவன். செங்கமலத் திருப்பாதம்; செங்கமலத்திருப்பாதர் என்பது தியாகர் நாமங்களில் ஒன்று. திருவாரூர் திருக்கூட்டத்தார்களில் சிலர்க்குச் செங்கமலத்திருப்பாதகோத்திரம், செங்கமலப் பொற்பாதகோத்திரம் என இருவகைக் கோத்திரப் பெயரும் வழங்கிவருதல் சிந்தித்தற்குரியன.*

வம்புலவு கொன்றைச் சடையாய் போற்றி
வான்பிறையும் வாளரவும் வைத்தாய் போற்றி
கொம்பனைய நுண்ணிடையாள் கூறா போற்றி
குரைகழலாற் கூற்றுதைத்த கோவே போற்றி
நம்புமவர்க் கரும்பொருளே போற்றி போற்றி
நால்வேத மாறங்க மானாய் போற்றி
செம்பொனே மரகதமே மணியே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி. 7

7. *வம்பு - மணம். குரைகழல் - ஒலிக்கின்ற வீரக் கழலணிந்த திருவடி; தானியாகுபெயர்.*



உள்ளமா யுள்ளத்தே நின்றாய் போற்றி
யுகப்பார் மனத்தென்று நீங்காய் போற்றி
வள்ளலே போற்றி மணாளா போற்றி
வானவர்கோன் றோள்துணித்த மைந்தா போற்றி
வெள்ளையே,றேறும் விகிர்தா போற்றி
மேலோர்க்கு மேலோர்க்கு மேலாய் போற்றி
தெள்ளுநீர்க் கங்கைச் சடையாய் போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி. 8

8. *உள்ளம் - உயிர். உள்ளத்தே உயிர்க்குள் உயிர்க்குயிராய் நின்றாய் என்பது "காணுங் கண்ணுக்குக் காட்டும் உளம்போல்" என்றவிடத்தும் உள்ளம் உயிரின் பெயராதல் காண்க.*

பூவார்ந்த சென்னிப் புனிதா போற்றி
புத்தேளிர் போற்றும் பொருளே போற்றி
தேவார்ந்த தேவர்க்குந் தேவே போற்றி
திருமாலுக் காழி யளித்தாய் போற்றி
சாவாமே காத்தென்னை யாண்டாய் போற்றி
சங்கொத்த நீற்றெஞ் சதுரா போற்றி
சேவார்ந்த வெல்கொடியாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி. 9

9. *புத்தேளிர் - தேவர். ஆழி - சக்கரம். சே - இடபம். சாவாமே யாண்டது - இறவாப் பிறவா இன்ப வீடளித்து ஆண்டது.*

பிரமன்றன் சிரமரிந்த பெரியோய் போற்றி
பெண்ணுருவோ டாணுருவாய் நின்றாய் போற்றி
கரநான்கு முக்கண்ணு முடையாய் போற்றி
காதலிப்பார்க் காற்ற வெளியாய் போற்றி

அருமந்த தேவர்க் கரசே போற்றி
யன்றரக்க னைந்நான்கு தோளுந் தாளும்
சிரநெரித்த சேவடியாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி. 10

10. தேவர்க்கு அருமந்த அரசு எனக் கூட்டுக.

## 26. திருத்தாண்டகம்

[இராகம்: ஹரிகாம்போதி]

திருச்சிற்றம்பலம்

[அப்பர் சுவாமிகள் ஆரூர்ப்பெருமான் திருமுன்சென்று வணங்கி நிற்கின்றார். அப்போது பெருமான் சிவச்சோதியாய் வெளிப்பட்டு காட்சியளிக்கக்கண்டார். அக்காட்சி சுவாமிகளைச் சிவபோகத்தில் ஆழ்த்த அதன்வசமாகித் திருவாரூர்த் தொன்மையும், இறைவர் அங்கு எழுந்தருளிய பழைமையும், அவர் சிருட்டித்தொழில்களின் சீர்த்தியும் திருவருளுணர்த்தக்கண்டு பெருமானை உசாவுதல்மூலமாக நாமறிந்துய்ய அருளிச்செய்தது இப்பதிகம்.]

ஒருவனா யுலகேத்த நின்ற நாளோ
ஓருருவே மூவுருவ மான நாளோ
கருவனாய்க் காலனைமுன் காய்ந்த நாளோ
காமனையுங் கண்ணழலால் விழித்த நாளோ
மருவனாய் மண்ணும்விண்ணுந் தெரித்த நாளோ
மான்மறிக்கை யேந்தியோர் மாதோர் பாகம்
திருவினாள் சேர்வதற்கு முன்னோ பின்னோ
திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே. 1



1. ஒருவன் - சிவம். ஓருருவே மூவுருவம் ஆன - உருவத்திருமேனி கொண்ட முதல்வன் பவமலிதொழிலது நினைவொடு தாமரைமலர்மேல் எழுந்தருளியும், உலகுகள் நிலைபெறும்வகை நினைவொடு அலைகடல் நடுவில் அறிதுயிலமர்ந்தும், அழிவகை நினைவொடு தன்னுருவிலிருந்தும் மூன்று வேறுவடிவமான. கருவன் - எல்லாக் கருவையும் தன்னகத்தடக்கியவனாய்; சங்கார மூர்த்தியாய் என்பது. மருவன் - எல்லாவற்றிலும் பொருந்தியிருப்பவன்; அன்றி மணமுடையவன் என்று பொருள் கொண்டு மலரோனை எண்ணுதலுமாம். மண்ணும் விண்ணும் தெரித்தநாள் - படைப்புநாள். மாதோர்பாகம் என்றது பெண்பகுதி யாகிய இடப்பாகத்தை. திருவினாள் - சிற்சத்தி.

மலையார்பொற் பாவையொடு மகிழ்ந்த நாளோ
வானவரை வலியமுத மூட்டி யந்நாள்
நிலைபேறு பெறுவித்து நின்ற நாளோ
நினைப்பரிய தழற்பிழம்பாய் நிமிர்ந்த நாளோ
அலைசாமே யலைகடனஞ் சுண்ட நாளோ
வமரர்கணம் புடைசூழ விருந்த நாளோ
சிலையான்முப் புரமெரித்த முன்னோ பின்னோ
திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே. 2

2. வானவரை வலியமுதம் ஊட்டி நிலைபெறுவித்தது கற்பாந்தத்தில் தேவர்களுக்குச் சாவா மூவாப்பதந்தந்தது. வலியமுதம் கடலமுதம்போல உபசாரவழக்காக அழியாமையைப் பயப்பதன்று. அலைசாமே - வருந்தாமல்.

பாடகஞ்சேர் மெல்லடி நற் பாவை யாளும்
நீயும்போய்ப் பார்த்தனது பலத்தைக் காண்பான்
வேடனாய் வில்வாங்கி யெய்த நாளோ
விண்ணவர்க்குங் கண்ணவனாய் நின்ற நாளோ
மாடமொடு மாளிகைகண் மல்கு தில்லை
மணிதிகழு மம்பலத்தே மன்னிக் கூத்தை
ஆடுவான் புகுவதற்கு முன்னோ பின்னோ
அணியாரூர் கோயிலாக் கொண்ட நாளே. 3

3. *பார்த்தன் - அருச்சுனன். வாங்கி - வளைத்து. கூத்தையாடுவான் புகுவதற்கு - புனருற்பவத்திற்காக பஞ்ச கிருத்திய பரமானந்த தாண்டவத்தைத் தொடங்குவதற்கு.*

ஓங்கி யுயர்ந்தெழுந்து நின்ற நாளோ
ஓருகம்போ லேழுகமாய் நின்ற நாளோ
தாங்கியசீர்த் தலையான வானோர் செய்த
தக்கன்றன் பெருவேள்வி தகர்த்த நாளோ
நீங்கியநீர்த் தாமரையா னெடுமா லோடு
நில்லாயெம் பெருமானே யென்றங் கேத்தி
வாங்கிமதி வைப்பதற்கு முன்னோ பின்னோ
வளராரூர் கோயிலாக் கொண்ட நாளே. 4

4. *ஓங்கி உயர்ந்து எழுந்து நின்ற - உலகம் உற்பவிக்கும்படி, திருவுள்ளத் தடைத்து வெளிப்பட்டு எழுந்து நின்ற நாள் என்க. ஓருகம்போல் ஏழுகமாய் நின்றது - காலமெல்லாமாய் நின்றது. ஒன்றுக்கு ஏழு என்பது வழக்கு. தலையான வானோர் - இந்திரன் மால் பிரமன் முதலிய தலைவர்கள். வானோர்செய்த தக்கன்றன் பெருவேள்வி என்றது இவர்கள் துணையாலேயே தக்கன் சிவத்தை*



*நீக்கி வேள்விசெய்யத் துணிந்தான் என்பதும், தலையானவர்களாயிருந்தும் வேள்வியைக் காத்துக்கொள்ள வலியற்றிருந்தார்கள் என்பதும் விளக்கப்படுகின்றன. நீர் - தன்மை; தண்ணீருமாம். மதி வைப்பதற்கு என்பது அம்மையின் திருமணக்காலத்துப் பெருமானை ஒப்பனை செய்கின்றபோது பிறையணிவிப்பதைக் குறிப்பது.*

பாலனாய் வளர்ந்திலாப் பான்மை யானே
பணிவார்கட் கங்கங்கே பற்றா னானே
நீலமா மணிகண்டத் தெண்டோ ளானே
நெருநலையா யின்றாகி நாளை யாகும்
சீலமே சிவலோக நெறியே யாகுஞ்
சீர்மையே கூர்மையே குணமே நல்ல
கோலநீ கொள்வதற்கு முன்னோ பின்னோ
குளிராரூர் கோயிலாக் கொண்ட நாளே. 5

5. *பாலனாய் வளர்ந்திலாப் பான்மையானே என்றது தோற்றமும் வளர்ச்சியுமின்றி என்றும் ஒருபடித்தாய் இருப்பதைக் காட்டிற்று. நெருநல் - நேற்று.*

திறம்பலவும் வழிகாட்டிச் செய்கை காட்டிச்
சிறியையாய்ப் பெரியையாய் நின்ற நாளோ
மறம்பலவு முடையாரை மயக்கந் தீர்த்து
மாமுனிவர்க் கருள்செய்தங் கிருந்த நாளோ
பிறங்கியசீர்ப் பிரமன்றன் றலைகை யேந்திப்
பிச்சையேற் றுண்டுழன்று நின்ற நாளோ
அறம்பலவு முரைப்பதற்கு முன்னோ பின்னோ
அணியாரூர் கோயிலாக் கொண்ட நாளே. 6

6. திறம்பலவும் வழிகாட்டி - உலகத்திறம் பலவற்றையும் நுகர்தற்கேற்ற உணவைக் காட்டி. மறம்பலவும் உடையார் என்றது திரிபுராரிகள் இராவணன்போன்றாரை. பிறங்கிய - மாறுபட்ட.

நிலந்தரத்து நீண்டுருவ மான நாளோ
        நிற்பனவு நடப்பனவு நீயே யாகிக்
கலந்துரைக்கக் கற்பகமாய் நின்ற நாளோ
        காரணத்தா னாரணனைக் கற்பித் தன்று
வலஞ்சுருக்கி வல்லசுரர் மாண்டு விழ
        வாசுகியை வாய்படுத்து வானோ ருய்யச்
சலந்தானைக் கொல்வதற்கு முன்னோ பின்னோ
        தண்ணாரூர் கோயிலாக் கொண்ட நாளே. 7

7. நிலந்தரத்து - நிலத்தினளவினதாக நீண்டுருவமானது விசுவரூபத்தைக் குறிப்பது. காரணத்தால் நாரணனைக் கற்பித்து - பாதுகாப்பிற்காக நாரணனுக்குக் கற்பித்து. வாசுகி என்றது ஈண்டு அதனால் விளைந்த விடத்தை. சலந்தரன் - விற்குடியில் இறைவனால் கொல்லப்பட்ட அசுரன்.

பாதத்தான் முயலகனைப் பாது காத்துப்
        பாரகத்தே பரஞ்சுடராய் நின்ற நாளோ
கீதத்தை மிகப்பாடு மடியார்க் கென்றுங்
        கேடிலா வானுலகங் கொடுத்த நாளோ
பூதத்தான் பொருநீலி புனிதன் மேவிப்
        பொய்யுரையா மறைநால்வர் விண்ணோர்க் கென்றும்
வேதத்தை விரிப்பதற்கு முன்னோ பின்னோ
        விழவாரூர் கோயிலாக் கொண்ட நாளே. 8



8. முயலகனைப் பாதுகாத்து - முயலகனால் உலகிற்குத் தீமைவாராதபடி பாதுகாத்து; மேலும் முயலகன் வினையினை ஈட்டி வீயாதபடி அடிக்கீழ் வைத்துப் பாதுகாத்து என்னலுமாம். பொருநீலி புனிதன் மேவி - தமக்கொத்த அம்மையைப் புனிதமாகிய இறைவன் பொருந்தி.

புகையெட்டும் போக்கெட்டும் புலன்க ளெட்டும்
        பூதலங்க ளவையெட்டும் பொழில்க ளெட்டும்
கலையெட்டுங் காப்பெட்டுங் காட்சி யெட்டுங்
        கழற்சே வடியடைந்தார் களைக ளெட்டும்
நகையெட்டு நாளெட்டு நன்மை யெட்டு
        நலஞ்சிறந்தார் மனத்தகத்து மலர்க ளெட்டும்
திகையெட்டுந் தெரிப்பதற்கு முன்னோ பின்னோ
        திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே. 9

9. [1] ஆகவனீயம், காருகபத்தியம், தக்கணாக்கினி, காலாக்கினி, மூலாக்கினி, கோபாக்கினி, உதராக்கினி, வடவாமுகாக்கினி என்னும் புகையெட்டும்; பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா என்னும் போக்கு எட்டும்; சத்தாதி பஞ்சவிடயம் மனம் புத்தி அகங்காரம் என்னும் புலன் எட்டும்; அதல விதல சுதல நிராதல தராதல மகாதல அகிதல பாதல மென்னும் பூதலங்கள் எட்டும்; கற்பகதரு வைந்தும் சுரபி சங்கநிதி

[1] இவ்வுரையைத் தமிழ்ப் பொழில் துணர் 1 மலர் 1 பக்கம் 4ல் காண்க. இப்பாசுரத்திற்கு ஸ்ரீசெப்பறைச்சுவாமிகள் எழுதிய வேறு உரையும் உண்டு; அதனை ஞானசம்பந்தம் ஏழாவது ஆண்டு மலரில் காண்க

பதுமநிதி என்னும் பொழில்கள் எட்டும்; இவையன்றிப் பூலோக புவலோக முதலான எழுலகங்களும் சிவலோக மென்று மேலே தோற்றப்பட்ட உலகமுமாம்; இயம நியம ஆதன பிராணாயாம பிரத்தியாகார தாரணை சமாதி யென்னும் [2]கலையானயோகங்கள் எட்டும்; அட்டமாநாகம் என்னும் காப்புஎட்டும், இந்திரன் முதலான காட்சி எட்டும்; காமம் குரோதம் உலோபம் மோகம் மதம் மாத்சரியம் ஆணியம் இடும்பை என்னும் சேவடி யணைந்தார் களை எட்டும்; வீரம் அச்சம் இழிவு வியப்பு காமம் அவலம் ரவுத்திரம் நகை என்னும்நகை எட்டும்; வாரம் நாள் பக்கம் ராசி யோகம் கரணம் காலஹோரை பஞ்சபட்சி என்னும் நாள் எட்டும்; சமயம் விசேடம் நிருவாணம் சாம்பவம் அபிடேகம் ஆதாரம் நிராதாரம் மீதானமென்னும் நன்மை எட்டும்; ஆன்மஞானம் பரமஞானம் சிவஞானம் உண்மை ஞானம் மெய்ஞ்ஞானம் திருஞானம் சத்தியஞானம் ஆனந்த ஞானம் என்னும் மலர்கள் எட்டும்; கிழக்கு முதலான திசை எட்டும்.

2 'கலையெட்டும்' என்றும் பாடம். இப்பாடம் புகைமுதலிய வற்றிற்கு ஏதகை யொத்திருத்தல் காண்க.



ஈசனு யுலகேழு மலையு மாகி
　　இராவணனை யீடழித்திட் டிருந்த நாளோ
வாசமலர் மகிழ்தென்றலான நாளோ
　　மதயானை யுரிபோர்த்து மகிழ்ந்த நாளோ
தாதுமலர் சண்டிக்குக் கொடுத்த நாளோ
　　சகரர்களை மறித்திட்டாட் கொண்ட நாளோ
தேசமுமை யறிவதற்கு முன்னோ பின்னோ
　　திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே. 10

10. உலகேழும் மலையும் என்றது இடையிலேத் தீவக மாய் ஏழுலகு ஏழுமலை என்பதைக்காட்டிற்று. ஈடு - பெருமை. சண்டி - சண்டேசுரர்.

உ

சிவமயம்

# தேவாரம்

## சுந்தரமூர்த்தி சுவாமிகள்

அருளிச்செய்தவை.

## 27. பண் - இந்தளம்

இராகம்: நாதநாமக்கிரியை] [தாளம்: ரூபகம்

திருச்சிற்றம்பலம்

[உலகவர் வாழ்வு துன்ப வாழ்வு; பேதை வாழ்வு; மறுமைக்கு ஒன்றும் உதவாத வாழ்வு; பொய்யை மெய்யென்றெண்ணும் போலி வாழ்வு. இத்தகைய வாழ்விற்குச் சாதனமாகக் கிடைத்த உடலோ உதிரம் இறைச்சி மலம் இவற்றாலாய குடில். குறிக்கோளாக ஒரு பொருளும் இல்லாத மாயமானது. கிழிந்துபோன பறையையொத்தது. இத்தகைய உடம்பைக்கொண்டு ஒன்றுக்கும் உதவாத வாழ்வில் நான் வாழமாட்டேன். அஞ்சினேன். ஆரூரப்பனே ஆட்கொண்டு அருளுக என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் வாழ்க்கையை வெறுப்பவர்களாக உலகவர்க்கு யாக்கை, செல்வம், வாழ்வு இவற்றின் நிலையாமையை யுணர்த்தி, அஞ்சி அடைக்கலம்புகக்கூடிய இடம் ஆரூரே காப்பவர் தியாகப்பெருமானே என்று தெரிவிக்கின்றார்கள்.]

இறைகளோ டிசைந்த இன்பம்
இன்பத்தோ டிசைந்த வாழ்வு
பறைகிழித் தனைய போர்வை
பற்றியா னோக்கி னேற்குத்
திறைகொணர்ந் தீண்டித் தேவர்
செம்பொனு மணியுந் தூவி
அறைகழ லிறைஞ்சு மாரூர்
அப்பனே யஞ்சி னேனே. 1



1. இன்பத்தையும். வாழ்வையும் வேண்டிய நான் அதற்கேற்ற நற்சாதனத்தைப் பெறுமல் கிழிந்துபோன பறையையொத்த உடற்போர்வையைப் போர்த்திக்கொண்டு முயல்கின்றேன். என்னிலை எப்படி? என்று இரங்குவார்களாக அஞ்சினேன் என்று விண்ணப்பித்தருள்கின்றார்கள்.

இறைகளோடு இசைந்த இன்பம் - முட்புதரின் நடுவில் முளைத்த மல்லிகைபோல, பல துன்பங்களிடையே பொருந்திய இன்பம். பறை தோல்கிழிந்தால் நாதங் கெட்டுப் பயன்படாதவாறுபோலப் பல ஓட்டைகளை யுடையதாய்ப் பயன்படாத உடற்போர்வை. நோக்கினேற்கு - நுகர்கின்ற எனக்கு. தேவர் திறைகொணர்ந்து ஈண்டி தூவி இறைஞ்சும் ஆரூரப்பன் என இயைக்க. இறைஞ்சும் - இறைஞ்சப்பெறும் என செயப்பாட்டு வினையாக மாறுக.

ஊன்மிசை யுதிரக் குப்பை
யொருபொரு ளிலாத மாயம்
மான்மறித் தனைய நோக்கி
மடந்தைமார் மதிக்கு மிந்த
மானுடப் பிறவி வாழ்வு
வாழ்வதோர் வாழ்வு வேண்டேன்
ஆனல்வெள் ளேற்ற வாரூர்
அப்பனே யஞ்சி னேனே. 2

2. இப்பிறவியோ! தசைத்திரள்மேலே ஓடுகின்ற இரத்தக்குப்பை; பொருளாக மதிக்கப்பெறாத மாயம்; பெண்களை மதிப்பது; ஆகலால் இவ்வாழ்வு எனக்கு வேண்டாம்; அறவடிவான இடபத்தை ஏறி அருட்கோலங் கொள்ளும் தந்தையே! அஞ்சினேன் என்கின்றார்கள்.

ஊன் - தசைத்திரள். உதிரக்குப்பை என்றது பயன்படாத குப்பைபோல்வது என்ற கருத்துப்பற்றி. மான் மறித்தனையநோக்கி - மானை மடக்கி வளைத்தால் மான் மருண்டு நோக்குவது போன்ற பார்வையினையுடைய மடந்தைமார்.

அறுபதும் பத்து மெட்டு
    மாறினோ டஞ்சு நான்கும்
துறுபறித் தனைய நோக்கிச்
    சொல்லிற்றொன் றாகச் சொல்லார்
நறுமலர்ப் பூவு நீரும்
    நாடொறும் வணங்கு வார்க்கு
அறிவினைக் கொடுக்கு மாரூர்
    அப்பனை யஞ்சி னேனே. 3

3. பலவேறு மதவாதியர்களும், தத்துவங்கள் தொண்ணூற்றாறையுமே ஆராய்ந்து ஒரு முடிவாகச் சொல்லார்கள். அங்ஙனமிருந்தும், அன்போடு அர்ச்சிப்பார்க்கு உண்மைஞானம் அளிப்பவர் தேவரீரே என்கின்றார்கள்.

அறுபதும் பத்தும் எட்டும் ஆறினோடு அஞ்சு நான்கும் - எழுபதும் அதனைச்சார்ந்த இருபத்தாறும் என்பதாம். எட்டும் - சார்ந்த; பெயரெச்சம்; உம்மை முற்று எண்ணுப் பெயர் அன்று. அஞ்சு நான்கு - இருபது. ஆறினோடு இருபது - இருபத்தாறு. இந்த தொண்ணூற்றாறு தத்துவங்களையும்; துறு பறித்தனைய நோக்கி - துறுகளை (வேரோடு) பறித்தாற்போல முற்ற ஆராய்ந்து. ஒரு முடிவுபெறச் சொல்மாட்டார்கள்; ஆயினும்; பூவும் நீருங் கொண்டு நாளும் வணங்குவார்க்கு உண்மைஞானம் கொடுப்பார் ஆரூர்ப்பெருமான் என்பதாம்.



சொல்லிடி லெல்லை யில்லை
    சுவையிலாப் பேதை வாழ்வு
நல்லதோர் கூரை புக்கு
    நலமிக வறிந்தே னல்லேன்
மல்லிகை மாட நீடு
    மருங்கொடு நெருங்கி யெங்கும்
அல்லிவண் டியங்கு மாரூர்
    அப்பனை யஞ்சி னேனே. 4

4. சுவையற்ற இவ்வாழ்வால் எய்தும் இன்னலுக்கோர் எல்லையில்லை; நோயற்ற நல்ல கூரையிலே புகுந்து இன்பம் பெற்றேனல்லேன்; அஞ்சினேன் என்று கூறுகின்றார்.

கூரை - உடல்; இது உருவகம். அல்லிவண்டு மல்லிகையிலும் மாடங்களின் மருங்கிலும் எங்கும் நெருங்கி இயங்கும் ஆரூர் எனமுடிக்க. மணம் மிகுதியுமில்லாத அல்லிக்கண்ணுள்ள வண்டு மணமிக்க மல்லிகையிலும் மாடங்களிலும் எங்கும் இயங்குகின்றனவாதலின், யானும் இங்ஙனம் சுவையற்ற இவ்வாழ்வைவிட்டுச் சிவமணங் கமழுகிற தெய்வ வாழ்வை விரும்புவேன் என்பதாம்.

நரம்பினோ டெலும்பு கட்டி
    நசையினோ டிசைவொன் றில்லாக்
குரம்பை வாய்க் குடியிருந்து
    குலத்திறல் வாழ மாட்டேன்
விரும்பிய கமழும் புன்னை
    மாதவித் தொகுதி யென்றும்
அரும்புவாய் மலரு மாரூர்
    அப்பனே யஞ்சி னேனே. 5

5. நரம்பும் எலும்புஞ் சேர்த்துக்கட்டிய சிறு குடிலாகும் இவ்வுடல். அன்பில்லாதது; பொருத்தமில்லாதது; ஆதலால் இதிற் குடியிருக்கவிரும்பேன்; அஞ்சினேன் என்கிறார்கள்.

நசை - விருப்பம். இசைவு பொருத்தம். குரம்பை - குடில் மாதவி - மல்லிகை. நெய்தல்நிலத்துப் புன்னையும், முல்லைநிலத்து மல்லிகையும் தத்தம் பருவகாலம் வேண்டாது, என்றும் மலர்ந்து, பலரும் விரும்பக் கமழும் ஆரூர் என்பதால், பக்குவர் அபக்குவர் யாவருக்கும் ஒப்ப அருள் மணம் கமழச்செய்யும் ஆரூர் என்பது விளங்கி நின்றது. விரும்பிய கமழும்: செய்யிய என்னும் வினை எச்சத்தொடர்.

மணமென மகிழ்வர் முன்னே
    மக்கள்தாய் தந்தை சுற்றம்
பிணமெனச் சுடுவர் பேர்த்தே
    பிறவியை வேண்டேன் நாயேன்
பணையிடைச் சோலை தோறும்
    பைம்பொழில் விளாகத் தெங்கள்
அணைவினைக் கொடுக்கு மாரூர்
    அப்பனே யஞ்சி னேனே. 6



6. எல்லாருங்கூடி மணம் என்று இன்புறுவர்; பின்னே பிணம் என்று பேர்வைத்து, எடுத்துப்போய்ச் சுடுவர்; ஆதலால் நிலையற்ற பிறவியை நான்வேண்டிலேன்; அஞ்சினேன் என்கிறார்கள்.

மக்கள் தாய் தந்தை சுற்றம் பிணமெனச் சுடுவர் என்றது மிக்க அன்பு பூண்டாரும் சிறிதும் அன்பின்றி உடனே சுடுவர் என்பதை விளக்கிற்று. பணை - வயல்; பண்ணை என்பதன் தொகுத்தல் விகாரம். விளாகம் - இடம் அணைவு - அணையும் இடம். வயலிடை விளங்கும் சோலைக்கண்ணும், பொழிற்கண்ணும் தங்க இடங்கொடுக்கும் எங்கள் ஆரூரப்பன் எனக்கூட்டிப் பொருள்காண்க.

தாழ்வெனுந் தன்மை விட்டுத்
    தனத்தையே மனத்தில் வைத்து
வாழ்வதே கருதித் தொண்டர்
    மறுமைக்கொன் றீய கில்லார்
ஆழ்குழிப் பட்ட போது
    அலக்கணி லொருவர்க் காவர்
யாழ்முயன் றிருக்கு மாரூர்
    அப்பனே யஞ்சி னேனே. 7

7. தொண்டராயுள்ளாரும் பொருட்பற்றுமிக, அதனால் தாழ்வு என்பதையும் மறந்து, பொருளீட்டம் ஒன்

றையே குறிக்கோளாக்கொண்டு, மறுமைக்காக ஒன்றும் ஈந்து வாழமாட்டார்கள். பிறகுழியில் வீழ்ந்த காலத்துத் தான் துன்பமற்ற இன்பவடிவனுகிய இறைவனைத் தேடி நிற்பர். அதுவரைச் சிந்தியார். ஆதலால் இப்போதே அஞ்சினேன் என்கிருர்.

பணம் தேடுவார்க்குத் தாழ்வு தோன்றுது என்பார் தாழ்வெனுந் தன்மைவிட்டுத் தனத்தையே மனத்தில் வைத்து என்றுர். வாழ்வதே கருதி - வாழாமைக்கேதுவாகிய ஈயாமைகொண்டு தாழ்வுற்று வாழ்வதே கருதுகிருர்கள். இவர்களின் அறியாமை யிருந்தபடி என்னே என்பது அலக்கண் - துன்பம். அலக்கணில் ஒருவர்க்கு - துன்பமற்ற இறைவர்க்கு. ஆவர் - அன்பு ஆவர். யாழ் முயன்றிருக்கும் அப்பன் என இயைக்க.

உதிரநீ ரிறைச்சிக் குப்பை
    யெடுத்தது மலக்கு கைம்மேல்
வருவதோர் மாயக் கூரை
    வாழ்வதோர் வாழ்வு வேண்டேன்
கரியமா லயனுந் தேடிக்
    கழலிணை காண மாட்டா
அரியனாய் நின்ற வாரூர்
    அப்பனே யஞ்சி னேனே. 8

8. உதிர நீரையும் இறைச்சிக்குப்பையையும் உடைய மலக்குகையாகிய உடலால் வரும் வாழ்வு வேண்டேன் அஞ்சினேன் என்கிருர்.

மலக்குகை - மலம்நிறைந்த குகை. மாயக் கூரை - உள்ளதுபோற்ருேன்றி யழியும் கூரையாய உடல்.



பொய்த்தன்மைத் தாய மாயப்
    போர்வையை மெய்யென் றெண்ணும்
வித்தகத் தாய வாழ்வு
    வேண்டிநான் விரும்ப கில்லேன்
முத்தினைத் தொழுது நாளும்
    முடிகளால் வணங்கு வார்க்கு
அத்தன்மைத் தாகு மாரூர்
    அப்பனே யஞ்சி னேனே. 9

9. பொய்ம்மாயவுடலை மெய்யென்று எண்ணும் சதுரப்பாடுடைய வாழ்வு நான் விரும்பேன்; அஞ்சினேன் என்கிருர்.

போர்வை - உடல். வித்தகத்தாய வாழ்வு - குறிப்பு மொழி. முத்தினை - முத்துப்போன்ற இறைவனை. அத்தன்மைத்தாகும் - முத்துப்போல ஒளியும் பாவக்கழிவும் செய்யும் என்பதாம்.

தஞ்சொலா ரருள்ப யக்குந்
    தமியனேன் றடமு லைக்கண்
அஞ்சொலார் பயிலு மாரூ
    ரப்பனை யூரன் அஞ்சிச்
செஞ்சொலால் நயந்த பாடல்
    சிந்தியா வேத்த வல்லார்
நஞ்சுலாங் கண்டத் தெங்கள்
    நாதனை நணுகு வாரே. 10

10. தமியேன் அஞ்சினேன் என்று ஆரூரப்பனுக்கு விண்ணப்பித்த இப்பாடல் பத்தையும் சிந்தித்து வணங்கு

வார் இறைவனை யணுகுதலாய சாமீப்ய முத்தியெய்துவார் எனப் பயன்கூறி, திருக்கடைக்காப்பு அருளுகின்றார்கள்.

தஞ்சொல் ஆர் அருள்பயக்கும் - அவனுரை தனதுரை யாக் கூறிய சொல்லால்நிறைந்த அருளைப் பயன்பெறுத்திக் கொள்ளும். ஊரன் - நம்பியாரூரன் என்பதின் பெயரின் பகுதி (நாமைகதேசம்). செஞ்சொல் - தம்பொருளை நேரே உணர்த்துஞ் சொல். நணுகுவார் - சாமீபமுத்தியெய்துவர்.

## 28. பண் - கொல்லி

இராகம்: நவரோஸ்] [தாளம்: சாபு

திருச்சிற்றம்பலம்

[சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத்துருத்தி யென்னுந் தலத்தை வணங்கிக்கொண்டு திருவாரூரையடைந்தார்கள். அடைந்த நேரம் மாலைக்காலம். தூவாயரைவணங்கித் திருவுள்ளங்கொண்டு முன்னர் பரவையுண்மண்டளியையடைந்தார்கள். கண்டரும்படி வேண்டிப் பதிகம் பாடினார்கள். பின் ஓரிடத்தில் தங்கியிருந்து அர்த்தயாம தரிசனத்திற்குப் பூங்கோயிலுக்கு எழுந்தருளும்போது அடியார்கள் பலர் எதிர்வந்தார்கள். அவர்களைப்பார்த்து அவர்களைத் தமது உயிர்த் தோழியராகவும், தன்னை ஒரு தலைவியாகவும் எண்ணித் தைக்கிளை யாக இப்பதிகத்தைப் பாடினார்கள்.

நாயன்மார்கள் இறைவனை யநுபவிக்குமுறைகள் பல. ஆண்டானாக, தந்தையாக, தாயாக, மாமனாக, மாமியாக, கணவனாக எல்லாம் எண்ணி மனங்கனிந்து தோத்திரிப்பார்கள். இந்த முறைகளில் தலைவனாக இறைவனை எண்ணித் தான் தலைவியாக இருந்து நுகரும் நுகர்ச்சி மிகப்பெரிது. அதிலும் தலைவிமட்டும் விரும்பும் ஒருதலைக்



காமமாயின் கூடல்விழைவு மிகமிகக்கனிந்து கூறும் பகுதிகள் இன்புறத்தவனவாம். இப்பகுதி கடவுண்மாட்டு மானிடப்பெண்டிர் நயந்தபக்கமுமாம்.]

குருகுபா யக்கொழுங் கரும்புகண் நெரிந்தசா
றருகுபா யும்வய லந்தணா ரூரரைப்
பருகுமா றும்பணிந் தேத்துமா றுந்நினைந்
துருகுமா றும்மிவை யுணர்த்தவல் லீர்களே. 1

1. தலைவி உயிர்த்தோழியரைப் பார்த்து என்னிலையைத் தாமே தெரிந்து தலைவர்க்கு உணர்த்த வேண்டிய நீங்கள், நான் வேண்டிக்கொண்டபிறகாவது ஆரூரமுதத்தை யநுபவிக்க நான் உருகுவதை உணர்த்த வல்லீர்களா என்கிறாள்.

குருகுபாய - எருமை முதலியன பாய்தலால். குருகென்பது கொய்யடிநாரையும் ஆம். கொழுங்கரும்பு - சாறுமிகுந்த கொழுத்த கரும்பு. கண்நெரிந்த சாறு - கணுக்கள் நெரிதலால்வெளிப்பட்ட சாறு. அருகுபாயும் வயல் - பக்கங்களிற்பாயும் வயலுடைய ஆரூர். அந்தண் ஆரூர் - கொழுங் கரும்பாதற்குக் காரணமான நீர்வளம் பொருந்திய ஆரூர். அத்தகைய ஆரூரில் உள்ள இறைவனை. பருகுமாறும் - அவரை ஆராவமுதமாக எண்ணிக் காதன் மிகுதியால் இருகையாலும் அள்ளி, வாயும் வயிறும் நிறையப் பருகவும். பருகவும், பணிந்து ஏத்தவும் நினைந்து உருகுகின்றேன் என்பதை நீங்கள் உணர்த்தவல்லீர்களோ என்கின்றாள்.

பறக்குமெங் கிள்ளைகாள் பாடுமெம் பூவைகாள்
அறக்கணென் னத்தகு மடிகளா ரூரரை
மறக்ககில் லாமையும் வளைகணில் லாமையும்
உறக்கமில் லாமையு முணர்த்தவல் லீர்களே. 2

2. உணர்த்த வல்லீர்களே என்று கேட்டும் அவர்கள் வாளா இருந்தலைக்கண்டு வருந்திக் கிளிகளையும், நாகணவாய்ப்புட்களையும் அழைத்து அறிவிக்கச் சொல்கின்றாள்.

கிள்ளைகாள்! பூவைகாள்!! என்றாள் கிளிகளும் பூவைகளும் போய்ச்சொல்லின் பேச்சால் ஒத்த அவைகள் சொல்லுவதைக்கேட்ட தலைவனுக்குத் தன்னினைப்பு மிகுமாதலின். பறக்குமெங் கிள்ளைகாள் என்றாள் விரைவாகச் சென்று உணர்த்தும் வன்மை அதற்குண்டென்பது தோன்ற. பாடுமெம் பூவைகாள் என்றது அதனுடைய இனிய கீதமே அது சொல்லும் பொருளை அவரைக் கேட்பிக்கச் செய்யும்; ஆதலால் என் காரியம் நிறைவேறும் என்பது தோன்ற. கிளிகளைத் தூதுவிட்டு அதோடமையாது பூவைகளையும் வேண்டினாள் ஒன்று உணர்த்த விட்டவைகளை மற்றொன்று உணர்த்தியாவது வரச்செய்யட்டுமே எனக்கருதியும், ஒருவர்க் கிருவர் சொன்னால் உள்ளத்துப் பதியுமே என்று கருதியும் என்க. அறக்கண் - தருமத்திற்கே கண்போன்ற (ஆரூரர்).

சூழுமோ டிச்சுழன் றுழலும்வெண் ணாரைகாள்
ஆளுமம் பொற்கழ லடிகளா ரூரர்க்கு
வாழுமா றும்வளை கழலுமா றும்மெனக்
கூழுமா றும்மிவை யுணர்த்தவல் லீர்களே. 3



3. இவ்வண்ணம் கிளிகளையும் பூவைகளையும் வேண்டிக்கொண்டாள். அவைகளும் தங்காலமன்று என எண்ணியோ தாம் தோற்றற்குக் காரணமாகிய உமாதேவியார் பக்கத்திருப்பதால் தம்சொல் இனிக்காதென்றெண்ணியோ வாளா போகக்கண்ட தலைவிக்குக் கவலைமிக, கார் வானத்திலே வெண்ணாரைகள் விண்ணூடறுத்துப்போக, அது தலைவியின் மனதிற்கு ஒரு துணைகிடைத்ததாகத் தோன்ற நாரைகளை வேண்டிக்கொள்கின்றாள்.

கார்கண்ட களிப்பாலே நாரைகள் குதூகலிக்கின்றன என்பார் சூழும் ஓடிச் சுழன்று உழலும் வெண்ணாரைகாள் என்றாள். உம்முடைய பாதங்கள் அல்லலகற்றி ஆட்கொள்ளுந் தலையே அணியாகக் கொண்டனவாயிற்றே! அங்ஙனமிருந்தும் வாளாவிருப்பது தகாதென்பாள் ஆளும் அம் பொற்கழல் அடிகள் ஆரூரர்க்கு என்றாள். வாழுமாறும் - நான் உயிர்வாழ்வதே அவர்பொருட்டு ஆகலின் ஏதோ உயிர்வாழ்கின்றேனே யன்றி, உடல் மெலிகின்றது; வளை கழலுகின்றன; அவைமட்டுமல்ல, எனக்கு உளமும் மாறும்; எனக்கென்று வரையறுக்கப்பெற்ற ஊழ்வினையும் மாறுகின்றது. அதாவது இறந்துபடுவேன் போலும் இவைகளை உணர்த்துங்கள் என்றாள்.

சக்ரவா ளத்திளம் பேடைகாள் சேவல்காள்
அக்ர மங்கள்செயு மடிகளா ரூரர்க்கு
வக்ரமில் லாமையும் வளைகணில் லாமையும்
உக்ரமில் லாமையு முணர்த்தவல் லீர்களே. 4

4. நாரைகளும் வாய்திறவாது செல்ல, இவைகளினை பிரியாத பறவை யினங்கள் அல்லவாதலால் என்னிலை

அவைகட்கு எங்கள் தெரியும்; தெரியாமையாற்றான் வாளா செல்கின்றன என்று கருதிக் கவன்றிருக்கிற நேரத்தில் சக்கிரவாள மிதுனங்கள் வர அவற்றைப் பார்த்து வேண்டுகிறாள்.

சக்கிரவாளம் என்பன வொரிலை யுணவாகக்கொண்டு ஆணும் பெண்ணுமாகவே வாழும் பறவை. அதனுடைய பேடையை முன்னர் விளித்தாள் பெண்ணிலைமை பெண் ணுக்குத்தானே தெரியும் நான் தலைவனைக்கூடப் பெறாமை யால் வருந்தும் வருத்தம் நீயொருகால் பிரிந்து வருந்திய உனக்குத்தான் தெரியுமே என்ற கருத்தால். அதிலும் இளம் பேடைகாள் என்கிறாள் இளமைநலந் தாய்க்காதலன் கழிக்கப்பெறுமாயின் அந்த நாட்கள் திரும்ப வருவனவன்று என்பதும், கூடப்பெறாதார்க்குக் காதன்மை மிகுவிப்பது இளமையே என்பதும் உனக்குத் தெரியுமே என்கிற கருத் தால் சேவல்காள்! எப்போதுங் கூடியிருக்கின்ற ஆண் சக்கிரவாளங்களாகிய நீங்கள் போய்க் கூறினால் தலை வனுக்குச் சிறிது பொருந்தும். அல்லாமலும், ஆண்மை யினியல்பு உயிர்க்காதல் கொள்ளும் பெண்மையைப் பேண வேண்டுவதே யென்று உணரக்கூடும் ஆதலால் இருவருஞ் செல்க என்று கூறுகிறாள். இருவன், செல்வீர்களாயின் இப்பறவைகளின் நிலையில்கூட நாம் இல்லையே என்ற எண்ணமும் நீங்கள் சொல்லாமலேயே தலைவர்க்கு உண்டா கக்கூடும் என்றுமாம். அக்கிரமங்கள் செய்யும் - இப்படி வேண்டிய விளைக்காத முறைகேடான காரியங்களைச் செய்யும். அக்கிரமம் - அந்தக் கிரமமாகிய வேதங்களைச் செய்யும். கிரமம் என்பது வேதங்களைப் படிக்கு முறை களில் ஒன்று. வக்கிரம் - மாறுபாடு. உக்கிரம் - கோபம்.



இலைகள்சோலைத் தலையிருக்கும்வெண் ணாரைகாள்
அலைகொள்சூலப் படையடிகளாருக்குக்
கலைகள்சோர் கின்றதுங் கைவளை கழன்றதும்
முலைகள்பீர் கொண்டதும் மொழியவல் லீர்களே. 5

5. சக்கிரவாளங்கள் எப்போதும் மிதுனமாக இருக் கின்ற எக்களிப்பாலே, ஏருதப்புண் காகமறியாதவாறு போல, அறியாது வாளா ஏக, முன்னே ஓடிச்சுழலும் நாரைகளைப்பார்த்துச் சொன்னோம் பயனில்லை; இப்போது இருக்கிற நாரையைப் பார்த்துச் சொல்லுவோம்; அது முழுதும் கேட்டுப்போய்ச் சொல்லாதா என்று எண்ணிச் சோலையில் இருக்கும் நாரையை வேண்டுகிறாள்.

சோலைத் தலையிருக்கும் நாரைகாள் என்றாள் சுகமாக இருக்கும் நாரைகள் தனது வருத்தத்தைத் தெரிவிக்கக் கூடுமோ என்ற ஐயத்தால். அலைகொள் சூலம் - வருத்து கின்ற சூலம். கலைகள் சோர்ந்தது தன்வசமற்ற தன்மை யினால். வளைகழன்றது உடலின் இளைப்பால். பீர்கொண் டது பிரிவுத்துன்ப மிகுதியால். பீர் - பசலை; ஆம்பற் றண்டை நாருரித்தாற்போன்றதொரு நிறம்.

வண்டுகாள் கொண்டல்காள் வார்மணற் குருகுகாள்
அண்டவாணர் தொழுமடிகளாரரைக்
கண்டவாறுங்காமத் தீக்கனன் றெரிந்துமெய்
உண்டவாறுமிவை யுணர்த்தவல் லீர்களே. 6

6. கொம்புமேலுள்ளவனைக் கூறை கேட்டதுபோல் சோலையிலிருந்த நாரையை வேண்டி அதுவும் பயனற்றுப் போக, ஒருவரை வேண்டிப் பயனில்லை; இரக்க மனமுடை

யார் ஒருவரேனும் இருக்கமாட்டார்களா என்றெண்ணி வண்டு மேகம், கொய்யடிநாரை எல்லாவற்றையும் வேண்டுகிறாள்.

கொண்டல் - மேகம். வார்மணல் குருகு - வார்ந்துள்ள மணற் குன்றுகளிலுள்ள நாரைகள். ஆரூரரைக் கண்டவாறும் - ஆரூரரை யான் கண்டதும் யான் தன் தன்மை யிழந்தேன்; அவர் என்னைக் கண்டும் அவர் என் வசமாயிற்றிலர் என்று தான்மட்டும் விரும்பியுள்ள கைக்கிளையைக் காட்டுகிறாள். அங்ஙனம் கண்டதும் காமத்தீ உள்ளே கனன்று உடம்பெல்லாம் பற்றிக்கொண்டது ஆதலால் இவைகளை யுணர்த்தவல்லீர்களே என்கிறாள்.

தேனலங் கொண்டதேன் வண்டுகாள் கொண்டல்காள்
ஆனலங் கொண்டவெம் மடிகளா ரூரர்க்குப்
பானலங் கொண்டவெம் பணைமுலை பயந்துபொன்
னலங் கொண்டதும் முணர்த்தவல் லீர்களே. 7

7. பலவற்றை யழைத்தும் பயனில்லாமையால் தேன் மிகவுண்டு தேக்கெறிந்து, மேகம்வந்து கவ்வியதால் தேன் சேகரிக்கச் செல்லும் வேலையும் இன்றி ஓய்ந்திருக்கும் தேன்வண்டுகளையும், ஓய்விற்குக் காரணமாகிய கொண்டலையும் அழைத்துக் கூறுகின்றாள்.

நலம் - இன்பம். ஆனலம் - பஞ்சகவ்வியம். பானலம் கொண்ட - குவளை மலர்மாலை யணிந்த. பயந்து - பசந்த. ஊன் பொன்னலங் கொண்டதும் - உடல் பொன்னிறமானதும்.



சுற்றமுற் றுஞ்சுழன் றுழலும்வெண் ணாரைகாள்
அற்றமுற் றப்பகர்ந் தடிகளா ரூரர்க்குப்
பற்றுமற் றின்மையும் பாடுமற் றின்மையும்
உற்றுமற் றின்மையு முணர்த்தவல் லீர்களே. 8

8. சோம்பர்க்கு வேலைகொடுத்துப் பயனில்லை என எண்ணி, மீட்டும் ஓடித்திரிகின்ற நாரைகளை யழைத்து வேண்டுகின்றாள்.

அற்றம் முற்றப் பகர்ந்து - எனது சோர்வு முழுதும் சொல்லி. பற்று மற்றின்மையும் - உடற் பற்றாக இருந்த தாய் தந்தை தோழி சுற்றம் முதலாயினாரிடத்து இருந்த பற்றொழிந்த தன்மையையும். பாடு - துன்பம். உம்மை யிடையாமையாகிய இதனை அகலிர துன்பம் வேறில்லாமையும் பாடு - பெருமை; உடைமையடைதலைத் தவிர பெருமை வேறில்லாமையும் எனவுமாம். உற்று மற்றின்மை - அடைதற்குரியன வேறின்மை. உற்று என்பது உறு என்பதன் விரிதல்.

குரவநா றக்குயில் வண்டினம் பாடநின்
றரவமா டும்பொழி லந்தணா ரூரரைப்
பரவிநா டும்மதும் பாடிநா டும்மதும்
உருகிநா டும்மதும் முணர்த்தவல் லீர்களே. 9

9. ஒவ்வொருவரையும் வேண்டிப் பயன்காணாமையால் ஒருவரையும் விளியாதே இரக்கமுள்ளார் எற்றனை செய்யட்டும் என்றெண்ணாக்கால் [illegible] கிறாள்.

குரவம் - பாலைவனத்து மரம். நாறு - மணக்க. குரவம் பூ மணக்க, குயிலும் வண்டினமும் பாட, பாம்புகள் ஆடும்

பொழில் சூழ்ந்த ஆரூர் என்க. பரவி நாடுமாறும் - தோத்திரித்து விரும்பித் தேடுவது. நாடும்படி விரித்தல் விகாரம். பாடி நாடுதல் - இசைவயப்பட்ட பெருமானாதலின் பாடுவேனாயினேன் என்பது. உருகி நாடுதல் - நெக்கு நெக்குருகி நினைப்பவர் நெஞ்சுளே புக்குநிற்பவனாதலின் உருகினேன் என்பது.

கூடுமன் னப்பெடை காள்குயில் வண்டுகாள்
ஆடுமம் பொற்கழ லடிகளா ரூரைப்
பாடுமா றும்பணிந் தேத்துமா றுங்கூடி
யூடுமா றும்மிவை யுணர்த்தவல் லீர்களே. 10

10. சிறப்பித்து அழைத்துக் கூறாமையால் கேட்கிற்றிலவோ என்று ஐயுற்ற நெஞ்சினளாக அரவமாடுஞ் சோலைக்கண்ணுள்ள குயில்களையும், வண்டுகளையும், அன்னங்களையும் அழைத்துப் பேசுகிறாள்.

கூடும் அன்னப்பெடைகாள் - தன் சேவலோடு கூடும் பெண்ணன்னங்களே! நீவிர் பிரிந்தாரது துன்பமுணர்ந்தவர்களாதலின் வேண்டுகின்றேன் என்பது. ஆடும் அம்பொற்கழல் அடிகள் - அசைந்தாடும் வீரக்கழல் அணிந்த பெருமான். கூடி ஊடுமாறும் - நனவின் தியானமுற்றதனால் கனவில் தேவரீரைக்கூடி, பின் பிளவுகூடச் சிறுகோபம் கொள்ளுவதும் ஆகியவற்றை யுணர்த்தவல்லீர்களே என்பதாம்.

நித்தமா கநினைந் துள்ளமேத் தித்தொழும்
அத்தனம் பொற்கழ லடிகளா ரூரைச்
சித்தம்வைத் தபுகழ்ச் சிங்கடி யப்பன்மெய்ப்
பத்தனா ரன்சொன்ன பாடுமின் பத்தரே. 11



11. இங்ஙனம் தலைவன் தலைவிநிலையிலிருந்து பாராட்டிய இவ்வகப்பாட்டை அன்பர்களே பாடுங்களென்று பயனை விளக்காது, காதலிக்குக் கருதியதெல்லாம் கைகூடுமாறு போல உங்கட்கும் கிடைக்குமெனக் குறிப்பாகக் கடைக்காப்பு அருளுகிறார்.

நித்தமாக நினைந்து - மறப்பின்றி நினைந்து; அழியாதே சிவத்தோடொன்றி நித்தியத்துவத்தை அடைய விரும்பி என்றுமாம். உள்ளம் ஏத்தித்தொழும் என்றது உள்ளத்தால் உள்ளி, வாயால் ஏத்தி, மெய்யால் தொழும் என்ற முறையில் அமைந்தது. சிங்கடியப்பன் - திருநாட்டியத்தான்குடி கோட்புலிநாயனாரது திருமகளாகிய சிங்கடியைத் தனக்கும் மகளாக்கிக்கொண்டமை. மெய்ப்பத்தன் என்றார் தான் தலைவியாயிருந்து கடவுளைத் தலைவனாகவைத்து அநுபவிக்கின்ற அநுபவமே மெய்ப்பத்தர்க்கு இலக்கணமாகலின். மெய்ப்பத்தன் சொன்னதைப் பத்தரே பாடுமின் என்றது நீங்களும் மெய்ப்பத்தராகலாம் என்ற இயைபுபற்றி.

## திருத்தொண்டத்தொகை

## 29. பண் - கொல்லிக்கௌவாணம்

இராகம்: நவரோஸ்] [தாளம்: ஜம்பை

திருச்சிற்றம்பலம்.

[இது பன்னிரண்டாம் திருமுறையின் தொகை நூலாக இருப்பது. சுந்தரமூர்த்தி சுவாமிகள், பெற்ற சிற்றின்பமே பேரின்பமாக முற்றிவரும் பரிசில் பரவையாரோடு பயில்வோர்க

பரம்பரையிற் பழகிவருங்காலத்துப் பூங்கோயில் வழிபாட்டிற்குச் செல்கின்றவர்கள், தேவாசிரிய மண்டபத்திற் கூடியிருக்கும் திருத்தொண்டர் குழாத்தைக்கண்டு 'இத்தகைய அடியார்க்கடியான் ஆகு நாள் எந்நாளோ' என்று எண்ணிக்கொண்டே தியாகேசர் திருமுன் சென்றார். வள்ளல், கருத்தறிந்து முடிப்பாராதலின் வெளிப்பட்டு, 'அடியார்மேற்பதிகம் பாடுக' என ஆணைதந்தார். சுந்தரர் பெருமான் 'அடியார் வரலாற்றை எங்ஙனம் அறிவேன். விளங்கிய அறிவின் விண்ணோர் பெருமானே! விளக்கியருளவேண்டும்' என விண்ணப்பிக்க, தியாகேசப்பெருமான் 'தில்லைவாழந்தணர்தம்' என அடியெடுத்துக் கொடுத்தார். வள்ளலிடம் முதல்பெற்ற முதல்வர் தேவாசிரியம் அடைந்து அடியார்களைப் போற்றினார். அப்பாடல்களே இவை]

தில்லைவா ழந்தணர்தம் மடியார்க்கு மடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்
இல்லையே யென்னாத இயற்பகைக்கு மடியேன்
இளையான்றன் குடிமாற னடியார்க்கு மடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டற் [கடியேன்
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்
ஆரூரன் ஆரூரி லம்மானுக் காளே. 1

1. இப்பாட்டு, தில்லைவாழந்தணர் முதல் அமர்நீதியாரிறுதியான எழுவர் நாயன்மார்க்கும் அடியேன் என்று நாவலர் காவலர் கூறினார் என்கிறது.

இல்லையே என்னாத - எதுவும் இல்லை என்று சொல்லாத; இல்லாளையா? என்று மறுக்காத எனவுமாம். ஏ வினாப்பொருளது. வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருள் - வேடமே மெய்ப்பொருள் எனத்தொழுதுவென்ற மெய்ப்பொருளனார். குன்றை - செங்குன்றார். முல்லையந்தார் - வாணிக வென்றிக்கு அறிகுறியாக அணியப்பெறும் முல்லை மலர்மாலை.



இலைமலிந்த வேல்நம்பி யெறிபத்தர்க் கடியேன்
ஏனாதி நாதன்ற னடியார்க்கு மடியேன்
கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பர்க் கடியேன்
கடவூரிற் கலயன்ற னடியார்க்கு மடியேன்
மலைமலிந்த தோள்வள்ளல் மானக்கஞ் சாறன்
எஞ்சாத வாட்டாய னடியார்க்கு மடியேன்
அலைமலிந்த புனல்மங்கை யானாயர்க் கடியேன்
ஆரூரன் ஆரூரி லம்மானுக் காளே 2

2 எறிபத்தர் முதலான எழுவர் வரலாறும், அவர்க்கடிமை யான் என்பதும் அறிவிக்கிறார்கள்.

வேல் - பராசு. கலைமலிந்த சீர்நம்பி - எல்லாக்கலைகளிலும் நிறைந்த சீரானது அன்பாதலின், அது நிறைந்த பூரணன் என்பது. மலைமலிந்ததோள் என்றது சேனாதிபதியாக இருந்ததையும், வள்ளல் என்பது மணக்காலத்து, அணங்கிவடன்மயிர் நமக்குப் பஞ்சவடிக்காமென்றபோது தாழாது கொடுத்த கொடைத் திறத்தையும் குறிப்பது. எஞ்சாத வாள் தாயனார் - எஞ்சாத தாயனார்: வாள் தாயனார் எனக் கூட்டுக. எஞ்சாத - அற்றொழியாத; 'வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்' என்பது போல அழியாத என்னும் பொருட்டு. 'மாசில் வண்கையால்' கழுத்தரியத், திருக்கை சென்று பற்றியமையின் எஞ்சாமையையுடைய தாயனார் என்றார்.

மும்மையா லுலகாண்ட மூர்த்திக்கு மடியேன்
முருகனுக்கும் உருத்திர பசுபதிக்கு மடியேன்
செம்மையே திருநாளைப் போவார்க்கு மடியேன்
திருக்குறிப்புத் தொண்டர்தம் மடியார்க்கு மடியேன்
மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினா லெறிந்த
அம்மையா னடிச்சண்டிப் பெருமானுக் கடியேன்
ஆரூரன் ஆரூரி லம்மானுக் காளே. 3

3. மூர்த்தியார் முதல் அறுவர்க்கும் அடியேன் என்கின்றார்கள்.

மும்மை: விபூதி, உருத்திராக்கம், சடை. மும்மையென்பது 'இருமை வகைதெரிந்து' என்றாற்போல எண்ணின்கண் நின்றது. செம்மை - இறைவனிடத்து என்றும் நீங்காத அன்பு. 'செம்மைபுரி சிந்தையராய்' என்றதுகாண்க. மெய்ம்மையே - உண்மையன்போடு. தாதை - எச்சதத்தன் அம்மையான் - திருவருட்பேறடைந்தவன்.

திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக் கரையன்ற னடியார்க்கு மடியேன்
பெருநம்பி குலச்சிறைதன் னடியார்க்கு மடியேன்
பெருமிழலைக் குறும்பர்க்கும் பேயார்க்கு மடியேன்
ஒருநம்பி யப்பூதி யடியார்க்கு மடியேன்
ஒலிபுனல்சூழ் சாத்தமங்கை நீலநக்கற் கடியேன்
அருநம்பி நமிநந்தி யடியார்க்கு மடியேன்
ஆரூரன் ஆரூரி லம்மானுக் காளே. 4

4. திருநாவுக்கரசர்முதல் எழுவர்க்கும் அடியேன் என்கிறார்கள்.



திரு நின்ற செம்மை. திரு - மெய்ஞ்ஞானத்திரு: இது தோன்றி மாறி அழியாத தன்மையது. இதனை நம்பியாரூரர் 'பொன்னும் மெய்ப்பொருளுந் தருவானைப் போகமுந் திருவும் புணர்ப்பானை' என்று அருளுவார்கள். செம்மை - அழியாமையும், தூய்மையும், பரிணாமமில்லாமையும் பற்றி நிகழுங் குணம். அது குணிமேனின்றது. செம்மையாக் கொண்ட - நன்றாகப் பற்றிய. இப்பகுதி 'சிவனெனும் ஓசையல்லது திரு நின்ற செம்மையுளதே' என்ற அப்பரடிகளின் அருள்வாக்கினை அடியொற்றியது. பெருநம்பி - 'மன்னு மந்திரிகட்கு மேலாகியார்' ஆதலின் பெருநம்பி எனத் திருவுளம் பற்றினார்கள். பேயார் - காரைக்காற் பேயார். இவரது திருநாமம் பேயார் எனவே சங்க நூல்களிலும், யாப்பருங்கல விருத்தியிலும் வழங்குதல் காண்க. குணங்களான் மற்றொருவரோடும் ஒருங்குவைத்து எண்ணப்பெறும் நிலையினன்றி உயர்ந்திருத்தலின் ஒரு நம்பி என்றார். அரு நம்பி - புறச்சமயத்தார் இடையூறு செய்தும், பொறுமையோடு நீரால் விளக்கெரித்த அருமையையுடைய நம்பி.

வம்பரு வரிவண்டு மணநாற மலரு
மதுமலர்நற் கொன்றையா னடியலாற் பேணு
எம்பிரான் சம்பந்த னடியார்க்கு மடியேன்
ஏயர்கோன் கலிக்காம னடியார்க்கு மடியேன்
நம்பிரான் திருமூல னடியார்க்கு மடியேன்
நாட்டமிகு தண்டிக்கு மூர்க்கற்கு மடியேன்
அம்பரான் சோமாசி மாறனுக்கு மடியேன்
ஆரூரன் ஆரூரி லம்மானுக் காளே. 5

5. திருஞானசம்பந்தப் பிள்ளையார் முதல் அறுவர்க்கும் அடியேன் என்கின்றார்கள்

வண்டு புதிய மணத்திலன்றிப் பிறவற்றிற் செல்லாமையின் அது மணம் நாடிச்செல்ல, மணக்கின்ற கொன்றையான் ஆதலின் அவனையன்றி, அவனடிமலரையன்றிப் பெறாத எம்பிரான் ஞானசம்பந்தன் என்றருளிச்செய்தார்கள். பிரான் - வள்ளன்மை யுடையவன். நாட்டமிகு தண்டி - அகக்கண்மிக்க தண்டியடிகள்.

வார்கொண்ட வனமுலையா ளுமைபங்கன் கழலே
　　மறவாது கல்லெறிந்த சாக்கியற்கு மடியேன்
சீர்கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலிக்கு மடியேன்
　　செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டற் கடியேன்
கார்கொண்ட கொடைக் கழறிற் றறிவார்க்கு மடியேன்
　　கடற்காழிக் கணநாத னடியார்க்கு மடியேன்
ஆர்கொண்ட வேற்கூற்றன் களந்தைக்கோ னடியேன்
　　ஆரூரன் ஆரூரி லம்மானுக் காளே. 6

6. இப்பாடலில் சாக்கியார் முதலாக அறுவர் திருவடி போற்றப் பெறுகின்றது.

கழலே மறவாது கல்லெறிந்த என்றது கல்லை மலராகக் கொண்டமையும், எறிதலே அருச்சித்தலாதலையும் புலப்படுத்தின. வள்ளல் என்றது பஞ்சாக்ஷரசெபஞ் செய்து அதனாலாகியபலனை அரனடிக்கே அர்ப்பணஞ் செய்த வள்ளன்மை நோக்கி. கார்கொண்ட கொடைக் கழறிற்றறிவார் - சேரமான்பெருமாள் நாயனாருடைய நட்பு கிடைப்பதற்கு முன்பே இது பாடப்பெற்றதாதலின் இது திருவருள்



வாய்ப்பாக எழுந்த சிறப்பு மொழியாம். கொடையின் விசேடத்தை, பின்னிகழ்ந்த சுந்தரர் பெருமான் பெற்ற கொடைச் சிறப்பானும், பாணபத்திரர்க்குச் சிவன் சீட்டுக்கவி கொடுத்தனுப்பிய சீர்த்தியானும் அறியலாம். ஆர் - கூர்மை; "ஆரெயிறழுந்தினர்" (சிலப். 5. 124) என்றாற் போல.

பொய்யடிமை யில்லாத புலவர்க்கு மடியேன்
　　பொழிற்கருவூர்த் துஞ்சிய புகழ்ச்சோழற் கடியேன்
மெய்யடியா னரசிங்க முனையரையற் கடியேன்
　　விரிதிரைசூழ் கடனாகை யதிபத்தற் கடியேன்
கைதடிந்த வரிசிலையான் கலிக்கம்பன் கலியன்
　　கழற்சத்தி வரிஞ்சையர்கோ னடியார்க்கு மடியேன்
ஐயடிகள் காடவர்கோ னடியார்க்கு மடியேன்
　　ஆரூரன் ஆரூரி லம்மானுக் காளே. 7

7. பொய்யடிமை யில்லாத புலவர் முதலிய எண்மர்க்கும் அடியேன் எனக் கூறுகின்றது.

பொய்யடிமை யில்லாத புலவர் என்பார் சங்கப்புலவர் நாற்பத்தொன்பதின்மர் என்பது சிலர் கூற்று. துஞ்சிய - திருவடியடைந்த. கைதடிந்த - நீர்வார்க்கத் தாழ்த்த தம் மனைவியாரின் கையை வெட்டிய.

கறைக்கண்டன் கழலடியே காப்புக்கொண் டிருந்த
　　கணம்புல்ல நம்பிக்குங் காரிக்கு மடியேன்
நிறைகொண்ட சிந்தையால் நெல்வேலி வென்ற
　　நின்றசீர் நெடுமாற னடியார்க்கு மடியேன்

துறைக்கொண்ட செம்பவள மிருளகற்றுஞ் சோதித்
தொன்மயிலை வாயிலா னடியார்க்கு மடியேன்
அறைக்கொண்ட வேல்நம்பி முனையடுவார்க் கடியேன்
ஆரூரன் ஆரூரி லம்மானுக் காளே. 8

8. *கணம் புல்லர் முதலாக ஐவர் அடியார்க்கும் அடியேன் என்கின்றது.*

*அறை - கூர்மை.*

கடல்சூழ்ந்த வுலகெலாங் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்க னடியார்க்கு மடியேன்
மடல்சூழ்ந்த தார்நம்பி யிடங்கழிக்குந் தஞ்சை
மன்னவனாஞ் செருத்துணைதன் னடியார்க்கு மடியேன்
புடைசூழ்ந்த புலியதள்மே லரவாட வாடி
பொன்னடிக்கே மனம்வைத்த புகழ்த்துணைக்கு
[மடியேன்
அடல்சூழ்ந்த வேல்நம்பி கோட்புலிக்கு மடியேன்
ஆரூரன் ஆரூரி லம்மானுக் காளே. 9

9. *கழற்சிங்கர் முதலாக ஐவர்க்கும் அடியேன் என்று அறிவிக்கிறது.*

*அதள் - தோள்.*

பத்தராய்ப் பணிவார்க ளெல்லார்க்கு மடியேன்
பரமனையே பாடுவா ரடியார்க்கு மடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கு மடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்க ளெல்லார்க்கு மடியேன்
முப்போதுந் திருமேனி தீண்டுவார்க் கடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கு மடியேன்



அப்பாலு மடிச்சார்ந்த வடியார்க்கு மடியேன்
ஆரூரன் ஆரூரி லம்மானுக் காளே. 10

10. *பத்தராய்ப் பணிவார் முதலாகிய எழுவர் தொகையடியார்கட்கும் அடியேனென அறிவிக்கின்றார்கள்.*

மன்னியசீர் மறைநாவ னின்றவூர்ப் பூசல்
வரிவளையாள் மானிக்கும் நேசனுக்கு மடியேன்
தென்னவனா யுலகாண்ட செங்கணாற் கடியேன்
திருநீல கண்டத்துப் பாணனார்க் கடியேன்
என்னவனா மரனடியே யடைந்திட்ட சடையன்
இசைஞானி காதலன் திருநாவ லூர்க்கோன்
அன்னவனா மாரூர னடிமைகேட் டுவப்பார்
ஆரூரி லம்மானுக் கன்பரா வாரே. 11

11. *பூசலார் முதலாகிய எழுவர்க்கும் அடியேன் என்கின்றதுடன் ஆரூரனடிமைகேட்டுவப்பார் அடியார்கள் என்கின்றது.*

*வரி வளையாள் மானி யென்பது 'வரிவளைக் கைம் மடமானி' என்பதை யடியொற்றி யெழுந்த அருள்வாக்கு. தென்னவனாய் உலகாண்ட செங்கணான் என்பது பாண்டியன் முடியைச்சூடிப் பாண்டிய நாட்டையும் ஆண்ட செங்கணான்.*

## 30. பண் - பழம்பஞ்சுரம்.

*இராகம்:* சங்கராபரணம்] [*தாளம்:* ஆதி

*திருச்சிற்றம்பலம்*

[*சுந்தரமூர்த்தி சுவாமிகள் சங்கிலியாரை மணந்து திருவொற்றியூரிலே எழுந்தருளியிருக்கின்ற காலத்திலே ஆரூரான் வீதிவிடங்கப்*

4. துன்பக்கடலாகிய பிறவியில் மாறிமாறிப் பிறந்து அயர்கின்ற என்னை, அங்ஙனம் சோராமல் தடுத்தாட்கொண்ட அமுதொப்பானை, தழன்மேனியனை, மான் கையனை எப்படிப் பிரிந்திருப்பேன் என்றருள்கின்றார்கள்.

இங்ஙனம்வந்து என்றது எடுத்த பிறவிநிலையை மனக்கொண்டு கூறியது. அங்ஙனம் வந்து - ஏறப்பெறு மதன் படிவமாக வந்து அருமருந்து - தேவாமுதம். அமுதைப் போல இனியனாகவும், என் அறியாமையைப் போக்கவும் மறங்கடியவும் ஒளியுடைய தழல் மேனியனாகவும், செருக் கடக்கி யாட்கொள்ளுங் குறிப்பில் மான்கையனாகவும் இருக் கின்றார்கள் என்பதாம்.

செப்பரிய அயனொடுமால் சிந்தித்துந் தெரிவரிய
அப்பெரிய திருவினையே யறியாதே யருவினையேன்
ஒப்பரிய குணத்தானை யிணையிலியை யணைவின்றி
எப்பரிசு பிரிந்திருக்கே னென்னொரு மிறைவனையே. 5

5. பெருந்திருவாகிய பெருமானை யறியாத வண்ணம் என் வினையிருந்து குறுக்கிட்டது. அத்தகைய வினையை யுடையவனாகிய யான் இணையில்லாப் பெருமானை யணை வின்றி எப்படிப் பிரிந்திருப்பேன் என்கின்றார்கள்.

செப்பரிய, தெரிவரிய திரு எனக்கூட்டுக. இணையிலி - எவ்வாற்றானும் ஒப்பற்றவன். அணைவின்றி - சேராமல்.

வன்னாக நாண்வரைவில் லங்கிகணை அரிபகழி
தன்னாக முறவாங்கிப் புரமெரித்த தன்மையனை
முன்னாக நினையாத மூர்க்கனே னாக்கைசுமந்
தென்னாகப் பிரிந்திருக்கே னென்னொரு மிறைவனையே. 6



6. திரிபுரமெரித்த தேவதேவனை முன்னமே நினையாத மூர்க்கனாகிய யான் இவ்வுடலைச் சுமந்து எப்படிப் பிரிந்திருப்பேன் என்கின்றார்கள்.

வன்னாகம் - வலிய வாசுகியாகிய பாம்பு. அங்கி கணை - அக்கினியாகிய அம்பின் நுனி. கணையென்பது அம்பின் திரண்ட நுனி. அரி பகழி - திருமாலாகிய அம்பு. ஆக முறவாங்கி - மார்புவரை வளைத்து. என்னாக - என்னபயனை யடைய.

வன்சயமா யடியான்மேல் வருங்கூற்றின் உரங்கிழிய
முன்சயமார் பாதத்தால் முனிந்துகந்த மூர்த்திதனை
மின்செயும்வார் சடையானை விடையானை அடைவின்றி
என்செயநான் பிரிந்திருக்கே னென்னொரு மிறைவனையே. 7

7. அடியவர் ஒருவர்க்காக யமனை உதைத்த திருவடி யுடைய பெருமானை அடையாமல் நான் பிரிந்திருக்கின் றேனே என்று வருந்திக் கூறுகின்றார்கள்.

வன்சயமாய் - நேர்மையானன்றி, வற்புறுத்தலால் வெற்றியுடையவனாக. என்செய - என்னசெய்ய.

முன்னெறிவா னவர்கூடித் தொழுதேத்தும் முழுமுதலை
அந்நெறியை யமரர்தொழும் நாயகனை யடியார்கள்
செந்நெறியைத் தேவர்குலக் கொழுந்தைமறந் திங்ஙனநான்
என்னறிவான் பிரிந்திருக்கே னென்னொரு மிறைவனையே. 8

8. அறியக்கூடிய விஷயம் பெருமானைப்பற்றியதன்றி வேறொன்றுமில்லையென்பதறிந்தும்; தேவர் குலக்கொழுக்

தாயும், முழுமுதலாயும் இருக்கின்ற பெருமானை என்னை அறிய மறந்திருக்கின்றேன் என்கின்றார்கள்.

முன்னெறி வானவர் - முதன்மையான நெறிகளை யுணர்ந்த தேவர்கள். அந்நெறி - அழகிய நெறி. மனத் தான் மாட்சியெனக் கருதப்பெற்ற நெறி. அ - செஞ்சறி சுட்டு. ஒருமரத்தின் வளர்ச்சி கொழுந்தைப்பற்றி யிருத் தல் போலத் தேவர்கள் வாழ்வு தியாகரைப்பற்றி யிருக் கின்றதாதலின் தேவர்குலக்கொழுந்து என்றார்கள். என் அறிவான் - என்னை அறிவதற்காக; என்னுடைய ஏழைமை யறிவான் என்றுமாம்.

கற்றுளவான் கனியாய கண்ணுதலைக் கருத்தார
உற்றுளனா மொருவனைமுன் னிருவர்நினைந் தினிதேத்தப்
பெற்றுளனும் பெருமையனைப் பெரிதடியேன் கையகன்றிட்
டெற்றுளனாய்ப் பிரிந்திருக்கே னென்னாரூ ரிறைவனையே 9

9. கற்றவர் விழுங்கும் கனியாய், மனத்தினிடமாகப் பொருந்தி, பதஞ்சலி வியாக்கிரரால் ஏத்தப் பெறும் தியாகப்பெருமானை எங்ஙனம் பிரிந்திருக்கேன் என்று கவல் கின்றார்கள்.

கற்றுள வான்கனியாய்-சிவஞானங் கற்றுள்ளார்க்குப் பெரிய கனியாக. அன்றி, கற்று - பொய். கற்றுள்ள வான்கனியாய் -பொய்நிறைந்த மனத்திற்கு ஆகாயக்கனியே போல் இல்லாப் பொருளாய் என்றுமாம். கருத்தார உற்றுளனும் ஒருவன் - மனமாரத் தியானிப்பார்க்குதாமே வலியவந்து புகுந்து, என்றும் நீங்காது உளனாகித் தன்னை



யன்றி வேறொன்றும் புக இடந்தராத ஒருவன். இருவர் பதஞ்சலி வியாக்கிரபாதர்; திருமாலும் இந்திரனுமாம். கையகன்றிட்டு - நீங்கி. எற்றுளனாய் - எப்படி உளனாக.

எழிசையா யிசைப்பயனா யின்னமுதா யென்னுடைய
தோழனுமாய் யான்செய்யுந் துரிசுகளுக் குடனாகி
மாழையொண்கண் பரவையைத்தந் தாண்டானை மதியில்லா
ஏழையேன் பிரிந்திருக்கே னென்னாரூ ரிறைவனையே. 10

10. தோழனாகி, துரிசுகட்கும் உடனாகி, பரவையைத் தந்தாட்கொண்ட பரமனை எங்ஙனம் பிரிந்திருக்கேன் என் கின்றார்கள்.

ஏழிசையாய் - குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்ற ஏழிசையாய். இசைப்பயனாய்- இவ்விசை பாடுவார் கேட்பார் செவிப்புலத்துறுகின்ற இனிமைப்பயனாய். இன் அமுதாய் - தேவாமுதத்தோடு இதற்குள்ளவாசி இனிமை மிகுதியாதலின் இனிய அமுதமாய். துரிசு - குற்றம். துரிசுகட்குத் துணைபுரிதல் தோழன் கடமையாதலின் தோழனுமாய் எனப்பட்டது முதலில். மாழை - மாவடுவின் பிளவு. மதியில்லா ஏழையேன் என்றது சொற்பொருள் விரித்தல் என்னும் உத்தி. இவ்வளவு உபகாரியாயிருந்தும் பிரிந்த கொடுமை மதியின்மையென்பது தோன்ற ஏழையேன் என்பதோடமையாது மதியில்லா ஏழையேன் என்றார்.

வங்கமலி கடல்நஞ்சை வானவர்கள் தாமுய்ய
நுங்கியமு தவர்க்கருளி நொய்யேனைப் பொருட்படுத்துச்
சங்கிலியோ டெனைப்புணர்த்த தத்துவனைச் சழக்கனேன்
எங்குலக்கப் பிரிந்திருக்கே னென்னாரூ ரிறைவனையே. 11

11. ஆகாத நஞ்சைத் தாமுண்டு, அமுதத்தைத் தேவர்க்கு அருளிய பெருங்கருணைபோல இழிந்த என்னைப் பொருளாக ஏற்று, சங்கிலியாரையும் மணக்கச்செய்த உபகாரியை வஞ்சனாகிய நான் எங்கேயுழியப் பிரிந்திருக்கேன் எனக் கூறுகின்றார்.

வங்கம் - கப்பல். வங்கமலிகடல் என்றது கடலென்ற பொதுமையான் வந்த அடை; பாற்கடலாதலின். தூங்கிய - வரையறையின்றிக் காலதாமதமின்றி வாரியுண்ட. நாயேன் - நாய்போலக் கொதி பொருதவன். சழக்கன் - குற்றமுடையன்; பயனற்றவன் என்றுமாம். எங்கு உலக்க - எங்கேயுழிய.

பேரூரு மதகரியி னுரியானைப் பெரியவர்தஞ்
சீரூருந் திருவாரூர்ச் சிவனடியே திறம்விரும்பி
ஆரூரன் அடித்தொண்ட னடியன்சொல் லகலிடத்தில்
ஊரூர னிவைவல்லா ருலகவர்க்கு மேலாரே. 12

12. இங்ஙனம் தியாகேசப்பெருமான் வசந்தான் விழா திருவுளத்தெழ, ஆற்றாமைமிக்குக் கவன்ற சுந்தரர் பெருமான் சிவனடியே விரும்பிச்சொன்ன இப்பாடல்கள் வல்லவர், உலகத்தவர் யாவர்க்கும் மேலாவர் எனப் பயன் கூறி முடித்தருள்கின்றார்கள்.

பேரூரும் - பெருமைமிக்க. பெரியவர் - தொண்டர்கள். ஊரும் - பரவும். திறம் - உய்யுந்திறம். ஆரூரன் - தியாகேசன். அடித்தொண்டன் - திருவடித்தொண்டன்.



# 31. பண் - தக்கேசி

இராகம்: காம்போதி] [தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்.

[சுந்தரர்பெருமான் சேரமான்பெருமானோடு திருவஞ்சைக்களத்தில் எழுந்தருளியிருக்கின்றகாலத்துத் தியாகேசப்பெருமான் திருவடிகளை நினைந்து, 'நண்பின் பிணைப்பால் இங்கிருக்கின்றோமே என்னவேண்டி யிருக்கின்றோம்; வேண்டிய எல்லாந்தர இறைவன் இருக்கின்றாரே; அனைத்தும் அவ்வப்பொழுது தரும் ஆரூரானை மறக்கலுமாமே' எனத் திருவுளம் கொண்டு எழுந்தருளிவருகின்றவர்கள் இப்பதிகத்தைப் பாடியருளுகின்றார்கள்.]

பொன்னு மெய்ப்பொரு ளுந்தரு வானைப்
போக முந்திரு வும்புணர்ப் பானைப்
பின்னை யென்பிழை யைப்பொறுப் பானைப்
பிழையெ லாந்தவி ரப்பணிப் பானை
இன்ன தன்மைய னென்றறி வொண்ணா
எம்மா னையெளி வந்த பிரானை
அன்னம் வைகும் வயற்பழ னத்தணி
யாரூ ரானை மறக்கலு மாமே. 1

1. இம்மை மறுமைக்கு வேண்டுவன யாவும் தந்தருளி, யான்செய்த பிழைகளையும் பொறுத்து, அவை வந்து என்னை நலியாத வண்ணமும் கட்டளையிட்டு, யாராலும் இன்ன தன்மையன் என்று சொல்லமுடியாத அருமையுடையனாயினும் எனக்கு எளியனாக இருக்கின்றபெருமானை மறக்கலுமாமே! என மறக்கமுடியாமைக்குக் காரணங்களைக் காட்டுதல் வாயிலாக நம்மை உய்விக்கின்றார்கள்.

பொன் - இம்மைக்குதவும் பொன் முதலியன. மெய்ப்பொருள் - கைப்பொருள் தன்னிற் சிறந்த கல்வியும் அதன் வழி யெழும் பாச பசுஞானங்களும் ஆகிய இவற்றானன்றித் திருவருள் வாய்ப்பாக எழும் பரஞானமாகிய பொருள். போகம் - இருவினைக்கீடாகப் பொன்னைத் துணைகொண்டு நுகரும் மாலை சந்தனம் மாதர் முதலியவற்றுள் எழும் நுகர்ச்சி. திரு - முத்திப்பெருஞ்செல்வம். இம்மைக்குப் பொன் தந்து அதன்பயனாகிய போகம் புணர்ப்பானை, மெய்ப்பொருள் தந்து திரு புணர்ப்பானை எனக் கூட்டுக. அவன் தந்தாலன்றி, புணர்த்தாலன்றி ஆன்மாக்கள் எய்தவும் இன்புறவும் முடியாத சுதந்திரஹீனர் என்பது விளங்குகிறது. யான் செய்த பிழைகள் அனைத்தையும் தன் பெருங் கருணையாற் பொறுப்பவனை, பொறுத்தாலும் பிழைகளை மனத்தடைத்துத் தானே தன்பெருங் கருணையால் மன்னிக்கவேண்டும்; அந்நிலையும் ஏற்படாவண்ணம் பிழையெலாந் தவிரப் பணிப்பானை என்கின்றார். தவிரப் பணித்தல் - நீங்க ஆணையிடுதல். இன்ன தன்மையன் என்று அறிவொண்ணா எம்மான் - தன் தன்மை பிறரறியாத் தன்மையன் ஆதலின் உணர்த்த உணருந்தன்மையுடைய முற்றறிவில்லா ஆன்மாக்களால் அளந்து அறியொணாத தன்மையை யுடையனாதலாலேயே எம் தலைவனாயினான் என்பது. அங்ஙனமாயினும் தனது பெருந்தன்மையினால்; எனக்கு - துரிசுகள் செய்யுந் தோழனாகிய எனக்கு; எளிவந்த பிரானை - தன்னுயர்வும் என் இழிவும் நோக்காது தன் கருணை யொன்றையே நோக்கி எளிவந்த வள்ளலை. பிரான் - வள்ளன்மையுடையவன். பழனத்து அணி ஆரூரான் - வயல்களாற் பொலியும் ஆரூரான். மறக்கலுமாமே



என்றார்; மறக்க முடியாமைக்குப் பொன் தந்ததும் போகம் புணர்த்ததும் முதலான காரணங்களை உட்கொண்டு.

கட்ட மும்பிணி யுங்களை வானைக்
காலற் சீறிய காலுடை யானை
விட்ட வேட்கைவெந் நோய்களை வானை
விரவி னால்விடு தற்கரி யானைப்
பட்ட வார்த்தை படநின்ற வார்த்தை
வாரா மேதவி ரப்பணிப் பானை
அட்ட மூர்த்தியை மட்டவிழ் சோலை
யாரூ ரானை மறக்கலு மாமே. 2

2. வினைகளான்வரும் துன்பங்களையும், பிணியையும் அதன் பேருமில்லாதவண்ணம் களைந்த கருணையாளனை, கலந்தாற் பிரியாத தன்மையனை, பழிகள் வாராமே தடுப்பவனை, அட்டமூர்த்தி வடிவாயவனை, ஆரூரானை மறக்கலுமாமே என்கிறார்கள்.

கட்டம் - கஷ்டம் என்பதன் திரிபு. பிணி - தன்னால் உண்டான நோய்கள். களைவானை - களைகட்டார் என்பது போல நோய்களின் அடியும் இல்லாத வண்ணம் அகழ்ந் தெடுத்துக் காப்பவனை. காலற் சீறிய காலுடையானை - அதற்குளெடுத்துக்காட்டாக மார்க்கண்டேயற்காகக் காலனைக் கோபித்த திருவடியுடையவனை. எல்லார்க்கும் அறக்கருணை காட்டும் அடிகள் சினந்துவந்த காலனை மறக்கருணைகாட்டி யாண்ட பேறு சிந்தித்தற்குரியது. விட்டவேட்கை வெந் நோய் களைவானை - பொருள்கள்மேற் செல்லவிட்ட பற்றுள்ளமாகிய கொடிய நோயினைக் களைவானை. விரவினால் விடுதற்கு அரியானை - கலந்தாற் பிரிதற்கு அரியவனை. கலந்த

பின் கரும்பிற் றேனிற்பாலிற் கட்டியின் இனித்து நிற்றலின், விடவேண்டுமென முனையும் ஆன்மா ஒன்று இருப்பின் அதனாலும் விடுதற்கரியவனை. பட்டவார்த்தை - உண்டான பழிச்சொல். படநின்ற வார்த்தை - உண்டாகப்போகின்ற பழிச்சொல் வாராமே தவிர்ப்பானை - அங்ஙனம் இரு வகையான பழிகளும் நம்மை யணுகாவண்ணம் நீக்கியவனை. அட்டமூர்த்தியை - ஐம்பூதமும், இயமானனும், சூரியனும், சந்திரனுமாகிய எட்டின் உருவானவனை. மட்டு - தேன்.

கார்க்குன் றமழை யாய்ப்பொழி வானைக்
கலைக்கெ லாம்பொரு ளாயுடன் கூடிப்
பார்க்கின் றவுயிர்க் குப்பரிந் தானைப்
பகலுங் கங்குலு மாகிநின் றானை
ஓர்க்கின் ற செவியைச் சுவைதன்னை
யுணரு நாவினைக் காண்கின் ற கண்ணை
ஆர்க்கின் ற கடலை மலைதன்னை
யாரூ ரானை மறக்கலு மாமே. 3

3. அடியேற்கு அவன்செய்த கருணையினளவு என்னே! பசியகுன்றத்து மழைபெய்தாற்போலே யாயிற்று அவன் என்மீதுபெய்த கருணைமழை என்று வியந்து, கலைப் பொருளாக உடன்கூடியிருந்து அந்நிலையை அறிய அன்பு புரிபவனை - இராப்பகலாய், புலன்களிற் சென்றுபற்றும் பொறிகளாய், கடலாய், மலையாய் நிற்கின்ற ஆரூரானை மறக்கலுமாமே என்றருள்கின்றார்கள்.

கார்க்குன்ற மழையாய் - சோலைநிறைந்த கரியமலை யிடத்து மழையாகப் பொழிவானை; கரியமலை மழைவேண்டி நிற்பதாகலின் அவ்விடத்து மழையைப்போல மலத்தாற்



கருத்த உயிர்களிடத்து அருளாகப் - பொழிவானை என்பதாம். கலைக்கெலாம் பொருளாய் - சொல்வடிவான கலைகட்கெல்லாம் பொருளாய். பார்க்கின்ற உயிர்க்கு - சொல்லும் பொருளும் அம்மையப்பன் என்று உணர்ந்து பார்க்கின்ற உயிர்க்கு. பரிந்தானை - அன்பு கூர்ந்தவனை. ஓர்க்கின்ற செவியை - ஒலியை யாராய்கின்ற செவியாக இருப்பவனை. தத்தம்புலன்களிற் சென்று பற்றுந் தன்மை குறையாத பொறிகளாகக்கண்ட சுந்தரர்பெருமான் விஷயங்களாகவும் கண்டமையைச் செவிக்கும் கண்ணுக்கும் விஷயமாகி ஒலிக்கின்ற கடலையும், கட்புலன் ஒன்றேயாகின்ற மலையையும் அடுத்தடுத்துக் கூறுதல் காண்க. இங்ஙனம் கலைப்பொருளாய், பொறியாய், புலனாய் உடனிருக்கும் ஒருவனை மறக்கமுடியாதென்கிறார்.

செத்த போதினில்முன் னின்று நம்மைச்
சிலர்கள் கூடிச் சிரிப்பதன் முன்னம்
வைத்த சிந்தை யுண்டேமன முண்டே
மதியுண் டேவிதி யின்பய னுண்டே
முத்த னெங்கள் பிரானென்று வானோர்
தொழநின் ற திமி லேறுடை யானை
அத்த னெந்தை பிரானெம் பிரானை
யாரூ ரானை மறக்கலு மாமே. 4

4. நாம் இறந்து நம்மைக்கண்டு சிலர் சிரிப்பதன்முன் நம்முடைய கருவிகரணங்கள் யாவும் நன்னிலையிலுள்ள போதே - விதி குறுக்கிடாதபோதே ஆரூரானை மறக்கலு மாமே என்கிறார்கள்.

வைத்தசிந்தை - இறைவன் தன்மாட்டுப் பிரியாது வைத்த சிந்தை. விதியின்பயன் - இறைவனை மறக்காமைக்கு ஏதுவாய விதிப்பயன். முத்தன் - இயல்பாகவே பாசங்களி னீங்கியவன். திமில் ஏறு - கொண்டையிருந்த காளை.

செறிவுண் டேன்மனத் தாற்றெளி வுண்டேல்
தேற்றத் தால்வருஞ் சிக்கன வுண்டேல்
மறிவுண் டேல்மறு மைப்பிறப் புண்டேல்
வாணாள் மேற்செல்லும் வஞ்சனை யுண்டேல்
பொறிவண் டியாழ்செயும் பொன்மலர்க் கொன்றை
பொன்போ லுஞ்சடை மேற்புனைந் தானை
அறிவுண் டேயுட லத்துயி ருண்டே
யாரூ ரானை மறக்கலு மாமே. 5

5. உணர்வாகிய குணமும் உயிராகிய குணியும் இருக்கிறபோது, அவ்வுயிரும் தொழிற்பட உடலோடு கூடியிருக்கிற காலத்து ஆரூரானை மறக்கலுமாமே என்கின்றார்கள்.

செறிவு - திட்பம். தெளிவு - துன்பத்தாலும் ஐயத்தாலும் கலங்காத தன்மை. தேற்றத்தால் - அந்தத் தெளிவால்வரும். சிக்கனவு - மனவுறுதி. 'அஞ்சத்தக்கதுன் சிக்கனவே' திருக்கோவையார். மறிவு - மனவுறுதியால் மடங்கியிருக்குந் தன்மை. பொறி - புள்ளி. சடையும் கொன்றையும் பொன்போன்றிருந்தாலும் வண்டு யாழ் செய்தலின், நிறத்தாலும் இசையாலும் வேறு பிரித்தறியலாம் வண்ணமாயிற்று என்பதாம். புனைந்தானை ஆரூரானை அறிவுண்டே உயிருண்டே மறக்கலுமாமே எனவும், உண்டேல் உண்டேல் மறக்கலுமாமே எனவும் கூட்டுக.



பொள்ள லிவ்வுட லைப்பொரு ளென்று
பொருளுஞ் சுற்றமும் போகமு மாகி
மெள்ள நின்றவர் செய்வன வெல்லாம்
வாரா மேதவிர்க் கும்விதி யானை
வள்ள லெந்தமக் கேதுணை யென்று
நாணா ளும்மம ரர்தொழு தேத்தும்
அள்ள லங்கழ னிப்பழ னத்தணி
யாரூ ரானை மறக்கலு மாமே. 6

6. சதமெனத் தகாத உடலைச் சதமென்று எண்ணிப் பொருளாகப் போகமாகச் சுற்றமாக நின்று, அவரவர்களும் செய்யுந் தீமைகளெல்லாம் அடியேனை அணுகாதவண்ணம் தடுத்தவனை, அமரர்கள் தமக்கே துணையென ஏத்தநிற்பவனை, ஆரூரானை மறக்கலுமாமே என்கின்றார்கள்.

பொள்ளல் - பொத்தல். ஓட்டைச்சாமனை ஒரு பொருளாக எண்ணுதல் யார்க்கும் வழக்கில்லை; அங்ஙனமிருந்தும் யான் எண்ணினேன் என்னறியாமையால் என்பது. என் வினைகள் என்ற எழுவாய் வருவித்துப் பொருளாகி, போகமாகி, சுற்றமுமாகி, மெள்ளநின்று அவர் செய்வன எல்லாம் எனக் கூட்டுக. வள்ளல் - தியாகப் பெருமான். அள்ளல் - சேறு.

கரியா னையுரி கொண்டகை யானைக்
கண்ணின் மேலொரு கண்ணுடை யானை
வரியா னைவருத் தங்களை வானை
மறையா னைக்குறை மாமதி சூடற்

உரியா னையுல கத்துயிர்க் கெல்லாம்
ஒளியா னையுகந் துள்கிநண் ணாதார்க்
கரியா னையடி யேற்கெளி யானை
யாரு ரானை மறக்கலு மாமே. 7

7. ஒருவரும் தமக்கேயுரியர் என்று உரிமைபாராட்ட ஒண்ணாதே, எல்லாவுயிர்கட்கும் தயிரில் நெய்போல் ஒளியாதவனாக, விரும்பித் தியானியாதவர்க்கு அரியவனாக இருக்கும் ஆரூரானை மறக்கலுமாமே என்கின்றார்கள்.

கரியானையுரி கொண்ட கையானை - கரிய யானையின் தோலை யுரித்த திருக்கரங்களை யுடையவனை. வரியானை - அளவுபடுத்தப்பெறாதவனை; அன்றி எழுத ஒண்ணாப் பேரழகுடையானை என்றுமாம். மறையானை - வேதங்களை யுடையவனை; மறையாதவனை என்றுமாம். உலகத்துயிர்க் கெல்லாம் ஒளியானை - குறைமதிக்கு உரியவனைப்போல; குறைநிறை ஓராதே எல்லா உயிர்கட்கும் ஒளிக்காதவனை, அன்றி ஞானப்பேரொளியாய் இருப்பவனை என்றுமாம். உகந்து - எமக்கு இறைவன்செய்த கைம்மாறில்லாக் கருணை தான் என்னை என்று விரும்பி. உள்கி - மனமழிந்து. நண்ணாதார்க்கு - நீயே அடைக்கலம் என்று அடையாதார்க்கு. அடியேற்கு எளியானை - அங்ஙனம் அவர்கட்கு அரியனாயினும் விரும்பியாட்பட்ட எனக்கு எளியானை. மறக்கலுமாமே என்பதாம்.

வாளா நின்று தொழுமடி யார்கள்
வானு ளப்பெறும் வார்த்தையைக் கேட்டும்
நாணு ளும்மல ரிட்டு வணங்கார்
தம்மை யாள்கின்ற தன்மையை யோரார்



கேளா நான்கிடந் தேயுழைக் கின்றேன்
கிளைக்கெ லாந்துணை யாமெனக் கருதி
ஆளா வான்பலர் முன்பழைக் கின்றேன்
ஆரு ரானை மறக்கலு மாமே. 8

8. இவ்வாறு ஆரூரானை மறக்கலுமாமே யெனத் தியாகப்பெருமான் உலகிற்கும், தனக்கும் செய்த உபகாரங்களையும், வீரத்தையும், அடைந்தாரைக் காக்கும் அருட்டன்மையையும் காட்டிக் காட்டி அன்புப் பெருவெள்ளத்திலாழ்ந்த சுந்தரர் பெருமான், இப்பாட்டில் உலகவர்களையழைத்து அருளுகின்றார்கள். பல அடியார்கள் சும்மா நின்று தொழுதும், வானுளப்பெறும் சொல்லைக் கேட்டும், பூசைசெய்யாமலும், நமக்கு இடர்வாராதே காப்பவன் அவனே என்று ஓராமலும் இருக்கின்ற நிலைக்கு இரங்கி அடிமையாகப் பலரை முன்புஅழைக்கிறேன். உங்களுக்குத் துணையாமென உங்கள் சுற்றமாமென நான் கிடந்து உழைக்கின்றேன்; நீங்கள் உறுதியாகக் கொள்ளுங்கள்; ஆரூரானை மறத்தலாகாது என்றருளுகின்றார்கள்.

வாளாநின்று - பூசை முதலியன செய்யாது சும்மா இருந்து. வானுளப்பெறும் வார்த்தை - எல்லாவற்றையும் அடக்கி இடங்கொடுத்துக் கொண்டிருக்கிறவனையே தனக் கதிணமாகக் கொண்டு ஆளும் ஆப்தவாக்கியத்தை. பலர் கேட்டும் வணங்கார், ஓரார், நான் கிடந்து கருதியுழைக்கின்றேன்; ஆளாவான் அழைக்கின்றேன் மறக்கலுமாமே என வினைமுடிபு காண்க. கேளாநான்கிடந்து - சுற்றமாக நான்கிடந்து; நான் அவர்கள் விருப்பின்றிக்கே கிடந்து

என்றுமாம். கிடந்து என்பது உழைப்புள்கண்வரும் வருகளைப் பொருட்படுத்தாதேயிருந்து என்னும் பொருளில் வந்தது.

விடக்கை யேபெருக் கிப்பல நாளும்
வேட்கை யாற்பட்ட வேதனை தன்னைக்
கடக்கி லேனெறி காணவு மாட்டேன்
கண்கு ழிந்திரப் பார்க்கையி லொன்றும்
இடக்கி லேன்பர வைத்திரைக் கங்கைச்
சடையா னையுமை யாளையோர் பாகத்
தடக்கி னானையந் தாமரைப் பொய்கை
யாரூ ரானை மறக்கலு மாமே. 9

9. உடலையேபேணிப் பேராசையால் விளைந்த பெருந்துன்பத்தைக் கடக்கமுடியாதபடி வழியும் புரியாமல் தவிக்கின்றேன்; யாரேனும் பசியால்வாடிக் கண்குழிந்துவந்து இரந்தால் ஒன்றும் இடவும் மாட்டேன்; அத்தகைய யான் ஆரூரானை மறக்கலுமாமே என்கின்றார்கள்.

விடக்கு-மாமிசம்; ஆகுபெயராக உடலையுணர்த்திற்று. வேட்கை - பற்றுள்ளம். கடக்கிலேன் - கடக்ககில்லேன் என்பதன் திரிபு. கண்குழிந்து - பசியால் உடல்மெலிந்தமையின் கண்குழிந்து. பரவைத் திரை - பரந்த அலை. அந்தாமரைப் பொய்கை - கமலாலயதீர்த்தம்.

ஒட்டி யாட்கொண்டு போயொளித் திட்ட
உச்சிப் போதனை நச்சர வார்த்த
பட்டி யைப்பக லையிருள் தன்னைப்
பாவிப் பார்மனத் தூறுமத் தேனைக்



கட்டி யைக்கரும் பின்தெளி தன்னைக்
காதலாற் கடற் சூர்தடிந் திட்ட
செட்டி யப்பனைப் பட்டனைச் செல்வ
ஆரூ ரானை மறக்கலு மாமே. 10

10. ஆண்டானுக்குத் தகாதநிலையில், என் குடிலுக்கு வலியவந்து, சூள்செய்து தடுத்தாட்கொண்டு சென்று ஒளித்தபெருமானை, பகலாகி இருளாகி நுகர்ச்சிக்காலத்துக் கட்டியாய் கருப்பஞ்சாறாகி, முருகன் தந்தையாகி, அந்தணனாகி இருக்கும் ஆரூரானை மறக்கலுமாமே என்றருளுகின்றார்கள்.

ஒட்டி - சபதஞ்செய்து. ஆட்கொண்டு - மணக்காலத்தில் தடுத்தாட்கொண்டு. ஒளித்திட்ட - யான் அவனென்றறிந்து தேடுகின்ற காலத்து மறைந்த. உச்சிப்போதனை - நண்பகல்போலும் ஒளியும் நடுநிலையும் உடையவனை. அன்றிக் கூடலையாற்றூரில் பிரமசரியவேடந்தாங்கி, பிச்சையெடுத்துவந்து பசிதீர்த்தாட்கொண்டு உச்சிக்காலத்து எனக்கு உபகரித்தவனை என்றுமாம். பட்டி - அடங்காமையுடையவன். பகலை - விளக்கஞ்செய்தலானும், தொழிற்படுத்தலானும் பகலையொப்பவனை. இருடன்னை - அலைந்த ஆன்மாக்கட்கு அமைதியளிப்பதற்காகப் பொருள்களை மறைத்து நிற்கின்ற இருளைப்போலத் திரோதானசத்தியால் மறைத்தருளும் இறைவனை. பாவிப்பார் - சிவோகம்பாவனை செய்யும் செம்மனச்செல்வர். காதலாற் கடற்சூர் தடிந்திட்ட - மூலமலவடிவாகிய இந்தச் சூரனும் உய்வானாக என்னும் பெருங்கருணையால் கடலிலே மாவாக முளைத்த சூரனைக்கொன்ற. செட்டியப்பனை - முருகன் தந்தையை. பட்டனை - ஆசாரியனை. மறக்கலுமாமேஎன்க

ஒரு சென்றுல கங்களுக் கெல்லாம்
உரைக்க லாம்பொரு ளாயுடன் கூடிக்
காரூ ருங்கமழ் கொன்றைநன் மாலை
முடியன் காரிகைக் காரண மாக
ஆரூ ரைம்மறத் தற்கரி யானை
யம்மான் றன்றிருப் பேர்கொண்ட தொண்டன்
ஆரூ ரன்னடி நாயுரை வல்லார்
அமர லோகத் திருப்பவர் தாமே. 11

11. உரைக்கலாம் உற்ற பொருளாய், திருக் கொன்றைமுடியனாக விளங்குகின்ற இறைவனைத் தம்பிரான் தோழர் எனத் திருநாமங் கொண்ட ஆரூரன் சொன்ன உரைவல்லவர், பின் அமரராய்த் தேவலோகத்திருப்பர் எனப் பயன் கூறித் திருக்கடைக்காப்பருளுகின்றார்கள்.

உரைக்கலாம் பொருளாய் - பொருளன்றே சொல்லுக்குச் சிறப்புத்தந்து நிற்பது ஆதலால் எவ்வகையான சொற்களுக்கும் பொருளாக. கார் ஊருங் கமழ் கொன்றை - கார் காலத்து மலருகின்ற கொன்றை.

## 32. பண் - காந்தாரம்

இராகம் - நவரோஸ்]

[தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்

[“ஆரூரற்காளாம் அல்லேன் எனலாமே” என்று ஆரூரன் ஞாபகம் திருவருள்வாய்ப்பாகவா வழிக்கொண்டு பலதலங்களை வணங்கிவருகின்ற சுந்தரமூர்த்திசுவாமிகள், திருவாரூரை அணுகினர்கள். தியாகேசப்பெருமான், திருவாரூரில் வாழும் தொண்டர்களை



யாவருக்கும் ‘நம்மடியான் ஆரூரன் நாம் அழைக்க வருகின்றான்; நீங்கள் அவனை எதிர்கொண்டு அழைக்க’ என ஆணைதந்தனர். அவர்களும் நகரையலங்கரித்து மங்கலவாத்தியங்களுடன் நகர்ப்புறத்து எதிர்கொண்டழைத்தனர். சுந்தர்பெருமான் ‘எந்தை இருப்பதும் ஆரூர் அவர் எம்மையும் ஆள்வரோகேளீர்’ என்னுந்திருப்பதிகத்தைப் பாடிக்கொண்டே பூங்கோயிலையடைந்தார்கள்.

இப்பதிகத்து ஆரூர்ப்பெருமானை அரையனாக, இனியனாக, ஆதியாக, அருத்தனாக, எந்தையாக, ஈசனாகச் சொல்லித் தம்னிடம் உள்ள குறைகளை விண்ணப்பித்து, இவ்வளவு குறையுடைய என்னையும் ஆள்வரோ கேளீர் என அடியார்கட்குப் பணிக்கின்றார்கள்.]

கரையுங் கடலு மலையுங்
காலையு மாலையு மெல்லாம்
உரையில் விரவி வருவா
னொருவ னுருத்திர லோகன்
வரையின் மடமகள் கேள்வன்
வானவர் தானவர்க் கெல்லாம்
அரைய னிருப்பது மாரூர்
அவரெம்மையு மாள்வரோ கேளீர். 1

1. காண்கிற இயற்கைப் பொருள்களிடத்தும், எல்லாப் பொழுதிலும், என் உரையின் கண்ணும் விரவிவருவானும், உமாதேவியாரின் ஒரு பெருங்கணவனும், தேவாசுரர்கட்குத் தலைவனும் ஆகிய பெருமான் இருப்பது ஆரூர் தானோ? அவர் எம்மையும் ஆள்வரோ? அடியார்களே! கேளுங்கள் என அருளிச்செய்கின்றார்கள்.

கரையுங்கடல் - ஓயாது ஒலிக்கின்ற கடல். உரையில் விரவி வருவான் - என்னுரை அவனுரையாதலின் கலந்து

வருவான்; அன்றி உரைக்குப் பொருளாய் இருப்பவன் ஆதலின் கலந்துவருவான் என்றுமாம். வரை - இமயமலை. அரையன் - அரசன்; போலிமொழி. அரசனாதலின் ஆள்வரோ என்றார்கள். வானவருமன்றித் தானவருமன்றி மக்களினத்தேனை யாள்வரோ என வினா எழுவதாயிற்று.

தனியனென் றெள்கி யறியேன்
  றம்மைப் பெரிதும் உகப்பன்
முனிபவர் தம்மை முனிவன்
  முகம்பல பேசி மொழியேன்
கனிகள் பலவுடைச் சோலைக்
  காய்க்குலை யீன்ற கமுகின்
இனிய னிருப்பது மாரூர்
  அவரெம்மையு மாள்வரோ கேளீர். 2

2. அடியேனிடம் சில குணங்களும் உள; குற்றங்களும் உள; இனியனாகும் இறைவன் அவற்றைப் பொருட்படுத்தாது ஆள்வரோ? என்கின்றார்.

தனியன் - துணையற்றவன். எள்கி - இகழ்ந்து, இறைவன் தனியன் என்று அவனையிகழ்ந்து அறியேன்; அன்றி யான் தனியன் என்று என்னை யாரும் இகழ்ந்து அறியேன் என்றுமாம். தம்மைப் பெரிதும் உகப்பன் - தேவரீரையே மிகமகிழ்வேன்; அன்றித் தம்மைத்தாமே எல்லாவகையானும் சிறந்தேம் என மகிழ்வேன். முனிபவர் தம்மை முனிவன்-வெறுப்பவர்களை வெறுப்பேன். முகம்பல பேசி மொழியேன் - முகமனுரைகளாகப் பலவற்றைப் பேசேன். தண்மை மணம் இவற்றையுடைய நல்ல பழமாச் சோலையில்காய்த்தகமுகைக் காட்டிலும்இனியன்என்பதாம்.



சொல்லிற் குலாவன்றிச் சொல்லேன்
  றொடர்ந்தவர்க் குந்துணை யல்லேன்
கல்லில் வலிய மனத்தேன்
  கற்ற பெரும்புல வாணர்
அல்லல் பெரிதும் அறுப்பான்
  அருமறை யாறங்க மோதும்
எல்லை யிருப்பது மாரூர்
  அவரெம்மையு மாள்வரோ கேளீர். 3

3. அடியார்களே! உங்களாரூரோ, வேதமும் அங்கமுமாகிய பதிநூல்கட்கு எல்லையாக விளங்கும் இறைவன் இருப்பது. யானோ நகைச்சுவைபடப் பேசுபவன். அடைந்தார்க்கும் துணை செய்யமாட்டேன். என்மனமோ கல்லைக் காட்டிலும் வலியது. ஆதலால் எம்மையும் ஆள்வாரோ? என்கின்றார்கள்.

குலாவன்றி - நகைச்சுவைபடப் பேசுதல் அன்றி. 'நிலாவிரி முற்றத்துக் குலாவோடேறி' என்பதுபோலவும், 'குலாத்தில்லை கண்டேனே' என்பதுபோலவும் மகிழ்ச்சிப் பொருளில் வந்தது. அல்லல் - இருவகைத் துன்பம். அறுப்பான் இருப்பதும் எனக்கூட்டுக. எல்லை இது ஆகுபெயராக எல்லையாக விளங்கும் இறைவனை யுணர்த்திற்று.

நெறியு மறிவுஞ் செறிவும்
  நீதியு நான்மிகப் பொல்லேன்
மிறையுந் தறியு முகப்பன்
  வேண்டிற்றுச் செய்து திரிவன்

பிறையு மரவும் புனலும்
　　பிறங்கிய செஞ்சடை வைத்த
இறைவ னிருப்பது மாரூர்
　　அவரெம்மையு மாள்வரோ கேளீர். 4

4. ஒன்றோடொன்று மாறுபட்ட பொருள்களையும் செஞ்சடையில் வைத்த இறைவன், நெறியும் அறிவும் செறிவும் நீதியுமின்றி வேண்டியபடித் திரியும் என்னையும் ஆட்கொள்வாரா? கேளுங்கள் என்கின்றார்கள்.

நெறி - ஒழுங்கு. அறிவு - அதனையறிந்து கடைப்பிடிக்கும் அறிவு. செறிவு - அங்ஙனம் அறிந்து கடைப்பிடித்தலால் உளதாகும் திண்மை. நீதி - அதனாலாகும் நேர்மை. இவற்றில் பொல்லேன் என்கின்றார்கள். மிறை - அரசிறை. தறி - வரி. மிறையுந்தறியும்உகப்பன் - எப்போதும் கட்பிற்கு முற்றாட்டாகக் கப்பம் விரும்புவேன் இவ்வளவு குணக்கேடர்களையும் அரன் ஆள்வாரோ கேளீர் என்றுசொன்க.

நீதியி லொன்றும் வழுவேன்
　　நிட்கண்ட கஞ்செய்து வாழ்வேன்
வேதியர் தம்மை வெகுளேன்
　　வெகுண்டவர்க் குந்துணை யாகேன்
சோதியிற் சோதியெம் மானைச்
　　சுண்ணவெண் ணீறணிந் திட்ட
ஆதி யிருப்பது மாரூர்
　　அவரெம்மையு மாள்வரோ கேளீர். 5

5. ஒளிகட்கெல்லாம் ஒளியாய் நீறுபூசிய எம் முதல்வன், நீதிவழுவாத—வேதியரை வெகுளாத-வெகுளப்



பட்டார்க்குத் துணை போகாத என்னையும் ஆள்வாரோ என்கின்றார்கள்.

நிட்கண்டகம் - தாட்சண்யமின்மை. வேதியர் - வேத முணர்ந்தோர். வெகுண்டவர்க்கும் - அவர்களால்கோபிக்கப் பட்டார்க்கும். சுண்ணம் - பொடி. சர்வசங்கார காலத்துச் சுண்ணவெண்ணீறணிவார் இவரலாதின்மையால் ஆதி யென்றார்.

அருத்தம் பெரிது முகப்பன்
　　அல்லலை யேனலந் தார்கள்
ஒருத்தர்க் குதவியே னல்லேன்
　　உற்றவர்க் குத்துணை யல்லேன்
பொருத்தமே லொன்றுமி லாதேன்
　　புற்றெடுத் திட்டிடங் கொண்ட
அருத்த னிருப்பது மாரூர்
　　அவரெம்மையு மாள்வரோ கேளீர், 6

6. புற்றிடங்கொண்ட புராதனன், பொருளாசைப் பிடித்துத் துன்புற்றோர் எவர்க்குந் துணையாகாத பொருத்தமற்ற என்னையும் ஆள்வரோ என்கின்றார்கள்.

அருத்தம் - பொருள். அல்லலையேன் - ஆராயாது செய்பவன். அலந்தார் - துன்புற்றார். உற்றவர் - ஒருவருந் துணையாவார் இன்றி வந்தவர்கள். பொருத்தமேல் ஒன்று மிலாதேன் - நீர் அடியேனை ஏற்றுக்கொள்ளக்கூடிய பொருத்தம் ஏதாவது உண்டோ என ஆய்ந்தாய்ந்தும் ஒன்றும் இல்லாதேன். புற்றெடுத்திட்டு - காணேற்றிய வில்லையூன்றி அதன் தலையில் தன்முகத்தைச் சாய்த்து

நின்ற திருமாலின் தருக்கடங்கத் தேவர்களால் சிதலைக் கொண்டு புற்றெடுக்கச்செய்து. இடங்கொண்ட - அப் புற்றையே தமக்குரிய இடமாக விரும்பிய. அருத்தன் - பொருளாயுள்ளவன்.

சந்தம் பலவறுக் கில்லேன்
சார்ந்தவர் தம்மடிச் சாரேன்
முந்திப் பொருவிடை யேறி
மூவுல குந்திரி வானே
கந்தங் கமழ்கொன்றை மாலைக்
கண்ணியன் விண்ணவ ரேத்தும்
எந்தை யிருப்பது மாரூர்
அவரெம்மையு மாள்வரோ கேளீர். 7

7. அறவடிவாகிய இடபத்தையூர்ந்து மூவுலகும் திரிந்து அருள்வழங்குபவனே எந்தை; அவரிருப்பது ஆரூர்; அவர் எம்மையும் ஆள்வரோ? என்கின்றார்கள்.

சந்தம் - சுகத்தொடர்பான சிலபழக்கங்கள். திரிவானே கண்ணியன், எந்தை எனக்கூட்டுக. அவர் எந்தையாதலின் ஆளுங்கடப்பாடுடையவரே. ஆயினும் சில பழக்கங்கள் என்னால் நீக்க முடியாதன. தந்தையாயினார் பொறுக்க முடியாதன. ஆதலின் அதனையும் பொறுத்து ஆள்வரோ என வினவினார்கள்.

தெண்டிக்கொண் டேயுங்கி லாய்ப்பன்
நிச்சய மேயிது திண்ணம்
மிண்டற்கு மிண்டலாற் பேசேன்
மெய்ப்பொரு ளன்றி யுணரேன்



பண்டங் கிலங்கையர் கோனைப்
பருவரைக் கீழடர்த் திட்ட
அண்ட னிருப்பது மாரூர்
அவரெம்மையு மாள்வரோ கேளீர். 8

8. இலங்கையரசனைக் கைலையின்கீழ் வைத்து நெருக்கிய தேவன், கிண்டிவிட்டுக் கலகம் செய்யும் என்னையும், வம்பர்க்கு வம்பு பேசும் என்னையும், மெய்ப் பொருளன்றி, யுணராதகுணமுடைய என்னையும் ஆள் வாரோ என்கின்றார்கள்.

தெண்டிக் கொண்டேயும்-கிண்டிவிட்டும். கிலாய்ப்பன் - கலகம் செய்வேன். மிண்டர் - அறிவில்லாதவர். பண்டு அங்கு இலங்கையர்கோனை; அன்றி, பண் தங்கு இலங்கையர் கோன் எனப் பிரித்துச் சாமகீதம்நிறைந்த இராவணன் என்றும் பொருள் காணலாம். அண்டன் - தேவன்.

நமர்பிற ரென்ப தறியேன்
நான்கண்டதே கண்டு வாழ்வேன்
தமரம் பெரிது முகப்பன்
தக்கவா றொன்று மிலாதேன்
குமரன் திருமால் பிரமன்
கூடித் தேவர் வணங்கும்
அமர னிருப்பது மாரூர்
அவரெம்மையு மாள்வரோ கேளீர். 9

9. குமரன் முதலிய தேவர்கள் வணங்கும் பெருமான் தம்மவர் பிறரென்றறியாது கண்டதையே கண்டு, வாழக்கூடிய தக்கவாறொன்றும் செய்யாத என்னை யும் ஆள்வரோ என்கின்றார்கள்.

நமர் - நம்மைச்சேர்ந்தவர். கண்டதே கண்டு - இவர்கள் மெய்ப்பொருளன்றி வேறொன்றையுங் காணாதவர்களாதலின் கண்ட மெய்ப்பொருளையே காணுமாற்கண்டு (எப்பொழுதும் கண்டு வாழ்வேன் என்கின்றார்கள்) தமரம் பெரிதும் உகப்பன் - ஆரவாரத்தை மிக விரும்புவன். அமரன் - ஏனையோர்க்கெல்லாம் அமரன் என்னும் பெயர் உபசாரம்; இவர்க்கு உண்மையாதலின் இறவாதவன் என்பதாம்.

ஆசை பலவறுக் கில்லே
    னாரையும் அன்றி யுரைப்பேன்
பேசிற் சழக்கலாற் பேசேன்
    பிழைப்புடை யேன் மனந்தன்னால்
ஓசை பெரிது முகப்பேன்
    ஒலிகடல் நஞ்சமு துண்ட
ஈச னிருப்பது மாரூர்
    அவரெம்மையு மாள்வரோ கேளீர். 10

10. பரநாதஒலியை விரும்புபவராகிய நஞ்சமுதாக்கிய ஈசன் ஆசையறுக்காத, பகைத்துப் பேசும் என்னையும் ஆள்வாரோ என்கிறார்கள்.

அன்றி யுரைப்பேன் - பகைத்துப் பேசுவேன். "அன்றினார் புரம் எரித்தார்க்கு" என்பது நோக்குக. சழக்கு - தீயசொல். பிழைப்புடையேன் - தவறு பெரிதுடையேன். அன்றிப் பலதீமை செய்வேனாயினும் அவற்றினின்றும் உய்தியும் உடையேன் என்றவாறாம். ஓசை - பரநாதம்.



எந்தையிருப்பது மாரூர்
    அவரெம்மையு மாள்வரோ வென்று
சிந்தை செயுந்திறம் வல்லான்
    திருமரு வுந்திரள் தோளான்
மந்த முழவ மியம்பும்
    வளவயல் நாவலா ரூரன்
சந்த மிசையொடும் வல்லார்
    தாம்புக ழெய்துவர் தாமே. 11

11. எந்தையாள்வரோ என்றிவ்வாறாக வந்த இந்தச் சந்தப்பாடல் பத்தையும் வல்லார் புகழெய்துவர் என்கின்றார்கள்.

சிந்தைசெயுந் திறம் வல்லான் - இடைவிடாத தியானசீலன். திருமருவுந் திரடோளான் - மெய்ஞ்ஞானத்திரு சேர்ந்த திரண்ட தோள்களையுடையவன். மந்தமுழவம் - மெதுவான குரலிற் குமுறும் குடமுழா (பஞ்சமுக வாத்தியம்). சந்தம் - இசைப்பாட்டு.

## 33. பண் - புறநீர்மை

இராகம்: பூபாளம்] [தாளம்:சாபு

திருச்சிற்றம்பலம்

[சுவாமிகள் காஞ்சிபுரத்தைவழிபட்டு, வருங்காலையில் வழியிலே திருவாரூர் புக்கெய்துவது என்றுகொலோ! என்று திருவுள்ளம் விரையப் பாடியருளுகின்றார்கள்.]

அந்தியு நண்பகலும் அஞ்சுப தஞ்சொல்லி
முந்தியெ ழும்பழைய வல்வினை மூடாமுன்
சிந்தை பராமரியாத் தென்றிரு வாரூர்புக்
கெந்தை பிரானாரை யென்றுகொ லெய்துவதே. 1

1. பழவினை வந்து மூடுமுன்னே, காலையுமாலையும் உச்சியும் திருவைந்தெழுத்தைச் சொல்லி சிந்தையாற் போற்றித் திருவாரூர்ப் பெருமானை எய்துவது என்று கொலோ என்றுகொலோ என்று அருளிச் செய்கின்றார்கள்.

அந்தி-இருஅந்திகளாகியகாலையும் மாலையும். நண்பகல்-உச்சி. அநுட்டான முடித்து அஞ்செழுத்து ஓதவேண்டிய காலம் இம்மூன்றும் என்பது விளக்கப்பெறுகிறது. அஞ்சு பதம் - திருவைந்தெழுத்து. திருவைந்தெழுத்தில் ஒவ்வொன்றுமே ஒவ்வொருபதம்போலச்சிவம், சத்தி, ஆன்மா, மறைப்பு, மலம் என்ற பொருள்தந்து நிற்றலின் அஞ்சும் பதமாயிற்று. முந்தியெழும் - தந்தம்பயனை நுகர்த்தக் கிளம்பும். பழைய வல்வினை - பழுத்துப் பயன்தர வரும் வலியவினை. மூடாமுன் - ஆன்மவியாபகம் வெளிப்படாதவாறு மூடுவதற்குமுன். சிந்தை - மனத்தால். பராமரியா - பாதுகாத்து- தென் - அழகு. பிரான் - வள்ளல். எந்தையாயும், வள்ளலாயும் இருப்பாரை அடைவது என்று கொலோ என்பது கருத்து.

நின்ற வினைக்கொடுமை நீங்க இருபொழுதும்
துன்று மலரிட்டுச் சூழும் வலஞ்செய்து
தென்றன் மணங்கமழுந் தென்றிரு வாரூர்புக்
கென்றன் மனங்குளிர என்றுகொ லெய்துவதே. 2

2. நுகரப்பெறாதே நின்ற வினைகளின் கொடுமை தணிய எனது மனங்குளிர ஆரூரை எய்துவது என்று கொலோ என்கிறார்கள்.



நின்ற வினை - எஞ்சிநின்ற வினைகள். துன்று மலர் - நெருங்கிய மலர். தென்றல்மணங்கமழும் திருவாரூர் - தென்றல் வாசலமுகர் ஆதலின் திருவாரூருக்குத் தென்றல் சிறந்தது. அன்றியும் தென்றல் அறிவிக்கவே இவர்கள் திருவொற்றியூரைவிட்டுத் திருவாரூர்வர எண்ணினார் ஆதலின் திருவாரூரின் பல இயல்புகளில் தென்றல் இவர்களைப் பிணித்தது என்றுமாம். நீங்க எய்துவது என்று கொல் எனக்கூட்டுக.

முன்னை முதற்பிறவி மூதறி யாமையினால்
பின்னை நினைத்தனவும் பேதுற வும்மொழியச்
சென்நெல் வயற்கழனித் தென்திரு வாரூர்புக்
கென்னுயிர்க் கின்னமுதை யென்றுகொ லெய்துவதே. 3

3. பழைய பிறவிகளில் தொன்றுதொட்ட மலமறைப்பால் நினைந்தனவும், பேதைமையும் ஒழிய உயிர்க்கு அமுதான ஆரூரனை எய்துவது என்று கொலோ என்கிறார்கள்.

முன்னை - பழமை. மூதறியாமை - அறியாமைக்குக் காலங் கணக்கிட முடியாமையால் மிகத்தொன்மையான அறியாமை என்றார்கள்; மூலமலம் என்றபடி. என்னுயிர்க்கு இன்னமுதை - உயிர்வளர்ச்சி ஆனந்தமாதலின் அதனைத் தரும் உணவாகிய சிவாமுதத்தினை எய்துவது என்று கொலோ?

நல்ல நினைப்பொழிய நாள்களி லாருயிரைக்
கொல்ல நினைப்பனவுங் குற்றமு மற்றொழிய
செல்வ வயற்கழனித் தென்றிரு வாரூர்புக்
கெல்லை மிதித்தடியே னென்றுகொ லெய்துவதே. 4

4. நல்ல நினைப்பின்றிச் சிலநாட்களில், பிறவுயிர்களை வருத்த நினைத்த குற்றங்கள் எல்லாம் ஒழியத் திருவாரூர் எல்லையை மிதிப்பது என்றோ! என்கிறார்.

கொல்ல - வருத்த. குற்றம் - வருத்த எண்ணியதால் விளைந்தகுற்றம். திருவாரூர் எல்லையை மிதித்தாலே தீய எண்ணங்கள் ஒழியும் என்பதாம்.

கடுவரி மாக்கட லுட் காய்ந்தவன் தாதையைமுன்
சுடுபொடி மெய்க்கணிந்த சோதியை வன்றலைவாய்
அடுபுலி யாடையனை யாதியை யாரூர்புக்
கிடுபலி கொள்ளியைநா னென்றுகொ லெய்துவதே. 5

5. கடலிற் சூர்மா தடிந்த முருகன் தந்தையும், வெண்ணீறணிந்த சோதியும், புலித்தோலாடையனும், பலியேற்கும்பரமனும் ஆகிய ஆரூரனை எய்துவது என்றுகொலோ என்கின்றார்கள்.

கடுவரி மா - கடிய வரிகளையுடைய மாமரம். காய்ந்தவன் - முருகன். முன் சுடுபொடி - சர்வசங்காரகாலத்துச் சுட்ட சாம்பர். வன் தலை வாய் அடு புலி - வலியதலை வாய்க்கப்பெற்ற கொல்லுந்தன்மை வாய்ந்த புலி. இடுபலி கொள்ளியை - ஊரார்கள் இடுகின்ற பிச்சையை ஏற்பவனை. புக்கு எய்துவது என்று கொல் எனக்கூட்டுக.

சூழொளி நீர்நிலத்தீத் தாழ்வளி யாகாசம்
வானுயர் வெங்கதிரோன் வண்டமிழ் வல்லவர்கள்
ஏழிசை யேழ்நரம்பி னோசையை யாரூர்புக்
கேழுல காளியைநா னென்றுகொ லெய்துவதே. 6



6. அட்டமூர்த்தி வடிவாக, ஏழிசையாக, எழுநரம்பின் ஓசையாக, ஏழுலகாளியாக இருக்கும் இறைவனை எய்துவது என்றுகொலோ! என்கின்றார்கள்.

சூழொளிநீர் - ஒளிமிக்கநீர். வானுயர்வெங்கதிரோன் - வானத்துயரும் சூரியன். வண்டமிழ் வல்லவர்களால் இசைக்கப்பெறுகின்ற ஏழிசை என்க. புக்கு எய்துவது என்று கொல் எனக்கூட்டுக.

கொம்பன நுண்ணிடையாள் கூறனை நீறணிந்த
வம்பனை யெவ்வுயிர்க்கும் வைப்பினை யொப்பமராச்
செம்பொனை நன்மணியைத் தென்றிரு வாரூர்புக்
கென்பொனை யென்மணியை யென்றுகொ லெய்துவதே. 7

7. உமையொரு கூறனை, திருமேனிமேல் நீறு அணிந்து காண்பார்க்குப் புதுமையிற் புதுமையனாகி ஒப்பில்லாச் செம்பொன்னாகும் தியாகேசப்பெருமானைக் காண்பது என்றுகொலோ! என்கின்றார்கள்.

கொம்பு அன்ன நுண்ணிடையாள் - உமாதேவி. வம்பன் - புதுமையை யுடையவன். வைப்பு - சேமநிதி. "எய்ப்பினின் வைப்பே" என்பது மணிவாசகம். ஒப்பு அமரா - ஒப்பமையாத. யாவர்க்கும் பொதுவான செம்பொன்னை, மணியைத் தனக்கு உரிமையாக்கி; என்பொனை என்மணியை என அருள்கின்றார்கள்.

ஆறணி நீள்முடிமே லாடர வஞ்சூடி
பாறணி வெண்டலையிற் பிச்சைகொ ணச்சரவன்
சேறணி தண்கழனித் தென்றிரு வாரூர்புக்
கேறணி யெம்மிறையை யென்றுகொ லெய்துவதே. 8

8. கங்கையணிந்த சடையிற் பாம்பையும் அணிந்த சிதறியகபாலத்துப் பிச்சைகொள்ளும் பெருமானாகிய எம் தலைவனை எய்துவது என்று கொல்! என்றருளுகின்றார்கள்.

பாறு - சிதறிய. நச்சரவன் - தலையொழிய திருமார்பு, கரம் முதலிய இடங்களிலும் விடம்பொருந்திய பாம்பையுடையவன். ஏறணி - இடபத்தில் ஏறி அலங்கரிக்கும்.

மண்ணினை யுண்டுமிழ்ந்த மாயனு மாமலர்மேல்
அண்ணலு நண்ணரிய ஆதியை மாதினொடும்
திண்ணிய மாமதில்சூழ் தென்திரு வாரூர்புக்
கெண்ணிய கண்குளிர என்றுகொ லெய்துவதே. 9

9. மாலும் பிரமனும் அறியாத முதற்கடவுள் அம்மையோடு ஆரூரில் எழுந்தருளியிருக்கும் நிலையை என் கண் குளிரக் காண்பது என்றுகொலோ என்கின்றார்கள்.

மண்ணினையுண்டு உமிழ்ந்த மாயன் - ப்ரமப்பிரளயம் முதலிய அவாந்தரப் பிரளயகாலங்களில் உலகை உண்டு, தன்வயிற்றில் வைத்து, காப்பாற்றிப், பின் உமிழ்ந்த திருமால். அண்ணல் - பிரமன். எண்ணிய என் - இடைவிடாது தியானிக்கின்ற எனது.

மின்னெடுஞ் செஞ்சடையான் மேவிய ஆரூரை
நன்னெடுங் காதன்மையால் நாவலர் கோனூரன்
பன்னெடுஞ் சொன்மலர்கொண் டிட்டன பத்தும்வல்லார்
பொன்னுடை விண்ணுலகம் நண்ணுவர் புண்ணியரே. 10

10. மின்னல்போல அவ்வப்போது என் கண்ணைப் பறிகொள்ளும் சடையினையுடைய இறைவன் எழுந்தருளியுள்ள ஆரூரை எய்துவது என்றுகொல் என்று ஆரூரன் காதன்மையாற் கூறிய சொன்மலர்கொண்டு அருச்சித்த பத்துமாலைகளும் வல்லவர் பொன்னுலகத்துப் பெரும் போகம் எய்துவர் என்று கடைக்காப்பருள்கின்றார்கள்.



இட்டன பத்தும் - இட்டமாலைகளாகிய பத்தும்.

## 34. பண் - செந்துருத்தி

இராகம்: மத்திமாவதி] [தாளம்: திருபுடை

திருச்சிற்றம்பலம்

[காஞ்சிபுரத்து இடக்கண்பெற்ற சுந்தரர்பெருமான் தியாகப் பெருமானுடைய முன்னழகு பின்னழகுகளைக் கண்டு வணங்க இரு கண்களும் போதாதாக; ஒற்றைக்கண்ணைக்கொண்டு காணநேர்ந்ததே என்றகவலை கவற்றத் தோழமை திருவுள்ளத்தைப் பிணிக்கத் தியாகரை நோக்கி 'கண்தாராவிட்டால் வாழ்ந்தேபோதீரே' என நண்பும் வெறுப்புந்தோன்ற நவின்றருள்கின்றார்கள்.]

மீளா வடிமை யுமக்கே யாளாய்ப்
பிறரை வேண்டாதே
மூளாத்தீப்போல் உள்ளே கனன்று
முகத்தான் மிகவாடி
ஆளாயிருக்கு மடியார் தங்க
ளல்லல் சொன்னக்கால்
வாளாங்கிருப்பீர் திருவா ரூரீர்
வாழ்ந்து போதீரே. 1

1. மீளாவடிமையாய் என்குறைக்காகப் பிறரை வேண்டாதே தணல்போல உள்ளேயே கனன்று, வாடி அடியார்கள் தங்கள் துன்பங்களைச் சொன்னால் அதற்குப் பரிகாரந் தேடாதே வாளா இருப்பீர்! நீர் வாழ்ந்துபோம்; என்று தன்னிலையையும் ஆண்டான் சும்மா இருத்தலையுங் காட்டி வேண்டுகின்றார்கள்.

உமக்கே மீளா அடிமை ஆளாய் - பிடிக்காவிட்டாற் பிரிந்து போகமுடியாதே என்றும் வழி வழியான அடிமையாளாக. பிறரை வேண்டாதே - உமக்கு ஆளான பிறகு எங்கள் துன்பம் நீக்கப் பிறரைவேண்டின் 'அவர்கள் இவன் ஆண்டான் என்ன கருணையில்லாதவனோ' என்பார்களே! அதனால் தலைமைக்கு இழுக்குவருமே என்று பிறரை வேண்டாதே; அன்றி இவன் ஒருவனுக்கு ஆட்பட்டுநம்மை வேண்டுகிறானே இவன் அறியாமை இருந்தபடி என்னே என்று நகைப்பார்களே அதற்காகப் பிறரை வேண்டாதபடி என்றுமாம். மூளாத் தீப்போல் - கொழுந்துவிட்டெரியாத நெருப்பைப்போல. உள்ளே கனன்று - உள்ளுக்குள்ளே கனலாய்; கொழுந்துவிட்டெரியும் நெருப்பைக் காட்டிலும் கனலுவதன்றே இரும்பு முதலிய கடின உலோகங்களையும் உருக்கவல்லது; அதுபோல ஆண்டவன் தன் கடமையினின்று தவற, அதனைச்சொல்லி ஆயவாரும் பிறரில்லையாக அங்ஙனம் சொல்லிக் கொள்வதும் முறையன்றாக மனத்துள்ளே வைத்துப் புழுங்கி. முகத்தான் மிகவாடி - அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சங்கடுத்தது முகங்காட்டுமாதலின், மனப்புழுக்கத்தால் முகம் தன்னொளியிழந்து. ஆளாயிருக்குமடியார் - அடிமை இருக்கவேண்டிய முறைப்



படி இருக்கும் அடியார். அல்லல் - துன்பம். ஆங்குவாளா இருப்பீர் - அவ்வளவுங் கேட்டுச்சிறிதும் கருணையின் புடைபெயர்ச்சியில்லாது சும்மா இருப்பீர். வாழ்ந்து போதீர் - நீர்தான் வாழ்ந்துபோகுமே.

விற்றுக் கொள்வீ ரொற்றி யல்லேன்
    விரும்பி யாட்பட் டேன்
குற்ற மொன்றுஞ் செய்த தில்லை
    கொத்தை யாக்கினீர்
எற்றுக் கடிகே ளென்கண் கொண்டீர்
    நீரே பழிப்பட் டீர்
மற்றைக் கண்தான் தாரா தொழிந்தால்
    வாழ்ந்து போதீரே. 2

2. அடியேன் ஒற்றியாக வாங்கப் பெற்றவன் அல்லன்; நீர் நமக்கு அடியான் என வல்வழக்கிட்டு விரும்ப ஆளானவன்; நானோ என்மனம் அறியக் குற்றம் ஒன்றுஞ் செய்யவில்லை. அங்ஙனமிருந்தும் பொட்டையாக்கினீர். அதனால் நீரோ பழிப்பட்டீர். போனது போகட்டும். வலக் கண்ணையுந் தாராது ஒழிந்தால் வாழ்ந்துபோமே! என்றருள்கின்றார்கள்.

ஒற்றி - பணங்கொடுத்து அநுபவத்திற்காகக்கொள்ளப் பெற்றது ஒற்றியாயின் பிடிக்காவிட்டால் விற்றுப் பணங் கொள்ளலாம். அடியேனோ ஒற்றியல்லன் ஆதலால் உம் மிஷ்டப்படி விற்றுக்கொள்ள இயலாது. அன்றியும், விரும்பி நீர் கிழவடிவங் கொண்டுவந்து, மணப்பந்தரிலே பலரறிய விரும்ப. விரும்பி - விரும்ப. அதனால், ஆட்பட்டேன் -

ஆளானேன். குற்றம் ஒன்றும் செய்ததில்லை - 'பிழையுளன பொறுத்திடுவர் என்றடியேன் பிழைத்தக்கால் பழியதனைப் பாராதே படலமென்கண் மறைப்பித்தாய்' என்பார்களாதலின் யான் ஒருகுற்றமுஞ் செய்ததில்லையெனப் பழமைபற்றிக் கூறுகின்றார்கள். கொத்தை - கேடு. நீரே பழிபட்டீர் - பிழைசெய்தல் அடிமையியல்பு என்று அறிந்தும், மன்னியாதே கண்கொண்டமையில் பழி யுமதாயிற்று. 'பழியதனைப்பாராதே' என்றதுமது. மற்றைக்கண் - ஒரு கண்ணைக் கம்பனை வேண்டிப் பெற்றேன்; மற்றொரு கண்ணையும் தோழராகிய நீர் தராவிட்டால் தேவரீர் கட்பாற் பயனில்லை. இதலால் நீரே வாழ்ந்துபோம் என்கிறார்கள்.

அன்றின் முட்டா தடையுஞ் சோலை
    யாரூ ரகத்தீரே
கன்று முட்டி யுண்ணச் சுரந்த
    காலி யவைபோல
என்று முட்டாப் பாடு மடியார்
    தங்கண் காணாது
குன்றின் முட்டிக் குழியில் விழுந்தால்
    வாழ்ந்து போதீரே. 3

3. கன்றுகள் முட்டி உண்ணச் சுரக்கும் பசுக்கள் போல என்றைக்கும் இடையூறின்றிப் பாடும் அடியார்கள் கண்தெரியாமல் மலையில் முட்டிக்கொண்டு படுகுழியில் விழ்ந்தால் வாழ்ந்துபோம் என்கிறார்கள்.

அன்றில் முட்டாது அடையும் - அன்றிற் பறவை இடையீடின்றிச் சேரும். காலி - பசு. என்றும் - என்றைக்கும். முட்டா - இடையீடுபடாதே. குன்றின் முட்டி - மலையும் தெரியாது முட்டிக்கொண்டு. வீழ்ந்தால் - இங்ஙனம் விழ்தலே தேவரீர்க்குப் பெருமையாயின் வாழ்ந்தேபோம் என்கிறார்கள்.



துருத்தி யுறைவீர் பழனம் பதியாச்
    சோற்றுத் துறையாள்வீர்
இருக்கை திருவா ரூரே யுடையீர்
    மனமே யெனவேண்டா
அருத்தி யுடைய அடியார் தங்கள்
    அல்லல் சொன்னக்கால்
வருத்தி வைத்து மறுமைப் பணித்தால்
    வாழ்ந்து போதீரே. 4

4. திருத்துருத்தி தேவரீருறைவிடம். பழனம் பதியாகும்; சோற்றுத்துறையை யாள்வீர்; ஆனால் தேவரீருடைய இருக்கையோ திருவாரூர். அங்ஙனம் அடியார்கள் அல்லல் தீர்க்கப் பலவிடங்களில் எழுந்தருளியிருக்குந் தேவரீரிடம் அடியார்கள் தம் அல்லல் சொல்லிக்கொண்டால் அவர்களை வருத்தி, மறுமைக்கும் பணித்தால் அவர்களைப்பார்த்து 'உங்கள் மனம்போல' என வேண்டாம் வாழ்ந்துபோம் என்கிறார்கள்.

துருத்தி - குற்றாலம் என இப்போது வழங்குவது. மனமே எனவேண்டா - உங்கள் மனம்போல என்ன வேண்டாம். அருத்தியுடைய அடியார் - அன்புடைய அடியார்கள். வருத்திவைத்து - இம்மையினும் வருத்தி. மறுமை பணித்தால் - மறுமைக்குக் கட்டளைதந்தால் வாழ்ந்துபோம் என்க.

செந்தண் பவளந் திகழுஞ்சோலை
யிதுவோ திருவாரூர்
எந்த மடிக ளிதுவே யாமா
றுமக்காட் பட்டோர்க்குச்
சந்தம் பலவும் பாடு மடியார்
தங்கண் காணாது
வந்தெம் பெருமான் முறையோ வென்றால்
வாழ்ந்து போதீரே. 5

5 பவளம்போல் விளங்குகிற பழங்களோடு கூடிய சோலை சூழ்ந்த திருவாரூர்ப் பெருமானே! தேவரீர்க்கு ஆளானார்க்கு விளைவது இதுவோ! இசைப்பாடல் இயற்றும் அடியார்கள் கண்தெரியாது வந்து பெருமானே! இது முறையோ' என்றால் வாளா இருப்பீர் வாழ்ந்தேபோதீர் என்கின்றார்கள்.

பவளந் திகழுஞ்சோலை - பவளங்கிடந்து ஒளிரும் சோலை; அன்றிப் பவளம்போன்றகனிகள் திகழுஞ்சோலை என்றுமாம். ஆட்பட்டோர்க்கு இதுவேயாமாறு எனக் கூட்டுக. சந்தம் - இசைப்பாடல்; ஆகுபெயர் 'எம்பெருமான் காப்பாற்றுங் கடமையை அறிந்து உபகரியும்' என்ற குறிப்போடு எங்கள் தலைவனே என்று அழைத்து முறையோ என்றால் வாளா இருப்பீர் என்பதை வருவித்து முடிக்க.

தினைத்தா ளன்ன செங்கால் நாரை
சேருந் திருவாரூர்ப்
புனத்தார் கொன்றைப் பொன்போன் மாலைப்
புரிபுன் சடையீரே



தனத்தா லின்றித் தாந்தா மெலிந்து
தங்கண் காணாது
மனத்தால் வாடி யடியா ரிருந்தால்
வாழ்ந்து போதீரே. 6

6. அழக்கப்பெற்ற தினைத்தாளைப் போன்ற செங்கால் நாரைகள் வந்து வதியும் திருவாரூர்ப் பெருமானே! அடியார்கள் செல்வமுமின்றி மெலிந்து, மனம்வாடி இருந்தால் எல்லாச் சிறப்போடும் இருக்கின்ற தேவரீர் வாழ்ந்து போதீரே! என்கிறார்.

மாலை - வரிசை. தனத்தால் - ஆல் அசை. அடியார், இன்றி, மெலிந்து, காணாது, வாடி, இருந்தால் வாழ்ந்து போதீர் என முடிக்க.

ஆயம் பேடையடையுஞ் சோலை
யாரூ ரகத்தீரே
ஏயம் பெருமா னிதுவே யாமா
றுமக்காட் பட்டோர்க்கு
மாயங் காட்டிப் பிறவி காட்டி
மறவா மனங்காட்டிக்
காயங் காட்டிக் கண்ணீர் கொண்டால்
வாழ்ந்து போதீரே. 7

7. உமக்காட்பட்டோர்க்கு மாயையை யறிவித்து, அம்மாயையின் காரணமாகவரும் பிறவியை யறிவித்து, அப்பிறப்பில் தேவரீரை மறவாத மனம் முதலாகிய அந்தக் கரணங்களையுந் தந்து, புவன போகங்களை நுகர உடலையுந் தந்து, உடலில் சிறந்த உறுப்பாகிய கண்ணைமட்டும் நீர் பிடுங்கிக் கொண்டால் வாழ்ந்தேபோம் என்கின்றார்கள்.

ஆயம் - கூட்டம். பேடை - பெண் பறவை. எம் பெருமான் - கண்தெரியாக் கவற்சியாலே பெருமானை உரக்க அழைக்கும் விளி. மாயங்காட்டி - பிறவிக்கேதுவாகிய மாயையாகிய முதற்காரணங்காட்டி மனங்காட்டி - அந்தக்கரணங்களைக் காட்டி. காயம் காட்டி - நுகரும் உடலையுந் தந்து.

கழியாய்க் கடலாய் கலனாய் நிலனாய்க்
　　கலந்த சொல்லாகி
இழியாக் குலத்திற் பிறந்தோ மும்மை
　　யிகழா தேத்துவோம்
பழிதா னாவ தறியீ ரடிகேள்
　　பாடும் பத்தரோம்
வழிதான் காணா தலமந் திருந்தால்
　　வாழ்ந்து போதீரே. 8

8. கடலாய் கழியாய் அணியாய் உரையாய் உம்மை நாங்கள் ஏத்துவோம்; பாடும் பக்தர்கள் வழி தெரியாது வருந்தினால் உமக்கே பழியாகும்; வாழ்ந்து போம் என்கிறார்கள்.

இழியாக் குலத்துப் பிறந்தோம் - எவ்வகையினும் இழிவுபடாத திருமேனி தீண்டுவார் குலத்துப் பிறந்தோம். ஆகையால், உம்மைக் கழியாய் கடலாய் கலனாய் நிலனாய் இவற்றுட் கலந்த சொல்லாகி ஏத்துவோம் எனக் கூட்டுக.

பேயோ டேனும் பிரிவொன் றின்னா
　　தென்பர் பிறரெல்லாங்
காய்தான் வேண்டிக் கனிதா னன்றோ
　　கருதிக் கொண்டக்கால்



நாய்தான் போல நடுவே திரிந்தும்
　　உமக்காட் பட்டோர்க்கு
வாய்தான் திறவீர் திருவா ரூரீர்
　　வாழ்ந்து போதீரே. 9

9. பேயொடாயினும் கூடினாற் பிரிதல் துன்பந்தருவதொரு செயலாகும் எனப் பிறர் கூறுவர். ஒருவாறு விரும்பினால் காயும் கனியாக இனிக்கும். நாய்போல நன்றி மறவாதே திரிந்து உமக்காட்பட்டோர்க்கு வாய்திறக்கவும் மாட்டீர்; வாழ்ந்தே போம் என்கிறார்கள்.

வேண்டில் - விரும்பின். நாய்தான் - தான் அசை. வாய்தான் திறவீர் - வாய்திறந்து சொன்னாலும் ஒரு ஆறுதலாகுமே; அதுதானும் செய்யீர்.

செருந்தி செம்பொன் மலருஞ் சோலை
　　யிதுவோ திருவாரூர்
பொருந்தித் திருமூ லட்டா னம்மே
　　யிடமாக் கொண்டீரே
இருந்து நின்றுங் கிடந்து மும்மை
　　யிகழா தேத்துவோம்
வருந்தி வந்து முமக்கொன் றுரைத்தால்
　　வாழ்ந்து போதீரே. 10

10. திருமூலட்டானம் இடமாகக் கொண்ட பெருமானே! அடியார்களாகிய நாங்கள், நின்றும் இருந்தும் கிடந்தும் உம்மை இகழாமல் ஏத்துவோம். ஆக உம்மிடம்

வந்து ஒன்றை விண்ணப்பித்தால் பரிகாரந் தேடாத நீர் வாழ்ந்துபோம் என்கிறார்.

செருந்தி - சிலந்தியென இக்காலத்து வழங்கும் பூ. செம்பொன் மலரும் - பொன்போல மலரும். பொருந்தி - மனம் விரும்பி.

காரூர் கண்டத் தெண்டோண் முக்கண்
கலைகள் பலவாகி
ஆரூர்த் திருமூ லட்டா னத்தே
யடிப்பே ராரூரன்
பாரூ ரறிய என்கண் கொண்டீர்
நீரே பழிப்பட்டீர்
வாரூர் முலையாள் பாகங் கொண்டீர்
வாழ்ந்து போதீரே. 11

11. நீலகண்டத்தையும், எண் தோள்களையும், முக்கண்ணையும் பலகலைகளையும் உடையவராகி, ஆரூர் மூலட்டானத்தே எழுந்தருளியிருக்கும் இறைவரே! உலகமும் ஊரும் அறிய என்கண்ணைக் கொண்டீர்; நீரே பாதியுடலில் அம்மையுடனிருந்தும் இரக்கமில்லீர் வாழ்ந்துபோம் என்கின்றார்கள்.

கார் ஊர் கண்டர்-கருமைநிறம் ஊர்கின்ற கண்டத்தையுடையவர். பார் ஊர்: உம்மைத்தொகை. வார் - கச்சு.



# திருவாசகம்

## மாணிக்கவாசக சுவாமிகள்

அருளிச் செய்தது.

திருச்சிற்றம்பலம்

தேனமர் சோலைத் திருவா ரூரில்
ஞானந் தன்னை நல்கிய நன்மையும்

ஞானந் தன்னை நல்கிய நன்மை - திருவடியன்றி வேறொன்றையும் புகழாத வீறும், சிவனையன்றி துணையறியாத செம்மையும் ஆகிய திருவடி ஞானம்.

பூங்கமலத் தயனொடுமால் அறியாத நெறியானே
கோங்கலர்சேர் குவிமுலையாள் கூறாவெண் நீறாடி
ஓங்கெயில்சூழ் திருவாரூர் உடையானே அடியேன்நின்
பூங்கழல்கள் அவையல்லா தெவையாதும் புகழேனே.

உலகமக்களிற் சிலரால் முதற் கடவுளெனப் போற்றப்பெறும் மாலும் அயனும் அறியாத அருமையைக் கண்டும், அம்மையோடு எழுந்தருளியுள்ள அருட்கோலத்தைக் கண்டும், எளிவந்த கருணையால் மக்கள் உய்ய திருவாரூரில் எழுந்தருளிய இருப்பைக் கண்டும் தேவரீருடைய அருமையும் எளிமையும் அருளும் என்மனத்தைப் பிணித்தமையின் என்னாற் புகழத்தக்கன தேவரீரது திருவடிகளே எனத் துணிகிறேன் என்றருள்கின்றார்கள்.

நெறி - முறை. சேர் உவாவுருபு. எவை - எவற்றை யும். யாதும் - ஒருசிறிதும். புகழேன்; பூங்கழலே புகழு தற்குரியன என்பதாம்.

சடையானே தழலாடீ தயங்குமூ விலைச்சூலப்
படையானே பரஞ்சோதீ பசுபதீ மழவெள்ளை
விடையானே விரிபொழில்சூழ் பெருந்துறையாய் அடியேன் [நான்
உடையானே உனையல்லா துறுதுணைமற் றறியேனே.

இறைவனுடைய அருட்குணங்களை வெளிப்படுக்கும் திருநாமங்கள் பலவற்றையுஞ்சொல்லி அழைத்து, தேவரீரையன்றி எனக்குஉற்றதுணை வேறறியேன் எனவிண்ணப் பிக்கின்றார்கள்.

உடையானே - என்னை ஆளாக உடையானே. உறு துணை - நோய் களையும் உற்றதுணை.

உற்றாரையான்வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனியமையுங்
குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தாஉன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே.

எனக்கு இன்பம் விளைப்பார்போலத் துன்பம் விளைக் கும் உற்றார் உறவு போதும். ஊரும் பேரும் என்னுடைய மலநீக்கத்திற் குப் பேரிடையூறாக இருத்தலின் அவைகளும் வேண்டப்பெறுவன வல்ல. கற்றார்கள் மன உறுதியைத் தளர்த்திச் செருக்குத் தருதலுஞ் செய்வாதலின் அவர் களும் வேண்டாம். படித்துப் படித்து உருட்டியதுபோதும். பின்னர் வேண்டியதோ, ஈன்ற பசுக் கன்றைக் கண்டாற் போல, திருவடிக்கு உருகுகின்ற மனம் ஒன்றே.

# திருவிசைப்பா

## பூந்துருத்தி நம்பிகாடநம்பி அருளிச்செய்தது.

திருச்சிற்றம்பலம்

கைக்குவான் முத்தின் சரிவளை பெய்து
கழுத்திலோர் தனிவடங் கட்டி
முக்கணு யகராய்ப் பவனிபோந் திங்கள்
முரிவதோர் முரிவுமை யளவுந்
தக்கசீர்க் கங்கை யளவுமன் றென்றோ
தம்மொருப் பாடுல கதன்மேன்
மிக்கசீ ராரூ ராதியாய் வீதி
விடங்கராய் நடங்குலா வினரே.

சரிவளை - வளையல்; ஒருபொருட்பன்மொழி. முத்தின் சரி - முத்திழைத்தவளை வளை சங்குவளை என்றுமாம். முரிவதோர் முரிவு - வளைந்தாடும் வளைவு. முரிவு ஓர் உமை யளவும், கங்கையளவும் அன்று.

பத்தியா யுணர்வோ ரருளைவாய் மடுத்துப்
பருகுதோ றமுதமொத் தவர்க்கே
தித்தியா விருக்குந் தேவர்கா ளிவர்தந்
திருவுரு விருந்தவா பாரீர்
சத்தியாய்ச் சிவமா யுலகெலாம் படைத்த
தனிமுழு முதலுமா யதற்கோர்
வித்துமா யாரூ ராதியாய் வீதி
விடங்கராய் நடங்குலா வினரே.

உணர்வோர் - ஞானிகள். பருகுதோறமுதம் ஒத்து என்றது பழகப்பழகப் பாலும்புளிக்கும் என்பதுபோலாது மேலும் இனிமை மிகுவதாம்.

# திருப்பல்லாண்டு

## சேந்தனார்

அருளிச்செய்தது

திருச்சிற்றம்பலம்

குழலொலி யாழொலி கூத்தொலி யேத்தொலி
    யெங்குங் குழாம்பெருகி
விழவொலி விண்ணளவுஞ் சென்று விம்மி
    மிகுதிரு வாரூரின்
மழவிடை யார்க்கு வழிவழி யாளாய்
    மணஞ்செய் குடிப்பிறந்த
பழவடி யாரொடுங் கூடியெம் மானுக்கே
    பல்லாண்டு கூறுதுமே.

மழவிடை - இளைய இடபம். வழிவழியாள் - வழியடிமை. பழவடியார் - பண்பட்ட மனத்தடியார்.

ஆரார் வந்தா ரமரர் குழாத்தில்
    அணியுடை யாதிரைநாள்
நாரா யணனொடு நான்முக னங்கி
    யிரவியு மிந்திரனுந்
தேரார் வீதியிற் றேவர் குழாங்கள்
    திசையனைத்து நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியு மாடியும்
    பல்லாண்டு கூறுதுமே.

ஆதிரை நாளின் சிறப்புக்கூறுவது இப்பாடல். பாரார் - மண்ணிறைந்த.



# திருமந்திரம்

## திருமூலநாயனார்

அருளிச்செய்தது.

திருச்சிற்றம்பலம்.

ஓரெழுத் தாலே உலகெங்குந் தானாகி
ஈரெழுத் தாலே இசைந்தங் கிருவராய்
மூவெழுத் தாலே முளைக்கின்ற சோதியை
மாவெழுத் தாலே மயக்கமே உற்றதே.

ஓரெழுத்து சிகாரம். ஈரெழுத்து - சி, வ. இருவராய்- சிவம் சக்தியாகிய இருவராய். மூவெழுத்து - சி, வ, ய. மாவெழுத்து - நம.

செம்புபொன் னாகுஞ் சிவாய நமவென்னிற்
செம்புபொன் னாகத் திரண்டது சிற்பரஞ்
செம்புபொன் னாகும் ஸ்ரீயுங் கிரீயுமெனச்
செம்புபொன் னான திருவம் பலமே.

செம்பு பொன்னாகும் - செம்பு அநாதியேயுள்ள களிம்பு நீக்கப்பெற்றுப் பொன்னாகும்.

சொல்லு மொருகூட்டிற் புக்குச் சுகிக்கலாம்
நல்ல மடவார் நயந்துட னேவருஞ்
சொல்லிலும் பாசக் கடர்ப்பாம்பு நீங்கிடுஞ்
சொல்லுந் திருக்கூத்தின் சூக்குமந் தானே.

இப்பாடல் அசபையைச் செபிப்பார் எய்தும் பயன் கூறுகின்றது.

கூட்டில் புக்கு - நோயற்ற வுடலிற் புகுந்து; அதாவது கன்மந் துன்பநீங்கிய உடலிற்புகுந்து. நல்லமடவார் - பாமுத்திமாதர். நயந்து - விரும்பி பாசச்சுடர் பாம்பு - பாசங்களாகிய ஒளிவிடுகின்ற பாம்பு. சொல்லுந் திருக்கூத்தின் - சொல்லப்பெறும் அசபாநடனத்தின். சூக்குமந்தானே - சூக்குமமாகிய பயன்கள் இவைதாம்.

பொன்னான மந்திரம் புகலவும் ஒண்ணாது
பொன்னான மந்திரம் பொறிகிஞ்சு கத்தாகும்
பொன்னான மந்திரம் புகையுண்டு பூரிக்கில்
பொன்னாகும் வல்லோர்க் குடம்புபொற் பாதமே.

பொற்பாதங் காணலாம் புத்திரர் உண்டாகும்
பொற்பாதத் தாணையே செம்புபொன் னாயிடும்
பொற்பாதங் காணத் திருமேனி யாயிடும்
பொற்பாத நன்னடஞ் சிந்தனை சொல்லுமே.



# திருவாரூர் மும்மணிக்கோவை

சேரமான்பெருமாள் நாயனார்

அருளிச்செய்தது.

திருச்சிற்றம்பலம்

விரிகடல் பருகி அளறுபட் டன்ன
கருநிற மேகம் கன்முக டேறி
நுண்துளி பொழிய நோக்கி ஒண்தொடி
பொலங்குழை மின்னாப் புருவ வில்லிட்
டிலங்கெயிற் செவ்வாய்க் கோபம் ஊர்தரக்
கைத்தலம் என்னுங் காந்தள் மலர
முத்திலங் கெயிறெனும் முல்லை அரும்பக்
குழலுஞ் சுணங்குங் கொன்றை காட்ட
எழிலுடைச் சாயல் இளமயில் படைப்ப
உள்நிறை உயிர்ப்பொடும் ஊதை யூர்தரக்
கண்ணீர்ப் பெருமழை பொழிதலின் ஒள்நிறத்
தஞ்சனக் கொழுஞ்சே றலம்பி எஞ்சா
மணியும் பொன்னும் மாசறு வயிரமும்
அணிகிளர் அகிலும் ஆரமும் உரிஞ்சிக்
கொங்கை என்னுங் குவட்டிடை இழிதரப்
பொங்கு புனல்காட்டி யோவே கங்கை
வருவிசை தவிர்த்த வார்சடைக் கடவுள்
அரிவை பாகத் தண்ணல் ஆரூர்
எல்லையில் இரும்பலி சொரியுங் 1
கல்லோ சென்ற காதலர் மனமே.

கார்ப்பருவங் கண்டு தலைவி யாற்றாளாக அவளாற் தான் ஆற்றாளாய்த் தோழி கூறியது.

பொழிப்பு:— விரிந்த கடலை வாய்மடுத்துச் சேறு பட்டாற்போன்ற கரியநிறம் பொருந்திய மேகங்கள் மலையுச்சியையேறி, தண்ணியவாய துளிகளைப்பொழிய அதனைப் பார்த்து, தலைவர் வரவு குறித்த பருவம் இதுவென எண்ணி ஒள்ளிய வளையினையுடையாளாகிய தலைவி, பொன்னாலாய காதணி மின்னலைச் செய்ய, புருவமாகிற இந்திர வில்லை வளைத்து, விளங்குகின்ற அழகினையுடைய சிவந்த வாயாகிய இந்திரகோபப் பூச்சியானது பரவ, இருகரங்களாகிற செங்காந்தட்பூக்கள் மலர, முத்தைப்போல் விளங்கும் பற்கள் என்னும் முல்லையரும்புகள் தோன்ற, சுருண்டுதொங்கும் கூந்தலும், பிரிவாற்றாமையான் முலைமேற்பரந்த சுணங்கும் கொன்றைக்காயையும் கொன்றைப்பூவின் நிறத்தையுங் காட்ட, எழுச்சிமிக்க மென்மையானது களிக்கும இளமயிலைத் தோற்றுவிக்க, உடலுள்நிறைந்த பெருமூச்சென்னும் பெருங்காற்றானது பரவ, கண்ணென்று சொல்லப்பெறும் மேகங்கள் மழையைப் பொழிதலால், ஒள்ளிய நிறத்தையுடைய கண்ணின் மையாகிய வளவிய சேற்றினை அலம்பி, இலக்கணங்களிற் குறைபாடில்லாத முத்தும் பொன்னும் குற்றமற்ற வயிரமும் அழகுமிக்கு விளங்கும் அகிலும் சந்தனமும் ஆகியவைகளைத் தேய்த்துக்கொண்டு, முலைகளாகிற சிகரத்தில் வீழ வெள்ளத்தைக் காட்டி நின்றாள். கங்கையின்வேகத்தை யடக்கிய நீண்ட சடையையுடைய கடவுளும், உமாதேவியாரை இடப்பாகத்துக் கொண்ட அண்ணலுமாகிய இறைவனது ஆரூர்எல்லையிலே,



ஊர்காவற்றெய்வங்கட்குப் பெரிய பலியைச் சொரியும் கல்லோ பொருள்வயிற் காதன்மையை யுடையாராகிய தலைவர் மனம்.

முடிபு:— ஒண்தொடி நோக்கி மின்ன, வில்லிட்டு, ஊர்தர மலர, அரும்ப காட்ட, படைப்ப, ஊர்தர மேகம் மழைபொழிதலின், அலம்பி, உரிஞ்சி, இழிதரப் புனல் காட்டியோள் எனவும், காதலர் மனங் கல்லோ எனவுங் கூட்டிப் பொருள்காண்க.

அரிவைபாகத்து அண்ணலாரூர் எல்லைப் பலிக்கல் லாதலின் பருவங்கண்டும் இரங்காதிராது. மனம் அதனினும் வலிதென்பதுகுறிப்பு. உயிர்கள் சார்ந்ததன் வண்ணமாதல் இயல்பாதலின் தலைவியும் கார்ப்பருவம் வந்தமைகண்டு தானும் கார்ப்பருவஞ் செய்து கண்மழை பொழிந்தாள் என்க. கற்புடைத் தலைவியர் தலைவர் பிரிந்த காலத்து ஒப்பனை செய்யாராதலின், குழல் கொன்றை காட்டுவதாயிற்று. பிரிந்தார் மேனி பசப்புண்ணுமாதலின் பசலை பொன்னிறமாதலின் சுணங்கு கொன்றை காட்டுவதாயிற்று. கொன்றை - முதலாகுபெயர். பூவை உணர்த்திற்று. எஞ்சா - குறையாத; குற்றமில்லாத என்றுமாம். மாசறுவயிரம் - வயிரத்தின் குற்றங்களாகிய காகபாதம், கீற்று, முதலாயினவாம். அணிகிளர் அகில் - அணிந்தார்க்கு அழகைக்கிளர்த்தும் அகில். கங்கையின் விசை தவிர்த்த கடவுள் ஆரூர்ப்பலிக்கல்லுக்கு ஒப்பான - அல்லது விஞ்சிய மனத்தனாதலின் அவர் கங்கைக்குத் தலையிலிடங் கொடுத்து விசைதவிர்த்தது போலத் தலைவனும் மார்பிடந் தந்து கவலையின் விசையைத் தவிர்க்க வல்லவன் என்பது.

மனமால் உறுதோமற் றென்செய்யும் வாய்ந்த
கனமால் விடையுடையோன் கண்டத் —தினமாகித்
தோன்றினகார் தோன்றிலதேர் சோர்ந்தனசங் கூர்ந்தனபீர்
கான்றனநீ ரேந்திழையாள் கண். 2

இதுவுமது

அம்மையும் அப்பனும் அருட்கோலங்கொள்ள வளர்தற்குப் பொருந்திய பெரிய காத்தற்கடவுளாகிய திருமாலை இடபமாகவுடைய தியாகப்பெருமானது நஞ்சுண்டுகறுத்த கண்டத்திற்கு இனமாகி மேகம் தோன்றின. பருவங்குறித்துச்சென்ற தலைவர் தேர் இன்னுங் காணப்பெற்றில. காலம்நீட்டித்தமையின் உடல்மெலிய, வளைகள் கழலின. மேனியெங்கும் பசலைபரந்தன. ஏந்திய இழையிணையுடையாளாகிய தலைவியின் கண் நீரைக்கக்கின. ஆதலால் மனம்-மயங்காது என்செய்யும் என்றாள் என்க.

மற்று - வினைமாற்று. மால் - தலைவியினிலைகண்டு தோழியடைந்த மயக்கம். அன்றித் தலைவியின் மனம் மயங்காதென்செய்யும் என்றுமாம் வாய்ந்த விடை - பொருந்திய இடபம். கண்டத்தினமாகித் தோன்றின என்றாள் கண்டங்கறுத்துத் தேவரைக்காத்தது; அதன் இனமாகிய காரோ வருத்துகிறது என்று கருதி.

கண்ணார் நுதலெந்தை காமரு கண்டமென இருண்ட
விண்ணா ருருமொடு மேலது கீழது கொண்டல்விண்ட
மண்ணார் மலைமேல் இளமயி லான்மட மானனைய
பெண்ணாம் இவளினி என்னாய்க் கழியும் பிரிந்துறைவே. 3

இது பருவங்கண்டு தோழி கவன்று கூறியது.



கண்பொருந்திய நெற்றியினையுடைய எந்தந்தையாகிய இறைவனது அழகிய கண்டமென இருண்ட மேகமானது, நிறைந்த இடியேற்றோடு, வானத்தின் கண்ணது. கீழ்க் காற்று அதன் கீழது. பொருந்தமண்ணில் நிறைந்த மலையின் மேல் இளமயில்கள் ஆட, மான்போன்ற பெண்ணாகிய தலைவியைப் பிரிந்துறைதல் இனி எவ்வாறு கழியும் என்பதாம்.

கண்ணார் நுதல் - கண்நிறைந்து விளங்குகின்ற நுதல் என்றுமாம். விண் மேலது கொண்டல் கீழது எனக்கூட்டுக. மானனையபெண்ணாமிவள் என்றது மருளத்தகாதவற்றிற்கு மருளுந்தன்மையும், மென்மையும் உடைமையின். பிரிவு என்னாகக்கழியுமோ என்று கவல்கின்றாள்.

உறைகழி யொள்வாள் மின்னலி உருமெனும்
அறைகுரல் முரசம் ஆர்ப்பக் கைபோய்
வெஞ்சிலை கோலி விரிதுளி என்னும்
மின்சரந் துறந்தது வானோ நிலனே
கடிய வாகிய களவுநன் மலரொடு
கொடிய வாகிய தளவமும் அந்தண்
குலைமேம் பட்ட கோடலும் கோபமோ
டலைமேம் பட்ட காந்தளும் இவற்றொடு
காயா வெந்துயர் தருமே லவரே
பொங்கிரும் புரிசை போக்கற வளைஇக்
கங்குலும் பகலுங் காவல் மேவி
மாசறு வேந்தன் பாசறை யோரே
யானே யின்னே
அலகி லாற்றல் அருச்சுனற் கஞ்ஞான்

றலவா நல்வரம் அருளிய உத்தமன்
அந்த ஆரூர் சிந்தித்து மகிழா
மயரிய மாக்களைப் போலத்
துயருழந் தழியக் கண்துயி லாவே. 4

துணைவயிற்பிரிந்த தலைமகன் பாசறையிடத்தானைப் பருவங்கண்டு தலைவி கூறியது.

உறையினின்று நீக்கப்பெற்ற ஒளிபொருந்திய வாளைப் போல மின்னி, இடியென்கின்ற அடிக்கப்பெற்ற குரலினை யுடைய முரசம்ஒலிப்ப, பக்கங்களிற் சென்று இந்திரவில்லை வளைத்து, விரிந்துவரும் நீர்த்துளியென்ற கொடியபாணங் களை எவிற்று வான். நிலவொளியின் மணமுடைய களாப் பூக்களோடு, கொடியவாகிய முல்லைகளும், அழகிய தண்ணிய குலைகளால் சிறந்தவெண்காந்தளும், இந்திரகோபப் பூச்சி யோடு வருந்துதலிற் சிறந்த செங்காந்தளும் ஆகிய இவற் றோடு காயாமரங்களும் கொடுந்துன்பந் தரும். தலைவரோ பொங்கிய பெரிய மதிலினின்று போதலறவளைத்து இரவும் பகலும் காவலைப் பொருந்திக் குற்றமற்ற மன்னனது பாசறைக்கண்ணர். இங்கேயோ எல்லையற்ற வலிமையினை யுடைய அருச்சுனற்குப் பாசுபதமருளியகாலத்து அழியாத நல்வரத்தை அருளிய உத்தமனாகிய இறைவனது அழகிய குளிர்ந்த ஆரூரைச்சிந்தித்து மகிழாத மயங்கிய மக்களைப் போலத் துன்பத்தான் வருந்தி அழியக் கண்கள் துயிலா வாயின.

வான் மின்னி, கோலி, துறந்தது எனக்கூட்டுக. போக்கு அற வளைஇ - சோர்வுபடாமற் காத்து என்றுமாம்.



அலைமேம்பட்ட காந்தள் - பிரிந்தாரை வருத்துதலிற் சிறந்த காந்தள். ஆரூர் சிந்தித்து மகிழாத மக்கள் சித்தந்தெளிய ஏதுவின்றி மலத்தான் மயங்கிக் கண்துயிலார்; அதுபோல என் கண்ணும் துயிலாவாயின வென்றாள்.

துயிலாநோ யாந்தோன்றத் தோன்றித்தீந் தோன்று
மயிலால வந்ததால் மாதோ — அயலாய
அண்டத்துக் கப்பாலான் அந்திங்கட் கண்ணியான்
கண்டத்துக் கொப்பாய கார். 5

இதுவும் தலைவி பருவங்கண்டு கூறியது.

யாம் தூங்காத நோயையடைய, செங்காந்தள் தீப் போலத் தோன்ற, மயில்கள் ஆட, ஒளிபொருந்திய அண்டங்கட்கு அப்பாற்பட்டவனும், அழகிய பிறையைத் தலைமாலையாக வுடையவனும் ஆகிய இறைவனது கழுத் திற்கு ஒப்பாய மேகமானது வந்தது. ஆல் மாதோ அசைகள்.

யாம் துயிலாநோய் தோன்ற - யாம் துயிலா நோய்க் கண் தலைப்பட என்றுமாம்.

# பெரியபுராணம்

## சேக்கிழார் சுவாமிகள்

அருளிச்செய்தது.

திருச்சிற்றம்பலம்

பூதம் யாவையின் உள்ளலர் போதென
வேத மூலம் வெளிப்படு மேதினிக்
காதல் மங்கை இதய கமலமாம்
மாதொர் பாகனார் ஆரூர் மலர்ந்ததால்.

சொன்ன நாட்டிடைத் தொன்மையில் மிக்கது
மன்னு மாமல ராள்வழி பட்டது
வன்னி யாறு மதிபொதி செஞ்சடைச்
சென்னி யார்திரு வாரூர்த் திருநகர்.

படர்ந்த பேரொளிப் பன்மணி வீதியார்
இடந்த ஏனமும் அன்னமும் தேடுவார்
தொடர்ந்து கொண்டவன் தொண்டர்க்குத் தூதுபோய்
நடந்த செந்தா மரையடி நாறுமால்.

உள்ள மாருரு காதல வூர்விடை
வள்ள லார்திரு வாரூர் மருங்கெலாம்
தெள்ளு மோசைத் திருப்பதி கங்கள்பைங்
கிள்ளை பாடுவ கேட்பன பூவைகள்.

நிலம கட்கழ கார்திரு நீள்நுதல்
திலகம் ஒப்பது செம்பியர் வாழ்பதி
மலர்ம கட்குவண் தாமரை போல்மலர்ந்
தலகில் சீர்த்திரு வாரூர் விளங்குமால்.



ஞாலமுய்ய நாமுய்ய நம்பி சைவ நன்னெறியின்
சீலமுய்யத் திருத்தொண்டத் தொகைமுன்பாடச் செழுமறை
ஓலமிடவு முணர்வரியார் அடியா ரடைவு முளதென்றால் [கள்
ஆலமமுது செய்தபிரான் அடியார்பெருமை அறிந்தாரார்.

சூழுந் திருத்தொண்டர் தம்முடன் தோரண வாயில்நண்ணி
வாழி திருநெறித் தேவா சிரியன்முன் வந்திறைஞ்சி
ஆழி வரைத்திரு மாளிகை வாயில் அவைபுகுந்து
நீள்சுடர் மாமணிப் புற்றுகந் தாரைநேர் கண்டுகொண்டார்.

கண்டு தொழுது கரசர ணாதி அங்கமெலாம்
கொண்ட புளகங்க ளாக எழுந்தன்பு கூரக்கண்கள்
தண்டுளி மாரி பொழியத் திருமூலட் டானர்தம்மைப்
புண்டரி கக்கழல் போற்றித் திருத்தாண்டகம் புனைந்து.

காண்ட லேகருத் தாய்நினைந் தென்னுங் கலைப்பதிகம்
தூண்டா விளக்கன்ன சோதிமுன் நின்று துதித்துருகி
ஈண்டு மணிக்கோயில் சூழ வலஞ்செய் திறைஞ்சி அன்பு
பூண்ட மனத்தொடு நீள்திரு வாயிற் புறத்தணைந்தார்.

மேன்மைவிளங்குந்திருவாரூர் வீதிவிடங்கப் பெருமான்தாம்
மான அன்பர் பூசனைக்கு வருவார் போல வந்தருளி
ஞான மறையோய்! ஆரூரில் பிறந்தார் எல்லாம் நங்கணங்கள்
ஆன பரிசு காண்பாயென் றருளிச் செய்தங் கெதிரகன்றார்.

வானுயர் செங்கதிர் மண்டி லத்து மருங்கணையுங்கொடி
மன்னும் ஆரூர், தானொரு பொன்னுல கென்னத் தோன்றுந்
தயங்கொளி முன்கண்டு சண்பை வந்த, பாலறா நீற்றர்
பருக்கை யானைப் பதிகத் தமிழிசை பாடி யாடித், தேனொடு
வண்டு முரலுஞ் சோலைத் திருப்பதி மற்றதன் எல்லைசேர்ந்தார்.

# அசபா நடனப் பதிகம்

தருமபுர ஆதீனம் பத்தாவது மகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகள்

அருளிச்செய்தது.

திருச்சிற்றம்பலம்

நீடுசந் திரோதயம் போல்வதன மசையவருள்
நிறைகமல நயனமசைய
நின்றுநதி மதியசைய வொன்றுசடை முடியசைய
நிகழ்மந்த காசமசையத்
தோடலர் செவந்தியந் தோட்சைய மார்பிற்
றொடுத்தசெங் குவளையசையத்
துங்கமழு மானசைய வங்கதஞ் சதகோடி
சூரியர்கள் போலசையமால்
தேடுமா வக்கின் னிப்பாத மசையவொரு
செம்பொன்மலை வல்லியசையச்
செய்யகும ரேசர்நடு நின்றசைய நவரத்ன
சிம்மா சனத்திருந்தே
யாடுமுன் னசபாநட மடியனென் றுங்காண
வருளுவாய் தியாகேசனே
யசைவில்கம லேசனே யசபா நடேசனே
யானந்த வுல்லாசனே.

தத்துவ சொரூபமுந் தத்துவா தீதமுந்
தத்வகர்த் தாவுமென்றுஞ்
சகளா களாதீத சந்தோஷ சல்லாப
சருவபூ னியவஸ்துவும்



நித்திய நிராமய நிராதங்க நிர்த்தொந்த
நிர்க்குண நிராதாரமும்
நிர்மல நிராவாச நிற்சங்க நிர்விகற்ப
நிஷ்ப்ரபஞ் சச்சோதியாய்ச்
சுத்தபூ ரணசச்சி தானந்த முஞ்சோம
சூரிய ரனந்தகோடி
துங்கவொளி கஞ்சு லென மங்கவரு மோர்தற்
சொரூபப்ர காசமும்விடா
வத்துவித சிந்தாந்த முந்நீ யானதால்
ஆரறிவர் தியாகேசனே
அசைவில்கம லேசனே யசபா நடேசனே
யானந்த வுல்லாசனே. 2

வதனமுங் கருணைசடை மகுடமுங் கருணைசெய்
வடிவமுங் கருணைகமழ்நீர்
மாலையுங் கருணைசெவ் வந்தியுங் கருணையிள
மானுமழு வுங்கருணைமேல்
உதரமுங் கருணைகங் கணவரவ முங்கருணை
யுழுவையத ளுங்கருணைபை
உரகமின் னிதழுவு சரணமுங் கருணையரு
குமையம்மை யுங்கருணைமேல்
மதலையுங் கருணைபல சிங்கஞ் சுமந்திடும்
மணிப்பீட முங்கருணைமேல்
வளரண்ட கோடிகளெ லாம்வாழ வாருயிர்
வாழ்வதுங் கருணைபாசம்
அதிரநட மிடுமசபை யுங்கருணை நின்கருணை
யாரறிவர் தியாகேசனே
அசைவில்கம லேசனே யசபா நடேசனே
யானந்த வுல்லாசனே. 3

கருணைவா ரிதியேகு ருநிரா மயமேபூர்ண
    கற்பதரு வேயனந்தங்
கலைமதிய மேஞான பாநுவே தேட்டாத
    கண்ணின்வளர் கருவூலமே
திருவருட் செல்வமே யானந்த வாழ்வே
    தெவிட்டாத தெள்ளமிர்தமே
செங்கரத லாமலக பலமேசெ கத்தையாள்
    தேவர்கள் சிரோரத்னமே
ஒருபரப் பிரமமே யென்றுனைப் பாடினு
    னுல்லாசமா யாடியே
யொண்பூர ணானந்த வின்பவமு தினைமேவ
    வுனதுள மகிழ்ந்தருளுவாய்
அருணகண பணவுரக கிண்கிணிக் காலனே
    யழகார் தியாகேசனே
அசைவில்கம லேசனே யசபா நடேசனே
    யானந்த வுல்லாசனே.

மண்டலந் தன்னிலா ரூரென்று முண்டக
    மலர்ந்தமூ லாதாரமும்
மண்டனந் தஞ்சந்த்ர சூரியர்கள் போல்வதனமு
    வயங்கிடுங் கரியமேக
கண்டனு முன்றனையு மண்டகோ டிகளீன்ற
    கௌரியையு மென்னையாளுங்
கந்தசா மியையுமரு டருகமழ் காவிலே
    கட்டுமா டரவமென்னுங்
குண்டலியு மொன்றுகிண் கிணியொன்று நாதமுங்
    கொள்விசுவ மாதாரமாய்க்
கொண்டோடி மீனவும் ப்ராணனி தென்னுமுன்
    குலவுமச பாநடத்தை

அண்டத்தி லுள்ளபடி பிண்டத்தி லுன்காண
அருளுவாய் தியாகேசனே
அசைவில்கம லேசனே யசபா நடேசனே
யானந்த வுல்லாசனே. 5

படியாட மேலண்ட பாதாள மாடஇப்
பார்தாங்கு பாந்தளாடப்
பானுமதி யாடமறை யாடவய னாடவிரு
பத்மலோ சனனாடவான்
முடிவிலா வமரர்களு முனிவர்களு மாடஅலை
மோதுமேழு கடலோசைபோல்
முழவுமத் தளதாள சங்குநா தம்பெரிய
மூதண்ட முகடளப்பச்
செடிகுடிலை மாயையி னிரைவலைத் தேமலந்
சிதையாதிந் திரிதியொன்றே
செங்கனக தண்டதனில் வீற்றிருந் தாடுமுன்
திருந்துமச பாநடத்தை
அடியனேன் காணமுன் பென்னதவ மாற்றினே
னருளுவாய் தியாகேசனே
அசைவில்கம லேசனே யசபா நடேசனே
யானந்த வுல்லாசனே. 6

வம்பான தனுகரண புவனபோ கங்கடிய
வல்லிரு ளெனப்போகவும்
வளர்கர்ம மாயையும் பஞ்சமல முங்கொடிய
வலியவினை விட்டோடவும்
கெம்பீர நாதநா தாந்தமுஞ் சத்தியுங்
கௌர்வியா பிலிசமனையும்
கிட்டவரு முன்மனோ வியோமரு பியுமன்பர்
கிட்டுமு மனந்தையமுதக்

கம்போ லனுதையு மனுசிருதை யுஞ்சந்த்ரர்
    கதிரவ ரனந்தகோடி
கங்குலென வெங்கும்ப்ர காசித் தொலித்திடக்
    கட்டுமா வக்னிமணி
யம்போ ருகக்ராமே யடியனேன் முடியில்வைத்
    தருளுவாய் தியாகேசனே
அசைவில்கம லேசனே யசபா நடேசனே
    யானந்த வுல்லாசனே.

ஊனந் தவாமல மெனுங்கோடை தனியவும்
    உற்றமா யையமென்று
மொழுகுபெய ரழியவும் மாயையெனு மொழியாத
    வுடலழுக் கொழியவுமுனே
யினந் தருந்திரோ தானமென் றிடவரு
    மிணைப்பார வுங்கன்மமா
மீடில்வட வாமுகக் கூடுபோ கவுமெனை
    யிருந்தபடி யிப்படியிலே
தானந்த மடிநடுவு மில்லாமை பெருகியே
    தன் கருணை யூற்றெடுத்துத்
தங்கிடும் பரையாதி யொன்றிடுந் திரைவிசிச்
    சார்ந்திடுந் சொருபசத்தி
தானந்த வெள்ளத் தழுத்திவிடு நின்றுடைய
    காலினல் தியாகேசனே
அசைவில்கம லேசனே யசபா நடேசனே
    யானந்த வுல்லாசனே.

பொல்லாத விருண்மனையை நில்லாத வாழ்வைவெகு
    புழுமலங் கட்டுபொதியைப்
புன்புலால் நாறிடும் புலைக்கலத் தைத்தினம்
    புதுமைதரு பொய்ப்புரட்டை



நல்லோ ரெறிந்திடும் பாண்டத்தை நாய்நரிகள்
    நாடிடும் பிழையுடலை
நானென்று மெனதென்று நானடு விராமனீ
    நானு யிருக்கவைப்பாய்
கல்லால நீழலி லிருந்தகற் பகமே
    கருணையங் கடலமுதமே
கரும்பினின் கட்டியே பொருவர்பூ றைதக்
    கவுத்துவ மகாரத்னமே
அல்லாரு மணிகண்ட வகளங்க துங்கத்ரி
    யம்பகத் தியாகேசனே
அசைவில்கம லேசனே யசபா நடேசனே
    யானந்த வுல்லாசனே. 9

பொன்னையும் மண்ணையும் பெண்ணையும் பொருளென்று
    பொய்க்காட்டி லேவிழுந்து
போம்வழிகள் காறுமல் முன்தவத் தாலுனது
    பொன்னடிப் பிணைபிடித்த
என்னையுங் கைதந் தெடுத்து ரட்சித்தனை
    யின்னமு மிரங்கியிங்கே
யோகாந்த மாகவே யின்பபூ ரணவிட்
    டிறுமாந் திருக்கவைப்பாய்
தன்னிக ரிலாதவெ ஞானதே சிகனே
    தெர்பர சாரதாதனே
தன்கயிலை நாதனே சகலபுவ னேசனே
    சரவணேற் பவசகத் துக்
கன்னையுட னாவாத்ன சிங்கா தனத்திருந்
    தருளுந் தியாகேசனே
அசைவில்கம லேசனே யசபா நடேசனே
    யானந்த வுல்லாசனே. 10

109940
40457
2117
N49-2

7045

# திருவாரூர்ப்புராணம்

சம்பந்தமுனிவர்
அருளிச்செய்தது

## தியாகராஜர்

கார்பொருவுங் கருங்கூந்தற் செவ்வாய்வெண்
ணகைப்பச்சைக் கன்னி யோடுந்
தார்கமழ்பூங் காந்தளந்தோட் குமாரனொடு
மணிச்சிங்கா தனத்து மேவிச்
சீர்பாவு வான்புலவர் நினைந்தனயா
வையுநல்கிச் சிறப்பின் வைகும்
வார்புனல்சூழ் வயற்கமலைத் தேவர்கள்சிந்
தாமணியை மனத்துள் வைப்பாம்.

## கமலாம்பிகை

அறந்தழையக் கலைத்தெரிவை வளப்பெய்தச்
சசியெனும்பே ரிவை வாழ
நிறங்கெழுபூ மடந்தையொடு நிலமங்கை
மங்கலத்தி னிறைந்து மல்கப்
பிறங்குமுயிர்த் தொகையனைத்துங் களிகூரத்
தவம்புரியும் பிடி சான்ற
சிறந்தகம லாலயநா யகிசெம்பொற்
சேவடிகள் சென்னி வைப்பாம்.

ஞானசம்பந்தம் பிரஸ், தருமபுரம்.